பரிபாடல் திறன்

(தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்)

டாக்டர் இரா. சாரங்கபாணி,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.
முதுகலைப் பேராசிரியர்
அழகப்பா கல்லூரி, காரைக்குடி

மணிவாசகர் நூலகம்
சிதம்பரம்

கிளை: 241 லிங்கிச்செட்டித் தெரு, சென்னை-1

முதற்பதிப்பு : ஜனவரி, 1972
இரண்டாம் பதிப்பு : ஜனவரி, 1977.

பதிப்பு
ச. மெய்யப்பன் எம் ஏ.

ஆசிரியரின் பிற நூல்கள் :

(1) திருக்குறள் உரைவேற்றுமை—அறத்துப்பால்
(2) " " —பொருட்பால்
(3) " " —காமத்துப்பால்
(4) இயற்கை விருந்து
(5) குறள் விருந்து

விலை ரூ. 9-00

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

படையல்

செந்தமிழ்க்காவலர்

டாக்டர் அ. சிதம்பரநாதனார்க்கு

ஆட்சிப் பெருந்திறமை ஆராய்ச்சி நுண்ணறிவு
காட்சிப் பொலிவு கலந்தவுரு–மாட்சி
சிதம்பர நாதற்குச் செய்ய பரிபாடல்
பதமலர்க்கண் வைத்தேன் பணிந்து.

பதிப்பகத்தார் உரை

தமிழின் மிகத் தொன்மையான இலக்கியம் சங்க இலக்கியம்; தூய இலக்கியம்; தமிழ் நலம் காட்டும் இலக்கியம்; தமிழர் வாழ்வின் விளக்கமாக அமைந்த இலக்கியம்.

அவற்றைப் பதிப்புத்துறையின் வேந்து டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அரிதின் முயன்று வெளிக் கொணர்ந்தார். அவர்தம் தொண்டுக்குத் தமிழ் உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. தமிழ் வளர்த்த பெரியாருள் தலைசிறந்தவர் உ. வே. சா.

சங்க இலக்கியப் பெருமை விடுதலைக்குப்பின் மீண்டும் ஓங்கி வளர்ந்தது. புதிய புதிய ஆய்வுகள் எழுந்தன. புதிய பார்வைகள் முகிழ்த்தன! சங்க இலக்கியக் கல்வியும் வளர்ந்தது.

எட்டுத்தொகையை எல்லோரும் உணரும் வகையில் பல நூல்கள் பல்கின. ஆயினும் பரிபாடல் பற்றிய கட்டுரைகள் குறைவே. நூல் முழுமையும் பற்றிய முதல் ஆய்வு நூல் இதுவே.

டாக்டர் இரா. சாரங்கபாணி அவர்கள் நல்ல புலமையாளர்; தெளிவான சிந்தனையாளர். அவர்கள் பரிபாடலை பல்லாண்டுகளாக ஆய்ந்து மிகச் சிறந்த விளக்கங்கள் எழுதியுள்ளார்கள், சங்க இலக்கியப் பயிற்சிமிக்க அவர்களது ஆய்வுக் கருத்துக்கள் நன்கு கவனிக்கத்தக்கன.

பரிபாடலில் புதைந்துள்ள நுண்கூறுகளை ஆசிரியர் தம் மதிநுட்பத்தாலும் நல்லுழைப்பாலும் வெளிக்கொணர்ந் துள்ளார்கள்.

திருக்குறளை அவர்கள் கற்கும் முறையே தனிச் சிறப்புடையது. புதுநெறிகண்டு திருக்குறள் உரைகள் அனைத்தையும் தொகுத்து நுண்ணிய வேறுபாடுகள் எல்லாவற்றையும் ஏற்ற பெற்றி உணர்ந்து அரிய ஆராய்ச்சி நூல்களை எழுதிய புலமையாளர். அவர்களது 'திருக்குறள் உரைவேற்றுமை' வளரும் தமிழுக்கு நல மான ஆக்கம் ஆகும். உரைவேற்றுமையினை உவந்து அளித்த பேராசிரியர் அவர்கள் தம் ஆய்வு நூலை வெளியிட வாய்ப்பளித்தமைக்கு நன்றி உடையோம்.

நூல்வெளியீட்டில் குறிக்கோளோடு செயல் ஆற்ற விரும்பும் நாங்கள் தமிழின் மூத்த இலக்கியங்களான சங்க இலக்கியத்திற்கு ஆய்வு நூல்கள் வெளியிடுவதில் வேணவாக் கொண்டுள்ளோம். அதுவும் திறனாய்வு நூலாகவே அமைதல் வேண்டும் என்பது எம் நோக்கம்.

அத்தகு அரிய நூல்களை நன் முறையில் வெளியிடு வதில் ஒல்லும் வகையெல்லாம் துணை புரிந்து உதவும் திரு. ச. மெய்யப்பன் எம். ஏ. அவர்களுக்கும் எம் நன்றி உரியது.

—மெ. மீனாட்சி சோமசுந்தரம்

மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

டாக்டர் மு. வரதராசனார், எம். ஏ.,

எம். ஒ, எல்., பி. எச். டி., அவர்களின்

அணிந்துரை

பழந்தமிழரின் இலக்கியக் கருவூலமான சங்க இலக்கியத்துள் ஓர் அரிய செல்வம் பரிபாடல். இசையோடு பாடுதற்கு உரிய பாவகையான பரிபாட்டால் இயற்றப்பெற்ற எழுபது பாடல்களைப் புலவர் ஒருவர் இப் பெயரால் தொகுத்துக் காத்தார். ஆயினும் ஒரு சில பாடல்களே இன்று நமக்குக் கிடைத்துள்ளன. இயற்கை வருணனைகளும் வாழ்க்கையின் உண்மைகளும் பொதிந்த அழகிய பாடல்கள் இத்தொகுப்பில் உள்ளன. இத்தகைய வளம் வாய்ந்த நூலை ஆராய்ந்து அதன் அருமை பெருமைகளை விளக்கியுள்ளார், காரைக்குடி அழகப்பா கலைக்கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் சாரங்கபாணி அவர்கள். பரிபாடலின் காலத்தைப் பற்றிய அவருடைய ஆராய்ச்சி உண்மை கண்டு உரைக்கும் பாங்கினதாகும். பரிபாட்டின் யாப்பியல்பையும் இத்தொகுப்பில் உள்ள பாடல்களின் பொருளியல்பையும் அவர் திறம்பட ஆராய்ந்து கூறியுள்ளார். மற்றச் சங்கப் பாடல்களுக்கும் இவற்றிற்கும் உள்ள வேறுபாடுகளையும் தக்காங்கு எடுத்துரைத்துள்ளார்.

பாடிய புலவர்களுள் ஒவ்வொருவரையும் பற்றித் திறனாய்வுமுறையில் கருத்துகளைத் தொகுத்தும் வகுத்தும் எழுதியுள்ளவை கற்று மகிழ்தற்கு உரியன. பாடப்பட்ட பொருள்களையும் அவ்வாறே ஆராய்ச்சிப் போக்கில் நின்று விளக்கியுள்ளார். இறுதியில் பழங்காலத் தமிழர் பெற்றிருந்த பண்பாட்டு உயர்வினையும் கலைச் சிறப்புகளையும் எடுத்து விளக்கியிருத்தல் பாராட்டுக்குரியது. பரிபாடலில் உள்ள அரிய சொல் வழக்குகள் முதலியன 'மொழியியற் கூறுகள்' என்னும் தலைப்பின் கீழ் அமைந்துள்ளன. இவ்வாறு பல ஆண்டுகளாக அவர் பரிபாடலில் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனை இந்நூல் வடிவாகத் தந்துள்ளார். நூல் முழுமையும் அவர்தம் அரிய உழைப்பாற்றலையும் புலமைத் திறனையும் விளக்கி நிற்கக் காண்கிறோம். தமிழிலக்கிய ஆர்வம் உடையார் அனைவரும் இந்நூலால் பயன் பெறுவர் என்பது என் நம்பிக்கை.

மதுரை
5-1-72

மு. வரதராசன்

நூன்முகம்

சங்க இலக்கிய எட்டுத் தொகை நூல்களுள் பரிபாடல் ஒன்றெனக் கருதப்பெறினும் ஏனைய நூல்கள் போல இஃது அத்துணைப் பயிலப்பெற்றிலது. ஆய்வாளர் களுங்கூட, பிற சங்க நூல்களைப் பகுத்து ஆய முற்பட்டனரேயன்றி இந்நூலில் ஆய்வு கண்ணோட்டம் செலுத்த முற்பட்டிலர். 1958-இல் எம். லிட். ஆய்வுக்குத் தலைப்புக் குறித்து எண்ணிய காலை, பிறர் மேற் கொள்ளாத இந்நூலை எடுத்துக் கொள்ளலாம் எனத் துணிந்தேன். பரிபாடல் திறன் எனும் தலைப்பில் ஆய்ந்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1961இல் ஆங்கிலத்தில் என் ஆய்வுக்கட்டுரையைக் கொடுத்தேன். அதனைத் தழுவி எழுதப் பெற்றதே இத் தமிழ்நூல்.

பரிபாடலுக்குப் பெயர்க் காரணம் கூறவந்த பண்டை உரையாசிரியர்கள், எல்லாப் பாடல் வகை களையும் ஏற்றுவருதலின் பரிபாடல் எனும் பெயர்த்தா யிற்று என்பதுபடக் கூறிப் போந்தனர். 'இசை பரி பாடல்' என்பதே முதற் குறைந்து பரிபாடல் என வழங்கலாயிற்று. ஆதலின், பரிபாடல் என்பதற்குப் பொருள் இசை ஏற்று வரும் பாடல் என்பதுதான் எனும் கருத்து பல ஏதுக்களுடன் சுட்டப்பட்டுள்ளது. பரி பாடலின் காலம் சங்ககாலம் அன்று, பிற்காலமே என்பார் கருத்துப் பொருந்தாமைக்குத் தக்க சான்றுகளை இந் நூலிடைக் காணலாம். சங்க இலக்கியங்களுக்கிடையே பரிபாடலின் தனித்தன்மை குறித்துத் தனித்தலைப்பில்

ஆராயப்பட்டுள்ளது. பரிபாடற் புலவர்களின் இலக்கிய நயங்கள், வரலாற்றுக் குறிப்புகள், சமயக் கருத்துகள்' சொல்லமைப்புகள் முதலிய மொழியியற் கூறுகள் எல்லாம் விளக்கப்பட்டுள்ளன.

தமிழர் சமயம் பற்றி ஆராய விழைவார்க்குப் பழைய பனுவல்களுள் பரிபாடலே பெரிதும் கைகொடுக்க வல்லது. திருமால், செவ்வேள் பற்றிய செய்திகள் ஏனைய சங்க நூல்களும் பிற்கால இலக்கியங்களும் புலப்படுத்தும் செய்திகளோடு ஒப்பிடப்பட்டுள. மெய்யியற் கருத்துகளை உணரப் பரிபாடல் உறுதுணையாகும். பிற்காலப் பத்திப் பாசுரங்களின் பண்ணமைப்புக்கும் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் பரிபாடல்கள் அடிப்படை என்பதனையும் தெளியலாம். இன்னோரன்ன பொருளாராய்ச்சிகள் திறனாய்வு முறையில் தனித்தலைப்புகளிலும் தலைப்பு களுக்கு இடையேயும் மேற்கோள்களொடு ஆராயப் பட்டுள. சில பகுதிகள் மேலாராய்ச்சிக்கும் உரியன. எனினும், இந்நூலின் ஆய்வுக் கருத்துகள் எதிர் கால ஆய்வினர்க்குத் துணைசெய்யும் என்பது என் நம்பிக்கை.

எனது எம். லிட். ஆய்விற்கு மேற்பார்வையாளராக இருந்தவர் அழகப்பா கல்லூரி முன்னைத் தமிழ்ப் பேராசிரியரும் முதல்வரும், அண்ணாமலைப் பல்கலைக்கழக இன்றைய தமிழ்ப் பேராசிரியருமாய செம்மல்; டாக்டர் வ. சுப. மாணிக்கனார் ஆவர். அவர்கள் என்னை அன்று ஆய்வுத்துறையில் ஈடுபடுத்தி ஊக்கிச் செய்த உறு துணையே இன்று இந்நூல் வெளிவரக் காரணமாகும். ஆதலின் அன்னார்க்கு முதற்கண் என் நன்றி.

மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் பண்பின் திருவுருவமுமாய டாக்டர் மு. வரதராசனார் அவர்களை இந்நூற்கு ஓர் அணிந்துரை அளிக்குமாறு வேண்டினேன்.

அவர்கள் தம் பணிமிகுதிக்கிடையே அரியதோர் அணிந் துரை வழங்கியுள்ளார்கள். இவ்வணிந்துரை என் ஆராய்ச்சி நூலுக்கு ஒரு தனிப்பேறு. இப்பெருமகனார்க்கு என்றென்றும் கடப்பாடுடையேன்.

இந்நூல் செம்மையாக வெளிவர உதவிய உடனுசிரி யர்கள் திரு. இரெ. சிங்காரவடிவேலன், எம். ஏ., பி. டி., திரு. தே. சொக்கலிங்கம், எம். ஏ., பி. ஓ. எல்., திரு. ந. சத்திவேலு, எம். ஏ., பி. டி. ஆகியோர்க்கும் என் நன்றி உரியதாகும்.

சிதம்பரம் மணிவாசகர் நூலகம் ஆராய்ச்சி இலக்கிய நூல்கள் பலவற்றை வெளியீடு செய்து வளர்ந்து வரும் ஒரு நல்ல பதிப்பகம். இந்நூலகத்தின் வழி இலக்கியப் பணி ஆற்றிவரும் திரு. ச. மெய்யப்பன், எம். ஏ., இந்த ஆராய்ச்சி நூலை வெளியிட்டமைக்கு என் உளமார்ந்த நன்றி.

காரைக்குடி
5 1-72

இரா. சாரங்கபாணி

உள்ளுறை

பரிபாடல் திறன்

1. முன்னுரை

சங்க இலக்கியங்கள் எனக் கருதப் பெறுபவை பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் ஆகிய தொகை நூல்களாம். அவற்றுள் பரிபாடல் என்பது எட்டுத்தொகை வகையைச் சார்ந்தது.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்துங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை.

எட்டுத் தொகையின் பெயர்களைக் கூறும் இப் பழைய வெண்பாவால் பரிபாடல் ஐந்தாவது வரிசையில் நிற்ப தனையும், 'ஓங்கு பரிபாடல்' எனச் சிறப்பிக்கப்பெறுவதனையும் அறியலாம். எட்டுத்தொகையுள் அடிகள் மிக்குள்ள பாடல்களைப் பெற்று இலங்குவது பரிபாடலே யாதலின், அஃது 'ஓங்கு' என்னும் சிறப்படை பெற்றிருத்தல் கூடும். உரைச் சிறப்புப் பாயிரத்தில் ஒரு புலவர்,

'சங்க மென்னும் துங்கமலி கடலுள்
அரிதின் எழுந்த பரிபாட் டமுதம்

என இந்நூலைப் பாராட்டுடுப்பர். கலிப்பாவால் இயன்ற நூல் கலித்தொகை எனப் பெயர்பெற்றதுபோலப் பரிபாடல்

என்னும் ஒருவகைப் பாவான் இயன்ற இந்நூல் பரிபாடல் எனப் பெயர்பெறுவ தாயிற்று.

பரிபாடல், பரிபாட்டு என்பன ஒருபொருட் கிளவிகள். பரிபாடல் என்பது அனைத்துவகைப் பாக்களையும் ஏற்றுவரும் ஒரு பா. இப்பாவின் இலக்கணத்தைப் 'பரிபாடல் யாப்பு' என்னும் தலைப்பில் விரிவாக காணலாம்.

பாடல் எண்ணிக்கை

இறையனார் அகப்பொருள் உரை, தொல்காப்பிய உரை முதலியவற்றால் பரிபாடல் எழுபது பாக்களைக்கொண்ட நூல் என அறிகிறோம்.[1] எழுபது பாக்கள் எனத் தொகையைக் குறிப்பிடுவதோடு ஒரு வெண்பா பாடுபொருளையும் வகைப் படுத்துகின்றது.[2] திருமாலுக்கு 8, செவ்வேட்கு 31, காடு கிழாட்கு (கொற்றவைக்கு) 1 (கார்கோள் என்னும் வேறு பாடம் கொள்ளின் கடற்கு 1), வையைக்கு 26, மதுரைக்கு 4 எனப் பாடல்கள் இருந்தமை அறிகின்றோம். ஆனால் இப் பொழுது கிடைப்பன மொத்தம் 22 பாடல்களே. திருமால்6; செவ்வேள் 8; வையை 8. இவைதவிர, உரையாளர்களின் மேற்கோளால் கிடைத்த திருமால் பற்றிய ஒன்றும், வையை குறித்த ஒன்றும் ஆக இரு முழுப்பாடல்களும், புறத்திரட்டு, நம்பியகப் பொருள், தொல்காப்பிய உரை ஆகியவற்றின் துணையால் கிடைத்த சில குறைப் பாடல்களும் கிடைத் துள்ளன. அவை 'பரிபாடற்றிரட்டு' என்ற தலைப்பில் டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பில் இடம் பெற்றுள.

---

1. இறையனார் அகப்பொருள் உரை, பக். 7.
   தொல். செய். 149 பேரா.

2. 'திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
   தொருபாட்டு காடுகாட்கு ஒன்று—மருவினிய
   வையை யிருபத்தாறு மாமதுரை நான்கென்ப
   செய்யபரி பாடற் றிறம்.'

'இருமை வகை தெரிந்து' (23) எனத் தொடங்கும் குறட்கண் பரிமேலழகர்,

தெரிமாண் தமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்

என்னும் அடியினை மேற்கோள் காட்டுவர். இது பரிபாடற் பகுதியாம் என 'நுண்பொருள்மாலை' நுவலும். பரிபாடலை முதற்கண் தொகுத்தார் யார், தொகுப்பித்தார் யார் என இப்பொழுது அறிய வியலவில்லை.

பரிபாடல் தொகைக் குறிப்பு

பொருள்	பாடிய பாடல்கள்	இப்பொழுது கிடைப்பன		
		பரிபாடல்	பரி – திரட்டு	
			முழுமை	பகுதி
திருமால்	8	6	1	...
செவ்வேள்	31	8	...	...
கொற்றவை	1	...	...	...
வையை	26	8	1	4
மதுரை	4	...	...	7

பரிபாடலைப் பாடிய புலவர்கள் பதின்மூவர். அவற்றிற்கு இசை வகுத்தோர் பதின்மர். முதற்பாவையும் இறுதிப் பாவையும் பாடிய புலவர் பெயரும் அவற்றிற்கு இசை வகுத்தார் பெயரும் தெரிந்தில. ஒவ்வொரு பாடலின் கீழும் பாடியோர் பெயர், இசை வகுத்தோரின் பெயர், பாடற்பண் ஆகியவை காணப்பெறும். எனினும், பதின்மூன்றும் பாடற்கு இசை வகுத்தோர் யார் என அறிதற்கில்லை.

பரிபாடலைப் பற்றிய பிற குறிப்பு

பாடல் எண்	அடி	பொருள்	பாடியோர்	இசை வகுத்தோர்	பண்
1	65	திருமால்	—	—	—
2	76	,,	கீரந்தையார்	நன்னுகனுர்	பாலை யாழ்
3	94	,,	கடுவனிளவெயினனுர்	பெட்டனுகனுர்	,,
4	73	,,	,,	,,	,,
5	81	செவ்வேள்	,,	கண்ணனுகனுர்	,,
6	106	வையை	ஆசிரியன் நல்லந்துவனுர்	மருத்துவன் நல்லச் சுதனுர்	,,
7	86	வையை	மையோடக் கோவனுர்	பித்தாமத்தர்	,,
8	130	செவ்வேள்	ஆசிரியன் நல்லந்துவனுர்	மருத்துவன் நல்லச் சுதனுர்	,,
9	85	,,	குன்றம்பூதனுர்	,,	,,
10	131	வையை	கரும்பிள்ளைப் பூதனுர்	,,	,,
11	140	,,	ஆசிரியன் நல்லந்துவனுர்	நாகனுர்	,,

பாடல் எண்	அடி	பொருள்	பாடியோர்	இசை வகுத்தோர்	பண்
12	102	வையை	நல்வழுதியார்	நன்னுகனுர்	பாலை யாழ்
13	64	திருமால்	நல்லெழுநியார்	—	நோதிறம்
14	32	செவ்வேள்	கேசவனுர்	கேசவனுர்	,,
15	66	திருமால்	இளம் பெருவழுதியார்	மருத்துவன் நல்லச் சுதனுர்	,,
16	55	வையை	நய்லழிசியார்	நல்லச்சுதனுர்	,,
17	53	செவ்வேள்	,,	,,	,,
18	56	,,	குன்றம் பூதனுர்	,,	காந்தாரம்
19	105	,,	நப்பண்ணனுர்	மருத்துவன் நல்லச் சுதனுர்	,,
20	111	வையை	ஆசிரியன் நல்லந்துவனுர்	நல்லச்சுதனுர்	,,
21	70	செவ்வேள்	நல்லச்சுதனுர்	கண்ணகனுர்	,,
22	49	வையை	—	—	—

தொகுப்பு முறை

இப்பாடல்கள் திருமால், செவ்வேள், வையை என்னும் பாடுபொருள் அடிப்படையிலோ பாடிய புலவர்களின் அடிப் படையிலோ முறைப்படுத்தித் தொகுக்கப் பெறவில்லை. ஆனால் பாடப்பெற்ற பண் அடிப்படையில் இந்நூல் தொகுக்கப்பெற்றுள்ளது என்பது ஆழ்ந்து நோக்குவார்க்குப் புலனாகும். பரிபாடற் பாக்களில் 2-12 பண்ணுப் பாலையாழ்; 13–17 பண் நோதிறம்; 18-21 பண் காந்தாரம். முதல் இறுதிப் பாடல்களின் பண் தெரியாவிடினும், இந்நூல் பண் அடிப் படையில் அமைந்திருத்தலின், முதற்பாவின் பண் பாலையாழ் என்றும், இறுதிப் பாவின் பண் காந்தாரம் என்றும் முன்பின் வரும் பாட்டுப்பண் கொண்டு உய்த்துணரலாம். அக்காலத்தே பரிபாடல்கள் குறிப்பிட்ட பண்களோடு பாடப்பட்டன. எனவேதான், பரிபாடல் இசைப்பாட்டு எனும் பெயர் பெற்றது. இந்நூல் உரையாளரான பரிமேலழகர், 'பரிபாட் டென்பது இசைப்பாவாதலான்' எனக் கூறுவதும், தொல்காப்பிய உரையாளரான பேராசிரியர், 'கலியும் பரிபாடலும் போலும் இசைப் பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன' (தொல். செய். 242) எனக் கூறுவதும் மேற் கூறிய கருத்தை வலியுறுத்தும். 'இன்னியல் மாண் தேர்ச்சி இசைபரிபாடல்' என அந்நூலின்கண் வருந்தொடரே அதன் இசைத் தன்மைக்கு அகச் சான்றாகும். டாக்டர் துரையரங் கனார், பரிபாடலின் நடைப் போக்கில், உரையாடல், இசை என்னும் இரண்டின் போக்கு அமைந்துள்ளது எனக் குறிப் பிடுவர்.[3] இந்நூலிடை இசைபற்றியும் இசைக்கருவிகள் பற்றியும் பல குறிப்புகள் உள என்பதும் கருதற்பாற்று.

நாடக இயல்பு

தொல்காப்பியம் கூறும் இலக்கிய மரபுப்படி பரிபாடல் நாடக முறைக்கு நனி சிறந்ததாகும்.

---

3. தென்றலிலே தேன்மொழி, பக். 92.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலநெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனர் புலவர். (தொல்.999)

டாக்டர் துரையரங்கனர் 'பரிபாடலில் நாடகப் பண்புகள்'[4] எனும் கட்டுரையில், பரிபாடல் ஆங்கிலப் பா வகையுள் ஒன்ருன சானெட்டை[5] ஒத்துத் தொடக்கத்தில் கூறக் கருதும் கருத்தைச் சுருக்கிக் கூறி, இடையில் விரித்து விளக்கி, இறுதியில் முடிவு தெரிவிக்கும் என்பர். உலகில் நிகழும் வாழ்வியற் பொது நிகழ்ச்சிகளைப் பரிபாட்டற் புலவர்கள் நாடக முறையில் தெளிவாகச் சித்திரித்துள்ளனர். ஆகவே, இந்நூல் நாடக அமைப்பைத் தழுவியது எனக் கூறுவது இழுக்காகாது. பரிபாடல் இயல், இசை, நாடகம் என்னும் முக்கூற்றையும் கொண்டிலங்குதலின், இதனை முத்தமிழிலக்கியமாகக் கொள்ளலாம்.[5] செய்யுட்குரிய எண்வகை வனப்புகளுள் இதனை 'இழைபு' என்பர் பேராசிரியர்.[7]

பாடற் பொருள்

சங்க நூல்கள் பெரும்பாலும் அகம் புறம் என்னும் இருபாற்படும். இப்பகுப்பு தமிழிற்கே உரிய சிறப்பு முறையாகும். எட்டுத் தொகையுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்பன அகம் புகல்வன. பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறம் நுவல்வன. ஆனுல், பரிபாடலோ இரண்டையும் இயம்பும் இயல்பினது. வையை பற்றிய பரிபாடல்கள் அகம் தழுவியன. பிற புறம் பற்றியன. 'ஒத்த பதிற்றுப் பத்து ஓங்கு பரிபாடல்

4. தென்றலிலே தேன்மொழி.
5. இது 14 அடிகள் கொண்ட ஆங்கிலப் பாவகையைச் சார்ந்தது.
6. வான்வழி வையை, பக். 19.
7. தொல். செய். 242

கற்றறிந்தா ரேத்தும் கலி' என்னும் இப்பாவில், புறம் நுவலும் பதிற்றுப்பத்துக்கும் அகம் புகலும் கலித்தொகைக் கும் இடையே பரிபாடலை வைத்திருப்பது, இரண்டு திணையும் இயம்பும் பெற்றி நோக்கிப் போலும் என்பர் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்.

அடிவரையறை

முதல் இலக்கணியான தொல்காப்பியர் பரிபாட்ல் அடி களின் எல்லையைக் கூறுமிடத்துச் சிற்றெல்லை 25, பேரெல்லை 400 என வரையறுத்தாரேனும், நம் கையகப்பட்ட பரிபாடல்களுள் 32 அடிக்குக் குறைந்தனவும் 140 அடிக்கு மிகுந்தனவும் கிடைத்தில.

அகத்திணையைப் பாரித்துரைக்கக் கலி பரிபாடல்களே ஏற்புடையன எனத் தொல்காப்பியர் மொழிகுவர். ஆனல், கிடைத்தபரிபாடல்களில் பெரும்பாலனதிருமால், செவ்வேள் களைப் பற்றிய வாழ்த்துக்களையே கூறுகின்றன. அவை திருமாலிருஞ்சோலைமலை, திருப்பரங்குன்றம், குளவாய், இருந்தையூர் ஆகிய இறையுறை இடங்களை இயற்கைக்காட்சி களோடு புனைந்து ஏத்துகின்றன. ஆகவே, தொல்காப்பியக் கருத்துக்கு மாறாகப் புறம்பற்றிய கருத்தைப் பரிபாடலிற் காண்கிறோம். எனவே, புறத்திணையைப் பரிபாடலிற் கூறுதல் என்பது தொல்காப்பியர் காலத்துக்குப்பின் ஏற்பட்ட கால மாறுதலின் வளர்ச்சி என்றே கருதுதல் வேண்டும்.

பாண்டியர் பாடல்

தொல்காப்பியனார் தமிழகத்து மூவேந்தர்தம் நாடு களையும் குறிப்பிட்டுள்ளார் (தொல். 1336). சங்க இலக்கியங் களாய பத்துப்பாட்டு எட்டுத் தொகையுள் பெரும்பாலன மூவேந்தர்களையும் பற்றிப் பேசுகின்றன. ஆனல், பரிபாடல் பாண்டிய வேந்தர்களை மட்டுமே குறிப்பிடுகின்றது. இத் தொகை நூலில் காணப்பெறும் பாடல்களோ திரட்டில்

காணப்பெறும் குறைப்பகுதிகளோ சேரரைப் பற்றியாதல் சோழரைப் பற்றியாதல் யாதொன்றும் மொழிந்தில. பரிபாடல்கள் சேர சோழர்கள்மீது அக்காலத்துப் பாடப் பெறுமல் இருந்திருக்கலாம் போலும்! இவ்வகையான பாடல்கள் பாண்டிய நாட்டில் பரவியிருந்தன என்றும், அங்ஙனம் பரவியிருந்த பாக்களைப் பாண்டிய நாட்டைச் சார்ந்தோர் சேர்த்துத் தொகுத்திருக்கலாம் என்றும் கருத இடமுண்டு.

தலைச் சங்க காலத்து எத்துணையோ பரிபாடல்கள் இருந்தன என்று இறையனார் அகப்பொருள் உரை இயம்பு கிறது.[8] ஆயினும் அக் காலத்தெழுந்த பரிபாடல்களுள் ஒன்றேனும் கிடைக்கப் பெறாதது நம் தவக்குறைவேயாம். கடைச் சங்க காலத்துக்குப் பின்னும் திருக்குருகைச் சடகோபாழ்வார் சந்நிதிக் கவிராயர் பரம்பரையிலிருந்த புலவரொருவரைத் தவிர, வேறு யாரும் பரிபாடல் யாத்த தாகத் தெரியவில்லை. அப்புலவர் பாடிய நான்கு பரிபாடல் களும் 'பாப்பாவினம்' எனும் நூலில் இடம் பெற்றுள்ளன.

பதிப்புகள்

பரிபாடல் இதுகாறும் நான்கு முறை பதிப்பிக்கப் பெற் றுள்ளது. டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் பரிமே லழகர் உரையுடன் தம் குறிப்புகளையும் மூலத்துடன் சேர்த்து 1918 ஆம் ஆண்டு முதற் பதிப்பினை வெளியிட்டார்கள். 1935 ஆம் ஆண்டு வெளிவந்த அவர்தம் இரண்டாம் பதிப்பில் பரிபாடல்களின் பொழிப்புரை இடம் பெற்றுள்ளது. உரைச் சிறப்புப்பாயிரமும் இப்பதிப்பின்கண் புதுவதாகச் சேர்க்கப் பெற்றுள்ளது. பின் வந்த அவர்தம் இரு பதிப்புகளில் முன் பதிப்புப் போலாது ஒவ்வொரு பாடலுக்கு முன்னும் பொழிப் புரை தரப்பட்டுள்ளது. இறுதியில் இலக்கணம், விளக்கக் குறிப்புகள், ஒப்புமைப் பகுதிகள் முதலியவை உள்ளன. இப் பிற்பதிப்புகளில் சீரிய ஆய்வுக் கருத்துகளைக் காணலாம்.

---

8. இறையனார் அகப்பொருள் உரை, பக். 6

'இந்நூலாலும் உரையாலும் தெரிந்த விசேடச் செய்திகள்' என்னும் பகுதியில், விழுமிய கருத்துகளை வகைப்படுத்திப் பல்வேறு சிறு தலைப்பில் பதிப்பாசிரியர் எழுதியிருத்தல் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்ததாகும்.

இடைச் செருகல்

சீவகசிந்தாமணியில் இடைச் செருகல் செய்து நூலின் தன்மையைக் கெடுத்தது போலவே இப் பரிபாடலையும் கந்தியார் எனும் பொய்ப்புலவர் கெடுத்தார் என்பர். பரிமேலழகர் உரை வரைய முற்பட்டகாலை, அக்குற்றங் களைந்து செப்பஞ் செய்தார் என்று அறிகின்றோம். இதனை,

> 'மிகைபடு பொருளை நகைபடு புன்சொலின்
> தந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பும்
> எழுதினர் பிழைப்பு மெழுத்துரு வொக்கும்
> பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்
> ஒருங்குடன் கிடந்த ஒவ்வாப் பாடம்
> திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலிற்
> சிற்றறி வினர்க்குந் தெற்றெனத் தோன்ற
> மதியின் றகைப்பு விதியுளி யகற்றி
> அணிதிகழ் பாடத்துத் துணிதரு பொருளை
> சுருங்கிய உரையின் விளங்கக் காட்டினன்
> நீணிலங் கடந்தோன் தாடொழு மரபிற்
> பரிமே லழக னுரிமையி னுணர்ந்தே."

என்னும் உரைச் சிறப்புப் பாயிரம் உணர்த்தல் காண்க.

உரையாசிரியர்

டாக்டர் உ. வே. சா., நுண்பொருள் மாலை ஆசிரியர், முதலிய அறிஞர் பெருமக்கள் பரிபாடலின் உரையாசிரியர் பரிமேலழகரே எனக் கூறுவர். ஆனல், அறிஞருள் சிலர்—பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை போன்றோர்—இக்கருத்தினை உடன்படுதலில்லை. பரிபாடலின் உரை, சிறப்பு நோக்கி

மேதைகளால் பாராட்டுப் பெறுதல் வெள்ளிடை மலை. பரிமேலழகரின் திருக்குறள் உரைக்கும் பரிபாடல் உரைக்கும் சில பல இடங்களில் ஒப்புமை காணப்படுகின்றன. இவற்றை நுண்பொருள் மாலை குறிப்பிடும்.

ஐந்தாம் பரிபாடல் மட்டும் பொறித்த ஒரு பழைய ஏட்டின் இறுதியில், 'இந்தப் பாட்டிற்கெல்லாம் பரிமேலழகரையன் உரையாற் பொருளுணர்ந்து கொள்க' என வரையப்பட்டுள்ளது. ஆகவே, இந்நூலுரையாசிரியர் பரிமேலழகரே எனக்கோடல் தகும்.

டாக்டர் உ. வே. சா. அவர்களின் புலமைக் குறிப்புகளோடு கூடிய சீரிய பரிபாடற் பதிப்பு, ஆராய்ச்சி மாணவர்க்கு உறுதுணை பயப்பதாகும். எனவே, அந்நூலை ஆராயத் தொடங்குவாரெல்லாம் அன்னார்க்குக் கடமைப்பட்டவராவர். பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் பரிபாடலைக் குறித்து நீண்ட ஆய்வுக் கட்டுரை ஒன்றெழுதி 1942இல் வெளியிட்டுள்ளார்கள். அதுவும் ஆய்வாளர்களுக்கு உதவும் பெற்றியது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அறிஞர்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்துப் 'பரிபாடற் சொற்பொழிவுகள்' என்னும் ஒரு நூலை வெளியிட்டுள்ளது. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை,[9] டாக்டர் துரையரங்கனார்[10], டாக்டர் இராசமாணிக்கனார்[11], பேராசிரியர் அரசங்கண்ணனார்[12]. திரு. கி. வா. சகந்நாதன்[13], ஆகியோர் தம் நூலில் சில பரிபாடல்களுக்கு விளக்கம் தந்துள்ளனர்.

பரிபாடலில் வரலாற்றுக் குறிப்பு மிகக் குறைவு. பாண்டியர்களை இந்நூல் பொதுவாகக் குறிப்பிட்டாலும் ஒரு வேந்தன் பெயரைச் சுட்டிக் குறிப்பிடவில்லை. போரைப்

9. இலக்கிய விளக்கம்.
10 தென்றலிலே தேன்மொழி.
11. வையை
12. வான்வழி வையை
13. தமிழ் வையை, பெரும் பெயர் முருகன்

பற்றிய குறிப்பும் போர்க்கள நிகழ்ச்சியும் விதந்து புனையப் பட்டில. ஆய்வாளர்கள் இதனைப் புறக்கணித்தமைக்கு வரலாற்றுக் குறிப்பின்மையே தலையாய காரணம் எனலாம். ஆனால், சமயம் பற்றியும் தமிழகப் பண்பாடு பற்றியும் எழுது வதற்கு இதுவே அடிப்படைநூல் என்பது ஒருதலை. சமயத் தோற்றம், வளர்ச்சி முதலியவற்றை ஆராய இந்நூல் பெரிதும் பயன்படும். இந்நூலின்கட் காணப்பெறும் பல கருத்துகள் மக்களின் வாழ்வியலைப் பட்டாங்குக் காட்ட வல்லன. தமிழ்நாட்டு அழகுக்கலைகளின் தோற்ற வளர்ச்சி களை இந்நூல் செவ்விதிற் புலப்படுத்தும். தொகை நூல்களில் பாண்டிய நாட்டின் பண்பாட்டைத் தெளிவாகவும் விரிவாக வும் பரிபாடல்போல எந்நூலும் எடுத்தியம்பவில்லை எனத் துணிந்து கூறலாம். பரிபாடல் காட்டும் பல்வகைச் சிறப் பியல்புகளையும் இந்நூலிற் பரக்கக் காணலாம்.

2. பரிபாடலின் காலம்

பரிபாடலைத் தொகுத்த காலம் யாது? அப்பாடல்கள் தோன்றிய காலம் யாது? என்பனவற்றை இப்பகுதியிற் காண்போம். பரிபாடல் எட்டுத் தொகையுள் ஒன்று என்பது யாவரும் அறிந்த உண்மை. பரிபாடலின் முற்பகுதியும் பிற்பகுதியும் காணாதொழிந்தமையின் இந்நூலைத் தொகுத்தாரும் தொகுப்பித்தாரும் யாவரென அறிதற்கியலவில்லை. இவ்விருவர் பெயரும் அறியின் பரிபாடல் தொகுக்கப்பெற்ற காலத்தை ஒருவாறு அறுதியிட்டலாம். இந்நூல் தமிழகத்தி லுள்ள பிறநாடுகளைப் பாடாது பாண்டிய நாட்டையே பாடுதலின் இது பாண்டியர்களாலேயே தொகுக்கப் பெற்றி ருக்கக்கூடும் எனக் கருதலாம்.

தொகுத்த காலம்

சங்க காலத்தெழுந்த அனைத்துப் பாக்களும் ஒரே காலத்துத் தோன்றியவல்ல. சில பாடல்கள் முந்தியனவாக வும் சில பிந்தியனவாகவும் இருக்கலாம். இவ்வாறு கால வேறுபாடுடைய பாடல்கள் வெவ்வேறு நூல்களாகத் தொகுக்கப்பெற்ற காலம் அப்பாடல்கள் தோன்றிய காலத் திற்குப் பின்னரேயாம். பேராசிரியரும் (கி. பி. 12ஆம் நூற்றாண்டு) நச்சினார்க்கினியரும் (கி. பி. 15ஆம் நூற்றாண்டு) தம் தொல்காப்பிய உரையில் 'தொகை' என்ற சொல்லை ஆண்டுள்ளனர். ஆகவே, பேராசிரியர் காலமாகிய கி. பி. 12ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இத் தொகைநூல் தோன்றி

யிருக்கவேண்டும். தொல்காப்பியச் செய்யுளியல் 119ஆம் நூற்பாவுக்கு உரை வரையுங்காலை, 'ஆயிரம் விரித்த' எனத் தொடங்கும் பரிபாடலை மேற்கோள் காட்டுவர் இளம்பூரணர். இவர் காலம் கி. பி. 11 ஆம் நூற்றூண்டு என அறிஞர்களால் வரையறுக்கப் பெற்றிருத்தலின், இதற்கு முன்னமே அந்நூல் தொகுக்கப் பட்டிருத்தல் வேண்டும். கடைச் சங்கத்தைப் பற்றிக் குறிப்பிடுங்காலை, இறையனுர் களவியலுரை, 'அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப் பத்தும், நூற்றைம்பதுகலியும், எழுபது பரிபாடலும், கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் என்று இத்தொடக்கத்தன" எனப் பேசுகிறது. களவியல் உரையில் கி. பி. 7ஆம் நூற்றூண்டில் வாழ்ந்த அரிகேசரி எனப்பெயரிய நின்றசீர் நெடுமாறனைத் தலைவனுகக் கொண்ட பாண்டிக்கோவை காணப்படுதலின் களவியலுரை கி. பி. 7ஆம் நூற்றூண்டினது என எளிதில் முடிவு கட்டலாம். பத்துத் தலைமுறை செவி வாயிலாக வந்து, பின்னரே இவ்வுரை வரிவடிவம் பெற்றது என்று களவியலுரை கூறுகிறது. ஒவ்வொரு தலைமுறைக்கும் 25 ஆண்டுகள் வைத்துக் கணக்கிட்டாலும், பரிபாடல் தொகை பெற்ற காலம் கி. பி. 5 ஆம் நூற்றூண்டின் முற்பகுதி எனலாம். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை இம்முறைப்படி குறுந்தொகை தொகுக்கப்பெற்ற காலம் கி. பி. 4 ஆம் நூற்றூண்டின் பிற்பகுதி என்பர்[1]. பேராசிரியர் சீநிவாச ஐயங்கார் பழைய செய்யுட்களெல்லாம் பல்வேறு தொகைநூல்களாகக் கி. பி. 5 ஆம் நூற்றூண்டில், அல்லது அதற்குப் பிந்தித் தொகுக்கப் பெற்றவை என்பர்[2]. ஆனுல், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கலித்தொகையும் பரிபாடலும் தொகுக்கப்பெற்ற காலம் கி.பி. 8ஆம் நூற்றூண்டு எனக் கருத்து வேறுபடுவர். இஃது ஏற்கத் தகுவதன்று.

---

1. கரந்தைக் கட்டுரைக் கோவை, பக். 184.
2. History of the Tamils, P. 155.

பரிபாடல்கள் எழுந்த காலம்

துடிசைக்கிழார் சிதம்பரனுர் பரிபாடல் இடைச் சங்கத்தைச் சார்ந்த நூல் என்பர்[3]. திருவாரூர்ச் சோமசுந்தர தேசிகர் பதினேராம் பரிபாடல் கூறும் கணிதக்குறிப்பைக் கொண்டு, பரிபாடலின் காலம் 27-7-0017- அஃதாவது கலி 3119 என்று கொள்வதைவிட, கி.மு. 161 கலி 2941 பிரமாதி ஆண்டு ஆவணி 12 வியாழன் என்று கொள்வதே மேல் என வரையறுப்பர்[4]. இவர் கருத்துப்படி, பரிபாடலின் காலம் கி.மு. இரண்டாம் நூற்றூண்டாகும்.

பரிபாடற் சொற்பொழிவுகளின் தலைமைப் பொழிவில் பேராசிரியர் கு. அருணசலக் கவுண்டர், பரிபாடற் காலம் கி.மு. முதல் நூற்றூண்டிற்கு அண்மையாகலாம் என மொழிந்துள்ளார்.

சீநிவாசப்பிள்ளை, கிருட்டினசாமி ஐயங்கார், கனகசபைப் பிள்ளை, அ. குமாரசாமி, டாக்டர் மு. வரதராசனுர், டாக்டர் மா. இராசமாணிக்கனுர், டாக்டர் வ. சுப. மாணிக்கனுர் முதலியோர் சங்க இலக்கியங்களான பத்துப் பாட்டு, எட்டுத்தொகை நூல்களின் காலம் ஏறத்தாழ கி.பி. 2 ஆம் ஆற்றூண்டு ஆகலாம் என்பர்.

நாராயணசாமி ஐயர், டாக்டர் மு. கோவிந்தசாமி ஆகியோர் பரிபாட்லின் காலம் கி.பி. மூன்றும் நூற்றூண்டு, அல்லது கி.பி. நான்காம் நூற்றூண்டு என எண்ணுப. ஆனுல் திருவாளர் சாமிக்கண்ணுப் பிள்ளையும் வையாபுரிப் பிள்ளையும் பரிபாடலின் காலம் கி.பி. 7 அல்லது 8 ஆம் நூற்றூண்டு என்பர்.

பரிபாடலின் காலம் கி.பி. 2 ஆம் நூற்றூண்டு அன்று; பிற்காலமே என்பார் தம் கொள்கைக்குச் சான்றுகக்காட்டும் காரணங்கள் பின்வருவன:

---

3. தமிழ்ச் சங்கங்களின் வரலாறு, பக். 56.
4. செந்தமிழ்-தொகுதி, 22.

1. பரிபாடலைப் பாடிய புலவர் பெயர்களை வேறு தொகை நூல்களில் காணவியலவில்லை. பரிபாடலில் சில பாக்களைப் பாடிய ஆசிரியன் நல்லந்துவனார் என்பார் மதுரை யாசிரியன் நல்லந்துவனார், அந்துவனார் என்னுமிருவரினும் வேறுபட்டவராவர். இஃதொப்பவே பரிபாடல் (15) பாடிய இளம்பெரு வழுதியும், புறநானூறு (182) பாடிய கடலுண் மாய்ந்த இளம்பெரு வழுதியும் வேறுவர்[5].

2. பரிபாடற் புலவர் பெயர்கள் வடமொழிப் பெயர் களாக இருத்தலை நோக்கின் அந்நூல் கி.பி. ஆறும் நூற்றாண் டினது எனக் கருதலாம்[6]. அந்நூலில் வரும் ஆரியக் கதை களும் வடசொற்களும் அக்கருத்தை மேலும் வற்புறுத்தும். பிற தொகைநூல்களினும் வடநூற் கருத்தையும், வடசொற் களையும் இந்நூலே மிகுதியாகக் கொண்டுள்ளது.

யாத்திரை, பிரமம், இரதி, கௌதமன், சோபனம் என்ற சொற்கள் 19ஆம் பரிபாடலிலும்; வந்திக்க, சிந்திக்க, வசியம், என்பன 20 ஆம் பாடலிலும்; மிதுனம், புன்னாகம், சண்பகம், குந்தம், மல்லிகாமாலை என்பன 11 ஆம் பாடலிலும்; புங்கவம், நாதர், குடாரி, அருச்சிப்போர், அமிர்தபானம் என்பன 8 ஆம் பாடலிலும்; கவிதையும், ஆராதனையும் 6ஆம் பாடலிலும் வருவதைக் காணலாம். அகலிகை சாபம், பிரகலாதன் கதை முதலிய பிற்காலப் புராணக் கதைகளும் இடம் பெற்றுள்ளன. பிற்காலச் சமூகப் பழக்க வழக்கங் களும், பிற்கால விழாக்களும், அம்பாவாடலும், தைந்நீராட லும் பேசப்படுகின்றன[8].

3. தமிழ்மொழி வரலாற்றிற் காணப்பெறும் பிற்காலச் சொல்லுருவங்களும் பரிபாடலில் காணப்படுகின்றன. நான்

---

5. History of Tamil Language and Literature, P. 20: Prof. S. V. Pillai.

6. History of the Tamils, P. 583.

7. History of Tamil Language and Literature, P. 29, காவிய காலம் பக். 38.

8. History of Tamil Language and Literature, P. 56.

(20-82), ஆமாம் (16-71), கடைந்தக்கால் (திரட்டு 1-64), அல்லால் (திரட்டு 2-85) என்பனவற்றைக் காண்க[7].

4. சங்க காலத்துக்குப் பிந்தியே திருவேங்கடம், திருவரங்கம், திருமாலிருஞ் சோலைமலை, திருவனந்தபுரம் ஆகியவை திருமாலின் திருப்பதிகளாகப் புகழ்ந்தேத்தப் பெற்றுள்ளன. திருமால் கோயில் கொண்டிருக்கும் அச்சீரிய இடங்களைப் பிற்கால ஆழ்வார்களே பாராட்டிப் பாமாலை சூட்டியுள்ளனர். திருவேங்கடம், திருவரங்கம் பற்றி இளங்கோவடிகளும் தம் சிலப்பதிகாரத்துப் பாடியுள்ளார். திருமால் எழுந்தருளியிருக்கும் திருமாலிருஞ்சோலைமலையைப் பரிபாடல் பரவிப் பாடியுள்ளது. ஆதலால், பரிபாடலின் காலம் கி.பி. ஆறும் நூற்றாண்டாகலாம்[10].

5. திருப்பரங்குன்றத்தைப் பாடிய தம் ஒரு பாடலில் திருஞானசம்பந்தர் ஆண்டெழுந்தருளியுள்ள முருகனைக் குறிப்பிடவில்லை. திருமுருகாற்றுப் படையும், பரிபாடலும் ஆங்குள்ள முருகனைப் பாடியுள்ளன. சம்பந்தர் காலத்து அங்கு முருகன் கோயில் இருந்திருப்பின் அவர் பாடியிருப்பர். அவர் பாடாமையின் அவர் காலத்துக்கும் (கி.பி. 650) பின்னரே முருகன் கோயில் தோன்றியிருக்க வேண்டும். பிற்கால இலக்கிய மாதலினுற்றான் திருமுருகாற்றுப் படையைப் பன்னிருதிருமுறையிற் சேர்த்துள்ளனர். எனவே, இவ்வாற்றுப்படையின் காலமும் அதனைப் பாடிய நக்கீரர் காலமும் கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்னலாம். பரிபாடலும் பரங்குன்றத்து முருகனைப் பாடியிருத்தலின் அது கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியது என்பது உறுதி.[11]

6. பாண்டிய நாட்டு மதுரை கி.பி. ஆறும் நூற்றாண்டில் அரசியல் குழப்பத்துக் காளாகியிருந்தது. களப்பிரர்களும் பாண்டியர்களும் தம் தலைமைக்குப் போராடி நின்ற காலமது.

9. காவிய காலம், பக். 121.
10. காவிய காலம், பக். 121.
11. காவிய காலம், பக். 121.

புலவர்களின் புரவலர்களான பாண்டியர்களைப் பிற தொகை நூல்கள் போலப் பெயர் சுட்டிச் சொல்லாமல், பரிபாடல் பொதுவாகக் கூறுவதற்கும் அவ்வரசியற் குழப்பமே காரணமாகும்[12].

7. கி. பி. மூன்றும் நூற்றுண்டிற்கு முந்திய எவ்விலக்கியமும் அகத்தியரைக் குறிப்பிடவில்லை. ஆனல் பரிபாடலோ பொதியில் முனிவன் (11-11) எனப் புகலும்.[13]

8. கி. பி.மூன்றும் நூற்றுண்டின் இறுதியிலோ நான்காம் நூற்றுண்டின் தொடக்கத்திலோ செங்கோல் செலுத்திய அபிடேக பாண்டியன் காலத்துக்குப் பின்னேதான் மதுரை நான்மாடக்கூடல் என அழைக்கப் பெற்றது.[14] பரிபாடல் மதுரையை நான்மாடக்கூடல் எனக் குறித்தலின், அஃது அப்பாண்டியன் காலத்ததாகலாம்.[15]

9. ஆசிரியன் நல்லந்துவனுர் பாடிய பதினேராம் பரிபாடல் ஒரு கிரகணத்தைக் குறிப்பிட்டுள்ளது. கணிதக் குறிப்பைக் கொண்டு வானநூலால் பரிபாடற் காலத்தினை ஆய்ந்து பல்வேறு முடிபு கூறியுள்ளனர். இம்முடிபுகளை எல்லாம் நுனித்தாய்ந்த சாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள், பரிபாடலின் காலம் கி. பி. 634 என அறுதியிட்டுள்ளார்[16]

10. முதலாம் நூற்றுண்டில் எழுந்த எந்த இலக்கியமும் திருமாலின் வியூகாவதாரத்தைக் குறிப்பிட்டிலது. பதஞ்சலியின் பாடியமாதல், கல்வெட்டுகளாதல் அதனைச் சுட்டவில்லை. பரிபாடல் மட்டும், 'செங்கட்காரி, கருங்கண் வெள்ளை, பொன்கட் பச்சை, பைங்கண்மால்' என அவ்

12. History of the Tamils, P. 582.

13. இலக்கியத் தோற்றம், 58, 59.

14. பரிபாடற்றிரட்டு: 'நான்மாடக் கூடல் எதிர் கொள்ள' (1-3)

15. இலக்கியத் தோற்றம், பக். 60, 61.

16. சாமிக்கண்ணுப்பிள்ளை—ஒரு விளக்கம், பக். 129-1?9.

வவதாரத்தை விளக்குகிறது. எனவே, பரிபாடலின் காலம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டு என்னலாம்.[17]

இப் பத்துக் கருத்துகளும் ஏற்கத்தக்கவை அல்ல அவற்றின் மறுப்புகளை எண் முறைப்படி கீழே காண்க:

1. பரிபாடற் புலவர்களின் பாக்கள் வேறு தொகை நூலில் இடம் பெற்றில எனும் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களின் கருத்துப் பொருந்துவதாக இல்லை. பரிபாடற்கு இசைவகுத்த இசைப்புலவர்கள் கூட, வேறு தொகைநூற்பாக்களுக்கு ஆசிரியர்களாக இருக்கக் காண்கின்றோம். 21ஆம் பரிபாடலுக்குப் பண்வகுத்த கண்ணகனார் புறநானூற்றின் 218ஆம் பாவினையும் நற்றிணையின் 79ஆம் பாவினையும் யாத்தவராவர். நன்னாகனார் என்னும் வேறொரு இசைப் புலவர் புறநானூற்றில் 381ஆம் பாடலை இயற்றியுள்ளார். மேலும், புறத்திணை நன்னாகனார் என்னும் பெயரில் புறநானூற்றில் நான்கு பாக்கள் காணப்படுகின்றன (176, 376, 379, 384). நல்லந்துவனாரும், இளம்பெருவழுதியும் பாடிய பாக்கள் பிற தொகை நூல்களிலும் இடம்பெற்றுள்ளன. நல்லந்துவனார் அகநானூறு (43), நற்றிணை (88), நெய்தற் கலி ஆகியவற்றைப் பாடியுள்ளார். புறநானூறு (182) இளம்பெருவழுதியின் பாடலாகும். ஆனால் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, ஆசிரியன் நல்லந்துவனார் என்பார் அந்துவனார், மதுரை ஆசிரியன் நல்லந்துவனார் என்பவர்களினும் வேறுபட்டவர் என்றும், இளம்பெருவழுதியார் கடலுண்மாய்ந்த இளம்பெரு வழுதியினும் வேறுபட்டவர் என்றும் கூறுவர். டாக்டர் உ. வே. சாமிநாதையர் பரிபாடலில் தாம் எழுதிய பாடினோர் வரலாற்றில் ஆசிரியன் நல்லந்துவனாரும் மதுரையாசிரியன் நல்லந்துவனாரும் ஒருவரே என்றும் இளம்பெரு வழுதியும் கடலுண் மாய்ந்த இளம்பெரு வழுதியும் வேறுகார் என்றும் வரைந்துள்ளார். இந்நூற்கண், 'புலவர்களும் இசைஞர்களும்' என்ற

17. தமிழிலக்கிய வரலாறு: வரதராச ஐயர்: பக். 235-236.

பிரிவில் மேற்கூறிய டாக்டர் உ. வே. சா. கருத்தே கோடற் குரியது என்பதனைத் தக்க பல காட்டுகள் தந்து நிறுவி யுள்ளேன். இது குறித்து மறைமலையடிகளார் கூறும் கருத்தும் ஈண்டு நினைத்தற்குரியது. 'மதுரை மருதனிள நாகனார் என்னும் புலவரால் பாராட்டப் பெற்றவர் நல்லந்துவனார். இம் மருதனிள நாகனாரும் ஆசிரியன் நக்கீர னாரும் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் புற நானூறு 55, 56 ஆம் பாடல்களில் பாராட்டியுள்ளனர். எனவே, நல்லந்துவனார் காலமும் கி. பி. முதலாம் நூற் றாண்டில் வாழ்ந்த நக்கீரனார் காலமும் ஒன்றே என எளிதில் முடிவு கட்டலாம்'[18] என்பர் மறைமலையடிகளார்.

2. பரிபாடற் புலவர்களின் பெயர்களைப் போலவே. பிற தொகை நூல்களிலும் புலவர் சிலர் வடமொழிப் பெயர்களைத் தாங்கியுள்ளமை காணலாம். பிரமதத்தனார். உருத்திரனார், உலோச்சனார், தாமோதரனார், கருவூர்ப் பவுத்திரனார், காசிபன் கீரனார், சத்தி நாதனார், பிரமச் சாரியார், பெருங்கௌசிகனார், மார்கண்டேயனார், வான்மீகியார் என்பன பிற தொகை நூல்களில் காணப் பெறும் சில வடமொழிப் பெயர்கள். இருபத்திரண்டு பரி பாடல்களுள் பதினொன்கு கடவுளைப் பற்றியும் சமயம் பற்றி யும் கூறுகின்றன. எனவேதான், பிற தொகை நூல்களிலும் பரிபாடலில் வடசொற் கலப்பு சிறிது மிகுதியாயிற்று. மணிமேகலையும், சிலப்பதிகாரமும் ஒரே காலத்து எழுந்த காப்பியங்கள் எனினும், புத்தமதக் கொள்கையைப் பரப்பும் நோக்கத்தோடே எழுதப்பட்டமையின், மணிமேகலையில் சிலம்பைவிட வடசொற் கலப்பு மிகுதியாதல் காணலாம். சமயத்தையே நோக்காகக் கொண்டு இயற்றப் பெறாத தொகை நூல்களிலும் புராணக் கதைகள் இடம் பெறுமல் இல்லை. முருகன் சூரபதுமனைக் கோறல், இராமன் உடன் உறைவோரிடம் மறை பேச ஆல் அமர்ந்த புட்களின் ஒலி யவித்தல், சிவபெருமான் முப்புரம் எரித்தல், திருமால்

18. மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், பக். 749

கொப்பூழ்த் தாமரையினின்று நான்முகனைப் படைத்தல்—முதலிய கதைகள் பிற தொகை நூல்களிலும் காணப்படுவன எனவே கடவுள், சமயம் ஆகியவற்றையே சிறப்பாகக் கூறும் பரிபாடல், புராணக் கதைகளை விரித்துரைத்தலில் வியப் பொன்றுமில்லை.

3. பிற்காலச் சொல்லமைப்பு, காணப் பெறுதல் கொண்டு பரிபாடலைக் காலத்தாற் பிந்தியது என்பது தக்க காரணமாகாது. ஏனெனில், அச்சொற்களைப் பிறகாலத்தன என ஒருதலையாகத் துணிதல் சாலாது. மிக முற்பட்ட காலத்தே அச்சொற்கள் வழக்கியலில் இருந்திருக்கக் கூடும். பரிபாடல் நாடக முறையில் அமைந்த நூலாதலின் அது பொதுமக்களைக் கவர்தற்குப் பழைய வழக்குச் சொற்களைப் பயன்படுத்தியிருக்கலாம் அன்றோ?

4. தொகை நூல்களிற் பல, சமயம் பற்றியனவல்ல வாகலின், கடவுளர் உறைவிடங்களைக் குறிப்பிடும் இன்றி யமையாமை அவற்றுக்கில்லை. கி. பி. இரண்டாம் நூற்றுண்டு என அறிஞர்களால் கருதப்பெறும் சிலப்பதிகாரம் நின்ற வண்ணத் திருமாலின் திருவேங்கடத்தையும், கிடந்த வண்ணத் திருமாலின் திருவரங்கத்தையும் புகழ்ந்துரைக் கின்றது. கச்சியிலுள்ள அரவில் துயிலமர்ந்த அரியைப் பத்துப்பாட்டு பாராட்டுகிறது.

'நீடு குலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறு படிந்தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோன்.'

(பெரும்பாண், 371 - 373).

திருமாலிருஞ் சோலைமலை பற்றிய குறிப்பு சிலம்பில் உள்ளது. எனவே, கி. பி. ஆறும் நூற்றுண்டுக்குப் பின்னரே திருமா லிருஞ் சோலைமலை திருமாற் பதியாக (வைணவத் தலமாக) மாறியது என்பதற்குப் போதிய சான்றில்லை.

5. திருப்பரங்குன்றம் பற்றிப் பல பாசுரங்கள் திருஞான சம்பந்தர் அருளியிருந்தால், ஒருகால் முருகனைக் குறித்திருக்

கலாம். அவர் பாடியிருப்பது ஒரே ஒரு பாடலே. அதில் முருகனைக் குறியாமையின் பரிபாடல் சம்பந்தர்க்குப் பிந்திய காலத்தது என்று கூறுதல் சிறிதும் ஒவ்வாது. மேலும் சம்பந்தர் முதலிய சமயகுரவர்கள் கண்ணுதற் பெருங் கடவுளை முதன்மையாகப் பாடும் நோக்குடையாரே யன்றி, முருகனையோ விநாயகரையோ பாடும் நோக்கினர் அல்லர். முறைமை சுட்டும் குறிப்பில்தான் பிற கடவுளர்கள் ஒரோ வழி அவர்தம் பாவில் இடம் பெறுவர். முருகாற்றுப்படை பதினோராந் திருமுறையில் சேர்க்கப் பெற்றமையின், பிற்காலம் என்பதும் அடாது. பன்னிரு திருமுறைகளும் ஒரே காலத்து எழுந்த நூல்கள் அல்ல. கி. பி. இரண்டாம் நூற்றாண்டு தொடங்கிக் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை தோன்றிய பல்வேறு நூல்களின் தொகுப்பே பன்னிரு திருமுறை. திருப்பரங்குன்றத்தில் கி. பி. 650-க்குப் பின்னரே முருகன் கோயில் கட்டப் பெற்றிருத்தல் வேண்டும் எனக் கூறுவது முற்றும் பொருந்தாது

'சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை'
(59: 10-12)

எனவரும் ஆசிரியர் மதுரை மருதனிள நாகனார் பாடிய அக நானூற்றடிகள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே திருப்பரங்குன்றத்தில் முருகன் கோயில் உண்மையை அங்கை நெல்லிக் கனியெனக் காட்டா நிற்கும். ஆகவே, பரங் குன்றத்து முருகன் புகழ் பாடிய பரிபாடலும் திரு முருகாற்றுப் படையும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின வாதல் வேண்டும்.

6. பதிற்றுப் பத்துப் போன்று வரலாற்று நூலா யிருப்பின், பரிபாடல் பாண்டியர்களைப் பொதுவாகக் கூறுது பெயர் சுட்டிக் கூறியிருக்கும். வரலாற்றுக் குறிப்பு மிகுதியாக இல்லாத தொல்காப்பியம், ஐங்குறுநூறு, கலித்தொகை போன்ற நூல்கள் தமிழக மூவேந்தர்களைப் பொதுவாகக் கூறி

யுள்ளனவே யன்றி, அவர்தம் உரிய பெயர்களைச் சிறப்பாகக் கூறுமை நோக்குக. எனவே, பாண்டி நாட்டில் களப்பிரர் செய்த அழிவுச் செயல்களுக்கும் பரிபாட்டற் காலத்துக்கும் யாதொரு தொடர்புமில்லை. அக்காலத்துப் பாண்டி நாடு அமைதியாகப் பொழிலாட்டு புனலாட்டுகளால் உவகை யார்ந்து இன்புற்றிருந்தது எனப் பரிபாடல்களால் அறிகின்றோம்.

7. சங்கத் தொகை நூல்கள் அகத்தியரைக் குறிப்பிடா மலில்லை. பத்துப்பாட்டு அகத்தியரைப் பற்றிக் குறிப்பாகப் பேசுகிறது.[19] கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனக் கருதப்பெறும் சிலப்பதிகாரம் அகத்தியரைப் புகழ்ந் துரைக்கின்றது.

'மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறையுயர் பொதியிற் பொருப்பன்.'

(சிலம்பு, காதை 12)

8. மாடக்கூடல் என மதுரையை வழங்கும் ஆட்சி பரிபாடலில் மட்டுமின்றிப் பிற தொகைநூல்களிலும் காணக் கிடக்கின்றது.

'மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்'

(மதுரைக் காஞ்சி, 4.9)

'மாடமலி மறுகின் மதுரை'

(அகம். 346: 20)

9. பதினோராம் பரிபாடலைக் கொண்டு கணித்த முடிபுகள் தவறானவை. ஏனெனில், மூலத்திலும் உரையிலும் காணப்படும் குறிப்புகள் காலவரையறை செய்யப் போதா

---

19. 'தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின்
தொன்முது கடவுள்'

(மதுரைக்காஞ்சி, 40-41)

'இராவணனைத் தமிழ்நாட்டை யாளாதபடி போக்கின கிட்டு தற்கரிய வலியினையுடைய பழமை முதிர்ந்த அகத்தியன்.'

(நச். உரை)

எனப் பேராசிரியர் சீநிவாசய்யங்கார் மொழிவர்.[20] மறைமலையடிகளார் இப் பரிபாடல் சுட்டும் கணிக்குறிப்புப் பகல்வழியளவு இரண்டாம் நூற்றுண்டினரான தாலமிக்கு முற்பட்டதாகும் எனக் கூறுவர்.

10. மராத்தியர்கள் கி. மு. முதல் நூற்றுண்டிலேயே வியூகாவதார வழிபாடு நடத்தினர்.[21] அது கடைச்சங்க காலத்துத் தமிழர்களால் பின்பற்றப் பட்டிருக்கலாம். எனவே, பரிபாடற் காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டு எனக் கோடல் தகும்.

பரிபாடல் கடைச்சங்ககாலத்ததே என்பதற்கு மேலும் பல சான்றுகள் உள்ளன. பிற்கால இலக்கியங்களிற் காணப்பெருத இசை நாடகக் கூறுபாடுகள் பரிபாடலிற் பெரிதும் அமைந்திருத்தலின் அது கி. பி. மூன்றும் நூற்றுண்டிற்கு முன்னரே பாடப்பெற்ற நூலாயிருத்தல் வேண்டும் என்பர் மறைமலையடிகளார்.[22] இராமாவதாரம், கிருட்டிணுவதாரம், இராம இராவணப் போர் ஆகியவற்றைப் பிற்கால இலக்கியங்களே விரித்துப் புனைந்துள்ளன. நாலாயிரப் பிரபந்தப் பாசுரங்கள் அவற்றைப் பாரித்துரைப்பதைக் காணலாம். ஆனுல் சங்க இலக்கியங்களில் அவை பெரிதும் இடம் பெறவில்லை. திருமாலைப் பற்றிய பரிபாடல்கள் இராம கிருட்டிணுவதாரங்களை விரித்துச் சொல்லாமையின், பரிபாடல் கி. பி. இரண்டாம் நூற்றுண்டிற்கு முந்தியே பாடப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது மறைமலையடிகளார் கருத்தாகும்.[23]

பரிபாடல் பிந்திய காலத்துத் தோன்றியிருப்பின் பல்லவர் காலக் கல்வெட்டுகளாதல், செப்புப் பட்டயங்களாதல் அதனைச் சுட்டியிருக்கும். பரிபாடலில் பல்லவர் பற்றிய

---

20. History of the Tamils, P. 584.

21. இலக்கிய வரலாறு: வரதராசையர், பக். 236

22. மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், தொகுதி 1, பக். 229

23. மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், தொகுதி 2, பக். 440, 478.

குறிப்பு யாதுமின்மையின், அதன் காலம் அவர்களது காலத்துக்கு (கி. பி. மூன்றும் நூற்றுண்டு) முந்திய தாதல் வேண்டும். வச்சிரநந்தியின் நான்காம் சங்கத்தும் பரிபாடல் பற்றிய குறிப்பில்லை என்பது ஈண்டு உளங்கொளற்குரியது.

டாக்டர் கிருட்டினசாமி ஐயங்கார் ஆழ்வார்களின் காலம் கி. பி. மூன்றும் நூற்றுண்டிலிருந்து கி. பி. எட்டாம் நூற்றுண்டு வரை என வரையறுப்பர்.[24] பரிபாடல் பிற் கால ஆழ்வார் பாசுரங்களுக்கு அடிப்படை நூலாதலின், அது கி. பி. மூன்றும் நூற்றுண்டிற்கு முந்தியே தோன்றியிருத் தல் வேண்டும். பரிபாடற் காலத்தே திருமாலிருஞ்சோலை மலையில் கண்ணனையும் பலதேவனையும் திருமாலாகவே கருதி இறைஞ்சினர். அவ்விருவரையும் சொல்லும் பொருளும் போலப் பிரிக்க முடியாது எனக் கருதினர்.[25] பலதேவ னுக்குத் தனித்துக் கோயிலெடுப்பதும் வழிபாடு செய்வதும் சங்ககாலத்தும் அதற்கு முன்னரும் இயல்பாக இருந்தன. ஆனுல் பிற்காலத்து இவ் வழிபாடு மறைந்தொழிந்தது. அழகர் மலையிலும் பலதேவன் கோயில் இப்பொழுது காணப் படவில்லை.[26] தமிழ் நாட்டில் திருவல்லிக்கேணியிலும் திருநாரையூரிலுமே அக்கோயில்கள் காணப்படுகின்றன. ஆழ்வார்கள் பாடிய திருமாலிருஞ் சோலைமலைப் பாக்களில் பலதேவனைப் பற்றிய குறிப்பு ஒன்றுமில்லை. பலதேவன் வழிபாடு ஆழ்வார் காலத்தும் நிலைத்திருப்பின், முதலாழ்வார் களும் மற்றையோரும் தம் அழகர்மலைப் பாக்களில் பலதேவ னையும் பாடியிருப்பர். எனவே, பரிபாடற்காலம் ஆழ்வார் காலத்துக்கு (கி. பி. மூன்றும் நூற்றுண்டு) முந்தியது எனக் கொள்வது தவருகாது.

பேரெல்லையாக வரும் எண்ணைக் குறிக்கும் சொற்கள் இறுதியில் ஐ, அம், பல் என்பனவற்றைப் பெற்றிருக்கும் எனத் தொல்காப்பியர் விதித்துள்ளார்.

---

24. A History of Tiruppathi, Vol. I, P. 52.
25. பரிபாடல், 15 : 11-14.
26. Tirumalirum Colai Stalapuram, P. 83.

'ஐஅம் பல்என வரூஉம் இறுதி
அல் பெயர்' (தொல். 393)

இவ்வெண்ணுப் பெயர்கட்குத் தாமரை, வெள்ளம், ஆம்பல் என்னும் மூன்று பெயர்களையே தொல்காப்பிய உரையாசிரியர்கள் காட்டாகத் தந்துள்ளனர். ஆனால் பரிபாடலோ மேலும் நெய்தல், குவளை, சங்கம் எனும் மூன்று எண்ணுப் பெயர்களைக் காட்டுகிறது. இக்காட்டு அந்நூலின் தொன்மையை உணர்த்துவதாகும்.

சங்க இலக்கியத்தில் மட்டும் காணப்பெறும் சொல்லுருவங்கள் பரிபாடலிலும் காணப்படுகின்றன. வடசொற்களும் வடமொழிப் பெயர்களும் வடமொழியிலுள்ளபடியே ஆட்சி பெருமல் தமிழொலிக்குத் தகத் திரிந்து ஆட்சி பெறுகின்றன. நிருத்தம் என்பது நித்தம் எனவும், பூர்வம் என்பது புவ்வம் எனவும், பிரகலாதன் என்பது பிருங்கலாதன் எனவும் வழங்கப் பெறுதல் காணலாம். கேசி என்னும் வடமொழிப் பெயரைக் 'கூந்தல் என்னும் பெயரோடு கூந்தல்' (பரி. 3:31) என்றும், கிரௌஞ்ச மலையைக் 'குருகொடு பெயர் பெற்ற மால்வரை' (பரி. 5 : 9) என்றும் ஆட்சிப்படுத்துவர். காயாம் பூவைப் 'பறவாப் பூவைப் பூ' என்பர் கடுவனிள வெயினனார். இவ்வகையான சொல்லாட்சி சங்க இலக்கியத்தில் மிகுதியாகக் காணப்பெறும். வாடா வஞ்சி, ஓடாக் குதிரை, ஊராத்தேர் என வருவன காண்க. சொற்றொடர் அமைப்பு, நடை, சொல்லுருவங்கள் யாவும் பிற தொகை நூல்களிலுள்ளன போலவே பரிபாடலிலும் உள்ளன. பிற சங்க இலக்கியத்துக் காணவியலாத பழைய வடிவங்கள் சில, பரிபாடலில் மட்டுமே காணப்படுகின்றன. முன்னிலை ஒருமை வினைமுற்ருக வரும் துளவினவை, உடையவை, ஒளியவை போன்ற வினைவடிவங்கள் அவற்றிற்குச் சான்றுகளாம். பிற்காலத்தது எனக்காட்டியோர் தம் கருத்துகள் பொருந்தா என்பதற்கு மேல் காட்டப்பெற்ற மறுப்புரைகளானும், பரிபாடல் சங்க இலக்கிய அமைப்புடையது என்பதற்கு ஈண்டு எடுத்தோதிய சான்றுகளானும் பிறவற்ருனும் பரிபாடலின் காலம் எட்டுத் தொகையின் காலமாய கி.பி. இரண்டாம் நூற்ருண்டே எனத் தெளியலாம்.

3. பரிபாடல் யாப்பு

பாவும் ஒலியும்

யாப்பு என்பது யாது ? "எழுத்து முதலாக ஈண்டிய அடியினுல் புலவன் தான் கருதிய கருத்தை நாட்டுவது யாப்பு என யாப்பறி புலவர் மொழிப" என்று தொல்காப்பியனுர் கூறுவர். பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என யாப்பு பல வகைப்படும். பா, பாடல் என்பன ஒரு பொருட் கிளவிகள். பா என்பது பரந்த ஓசையுடையது எனப் பொருள்படும். எழுத்து, சொல் ஆகியவற்றை அறியாதான் ஒருவன் பாடினுலும், சேய்மையிலிருந்து கேட்பவன் இன்ன பா என்று கூறும் பெற்றியதாய் இருப்பது தான் பா எனத் தொல்காப்பியத்துக்கு உரை கண்ட பேராசிரியர் விளக்கம் தந்துள்ளார். ஒவ்வொரு பா வகையும் தனக்கென உரிய ஓசையுடையது. ஓசை வேறுபாடுகளே பல்வகைப் பாக்களின் தோற்றத்துக்குக் காரணமாகும். அகவல், தூங்கல், செப்பல், துள்ளல் ஓசைகளே முறையே ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்ற பாவகைகளைத் தோற்றுவித்தன.

பாவகை

பெயர், வினை, இடை, உரி என நால்வகைச் சொற்களிருப்பினும், பெயர் வினை என்னும் இரண்டையுமே சிறப்பாகச் சொல்லதிகாரத்துக் கூறியாங்கு, பொருளதிகாரத்தும் ஆசிரியம் வெண்பா கலி என நால்வகைப் பாக்களிருப்பினும் ஆசிரியம் வெண்பா என்னும் இரண்டையுமே சிறப்

பாக மொழிகுவர் ஆசிரியர் தொல்காப்பியனுர். வஞ்சிப்பா, ஆசிரியப்பா நடையினது. கலிப்பா, வெண்பா நடையினது. தலையாய இருபாக்களுள் ஒன்ருன வெண்பாவின் தொடர் புடையது பரிபாடல். இங்குக் கூறிய நான்கு பாக்களே யன்றிப் பரிபாடல், மருட்பா என்னும் வேறிரு பாக்களும் உள. இப்பாக்களுக்குத் தனித்தன்மை இல்லை. இவை பல்வேறு பாக்களின் கலப்பே யாகும்.

பெயர்க் காரணம்

வெண்பா, அகவற்பா, கலிப்பா என்னும் சொற்களிற் காணப்பெறும் வெள், அகவல், கலி என்னும் அடைகள் அப் பாக்கள் எழுப்பும் ஓசையை உணர்த்தும். வெள் செப்ப லோசையையும், அகவல் அகவலோசையையும், கலி துள்ள லோசையையும் புலப்படுத்தும். எனவே, அவை வெண்பா, அகவற்பா, கலிப்பா எனப் பெயர் பெறுவவாயின. ஆனுல், பரிபாடல் என்னும் சொல்லிற் காணப்படும் பரி என்னும் அடைக்கும் அப் பாடல் உணர்த்தும் ஓசைக்கும் யாதொரு தொடர்புமிருப்பதாகத் தெரியவில்லை.

சொற்பொருள்

பரி எனும் சொல் குதிரை, ஓட்டம், நடை எனப் பல பொருள்படும். இப்பொருளின் துணைக்கொண்டு பரிபாடலின் ஓசை குதிரை குதிப்பது போலவும், ஓடுவது போலவும், நடப்பது போலவும் இருத்தலின், அவ்வோசையுடைய பாடல் பரிபாடல் எனும் பெயர்த்தாயிற்று எனக் கருதுவர் சிலர்.[1] இக்கருத்து பொருத்தமாகப் படவில்லை. 'பரி' என்பது வினையாக வரும்போது 'ஏற்றல்' எனப் பொருள்படும். தொல் காப்பியச் செய்யுளியலுக்கு உரைகண்ட அனைவரும் பரிபாடல் என்னும் சொல்லை வினைத்தொகையாகக் கொண்டு பரிந்த பாடல் என்றே பொருள் வரைவாராயினர்.

'பரிந்த பாட்டு பரிபாட்டென வரும். அஃதாவது ஒரு வெண்பாவாகி வருதலின்றிப் பல உறுப்புகளோடு

---

1. பரிபாடற் சொற்பொழிவு. பக். 7.

தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப் பெறுவது' என்பர் இளம்பூரணர்.

(செய்யுளியல், 112)

'பரிபாடல் என்பது பரிந்து வருவது. அஃதாவது கலி யுறுப்புப் போலாது பலவடியும் ஏற்று வருவது.' இது பேராசிரியர் உரை.

(செய்யுளியல், 118)

'பரிபாடல் என்பது பரிந்து வருவது. அது கலியுறுப்புப் போலாது நான்கு பாவானும் வந்து பலவடியும் வருமாறு நிற்குமென் றுணர்க' என்று நச்சினார்க்கினியர் உரை கூறும்.

(செய்யுளியல், 118)

இவ்வுரைகளான் பரிபாடல் தனிப் பா வகையினதன்று; வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் பாக்களான் இயன்றது என்பது பெறப்படும்.

இவ்வுரையாசிரியர்தம் கருத்து ஏற்புடையதா? பரி பாடல் பல பா வகைகளை ஏற்று வருவதுபோலவே கலியும் ஏற்று வரும்.[2] ஆயினும், கலிப்பாவைப் பரிபாடல் என நாம் அழைப்பதில்லை. எனவே, அவ்வுரையாளர்கள் பரிபாடலுக் குத் தரும் பெயர்க் காரணம் பொருந்துமாறில்லை.

இசைப்பாடல்

பரிபாடல் என்பதன் பொருளை அந்நூற்கண் காணப் பெறும் 'இன்னியல் மாண்டேர்ச்சி இசை பரிபாடல்'(11:137) என்னும் அடியே உணர்த்துகிறது. 'இசைப் பாட்டுதான் இசைபரி பாடல்' என்பது அவ்வடியின் தெளிந்த கருத் தாகும். முற்காலத்தே இசை பரிபாடல் என வழங்கியது, பிற்காலத்தே இசை என்னும் அடை வழக்கு வீழ்ந்து, பரி பாடல் என்றே வழங்கலாயிற்று. தொல்காப்பியர் காலத்து அல்வழியானது வேற்றுமை அல்வழி எனப் பெரிதும் வழங்கப் பெற்று இக்காலத்து வேற்றுமை எனும் அடை வீழ்ந்து வாளா

2. தொல். 1377 : பேரா. உரை.

வழங்குதல் இதனோடு ஒப்பு நோக்கற்பாலது. எண் வகைச் செய்யுள் வனப்புகளுள் ஒன்றான இழையினைப் பேராசிரியர் விளக்குங்கால், அவர் கலியும் பரிபாடலும் போலும் இசைப் பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன எனக் கூறிப் பரிபாடலின் இசைத்தன்மையைச் சுட்டி, அதனால் இழைபு என்னும் வனப்பு வாய்ந்தது எனக் கூறுவர்.[3] பரிபாடல் முதற்பாவின் இறுதிக்கண் தம் உரையில் பரிமேலழகர், 'பரி பாட்டென்பது இசைப்பா வாதலான்' என அதன் இசை இயல்பை எடுத்துக் காட்டுவர். இசை தழுவிய உருட்டு வண்ணமும் பரிபாடற்குரியதே. பரிபாடல் இசைப்பாக்களை உடைமையாற்றான், இசைஞர்களும் பண் வகுக்கலாயினர். மேற்காட்டிய சான்றுகளால் பரிபாடல் என்பதன் பொருள் இசைப்பாடல் என்பது தேற்றம்.

பாடற் பொருள்

தொல்காப்பிய அகத்திணையியல், பரிபாடல் அகத்திணை பாடுதற்கே உரியது என வரையறுக்கும்:

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலநெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரிய தாகு மென்மனர் புலவர்

(தொல். 999)

தொல்காப்பியனார் செய்யுளியலில் பரிபாடலின் இலக் கணத்தை விளக்குஞான்று அஃது அகத்திணை பாடுதற்கே பொருத்தமாதலை மீண்டும் வலியுறுப்பர்.

'காமங் கண்ணிய நிலைமைத் தாகும்'

(தொல். 1378)

நம் கையகத்தவாய பரிபாடல்கள் அகத்திணை மட்டு மன்றிப் புறத்திணை பற்றியும் பேசக் காண்கின்றோம் இங்ஙனம் பரிபாடல் கூறும் பொருள் தொல்காப்பிய இலக்

3. தொல். 1377: பேரா. உரை.

கணத்துக்கு முரணுவதறிந்த உரையாசிரியர்கள், தொல்காப்பியர் புறத்திணையையும் பரிபாடலிற் பாடலாம் என உடன்பட்டிருப்பதாக வலிந்து உரைகொள்வர்.[4] செய்யுளியல் 117ஆம் நூற்பாவின் அடிக்கீழ் இளம்பூரணர் பெயரறியா ஒருவரின் நூற்பாவைக் காட்டிப் பரிபாடலில் மலை, யாறு, ஊர் ஆகியவற்றைப் புனையலாம் என நுவல்வர்:

'அதுதான்
மலையே யாறே ஊரென் றிவற்றின்
நிலைபெறு மரபின் நீங்கா தாகும்.'

'பரிபாடல் தெய்வம் காமம் என்பவைபற்றி வரும்' என யாப்பருங்கல விருத்தி கூறும்.

'தெய்வங் காமம்
கையில் பொருளாம் பரிபா டல்லே
மகிழிசை நுண்ணிசை உரிபெறு மரபிற்
காம இன்னிசையே யாற்றிசை யிவற்றைச்
செந்துறை என்று சேர்த்தினர் புலவர்.'

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் பரிபாடற் கடவுட் பாக்களும் அகந்தழுவியன என்பர்.[5] கடவுளரைப் பாடிய கடுவனிளவெயினனார் பாடல்கள் அகந்தழுவாதிருத்தலை நோக்கும்போது, உரையாளர்கள் கருத்துப் பொருந்தாமை புலப்படும்.

'யா அம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே'

(பரி. 5: 78–81).

---

4. தொல். 1378: இளம். உரை; பேரா. உரை; நச். உரை.

5. தொல். 999 நச். உரை; தொல். 1378 நச். உரை; பேரா. உரை.

என்னும் அப் பாடற்புலவர் கூறும் அடிகள் ஈண்டு நோக்கு தற்குரியவை.

பரிபாடலிற் காணும் 22 பாக்களில் 14 இருஞ் சோலைமலைத் திருமாலையும், பரங்குன்றத்து முருகனையும் பற்றிய கடவுட் பாடலாம். ஆகவே, அவை புறத்திணையன. வையை பற்றிய 8 பாடல்களும் காதலர்தம் புன லாட்டைப் புனைவதால் அகத்திணையன. தொல்காப்பியனார் காலத்தும் அவர்க்கு முந்திய காலத்தும் பரிபாடலை அகத்திணை பாடவே பயன்படுத்தினர். பரிபாடல் அகத்திணைக்கே உரியது எனத் தொல்காப்பியனார் தம் இலக்கணத்து வரையறுத்தற்கு அக்காலப் போக்கே காரண மாகும். தொல்காப்பியத்துக்குப் பிற்காலத்தே, பரிபாட லால் அகமும் புறமும் ஆய இருதிணையையும் பாடலுற்றனர். அதனால்தான் நமக்குக் கிடைத்துள்ள பரிபாடல்கள் இருதிணை யையும் தழுவியனவாக உள்ளன. கால வளர்ச்சியால் புலவர்கள் பரிபாடலிற் புறத்திணையைப் பாடினர். அதனைக் கண்ட உரையாசிரியர்கள், அதற்கும் விதி தொல்காப்பியத் துள்ளது என வலிந்து நாட்ட முனைதல் உரையறம் ஆகாது. முதற்சங்க இடைச்சங்க காலத்துத் தோன்றி மறைந்துபோன பரிபாடல்களே தொல்காப்பியர் கூறிய பாடற்பொருள் இலக்கணத்துக்கு அடிப்படை யாகலாம்.

அடிகளின் எல்லை

பரிபாடலின் அடிகளை வரையறுக்குங்கால் சிற்றெல்லை 25 என்றும் பேரெல்லை 400 என்றும் தொல்காப்பியம் கூறும்.

'பரிபாட் டெல்லை
நாலீ ரைம்பது உயர்படி யாக
ஐயைந்தாகும் இழிபடிக் கெல்லை. (தொல். 1418)

கிடைத்த பரிபாடல்களைக் கொண்டு நோக்கும்போது 32 அடிகளையுடைய கேசவனார் பாடலே (பரி. 14) சிற்றெல்லை யுடையதென்றும், 140 அடிகளையுடைய ஆசிரியன் நல்லந் துவனார் பாடலே (பரி. 11) பேரெல்லையுடையதென்றும்

அறிகின்றோம். மறைந்துபோன முதலிடைச் சங்கங்களின் பரிபாடல்களைக் கொண்டே இங்ஙனம் அடிகளின் பேரெல்லை சிற்றெல்லைகளைத் தொல்காப்பியர் வரையறுத்திருப்பர். பிற்கால யாப்பு நூல்களில் பரிபாடல், அங்கதம், பண்ணத்திகட்குத் தொல்காப்பியம் விதிக்குமாறு அடி எல்லைகளைக் காண்டல் இயலாது. ஏனெனின் இப் பாவகைகளை அந் நூல்கள் சிறப்பாகக் கொள்ளவில்லை.[6]

இலக்கணம்

வெண்சீர், இயற்சீர், வெண்டளை, செப்பலோசை, ஒவ்வோரடியிலும் நான்குசீர்வருதல், ஈற்றடியில் முச்சீர் வருதல் ஆகிய வெண்பா யாப்பிற்குரிய சிறப்பியல்புகள் அனைத்தையும் பரிபாடல் பெற்று வரும். தொல்காப்பியனார் கருத்துப்படி நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாட்டு, அங்கதச் செய்யுள் எல்லாம் வெண்பா யாப்பினவாகும். 'பரிபாடல் தனக்கென ஒரு சிறப்பியல்பின்றி அனைத்துப் பா வகையும் ஏற்றுப் பொதுவாய் நிற்றற்கும் உரித்து என்ப' எனப் பிறிதொரு நூற்பாவில் பேசுவர் தொல்காப்பியனார்.

'கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்குந் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.' (தொல். 1378)

'சொற்சீ ரடியும் முடுகிய லடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும்.' (தொல். 1379)

இவ்விரு தொல்காப்பியச் சூத்திரங்களும் கொச்சகம்' அராகம், சுரிதகம், எருத்து, சொற்சீரடி, முடுகியலடி என்பவை பரிபாடலுறுப்புகள் எனப் புகலும். செப்பிய நான்கும் (தொல் 1378) என்பதிலுள்ள நான்கு முன் சூத்திரத்தில் (1362) கூறிய ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்ற நான்கினையும் அறிவிப்பதாகப் பேராசிரியர் கூறுவர். எனவே, முற்

6. Advanced Studies in Tamil Prosody, P. 41.

கூறிய கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து நான்குறுப் போடு இந்நான்கு பாவும் பரிபாடலில் வரும் என்பது பேராசிரியர் கருத்து. செய்யுளியல் 119ஆம் நூற்பாவில் இளம்பூரணர், அகத்தியம் எனக் கூறப்படும் நூலிலிருந்து கீழ்வரும் நூற்பாவினை மேற்கோள் காட்டுவர்.

'தரவே எருத்தம் அராகம் கொச்சகம்
அடக்கியல் வகையோ டைந்துறுப் புடைத்தே.'

இதிலிருந்து தரவு, எருத்தம், அராகம், கொச்சகம், அடக்கியல் என்ற ஐந்தும் பரிபாடல் உறுப்புகள் என அறியலாம்.

'எழுசீரடியே முடுகியல் நடக்கும்' (தொல். 1322) என்னும் நூற்பா பரிபாடல், கலிப்பா ஆகிய சிலவகைப் பாக்களில் ஓரடியில் எழுசீர்களும் வரலாம் எனக் கூறும். முடுகியலடி பரிபாடல் கலிப்பா என்னும் இரு பாவிலும் வரினும், சொற்சீரடி பரிபாடலில் மட்டுந்தான் வரும். இதனைத் தொல்காப்பியம் தெளிவு படுத்தும்.

'சொற்சீ ரடியும் முடுகிய லடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும்.' (தொல். 1379)

ஆகவே கொச்சகம் சொற்சீரடியோடு ஒரோவழி வரலாம் எனும் இளம்பூரணர் கருத்து பொருந்தாது.[7]

உரையாசிரியர்கள் கருத்து

பரிபாடல் இலக்கணம் பற்றித் தொல்காப்பிய உரை யாசிரியர்கள் மூலத்திற் காணாத சில கருத்துகளைத் தெரிவித் துள்ளனர். அவை சிலவாயினும் அறிந்து கோடற்குரியவை யாகும்.

இளம்பூரணர் தொல்காப்பியவிதிக்கு மாறாகப் பரிபாடல் உறுப்புகள் முழுவதுமோ குறைந்தோ வரலாம் என்பர்.[8]

---

7. Advanced Studies in Tamil Prosody, P. 120
8. தொல். 1380 : இளம். உரை.

தரவும் சுரிதகமும் கொச்சகம் வரும்வழி இடையிடை வரும் என்றும், சுரிதகம் இன்றியும் பரிபாடல் முடியும் என்றும் இளம்பூரணர் கூறுவர்.[9]

பேராசிரியர் கருத்துப்படி எருத்து என்னும் உறுப்பின்றியும் பரிபாடல் இயற்றப்படலாம்.[10] செய்யுளியல் 110ஆம் சூத்திரத்துப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் கலியும் வஞ்சியும் போலவே, பரிபாடலும் புறநிலை வாழ்த்தில் பாடப்பெறுது என்பர்.

பரிபாடல் மறைவு

மக்கள் தோன்றி வாழ்ந்து காலப் போக்கில் அழிதல் போலவே, சிலவகைப் பாக்களும் காலப்போக்கில் அழிகின்றன. பழைய இலக்கணிகளாலும் புலவர்களாலும் போற்றிப் பாராட்டப் பெற்றப் பரிபாடல் எனும் ஒரு வகைப்பா இப்பொழுது மறைந்துவிட்டது. விருத்தப்பா, சந்த விருத்தம், சிந்து முதலிய புதுவகைப் பாக்களே பிற்காலப் புலவர்களால் கையாளப் பெற்றன. எனவேதான் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, இலக்கண விளக்கம் முதலாய பிற்கால யாப்பு நூல்கள் பரிபாடலுக்கு இலக்கணம் கூறவில்லை.

பரிபாடற் பாக்களனைத்தையும் தரவு, கொச்சகம், சுரிதகம் என்னும் உறுப்புகளின் பெயரிட்டு டாக்டர் உ. வே. சா. பதிப்பித்தாரிலர். ஏனெனில் மூல ஏடுகள் அவ்வுறுப்புகளோடு காணப்படவில்லை. பரிபாடலின் முதற் பாடலை, இளம்பூரணரும் பரிபாடற்றிரட்டின் முதற்பாடலைப் பேராசிரியரும் தம் உரையில் உறுப்புகளோடு காட்டாகத் தந்திருத்தலின், அவற்றை மட்டும் அப்படியே உ. வே. சா. தம் நூலில் பதிப்பித்துள்ளார்.

பரிபாடலின் யாப்பமைப்பை ஆராய இலக்கணக் குறிப்போ இலக்கியக்குறிப்போ மிகுதியாகக் கிடைக்கவில்லை.

9. தொல். 1378 : இளம். உரை.
10. தொல். 1378 : பேரா. உரை.

பிற்கால இலக்கண நூலார் இப் பாடலைப் பற்றி அறியவே இல்லை. சங்கத் தொகை நூல்களுள் பரிபாடல் பற்றி ஒரு தொகை நூலேனும் கைக் கெட்டியது நம் நல்ல காலமே. அதுவும் தொகுக்கும்போது எழுபது பாடல்கள் இருந்தன வாக அறிகின்றோம். ஏறத்தாழ இப்பொழுது மூன்றில் இரண்டு பங்கினை இழந்து நிற்கின்றோம். ஆகவே பரிபாடல் யாப்பிலக்கணத்தை விரிவாக ஆராயவும் வாய்ப்பில்லாது போயிற்று.

தொகுப்புரை

கிடைத்த குறிப்புகளால் பரிபாடல் பற்றி நாம் அறிபவை :

1. பரிபாடல் என்பது இசைப்பாட்டு. அது இசைக் கருவிகளினுதவியால் பாடுதற் கேற்றது.
2. பல்வேறு வகைப்பட்ட பாக்களையும் தழுவி நிற்கும் நெடும் பாடலாகும்.
3. அகத்திணை பாடுதற்கே உரியதாக இருந்த அப்பாடல் பிற்காலத்துப் புறத்திணையையும் ஏற்றுக் கொண்டது; சமய நெறியும் அதற்கு விலக்கன்று.
4. பாண்டி நாட்டில் மட்டும் இப்பாடல் வழக்காற்றில் இருந்தது. பாண்டியர்கள் பரிபாடற் புலவர்களை இனிது புரந்தனர்.

4. சங்க இலக்கியங்களில் பரிபாடல் நிலை

சங்க இலக்கியங்களில் கலித்தொகையும் பரிபாடலுமே பாவால் பெயர் பெற்றவை. பிறவெல்லாம் ஆசிரியப் பாவால் இயன்றவை. ஆதலான் அவை பாக்களின் எண்ணிக்கை, பாவடிகளின் எண்ணிக்கை, பாடு பொருள் முதலியவற்ருல் பெயர் பெறுவவாயின. இத் தொகை நூல்களுள் பரிபாடலே பண் வகுக்கப் பெற்றதாகும். ஒவ்வொரு பாடல் இறுதியிலும் அதற்குரிய பண் பொறிக்கப்பட்டுள்ளது. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, ஆகியவை அகம் பற்றியன. பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறம் தழுவியன. ஆனல் பரிபாடல் மட்டும் இருதிணையும் ஏற்று வருவது. மேலும் பாடும் முறையினும் இது பிற நூல்களினும் வேறுபடுவதாகும். பெரும்பாலான தொகை நூல்கள் மூவேந்தர்களைப் பற்றிய செய்திகளைக் கூறுவனவாகும். பதிற்றுப்பத்து சேரர்களைப் பற்றியே கூறுவது போலப் பரிபாடல் பாண்டியர்களைப் பற்றியே கூறுகின்றது.

பரிபாடற் பாக்கள் பாண்டிய வேந்தர்கள், அவர்தம் தலைநகராய மதுரை, அவர்க்குரிய வையை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலைமலை ஆகியவற்றையே விரித்துரைக்கும். எனவே இப்பாடல்கள் பாண்டிய நாட்டிலேயே வழங்கியிருக்கலாம் என்ப.

பத்துப்பாட்டுப் போல அகம்புறமாய இருதிணைகளையும் ஏற்று வரினும், பரிபாடல் பாடு நெறியில் அதனோடு வேறுபடுகின்றது. புரவலர்களின் சீர்மை, கொடை, மறம்,

பரிசிலர்களின் வறுமை முதலியவை ஆற்றுப்படை நெறியில் பத்துப்பாட்டில் அமைந்திருப்பது போலப் பரிபாடலிற் காண்டல் அரிது.

பரிபாடற் புலவர்கள் பதின்மூவர்; பண்வகுத்த இசைஞர் கள் பதின்மர். அப்புலவர்களிலோ இசைஞர்களிலோ பெண் பாலார் ஒருவருமிலர்.

தொல்காப்பியம் மாயோன், சேயோன், வருணன் வேந்தன் என்னும் தெய்வங்களைக் கூறுகிறது (தொல். 951). சிவன், முருகன், திருமால், பலதேவன் ஆகிய இவர்களைப் பற்றிய குறிப்பு புறநானூற்றில் காணப்படும் (புறம் 56). பெருங்கடுங்கோ கலித்தொகையில் பலதேவன், பருதி, காமன், சாமன், சிவன் ஆகிய கடவுளர்களைக் குறிப்பிட்டுள் ளார் (கலி. 26). ஆனால் பரிபாடல் திருமால், செவ்வேள் என்னும் இருதெய்வங்களையே முதன்மையாகச் சுட்டுகின்றது. இவை பற்றிய புனைவு பரிபாடலில் மிக விரிவாக அமைந்துள்ளது.

பத்துப்பாட்டு எட்டுத் தொகைகளால் திருமாலைப் பற்றிச் சில செய்திகளே அறியலாம். ஆனால் பரிபாடலில் ஆறும் திரட்டில் ஒன்றும் ஆக ஏழு பாடல்கள், யாண்டும் நிறைந்துள்ள திருமாலை நன்கு புனைகின்றன. இசை அடிப் படையில் தம் பத்திப் பாசுரங்களை ஆழ்வார்கள் அருளு வதற்குத் தொன்மையான பரிபாடல்களே அடிப்படை என்னலாம். சங்க இலக்கியங்கள் முருகனைப் புகழ்ந்துரைக் கின்றன. முருகவேளின் சீர்த்தி, வீரம், வண்மை முதலிய வற்றைத் திருமுருகாற்றுப்படை பாரித்துரைக்கும். அஃது ஆறு தலைகள், பன்னிரு கைகளின் தொழில்களை அடுக்கிக் கூறும். முருகனின் ஆறு படை வீடுகளையும் நீட்டி உரைக்கும். எட்டுத் தொகையுள் அகத்தொகை நூல்கள் வெறியாட்டம் பற்றிய பேச்சு வரும்போதே முருகனைக் குறிப்பிடும். ஆனால் பரிபாடல் செவ்வேளை வழிபடு முறை, அவர் அமர்ந்துறையும் பரங்குன்றம், அவர்தம் ஊர்தியாய பிணிமுகம், அன்பர்கள் வேட்கும் பலவகை வரங்கள் ஆகியவற்றைப் பலபடப் பாரிக்கும்.

திருமுருகாற்றுப்படை தனக்குரிய இலக்கிய மரபுப்படி முருகன் கோயில்கொண்டுள்ள பல இடங்களையும் புனைந்துள்ளது. பரிபாடல் பாண்டி நாட்டினதான திருப்பரங்குன்றம் ஒன்றனை மட்டும் புனைவதோடமைகிறது. எட்டுப் பாடல்களில் முருகனின் பிறப்பு, வள்ளி தேவசேனையர்பால் காதல் கொள்ளுதல், அன்பர் பக்கல் அருளுடையவனுயிருத்தல், சூரபதுமனை அழித்தல் முதலியவற்றைப் பரிபாடற் புலவர்கள் விளக்கமாகச் சித்திரித்துள்ளனர். முருகனின் காதற் பகுதிகளையும், மறச் செயல்களையும் வேறு தொகை நூல்களில் இங்ஙனம் விரிவாகக் காண்டல் இயலாது. முருகனைப் பற்றிய பரிபாடல்களே பிற்காலத் தெழுந்த கந்த புராணம், தணிகைப் புராணம் போன்ற பெருநூல்களுக்கு முதலாகும்.

பரிபாடல் கடவுள் நெறிகளையும், தெய்வங்களையுமே பேசுதலின், பிற தொகை நூல்களினும், வடசொற்களை மிகுதியாகக் கையாளுகிறது; புராணக் கதைகளையும் கடவுள் அவதாரங்களையும் விரித்துரைக்கின்றது. சொல்லுருவங்கள், சொற்றொடர் அமைப்பு ஆகியவற்றிலும் பரிபாடலில் தனித் தன்மை காணலாம்.

எட்டுத்தொகை நூல்களுள் மிகுந்த அடிகளையுடைய பாடல்களைப் பெற்றிலங்குவது பரிபாடலே. கிடைத்துள்ள பரிபாடலிற் காணப்பெறும் சிற்றெல்லை அடி அகநானூற்றின் பேரெல்லையை அடுத்துள்ளது. 3 அடி முதல் 6 அடி வரையுள்ள பாக்கள் அடங்கியது ஐங்குறு நூறு; 4 முதல் 8 அடி வரை குறுந்தொகை; 9 முதல் 12 அடிவரை நற்றிணை; 13 அடி முதல் 31 அடி வரை அகநானூறு; 32 முதல் 140 அடி வரை பரிபாடல்.

சங்கத் தொகை நூல்களில் காவிரி, வையை, ஆன் பொருநை போன்ற வளங்கொழிக்கும் யாறுகளைப் பற்றிய குறிப்புப் பெரிதும் காணப்படும். காதலர் காதலியர் தம்மொடு யாறுகளில் புனலாட்டயர்வதை அச்சங்க நூல்கள் ஒரோவழி எடுத்துக் காட்டும். பிற நூல்களினும், புனலாட்டு

விழாப் புனைவு பரிபாட்லில் விரிவாகவும் உளங்கவர்வதாகவும் காணப்படுகின்றது. இரு பாலாருள்ளும் இளையரும் முதியரும் ஆற்றிடை மூழ்கி திரையிடைத் தவழ்ந்து மகிழ்ந்து விளையாட்டயர்வதைப் பரிபாடல் நன்கு படம் பிடித்துள்ளது.

தலைமக்களின் புணர்வின்பத்தை மிகுத்துக் காட்டுவதற்காகத் தலைவன் பரத்தையொடு புனலாடினான் எனக் கூறிச் சங்கப் புலவர்கள் தலைவியின் ஊடலைப் புனைவது மரபு.

இங்ஙனம் தொகை நூல்களில் அகத்திணைச் சூழலிலே தான் புதுப் புனலாட்டு புனையப்படுகின்றது.

பரிபாடற்கண் நீராட்ல் இவ்வகைக்கு மட்டுமன்றி வேறு பல நோக்கங்கட்கும் பயன்படுகின்றது. சிலப்பதிகாரத்துக் கடலாடு காதையில் வரும் புனைவு ஒப்பப் பரிபாடற் புனலாடல்கள் விரிவாக உள்ளன. இப் புனலாட்டு விழாவே ஆண்டாள் மாணிக்கவாசகர் காலத்தில் மார்கழி நீராடலாக மாறியது என்னலாம்.

பரிபாடற் காலத்து வையையைத் தெய்வமாகவே கருதி வழிபட்டனர். இளங்கோவடிகள் காலத்தும் அந்நிலை இருந்தது என்பதனைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம். கோவலன் கண்ணகி இருவரும் காவுந்தியடிகளோடு மதுரைக்குச் செல்வழி, வையையைக் கண்டதும் தெய்வமாகவே கருதி வழிபட்டனர் என இளங்கோவடிகள் கூறுதல் காண்க.

'புனல்யா றன்றிது பூம்புனல் யாறென
அனநடை மாதரும் ஐயனும் தொழுது'

(சிலம்பு. காதை 13 : 174-175)

வையைக்குப் புனலாடப் போந்தவர்கள் அதனைத் திருமால்; செவ்வேள்களை ஒப்பவே கருதி ஆராதனைப் பொருள்களுடன் இறைஞ்சி ஏத்தி வரம் வேண்டினர். வையைப் பாடல்களும் இன்னணம் அமைந்திருத்தலின், தெய்வமும் தெய்வத்தன்மையும் பற்றி இயம்பும் ஒரு நூல் பரிபாடல் என்பது தேற்றம். இந்நூலின் தெய்வத்

தன்மையோர்ந்த இசைஞர்கள், பரிபாடலுக்கு இசையூட்டிப் பண் வகுத்து அதன் இசையைத் திசைதொறும் பரப்பினர். இதனை ஒட்டியே தேவார திருவாசகங்களும் நாலாயிரப் பிரபந்தமும் பிற்காலத்துப் பண் வகுக்கப்பெற்று இசையுடன் பரவின. தமிழிலுள்ள பத்திப் பனுவல்களுக்குப் பரிபாடலே முன்னோடி இலக்கியம் என்பது ஒருதலை.

கலித்தொகை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, நற்றிணை, அகநானூறு என்பவை குறிஞ்சி, முல்லை, முதலிய ஐந்திணைகளையும் புனையக் காண்கிறோம். அகத்திணை பற்றிய நூலாயினும் இவ்வகையான புனைந்துரை பரிபாடலில் இல்லை.

அக இலக்கியங்களில் தலைமக்களின் உள்ளுணர்வுகளை நுண்ணிதின் உணர்த்த இன்றியமையாதனவாகக் கருதப் படுவனவும் பெருவரவினவாகக் காணப் பெறுவனவுமாய உள்ளுறை இறைச்சிகள் பரிபாடற்கண் இடம் பெற்றில. புறநானூறும் பதிற்றுப்பத்தும் பத்துப் பாட்டில் சில பாடல்களும் வரலாற்றிற்குப் பெரிதும் பயன்படுவன. அவை தமிழக வேந்தர்கள் புரவலர்கள்தம் ஈரத்தையும் வீரத்தையும் ஒருங்கு விரிப்பன. புறம்பற்றிய நூலாயினும் இவ்வகைச் செய்திகட்குப் பரிபாடலில் இடமில்லை.

பரிபாட்லில் சமயக் கொள்கைகள், சடங்குகள், திருவிழாக்கள் முதலியன பற்றிய செய்திகளும், சமயச் சொற்களும் காணலாம். இந்நூலின்கண் தனித்த சில மொழியியற் கூறுகளும் உள்ளன. இவை 'மொழியியற் கூறுகள்' என்னும் தலைப்பில் இடம் பெறும். இருபத்திரண்டு பாடல்களும் சில குறைப் பகுதிகளுமே உடைய நூலாதலின், பரிபாடலை எட்டுத் தொகையுள்ளும் மிகச் சிறு தொகை நூலாகக் கொள்ளலாம். பரிபாடலின் நடை பிற தொகை நூல்கள் நடையினும் சிறிது வேறுபடும். காரணம் அப் பாடல்கள் கடவுளை வழுத்தும் முறையில் அமைந்திருத்தலே. பரிபாடற் புலவர்களில் அந்துவனார், இளம்பெருவழுதியார் ஆகிய இருவர்தம் பாக்கள் தவிரப் பிறருடைய பாக்கள் வேறு தொகை நூல்களில் இடம் பெறவில்லை. சங்க நூல்

களுள் பண் அடைவில் தொகுக்கப்பெற்ற நூல் ஈதொன்றே. எட்டுத் தொகையுள் பரிபாடலில்தான் கடவுள் வாழ்த்து இல்லை. அந்நூலின் முதற் பாடலே திருமால் பற்றியது ஆதலின் வேறு கடவுள் வாழ்த்துத் தேவையில்லை எனக்கருதி அதனையே வாழ்த்தாகக் கொண்டு தொகுத்தனர் போலும். திருமுருகாற்றுப்படையை முதற் பாடலாகப் பெற்றிருத் தலின், பத்துப்பாட்டும் வேறு தனித்த கடவுள் வாழ்த்துப் பெருமை ஈண்டு ஒப்பு நோக்குதற்குரியது.

இப் பரிபாடல் தொகைநூல் கிடைத்தமையால்தான், பாவகையுள் ஒன்றான பரிபாடலைக் காணும் பேறு பெற்றோம். இதுவும் முன்னைய நூல்கள் போல மறைந்திருப்பின், தொல் காப்பியம் கூறும் பரிபாடல் இலக்கணத்தைத் திருப்பித் திருப்பி ஓதி அமைதியுறுவது தவிர, வேறு வழி இருந்திருக் காது. மேலும் பிற சங்க இலக்கியங்களிற் பேசப்படாத தெய்வம், சமயம் பற்றி விரித்துக் கூறும் ஒரு பேரிலக்கியத் தையும் நாம் இழந்திருப்போம். பரிபாடல் இலக்கியப் பண்புகள் நிறைந்த ஒரு கருவூலம். பாடு பொருளில், பாடு நெறியில், யாப்பில், நடையில், கற்பனையில், பாடற்றொகுப்பு முறையில், பண்ணில், இன்னபிற வகையில், பிற சங்க இலக்கியங்களிற் காணவியலாத சிறப்பியல்புகளைக் கொண்டு இலங்குவது பரிபாடல் ஆகும்.

5. புலவர்களும் இசைஞர்களும்

பரிபாடல் பாடிய புலவர்கள் பதின்மூவர்; பண் வகுத்த இசைஞர்கள் பதின்மர். இப்புலவர்கள் பாடிய சில பாக்கள் வேறு தொகை நூல்களிலும் இடம் பெற்றுள. பண் வகுத்த இசைஞர்கள் யாத்த பாக்களும் பிறதொகை நூல்களில் காணப்படுகின்றன. எனவே, இவ்விசைஞர்கள் புலவர்களாக விளங்கியமையும் புலனும். பாடிய புலவர் களுள் சிலர் பாண்டிய வேந்தர்கள்; பெண்பாற் புலவர்கள் ஒருவருமிலர். பாண்டிய நாட்டைச் சார்ந்த வையை, மதுரை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலைமலை ஆகியவற்றையே பாடியிருத்தலின், இப்புலவர் பெருமக்கள் அனைவரும் பாண்டிய நாட்டவராகலாம் எனக் கருத இடனுண்டு. இவர்கள்தம் பாக்கள் பாண்டிய நாட்டின் பழக்க வழக்கங் கள், நாகரிகம், பண்பாடுகள் ஆகியவற்றைத் தெள்ளிதின் உணர்த்துவனவாம். இப்புலவர்கள் திருமாலையும் செவ் வேளையும் ஆர்வமிக, உணர்ச்சி பொங்கப் பாடி இறைஞ்சி யுள்ளனர். வையையில் நிகழ்ந்த புனலாட்டு விழாவினையும் செவ்வனம் சித்திரித்துள்ளனர். சமயம், தெய்வங்கள் பற்றிய பாக்கள் ஆதலின், பரிபாடல்களைப் பாசுரங்கள் எனவும் பாடினோரை அடியார்கள் எனவும் அழைத்தல் சாலும். சமயப் பகை சிறிதுமின்றித் திருமாலையும் செவ் வேளையும் ஒப்பக் கருதித் தலையாய கடவுளர்களாக அப் புலவர்கள் பாடி வழிபட்டுள்ளனர். கடுவனிள வெயினனார் முருகனையும் திருமாலையும் ஒருங்கு புகழ்ந்தேத்துவதும், கேசவனார் எனத் திருமால் பெயர் தாங்கியவர் முருகனை உளமார வழுத்துவதும் பொதுமைக்குச் சான்றாகும்.

இசைஞர்களும் தெய்வ ஆர்வலராய்ப் பரந்த மனப்பான்மை யுடன் சமய இகலின்றிப் பரிபாடல்களுக்குப் பண்வகுத் துள்ளனர். மருத்துவன் நல்லச்சுதனர், முருகன், திருமால் பற்றிய பாக்களுக்குப் பொது நோக்குடன் பண் வகுத்துள் ளார். நந்நாகனர், கண்ணநாகனர், நாகனர், பெட்டநாகனர். நன்னாகனர் எனவரும் இசைஞர்தம் பெயர்களுள் நாகன் என்னும் சொல் பயின்று வருதலின், அவர்கள் நாக இனத்தவ ராதல் கூடும் எனக் கருதுவர் சிலர். கேசவனர், நல்லச் சுதனர், மருத்துவன் நல்லச்சுதனர் எனவரும் பெயர்கொண்டு இசை வகுத்தோர் பெரும்பாலார் திருமாலிய மதத்தினர் எனக் கருதுவோரும் உளர்.

புலவர்களின் அனுபவ விளக்கத்தையும் உணர்ச்சி வெளி யீட்டையும் சமயம், வாழ்வியல் பற்றிய கொள்கைகளையும் பரிபாடல் அறிவிக்கிறது. சில பாடல்களில் புலவர்களின் உணர்ச்சிப் பெருக்கைக் காண்கிறோம். இந்நூலில் வரும் எண்ணிறந்த உவமைகள் அப்புலவர்களின் பழுத்த அனுபவத்தினின்று முகிழ்த்தவையாகும். நேரிய மிகப் பொருத்தமான உவமையைப் பொருளைப் பார்த்த முதல் முறையிலே புலவன்தான் கூறமுடியும். ஏனெனில் புறத் தோற்றத்தில் மிகவேறுபட்டிருக்கும் இருபொருள்களிடையே ஒப்புமையைக் காணும் திறன் புலவனுக்கே வாய்க்கும்.[1] இவ்வுண்மை பரிபாடற் புலவர்கள் கையாண்ட பல உவமை கட்கும் பொருந்துகின்றது.

பரங்குன்றம், திருமாலிருஞ் சோலைமலை ஆகியவற்றின் இயற்கைப் புனைவுகள் புலவர்கள்தம் வியத்தகு பேராற்றலைப் புலப்படுத்தும். சொற்களையும் அடைகளையும் தெரிந் தெடுத்து ஆட்சி செய்வதை நோக்குங்கால், அப்புலமைச் செல்வர்களின் மொழி மாட்சி செவ்விதிற் புலனாகும். ஓரடியினால், ஒரோ வழி ஓரடை மொழியினால், புலவன் படிப்போர் உள்ளத்தே உணர்ச்சி மிகுந்த கற்பனையை நிலைபெறுத்துவான் என்பர் பேராசிரியர் வின்செசுடர்.[2]

---

1. The Discovery of poetry, p. 167
2. Some Principles of Literary Criticism, p. 135.

'புகைந்த நெஞ்சின் புலர்ந்த சாந்தின்' (பரி. 4: 11)

'சென்று தொழுகல்லீர் கண்டு பணிமின்மே'. (பரி. 15: 34)

'பேஎநீர் வையை' (பரி. 7: 84)

'சமழ்ப்பு முகம்' (பரி. 20: 136)

எனவருந் தொடர்கள் பல்வேறு உணர்ச்சிகளைக் காட்டா நிற்கும்.

பாடலின் ஓசை ஓட்டமே வையையின் நீரோட்டத்தை எதிரொலிக்கிறது.

'நிலனுற நிமிர்தானை நெடுநிரை நிவப்பன்ன
பெயலாற் பொலிந்து பெரும்புனல் பலநந்த
நலன்நந்த நாடணி நந்தப் புலன் நந்த
வந்தன்று வையைப் புனல்'. (பரி 7: 7–10)

திருமால் அவுணர்களை அழித்ததையும் இரணியனைப் பிளந்ததையும் வல்லோசை மிகுத்து ஒலிநயம் படப் புலவர்கள் பாடியுள்ளனர்.

'ஒடியா உள்ளமொ டுருத்தொருங் குடனியைந்து
இடியெதிர் கழறும் கால்உறழ் பெழுந்தவர்
கொடியறு பிறுபு செவிசெவிடு படுபு
முடிகள் அதிரப் படிநிலை தளர
நனிமுரல்வளை முடியழிபிழிபு
தலையிறுபு தாரொடு புரள' (பரி. 2: 36-41)

'இன்ன லுன்னரொ டிடிமுர சியம்ப
வெடிபடா வொடிதூண் தடியொடு:
தடிதடி பலபட வகிர்வாய்த்த உகிரினை' (பரி. 4: 19–21)

இங்ஙனம் பல்வகை எதுகை மோனைகளைப் புணர்த்து, ஒலி நயத்தால் பல்வேறு மெய்ப்பாட்டுணர்ச்சிகளைப் பயில்வோரும் உணரும் வண்ணம் புலவர்கள் தம் பாக்களை அமைத்திருத்தல் நயம் பயப்பதாகும்.

புலவர்கள் தத்தம் பரிபாடல்களில் காட்டும் வனப்புகளை இனி விரிவாகக் காண்போம்.

புலவர்கள்

1. ஆசிரியன் நல்லந்துவனார்

பரிபாடல் பாடினோருள் சங்கப் புகழ்மைசான்ற நல்லந்துவனார் பாக்கள் மட்டுமே நற்றிணை, அகநானூறு கலித்தொகை, பரிபாடல் என்னும் நான்கு தொகை நூல்களில் வருகின்றன. பரிபாடற்கண்ணும் இவரே மிகுதியான பாடல்களை (6, 8, 11, 20) யாத்த புலவராவர். பேரெல்லையாக வரும் 140 அடியுள்ள பாட்டும் இவர் பாடலே. சங்கப் புலவர்களுள் ஆசிரியம், கலி, பரிபாடல் என்னும் பல்வேறு பாக்களையும் பாடிய ஒரு தனிப் புலவரும் இவரே. மதுரை ஆசிரியன் நல்லந்துவனார் எனும் பெயரில் அகநானூறு 43 ஆம் பாட்டும், நல்லந்துவனார் என்னும் பெயரில் நற்றிணை 88 ஆம் பாட்டும் காணப்படுகின்றன. இவைதவிரக் கலித்தொகையில் கடவுள் வாழ்த்தொன்றும், நெய்தற்றிணை 34 பாடல்களும் நல்லந்துவனார் என்ற பெயரிலே அமைந்துள்ளன. 'சாற்றிய பல்கலையும்' எனத் தொடங்கும் திருவள்ளுவ மாலை வெண்பாவின் ஆசிரியர் அந்துவனார் என்னும் கருத்தை அறிஞர்கள் உடன்படுதலில்லை.

அடைச் சிறப்பு

நல்லந்துவனார், ஆசிரியன் நல்லந்துவனார், மதுரை ஆசிரியன் நல்லந்துவனார் என்றெல்லாம் அந்துவன் பெயர் வழங்கப் பெறும். அந்துவன் என்னும் பெயருக்கு முன்வரும் 'நல்' என்னும் அடையும், பின்வரும் 'ஆர்' என்னும் அடையும்

அவர்தம் பெருமை கருதிச் சேர்க்கப் பெற்றனவாம். 'அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை' எனவரும் அகநானூற்றுச் செய்யுள் அடி (59) அப்புலவர் பெயர் அந்துவன் என்பதை வலியுறுக்கும். 'ஆசிரியன்', 'மதுரை' என்னும் அடைமொழிகள் முறையே அப்புலவர்தம் தொழிலையும் ஊரையும் அறிவிப்பனவாகும்.

மூவரும் ஒருவரா ?

ஆசிரியன் நல்லந்துவனாரினும் மதுரை ஆசிரியன் நல்லந்துவனாரும், அந்துவனும் வேறுவர்[1] என்பதும், அகநானூறு 43 ஆம் பாடல் ஆசிரியரும் பரிபாடல் 6, 8, 11 20 ஆம் பாடல்களின் ஆசிரியரும் ஒருவரில்லை என்பதும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை யவர்களின் கருத்தாகும். மேலும் பரிபாடற் புலவர்களின் பாக்கள் வேறு சங்கத் தொகை நூல்களிற் காணப்படவில்லை எனவும் அவர் கருதுவர்.[3]

இக்கருத்தினை அறிஞர்கள் ஒப்புக் கொள்ளவில்லை.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் கருத்துப்படி கலித்தொகையும் பரிபாடலும் கி. பி. எட்டாம் நூற்றுண்டு; நற்றிணை கி. பி. மூன்றும் நூற்றுண்டு. ஆனால், நற்றிணை (88) பாடிய புலவர் பெயரும் நெய்தற் கலியைப் பாடிய புலவர் பெயரும் நல்லந்துவனார் என்றே அறிகின்றோம். ஆகவே, நற்றிணை 88 ஆம் பாடற்கும் நெய்தற் கலிக்கும் நல்லந்துவனாரே ஆசிரியர் என்பது உறுதி. நல்லந்துவனார் பாடல் நற்றிணையில் (88) இருத்தலானும், பரிபாடற்குப் பண் வகுத்த கண்ணகனார் பா புறநானூற்றில் உண்மையானும், சங்கத் தொகை நூலில் பரிபாடற் புலவர்களின் பாக்களில்லை என்பார் கூற்றுப் புரைபடுதல் காணலாம். மதுரை ஆசிரியன் நல்லந்துவனாரையும் நல்லந்துவனாரையும் வேருகக் கருதுமவர் மதுரை ஈழத்துப் பூதன் தேவனையும் பூதன் தேவனையும் ஒருவராகக் கருதுவானேன்? வாழியாதனும் செல்வக் கடுங்கோ வாழியாதனும் ஒருவனே என்று அனைவரும் ஒப்பக் கருதும் கருத்தினையும் ஈண்டைக்கு ஒப்பு நோக்கலாம்.

---

3. History of Tamil Language and Literature, P. 56.

மதுரை மருதனிள நாகனார் தம் காலத்து வாழ்ந்த அந்துவனாரைத் தம் பாவில் பாராட்டியுள்ளார்.

'சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை' (அகம். 59)

முருகனையும் பரங்குன்றத்தையும் பாடியவர் பரிபாடல் பாடிய ஆசிரியன் நல்லந்துவனார் ஆதலால், அவரையே மேலைய அகநானூற்றடிகளும் சுட்டுகின்றன என்பதில் ஐயமில்லை. ஆகவே, அந்துவனும் ஆசிரியன் நல்லந்துவனாரும் ஒருவரே ஆவர்.

மதுரை ஆசிரியன் நல்லந்துவனார் பாடிய அகநானூற்றுப் பாடல், நல்லந்துவனார் பாடிய நற்றிணைப் பாடல், ஆசிரியன் நல்லந்துவனார் பாடிய பரிபாடல்கள் ஆகியவற்றுக்குள் கருத் தொப்புமை காணப்படுகின்றமையானும் மூவரும் ஒருவரே எனத் துணியலாம். ஆனால், அந்துவன் சாத்தன் (புறம் 71: 13) அந்துவன் சேரல் (பதிற்றுப்பத்துப் பதிகம் 7) அந்துவன் கீரன் (புறம் 359) ஆகியோர் நல்லந்துவனாரினும் வேறு பட்டவர். அந்துவன் எனும் பெயர்க்குப் பின்வரும் அடைச் சொற்களே அவ்வேறுபாட்டைத் தெள்ளிதின் உணர்த்தும். முன்பின் அடை கொடாமல் தனித்து அந்துவன் என்றால் பிறரைக் குறியாது நாம் ஆராயும் இப்புலவரையே குறிக்கும். இஃது அப்புலவர்தம் பெருமையைக் காட்ட வல்லதாகும்

கருத்தொப்புமை

நெய்தற்றிணை பாடுதலில் நல்லந்துவனார் வல்லுநர் எனினும் அவர் பிற திணையைப் பாடாமலுமில்லை. அக நானூற்றில் பாலைத்திணையைப் புனைந்துள்ளார். பாலைத் திணையைப் பாடும்போது கூட, அவர் மழைபொழிதலைப் பரி பாடல் வையைப் பாக்களின் தொடக்கத்தே பாடியிருத்தல் போலப் பாடக் காண்கின்றோம். கார்மேகங்கள் கடல் நீரை முகந்து வானிற் படர்ந்து, இடி முழக்கஞ் செய்து, மண்ணும் விண்ணும் ஒன்றென மயங்கும்படி பெருமழை பொழிகின்றன.

கோடையின் வெம்மைக் காற்றூது உழந்த பிடி தன் களிற்றுடன் மழை வெள்ளத்து மூழ்கிக் களிக்கும்.

'கடல் முகந்து கொண்ட கமஞ்சூல் மாமழை
சுடர்நிமிர் மின்னொடு வலனேர் பிரங்கி
என்றூழ் உழந்த புன்றலை மடப்பிடி
கைமாய் நீத்தம் களிற்றொடு படீஇய
நிலனும் விசும்பும் நீரியைந் தொன்றி' (அகம் 43 : 1-5)

இதுபோன்ற கருத்து அந்துவனாரின் பரிபாடல்களிலும் காணப் பெறும்.

அந்துவனார் நற்றிணையில் ஒரு பாடலே யாத்துள்ளார். அது குறிஞ்சித்திணை பற்றியது. கலித்தொகையில் நெய்தற் றிணையைத் திறம்படப் பாடிய அந்துவனார் அத்திணை பற்றிய ஒரு கருத்தை—உப்புக் குவியல் மழைக்குக் கரைதலை—உவமமாக நெய்தற் கலியில் அமைத்துப் பாடிய தொப்பவே[4] குறிஞ்சித்திணை பற்றிய நற்றிணைப் பாவிலும் பாடியுள்ளார்.

'..............புணர் திரைக்
கடல்விளை அமுதம் பெயற்கேற் றாஅங்கு
உருகி உகுதல் அஞ்சுவல் உதுக்காண்'
(நற்றிணை 88 : 3-5)

இவ்வொப்புமைக் கருத்துகளை நோக்குங்கால், மதுரை ஆசிரியன் நல்லந்துவனார், ஆசிரியன் நல்லந்துவனார், நல்லந்துவனார் என்னும் பெயர்களெல்லாம் ஒருவரையே குறிக்கும் என்பது தெளிவு. இம்மூன்று பெயரும் வெவ்வேறு புலவரைக் குறிக்கும் என்னும் வையாபுரிப் பிள்ளையவர்களின் கருத்துப் பொருந்தாது.

4. 'நிறையழி காமநோய் நீந்தி யறையுற்ற
உப்பியல் பாவை யுறையுற் றதுபோல
உக்கு விடுமென் னுயிர். (நெய்தற்கலி 21 : 15-17)

இம்மூவரும் ஒருவரே என அனந்தராமஐயர்.[5] இளவழகனார் ஆகியோரர் தம் கலித்தொகைப் பதிப்பில் குறிப்பிட்டுள்ளனர். டாக்டர் உ. வே. சா. அவர்களும் தாம் எழுதிய பரிபாடற் புலவர்களின் வரலாற்றில் அகநானூறு (43) பாடிய மதுரை ஆசிரியன் நல்லந்துவனாரும் பரிபாடல் பாடிய நல்லந்துவனாரும் ஒருவரே என்பர்.

கலித்தொகை பதிப்பித்த பண்டிதர் அனந்தராம ஐயர் நல்லந்துவன் எனும் பெயரை நவ்வந்துவன் என வழங்கலாம் என்பர். 'பழந்தமிழர் காலநிலே' என்னும் ஆங்கில நூலில் சிவராசபிள்ளை அக்கருத்தைப் பொருந்த மறுத்துள்ளார். நவ்வந்துவன் எனக் கூறுவதில் ஒலிநயமோ ஒலித்தற்கெளிமையோ இல்லை. மக்கட்குரிய பெயரை வழங்குவதில் பண்டைப்புலவர்கள் பின்பற்றிய ஒலியியற் கொள்கையைப் பண்டிதர் புறக்கணித்துள்ளார். பண்டைப் பெயர்கள் சிலவற்றில் முன் ஒட்டாக 'நல்' அல்லது அதன் குறுகிய வடிவான 'ந' காணப்படும்; 'ந' என்னும் ஒட்டு, வல்லின மெய்யை முதலாக உடைய பெயர்க்கு முன்னரே எப்பொழுதும் வரும். நக்கண்ணையார், நக்கீரனார், நப்பசலையார், நப்பாலத்தனார், நச்செள்ளையார் முதலிய பெயர்களைக் காண்க. பெரும்பாலும் 'நல்' எனும் ஒட்டு உயிரையோ மெல்லின இடையின மெய்களையோ முதலாக உடைய பெயர்க்கு முன்னரே வரும். நல்லுருத்திரன், நல்லிறையனார், நன்னாகனார், நல்விளக்கனார், நல்வெள்ளியார் முதலிய பெயர்களைக் காண்க. முந்திய பெயர்களில் காணப்பெறும் இம்மரபுப்படி நல்லந்துவனார் என இப்பொழுது வழங்கும் பெயரே பொருந்துவதாம் என்றும், வேறு பாடங்கொள்வது தேவையற்றது என்றும் தெரிப்பர் சிவராசபிள்ளை.[6]

திரு. சி. வை. தாமோதரம் பிள்ளை, சிவராசபிள்ளை, வையாபுரிப் பிள்ளை ஆகியோர், நூற்றைம்பது பாக்கள்

---

5. அனந்தராம ஐயர் பதிப்பு, தொகுதி III, பக். 29. கலித்தொகை: புலவர்கள் வரலாறு—இளவழகனார். பக். 30.
6. The Chronology of the Early Tamils, p. 226.

அடங்கிய கலித்தொகை முழுவதும் கடவுள் வாழ்த்துடன் மதுரையைச் சார்ந்த நல்லந்துவனார் எனும் ஆசிரியர் ஒருவ ரானே இயற்றப்பட்டது எனக் கருதுவர். கலித்தொகையில் ஒரு திணையிற் காணப்படும் கருத்துகளும் சொற்களும் பிற திணைகளிலும் காணப்படுகின்றன. ஐந்திணை பற்றிய கலிப் பாக்களிலும் மதுரை, வையை, பாண்டியர்களைப் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. எனவே, கலித்தொகை யின் ஆசிரியர் ஒருவரேயாதல் வேண்டும் என அறுதியிடுப.

ஆனால் இக்கருத்தினைப் பன்மொழிச் செம்மல் வேங்கட ராசுலுரெட்டியார் அவர்கள் தக்க காரணங்காட்டி மறுத்துள் ளார்கள். கலித்தொகையில் ஐந்திணையையும் அந்துவனாரே பாடியிருப்பின், நூல் இறுதிக்கண் அவர் பெயர் குறிப்பிடப் பட்டிருக்கும். ஆனால், அங்ஙனம் குறிப்பிடப்படவில்லை. கலித்தொகைக்கு உரைவரைந்த நச்சினார்க்கினியர்நெய்தற் கலி 25 ஆம் பாடலுக்கு எழுதிய உரையில் நல்லந்துவனார் நெய்தற்கலியைப் பாடியதாகவும் கலித்தொகை நூலைத் தொகுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். சங்க காலத் தொகை நூல்கள் அனைத்தும் புலவர் பலர் யாத்த பாக்களின் தொகுப் பேயாகும். ஆகவே, எட்டுத் தொகையுள் ஒன்றாய கலித் தொகையும் புலவர் பலர் பாடிய பாக்களின் தொகுப்பே யாதல் வேண்டும். கலித்தொகையில் கருத்தொப்புமை, சொல்லொப்புமைகளைக் காணுவது போலவே, பிற தொகை நூல்களிலும் அவ்வொப்புமைகளைக் காணலாம். கலித் தொகை போன்று பரிபாடலும் மதுரை, வையை, பாண்டிய மன்னர்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. எனவே, பரிபாடலும் ஒரே புலவரால் பாடப்பெற்ற தொகைநூல் என்னல் வேண்டும். ஆனால், அங்ஙனம் நாம் கருதுவதில்லை. ஆகவே, கலித்தொகை ஒருவராற் பாடப்பட்டதன்று; புலவர் பலரால் பாடப்பெற்றது எனக் கொள்வதே தக்க முடிபாகும்.

கலித்தொகையில் உள்ள ஒவ்வொரு திணையும் பலரால் பாடப்பெற்றிருக்க வேண்டும் என அறிஞர் சிலர் கருதுவர்.

நல்லந்துவனுர் பாடிய பரிபாடல்களுக்கும் நெய்தற் கலிக்கும் ஒப்புமைகள் உள்ளன. ஆகவே, நல்லந்துவனுரை நெய்தற்கலிக்கும் ஆசிரியர் எனத் துணியலாம். நெய்தற் கலிக்கும் அந்துவனுர் பாடிய பரிபாடற் பாக்களுக்கும் உள்ள ஒப்புமை பின்வருவன :

வண்டின் இசையை யாழிசைக்கு ஒப்பிடல் :

'யாழிசை கொண்ட இனவண் டிமிர்ந்தார்ப்ப'

(நெய்தல் 14 :9)

'பூவூது வண்டினம் யாழ்கொண்ட கொளைகேண்மின்'

(பரி. 11 : 25)

காதலனை மாலை கொண்டு புடைத்தல்:

'கோதை கோலா இறைஞ்சி நின்ற
ஊதையஞ் சேர்ப்பனை அலைப்பேன் போலவும்'

(நெய்தல் 11 : 18-19)

'வையைத் தொழுவத்துத் தந்து வடித்திடித்து
மத்திகை மாலையா மோதி.'

(பரி. 20 : 60-61)

கடல், மலை, ஆறு முதலியன மீது ஆணையிடல் :

'பெருங்கடல் தெய்வநீர் நோக்கித் தெளித்தென்'

(நெய்தல் 14 :1)

'வருபுனல் வையை மணல்தொட்டேன் தருமணவேள்
தண்பரங் குன்றத் தடிதொட்டேன்'

(பரி, 8 : 61-92)

கதிரவன் குன்றிடை மறைதல் :

'பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலைசேர'

(நெய்தல் 1 : 4)

'காலைக் கடல்படிந்து காய்கதிரோன் போயவழி
மாலை மலைமணந்து மண்துயின்ற கங்குலான்'
(பரி. 20 : 6-7)

பாண்டிய மன்னர்களைக் குறிப்பிடல் :

'பொருந்தாதார் போர்வல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்'
(நெய்தல் 24 : 24-25)

'சுடரொடு சூழ்வரு தாரகை மேருப்
புடைவரு சூழல் புலமாண் வழுதி'
(பரி. 19-20)

கடலின் நீரை முகந்து மேகம் மழை பொழிதல் :

'கனையிருள் வானங் கடன்முகந் தென்மேல்
உறையொடு நின்றியல் வேண்டு மொருங்கே'
(நெய்தல் 28 : 55-56)

'நிறைகடன் முகந்துராய் நிறைந்துநீர் துளும்புந்தம்
பொறைதவிர் பசைவிடப் பொழிந்தன்று வானம்'
(பரி. 6 : 1-2)

சிவனை ஆதிரையான் எனல்

'அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த'
(நெய்தல் 33 : 20)

'ஆதிரை முதல்வனிற் கிளந்த
நாதர்பன் னொருவரு நன்றிசை காப்போரும்'
(பரி. 8 : 6-7)

மேற்காட்டிய ஒப்புமைக் கருத்துகளால் இரு நூல்கட்கும் ஆசிரியர் ஒருவரே என்பது தேற்றம்.

'பரிபாடற் பாக்களிலும் நெய்தற்கலியிலும் நல்லந்துவனார் நாடகம் பாங்கில் செய்திகளை அமைத்திருத்தல் நோக்க

தக்கது. நெய்தற்றிணைப் பொருளைப் பாடுதற்கு முன்னர், அந்துவனார் கதிரவன் மறைந்த மாலைப் பொழுதைப் புனைந்து அத்திணைக்குரிய சூழ்நிலையை அமைப்பர்.[7] வையைப் பெருக்கைப் புனைந்துரைக்குமுன் அதற்குக் காரணமான மழைப் பொழிவைச் சித்திரித்தலை அந்துவனார்தம் பரிபாடலிற் காணலாம்.[8] செய்திகளை நாடகப்படுத்தல், ஒரு செய்தியைக் கூறுமுன் அதற்குரிய சூழலைப் புனைந்து கோடல் ஆகிய முறை நெய்தற்கலியிலும் பரிபாடலிலும் காணப்படுதலின், அவற்றிற்கு ஆசிரியர் நல்லந்துவனாரே என முடிவு கட்டலாம்.

ஊர்

அந்துவனார்தம் ஊர் மதுரை என்ப. மதுரை ஆசிரியன் நல்லந்துவனார் என்னும் பெயரில் வரும் மதுரை என்னும் அடையும், மதுரையை யாண்ட பாண்டி வேந்தனையும் திருப்பரங்குன்றத்தையும் வையையையும் சிறப்பித்துக் கூறியமையும் அவர் மதுரையினரே என்பதை வலியுறுத்தும். மதுரை நகரன்றிப் பிற நகர்களையும் பாண்டிய வேந்தனையன்றி வேறு வேந்தர்களையும் அந்துவனார் பாடிற்றிலர்.

தொழில்

ஆசிரியன் நல்லந்துவனார் என்னும் பெயரில் வரும் ஆசிரியன் எனும் அடை, அப்புலவர் ஆசிரியத் தொழிலினர் எனக் கருதச் செய்கிறது. ஆசிரியன் எனும் அடை கல்விச் சிறப்பாற் பெற்றதாகும் எனக் கூறுவர் உ. வே. சா.[9] ஆனால், பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் அவர்கள் அந்துவனார் பார்ப்பனராதலின், ஆசிரியர் என அழைக்கப் பட்டார் என்றும், பார்ப்பனப் புலவர்களே ஆசிரியர் என அழைக்கப் பெறுதல் அக்கால மரபு என்றும் கூறுவர்.[10] இக்

7. நெய்தற்கலி 1, 2, 4.
8. பரிபாடல் 6 : 11, 21.
9. பரிபாடல் : பாடினோர் வரலாறு, பக். xvii
10. நற்றிணை : பாடினோர் வரலாறு, பக். 49.

கருத்து ஐயுறத்தக்கது. தனக்குத் துன்பம் வந்தபோது உதவியோர்க்கு ஓர் இன்னல்வரின், உதவாதவன் கெடுவான் என்பதற்குக் கற்பித்த ஆசிரியன் வருந்தும் போது கைமாறாகத் தன் கைப்பொருளைக் கொடுத்து உதவாதானது கல்வி நாடோறும் கெடுதலை நல்லந்துவனார் உவமை கூறி யுள்ளார்.

'கற்பித்தான் நெஞ்சழுங்கப் பகர்ந்துண்ணான் விச்சைக்கண்
தப்பித்தான் பொருளேபோல் தமியவே தேயுமால்
ஒற்கத்துள் உதவியார்க் குதவாதான் மற்றவன்
எச்சத்துள் ஆயினும்ஃ தெறியாது விடாதேகாண்

(நெய்தற்கலி 32: 47)

இவ்வுவமை தொழிற் பயிற்சியாற் பிறந்ததாகலின் நல்லந்துவனார் ஆசிரியத் தொழிலினர் என்பது தெளிவு.

பொதுநோக்கு

நல்லந்துவனார் மதத்தில் பொது நோக்குடையவர். கலித்தொகையில் சிவபெருமானைக் கடவுள் வாழ்த்தாகப் பாடியிருப்பதும், பரிபாடல் எட்டாம் பாடலில் செவ்வேளை இறைஞ்சி ஏத்தி இருப்பதும், நெய்தற்கலியில் (2, 6, 28) திருமாலைப் புகழ்ந்திருப்பதும் தக்க சான்றுகளாகும்.

வானநூல் அறிவு

பரிபாடலில் அந்துவனார்தம் பதினோராம் பாடலை நோக்குகின்ற பொழுது அவர் சிறந்த வானநூலறிஞர் என்பது போதரும். இப்பாடல் பரிபாடலின் கால வாராய்ச்சிக்குப் பெரிதும் துணையாகும்.

நெய்தற்கலியில் தலைவி பசந்து ஒளி மங்கியிருத்தற்கு, நண்பகலில் கதிரவன்முன் காணப்படும் மதியை அந்துவனார் உவமை கூறியிருத்தலும் அவர்தம் வானநூற் புலமைக்குச் சான்றாகும் என்பர் சோமசுந்தர தேசிகனார்.[11]

11 செந்தமிழ்-தொகுதி XIX பக் 252.

அகத்திணைப் புலவர்

நெய்தற்றிணை பாடுதலில் நல்லந்துவனார் மேதை எனப் பாராட்டுப் பெறுவர்.[12] எனினும் அவர் பிறதிணைப் புலமையும் உடையவர் என்பதனை நற்றிணையிலுள்ள அவர்தம் குறிஞ்சித் திணைப்பாவானும் அகநானூற்றிலுள்ள பாலைத் திணைப் 'பாவானும் அறியலாம். செவ்வேளைப் பற்றிய ஒரு பாடல் தவிர, அவர் பாடிய ஏனைப் பரிபாட்டுகளும் பிற தொகை நூல்களிற் காணப்படும் அவர் பாக்கள் அனைத்தும் அகத்திணை தழுவியனவே. செவ்வேளைப் பற்றிய பரிபாடலிலும் அகத்திணைக் குறிப்பு இல்லாமலில்லை. எனவே, அந்துவனாரை 'அகத்திணைப் புலவர்' என்று அழைக்கலாம். புறநானூறு, பதிற்றுப்பத்துப் போன்ற புறத்திணை இலக்கியங்களில் அவர் பாட்டு ஒன்றுகூட இடம் பெறவில்லை.

புலவர்தம் புகழுரைகள்

உடன்புலவராய மருதனிள நாகனார் தம் அகநானூற்றுப் பாடலில், 'அந்துவன் பாடிய சந்து கெழு நெடு வரை' என நல்லந்துவனாரைப் பாராட்டியுள்ளார். நெய்தற் கலியில் வரும் பல உவமைகளையும் கற்பனைப் புனைவுகளையும் கம்பர் எடுத்தாண்டு தம் இராமாயணக் கார்காலப் படலத்தைஅணி செய்துள்ளார்.[13] சீரிய உரையாளர்களான பேராசிரியரும், பரிமேலழகரும் தொல்காப்பியம் திருக்குறள் ஆகிய நூல்களின் விளக்கத்திற்கு அந்துவனார் பாவடிகளைக் காட்டுத் தருவர். நச்சினார்க்கினியர் கலித்தொகைக் கெழுதிய தம் உரையில் நல்லந்துவனாரைத் 'தம்பேரறிவு தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுட் செய்தார்'[14] எனக் கூறுதல் காண்க.

---

12. பெருங்கடுங்கோன் பாலை குறிஞ்சி கபிலன்
மருதனிள நாகன் மருதம்-அருஞ்சோழன்
நல்லுத்திரன் முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி.
13. கலித்தொகை ; அனந்தராமய்யர் பதிப்பு. பக்.893.
14. நெய்தற்கலி. 25. நச். உரை.

செவ்வேளின் புனைவு

அந்துவனார் பாடிய நான்கு பரிபாடல்களுள் ஒன்று செவ்வேளைப் பற்றியது. மற்றை மூன்றும் வையை பற்றியன. செவ்வேளைப் பற்றிய பாடலில் இப்புலவர் தண் பரங்குன்றத்தைப் புகழ்ந்தேத்தி நன்குபுனைந்துள்ளார். துழாய் மாலையினையும் கருடக் கொடியினையும் கொண்ட திருமால், கண்ணுதற் பெருங்கடவுள், நான்முகன், ஆதித்தர் பன்னிருவர், தேவர், மருத்துவர் இருவர், பதினொரு கபிலர், அட்டவசுக்கள், திசை காக்கும் இந்திரன் முதலிய எண்மர், அமரர், அவுணர் விழுத்தவ முனிவர்கள் ஆகியோரெல்லாம் முருகனைக் காண்டல் காரணமாகப் பரங்குன்றம் வந்துறைதலின், அஃது அம்முருகனது பழைய இடமாய இமயவெற்பை நிகர்க்கும். ஆண்டுள்ள சுனை முருகனை ஈன்ற இமயமலையிலுள்ள தாமரை மலர்ந்த வற்றுப் பொய்கையை ஒக்கும். அங்கெழும் மேக முழக்கம், முருகன் இவரும் யானை முழக்கம் போலும். அம் முழக்கங் கேட்ட கோழி, அச்சுற்று மலை எதிரொலிக்கக் கூவியது. மதக் களிறுகளும் மாறுமாறாகப் பிளறின. இவற்றை எதிரொலித்து மலை முழைஞ்சின் ஆர்ப்பொலி அவ்வொலிகட்கு எதிர்குதிராகத் தோற்றியது. ஏழு துளையை யுடைய புல்லாங்குழல், ஐந்து துளையையுடைய குழல், யாழ் ஆகியவற்றெழுந்த இசை ஒப்ப, முறையே தும்பி, வண்டு, மிஞிறுகள் பாடின. குன்றுக்கும் கூடலுக்குமுள்ள இடை வழியிலே சுனைப்பூக்கள் மலர, கொன்றை பூங்கொத்துப் போல விரிய, கொடிமலர்கள் கட்டவிழ்க்க, காந்தள்நெகிழ்ந்து காட்ட, பன்மலர்கள் வாய்திறந்து மணம் பரப்ப, அவ்வழி கம்மென்று மணந்தது. மணவழியே தென்றல் அசைந்து தவழ்ந்தது. அங்கே மண முரசம் ஆர்த்தது. காற்றொடு மயங்கிய கடலென, கடலைக் குடிக்கும் கார்மேகமென, இந்திரனது இடியொலியென அம்மன்றல் முரசம் ஆர்ப்ப ஆர்ப்ப, அதற்கு மாறாகப் பரங்குன்றும் ஆர்த்தது.

முருக வழிபாடு

பரங்குன்றத்து முருக வழிபாட்டுக்கு மதுரை அன்பர்கள் சந்தனம், மலர், நறும்புகை, நந்தாவிளக்கு, முழவு, மணி, பாசம், மயில், கோடரி, பிணிமுகம் முதலியவற்றைக் கொண்டு சென்று இறைஞ்சினர். பின்னர் பல வரங்களை வேண்டினர். காதலரைப் புல்லியதாகக் கண்ட கனவு பொய்க்காமல் நனவாகும் பொருட்டுத் தாம் புனலாட, வையையில் புதுப்புனல் பெருகுவதாக, மக்கட்பேறு கிட்டுவதாக, பொருளீட்டச்சென்ற தலைவர்க்கு அதுவாய்ப்பதாக, தலைவர் பறந்தலையில் பலர் வியக்கப் பொருது வாகை சூடுவாராக என்றெல்லாம், பலவாறு அன்பர்கள் வரங் கேட்டனர் என அறிகின்றோம்.

அருவரைச் சேராத் தொழுநர்
கனிவிற் றெட்டது கைபிழை யாகாது
நனவிற் சேஎப்பநின் னளிபுனல் வையை
வருபுன லணிகென வரங்கொள் வோரும்
கருவயி றுறுகெனக் கடம்படு வோரும்
செய்பொருள் வாய்க்கெனச் செவி சார்த்துவோரும்
ஐயமர் அடுகென அருச்சிப் போரும்.'

(பரி. 8: 102-108)

இங்ஙனம் வரம் வேண்டிப் பாடுவார் பாடலின் தாளமும், ஆடுவார் கூத்தின் தாளமும், மலையின் எதிரொலியும் சேர்ந்து பரங்குன்றம் ஒரே ஆரவாரமாக இருந்தது. இக் குன்றத்துள்ள சுனைகளில் ஆடவரும் அரிவையரும் தாரும் மாலையும் மயங்கப் புனலாட்டயர்வர். பின்னர் அரிவையர் தரும் அமிர்த பானத்தாலும் உரிமை மாக்கள் தரும் அமிர்தத்தாலும் அவ்வயர்ச்சி நீங்கி மகிழ்வர். கறைமிடற் றண்ணலாய சிவபெருமானுக்கும் உமையம்மையார்க்கும் தோன்றியவர் முருகன் என்றும், அவர் அமர்ந்துறையும் மரம் கடம்பு என்றும் அந்துவனுரும் குறிப்பிட்டுள்ளார்.[15]

---

15. 'கடம்பர் செல்வன் கடிநகர் பேண
மறுமிடற் றண்ணற்கு மாசிலோள் தந்த
(பரி. 8 : 126-127)

செவ்வேள் பாடலில் அகம்

அந்துவனார்தம் பிற பரிபாடல்களைப் போலவே, செவ்வேளைப் பற்றிய இப்பாடலும் காதல் நிகழ்ச்சியைக் காட்டும்.

தலைவியரால் தூதாக ஏவப்பட்டுத் தலைவரோடு மீண்ட வண்டின் ஒலி அத்தலைவியர் காதலை மதுரை நகர்க்கண் புலப் படுத்தியது. தலைவர்கள் தலைவியரை எய்தினர். அவர்களுள் பரத்தைவயிற் பிரிந்து மீண்ட ஒரு தலைமகன் தன் தலைவியை நோக்கி, 'மகளிரது ஆராக் காமவின்பத்தைப் பொழிற் பாயற்கண் தலைவரொடு கூட்டும் களவுப் புணர்ச்சியையும், பூவின்கண் வாழும் மகன்றில் போலத் தம் கொழுநர் மார்பகத்தினின்றும் பிரியாது முயங்கும் கற்பிற் புணர்ச்சி யையும், நல்கும் சிறப்பினது தண்பரங்குன்று' எனக்கூறினன்.

அது கேட்ட தலைவி சினந்து, 'இப்பொழுது உன்மேனியில் அயன் மகளிர் வாசனை வீசுகின்றது. நீ அவரை முயங்குதற்குக் காலை போய் மாலை வருதல் ஒவ்வொரு மாலைப் பொழுதும் நிகழ்கின்றது. இனி நீ பண்பினனாகக் கூறும் நின் பழைய சூளைத் தவிர்க!' என்றனள்.

தலைமகன் அஞ்சி, உடனே இனிய மணலுடைய வையைக் கண் உள்ள பொழில்மீதும், பரங்குன்றம்மீதும், பார்ப்பார் மீதும் ஆணையிட்டுத் தான் பரத்தை நட்பினன் அல்லன் என்றும், தன்மீதுள்ள மணம் பரங்குன்றத்துக் கனியினும் மலரினும் தவழ்ந்து வந்த காற்றுலாயது என்றும் கூறி, ஊடற்க என்று தலைவியைக் குறையிரந்து நின்றனன்.

இதற்கிடையே தோழி குறுக்கிட்டு, 'இத்தலைவி ஒரு தாய்க்கு ஒரு பெண்; ஆதலால் முருகன்மீது ஆணையிடாதே; நீ பொய்யாக ஆணையிடின் முருகனது வேல் நின்னை அடும்; தலைவி பின் உயிர் வாழாள். அறவர் அடிதொட்டுச் சூளுறி னும் செவ்வேளின் மயிலையும் வேல் நிழலையும் நோக்கிச் சூளுறேல்; குறவன் மகளாய வள்ளி மீதும் ஆணை கூறேல்' என மொழிந்தனள்.

அங்ஙனம் மொழிந்த தோழியை நோக்கித் தலைவன், "நேரிழையே! யார் பிரிவது? யார் வருவது? யார் வினவுவது? யார் செப்புவது? இருதலைப்புள்ளின் ஓர் உயிரோமாகிய எமக்குள் பிரிவும் வருகையும் வினவும் விடையும் யாங்ஙனம் நிகழும்? நான் கூறிய ஆணை பொய் என்கின்றாய். தலைவி என்மேல் சுமத்தும் பழி பொய்யானது. தலைவியின் ஊடல் வெகுளி கண்டு நான் செய்ததைப் பொய்யாணை எனக்கருதி முருகன் சினந்தால், யான் என் செய்வது? ஆதலான், அவன் சினத்தைத் தணிப்பாயாக; இச் செய்தியை எல்லார்க்கும் தெரிவிப்பாயாக! தண் பரங்குன்று சென்று முருகனுக்கு மலர் தூவுவோம்; அவி ஊட்டுவோம்; தாளத்தோடு இசை பாடுவோம்; கிணை முழக்குவோம்' எனக் கூறினான்.

'முருகனின் சினம் தணிக்கச் செல்' எனக் கூறிய தலைவனை நோக்கித் தோழி, 'நின் பொய்ச்சூளை அறிந்தேன்; கூற்றுவனை இகழும் ஆற்றலுடைய முருகனது மனம் மாறுபடுமுன்னே, தலைவி சென்று மணியடித்துச் செவ்வேளை இறைஞ்சி நின் பொய்ச்சூளால் வரும் துன்பத்தைத் தவிர்ப்பாள்; நீ ஏதிலாரொடு இன்புறுதற்கு அங்குப் பலகாலும் செல்லுதலால், நின் நன்மைக்காகக் கற்பின் செல்வி மணியடித்து வழிபடும் அக்காட்சியின் மாட்சியைக் காண்பாயாக' எனத் தோழி தலைமகன் நாண நன்னயஞ் செய்தனள்.

இப்பாடலின் இறுதியில் மண்ணகம் வருந்துமாறு மழை பொய்ப்பினும் அருவி நீர் மல்கும் வளம் பரங்குன்றத்து என்றும் வாய்ப்பதாக என அந்துவனார் வாழ்த்துகின்றார்.

வையையின் வளம்

வையையைப் பற்றிய எட்டுப் பரிபாடல்களுள் அந்துவனார் பாடியவை மூன்று. ஆதலின், இவர்தம் பாக்கள் புனலாட்டு, காதற்காட்சிகள், இன்ன பிறவற்றை அறியப் பெரிதும் துணைபுரிகின்றன. ஒவ்வொரு வையைப் பாடலிலும் இப் புலவர் தொடக்கத்தே மழை பொழிவதைப் புனைந்து கூறியுள்ளார். மேகங்கள் கடல் நீரை முகந்து மலை சிதறும்

படி பெருமழை பெய்கின்றன. வையைப் பெருக்கு மிகுகின்றது. மலை வாழினங்கள் வருந்துகின்றன. மயில்கள் அகவுகின்றன. மாலைமுரசு கழுவப் பெறுகின்றது. பல அருவிகள் குன்றுகளிலிருந்து குதித்தோடுகின்றன. புலியொடு இகலிப் பொருத களிற்றின் குருதி தோய்ந்த செங்கோட்டினை மழை, வெண்கோடாக்குகின்றது.

புலவர் பாடிய பாக்கள் பொய்க்காமல் வையைநீர் வயலகத்துப் பாய்ந்து உழவு முதலிய தொழில் வளம் பெருக்கும். வையையாறு புன்னை, சுரபுன்னை, சண்பகம், இலவம், கூவிளை, வேங்கை, செவ்வலரி, காந்தள், செங்காந்தள், நீலம் முதலிய பூக்களை அடித்துச் செல்வதால், 'பூமலி வையை' எனப் பாராட்டுப் பெற்றுள்ளது, 'புனல்யாறு அன்று பூவாறு' என இளங்கோவடிகள் வையையைப் பாராட்டுவதும் ஈண்டுக் கருத்தத்தகும். அம் மலர்களையெல்லாம் அலைகள் அலைத்துக் கொண்டு வந்து திருமருத முன்றுறைக்கண்ணே சேர்கின்றன. அத் துறையைப் பன்னிற மலர்களைக் கொணர்ந்து குவிக்கும் பூமண்டபம் என்பதா? வையை மடந்தையின் துகில் என்பதா? கட்பருகும் நிலமகளது மிடறென்பதா? என வியந்து பாடுகின்ருர் அந்துவனர்.

தன் பாங்கருள்ள வயலிலும் காடுகளிலுமுள்ள பல்வேறு பூக்களையும் தேனையும் பழங்களையும் வையை விரைந்தடித்துச் செல்கிறது.ஆதலாற்ருன் வையை மலர் நாற்றம், வெங்கார் நாற்றம், கனி நாற்றம் ஆகிய இம்மணங்களைக் கலந்து பிறர்க்கு நல்குகின்றது. நறுமணப் பொழில்களும் வையையின் மணத்தை விழைகின்றன. திருப்பரங்குன்றத்து ஓடிவரும் அருவி தாலாட்ட, தவழ்ந்துவரும் மென்காற்று காதலுணர்ச்சியைத் தூண்டுகிறது. மக்கள் இன்பம் நுகர்கின்றனர் என்ற செய்தியை மதுரை மக்கட்கு அறிவிப்பது போல, வையைப் புனல் பரந்தது. அலைகள் கரைகளை மோதி உடைக்கின்றன. வெள்ளப் பாழினின்றும் உய்யும்பொருட்டு அண்மையிலுள்ள ஊரார்க்கு வையைப் பெருக்கைப் பறையறைந்து உணர்த்துகின்றனர்.

மதகின் வழி ஓடிவரும் ஆற்றின் அரவத்தைக் கேட்டு மதுரை மக்கள் புனலாட்டு விழாவுக்கு விரைகின்றனர். இவ் விரைவு காரணமாகச் சிலர் தேரெனக் கருதித் திண்டேர்ப் புரவியை வங்கத்தில் (பள்ளி ஓட வையம்) பூட்டி ஏறினர். வங்கமெனக் கருதி வங்கப் பாண்டிகளைச் சிலர் தேரிற் பூட்டி இவர்ந்தனர். குதிரைகளுக்குப் போடும் அணிகலன்களை யானைகளுக்குப் போட்டு அழகுறுத்தினர். மறதியால் யானைகளை ஒப்பனை செய்யாது வறிதே நடத்தினர். மகளிர் கோதையை மைந்தர் புனைந்தனர். மைந்தர் தாரினை மகளிர் அணிந்தனர். இங்ஙனம் முறை மாறி அணிந்த மக்கள் விரைந்தோடி விழாக்காணத் தக்க இடம் பிடித்தனர்.

உவமப் புனைவு

வளர்பிறைக் காலத்துத் திங்களின் நிலவு நாளும் மிகுந்து யாண்டும் பரவிப் பயன் விளைவிப்பது போல, வையையும் நீரை எங்கும் பரப்பிப் பயன் விளைத்தது. ஆனால், தேய் பிறைத் திங்கள் போல வையை கோடையில் வறப்பினும், ஒருகாலும் இருள்மதி (அமாவாசை) போல முற்றும் நீர் வற்றாது.

வையை பிறந்தகமாகிய மலையை விட்டு நீங்கிக் கடலாகிய தலைவனில்லம் தனியே செல்கின்றது. இதற்கு மறைவிற்புணர்ந்த மைந்தரும் மகளிரும் காமச்சிறப்புடைய களவொழுக்கத்தைக் கைவிட்டு, அத்துணைச் சிறப்பில்லாத கற்பொழுக்கத்தைப் பின்பற்றுவதனை உவமித்துள்ளார்.

மதுரை வாழ்நர் வையையைக் கடலிற் கலக்கலாகாது என வேண்டுகின்றனர். அவர்கள் அவ் யாற்றில் நீராடி அதன் போக்கைத் தடை செய்கின்றனர். அது தலைவியை உடன் அழைத்துக் கொண்டு படையொடுஞ் சென்ற தலைவனைச் சுரத்திடைக் கண்டு அவளுடைய சுற்றத்தார் மறித்துப் பொருதலை ஒத்துள்ளது.

புறத்திணை பற்றிய வையையைப் புனைந்துரைக்கும் போது, அகத்திணை பற்றிய உவமைகளைக் கூறுதலை அந்துவனார்

பாடலில் காணலாம். இங்ஙனமே நெய்தற் கலியில் அகத் திணை பற்றிப் புனையும்போது புறத்திணை பற்றிய உவமை கூறுவர்.[15]

தேர், யானை, குதிரை முதலியவற்றின் மீது இவர்ந்து வையைக்குப் புனலாடச் சென்றவர்கள் மலர்கள், அழல், நறும்புகை, ஆராதனைப் பொருள்கள் முதலியவற்றைக் கொண்டு சென்றனர். நெட்டியாலாய ஈட்டி, வாள் முதலிய வற்றையும் சுழற்றி விளையாடுதற்காக எடுத்துச் சென்றனர். புனலாடுங்காலை மூங்கிற் கழாயால் செந்நற நீரைப் பிறர் மீது வீசினுர் சிலர். தம் மார்பிலுள்ள மாலையை ஒருவர்மீது ஒருவராக மாறி எறிந்தனர் சிலர். அந்துவனுர்க்கு இக்காட்சி போர்க்களக் காட்சி போலவும், கொம்பு வட்டில் போன்ற புனலாட்டுக் கருவிகள் போர்க்கருவிகள் போலவும் காட்சி யளிக்கின்றன.

இளைஞரும் முதியரும் விழாவயருங்கால், சந்தனக் குழம்பையும் நறுநெய்யையும் மணமலர்களையும் ஆற்றிவிட்டு அதனைக் கமழச் செய்தனர். கலங்கிய இந் நறுநீரைக் கண்டு பார்ப்பனர்கள் நீராடாமலே அகத்திற்கு மீண்டனர். மைந்தர் தம் தாரினையும், மடந்தையர் தம் கோதையினையும், மற்றும் காய், கனி, கிழங்கு, வேர், தூர் முதலியவற்றையும் வையை அடித்துச் செல்கின்றது. இழிசினர் வையை ஆற்றில் கள்ளை ஊற்றினர். அதனுல் வையை தன் எழில் இழந்து நிறம் மாறியது. இதனைக் கண்ட உயர்ந்தோர் புனலாட்டில் கலந்து கொள்ளாமல் வீடு திரும்பினர். விண்ணக ஊர்தி யினையும் தன்னகத்தே காட்டும் பெற்றியதாய், வையை நீர், வேனிற் காலத்திலே பளிங்கு போன்றிருந்தது. ஆனுல், கார் காலத்திலே கலங்கிச் சேருகி விடுகின்றது.

வையை விழாவுக்குச் செல்லும் தம் கணவன்மாரையும் அவ்விழாவிற்குத் தக்க ஒப்பனை செய்து கொள்ளுமாறு வேண் டினர். புனல் விழாக்கோலம் பூண்டு அக்காதலர்கள் வையை

16. நெய்தற்கலி 4: 17, 18; 24; 24, 25 26; 59, 60.

நண்ணியதும் நீராடிக் களித்தனர். அவர்கள் தம் தாரும் மாலையும் அணிகளும் மயங்கின. அன்பினுலொத்த அவர்களின் உள்ளம் நிறையை உடைத்தாற் போல, மலையை யொத்த கரைகளை வையை உடைத்தது.

அகத்திணை ஓவியம்

வையைப் பாடல்களில் அந்துவனுர் சில அகத்திணை ஓவியங்களைத் திட்டியுள்ளார். தலைமகனெருவன் இற்பரத் தையொடு வையைக்கண் புனலாடினுன். ஆடியமை அறிந்து அவனுடைய காதற்பரத்தை ஊடினுள். தலைவன் ஊடலைத் தணிப்பான் அவட்குக் கையுறையாகத் தளிரை நல்கினன். காதற்பரத்தை, 'இஃது எனக்காகக் கொய்யப்பட்டதன்று; நீ புதிதாக விரும்பும் ஒருத்திக்காகக் கொய்யப்பட்டது; இப் பொழுது என்பால் உனக்கு உண்மை அன்பில்லை. முன்பெல் லாம் எனக்காகக்கொய்த தளிர் உடனே விரைந்து கொணரப் பட்டமையின் துவளாது பசுமையாகவே இருந்தது. ஆனுல், ஈதோ வாடி வதங்கி உள்ளது. இதனை முதலில் ஒருத்திக்குக் கொடுத்து, அவள் மறுத்ததும் பின் இங்குக் கொணர்ந்துள் ளாய். அது தான் குழையின் வாட்டத்துக்குக் காரணம்' எனக் கூறி அதனை ஏற்க மறுத்தனள். 'வையையில் வெள்ளம் மிகுந்த தால் தெப்பம் ஏறிவர நேர்ந்தமையின் காலந் தாழ்த்தது; அதுவே தளிர் வாட்டத்திற்குக் காரணம்; திருப்பரங்குன்றத் தின்மீது ஆணை' என்று தலைவன் உறுதி கூறினுன்.

பின்னர் வையைப் பெருக்கு மிக அழகிது என மொழிந் தான். இதற்கு இற்பரத்தையது காமப்பெருக்கம் வையைப் பெருக்கத்தை நிகர்க்கும் எனப் புலப்படுத்தினுன் தலைவன் எனத் தவருகக் கருதினுள் காதற்பரத்தை. உடனே அவள், 'ஆமாம்! காதற் காமம் எஞ்ஞான்றும் ஒரு பெற்றித்தாய் நிற்குமா? சிலர் மாட்டு விரைவிற் சுருங்கி சிலர் மாட்டு விரைவிற் பெருகும். அதனுல் வையை காமப் பெருக்கை ஒப்பது என நீ கூறியது பொருத்தந்தான். வையைக்கண் கார் காலத்தில் வெள்ளம் பெருகி வேனில் அருகுவது போலவே உன் காதலும் உள்ளது. புனல்வழி ஓடும் புணை

போலக் கவர்கின்ற மகளிர்க்கெல்லாம் புணையாக நின் மார்பினை நல்குவை. மடையடைத்தக்கண்ணும் வையையில் நீர் கசிவது போல, இற்பரத்தையின் இடர் நீங்க நீ உடனிருந்த காலத்தும் அவர் கண்ணீர் கசிந்து ஊடுவர். நீ என்னுடன் தங்கின் அவர் நெஞ்சம் கனல்வர் ஆகலான் அவர் மாட்டே விரைந்தேகி உறைக!' எனப் புலந்து கூறினாள்.

தலைவன், 'நான் தடாகத்தில் குளிக்கும்போது கரையில் நின்ற ஓர் இளம்பெண் இறங்கி மூழ்கி அலையிடைப்பட்டுப்பின் எழுந்து மயங்கி என்மேல் விழுந்தாள். தூக்கிக் கரையேற்று தற்கு முன்னே அவளே எழுந்துவிட்டாள். அவள் காமப் பருவத்தினள் அல்லள். அவளையன்றி என்னைத் தீண்டியவர் யார்? நான் ஆடிய ஆறு யாது?' எனத் தலைமகன் வினவினன். காதற்பரத்தை, 'அதுவா? இவ்வையை ஆறுதான்' எனச் செப்பினள். 'நானோ தடாகத்தில் குளித்தேன் என்றேன். நீயோ வையை யாற்றில் ஆடினேன் என்றாய். எத்துணை முரண்? பரங்குன்றின் தலைதொட்டு ஆணையிடுகிறேன்; என்னை நம்பு' என்று பணிந்து மொழிந்தான் தலைமகன்.

முதுபெண்டிர் இடையிட்டுக் காதற்பரத்தையை நோக்கி 'ஊடல்நீங்கிப் புனலாடுக; அளவிறந்து துனிகொள்ளின் காம இன்பம் கெடும். மேலும் தலைவன் வெறுத்துப் பிரிந்து செல்வான். பின் இரவில் அவனைத் தேடிச் செல்ல நேரும். அங்ஙனம் இரவில் சேறல் தகாது' என்று கழற, அப்பரத்தை ஊடல் தவிர்ந்து தன் காதலனுடன் கள்ளுண்டு புனலாடி அளவளாவி மகிழ்ந்தனள்.

தலைவன் காதற் பரத்தையின் ஊடல் நீக்கிப் புணர்ந்தான் என்ற செய்தி கேட்டுத் தலைவி வெகுண்டாள். விறலியை வாயிலாக அனுப்பி, அவள் சீற்றத்தைத் தணிக்க முயன்றான் தலைவன். 'வையையே! நின்னிடத்துப் புனலாடுவார் நெஞ்சத்து இக் காமத்தை உண்டாக்கும் தன்மை எஞ்ஞான்றும் வற்றா தொழிக' எனத் தலைவி வாழ்த்தியவளாய் வாயில் மறுத்தனள்.

புனலாடுங்காலை ஒருத்தி காதுகளில் நீல மலரணிந்து கொண்டு வேறொருத்தியை நோக்கினாள். அவள் அசோகந் தளிரைத் தன் காதிற் செருகியிருந்தமையின் இவள் காதில் அணிந்திருந்த நீலமலர் அவளணிந்த அசோகந் தளி ரொளியில் இளவெயிலைப் போன்றிருந்தது. அப்பொழுது நீலமலரை இருகாதிலும் செருகியிருந்தாளைக் கண்டு, இப்பொழுது நான்கு கண்களாயினள் எனக் கூறிக் கொற்றவைக்கு ஒப்பாகுமாறு நுதல் விழிபோல நெற்றியில் திலகமிட்டாள் அத்தளிரணிந்த நங்கை.

ஓர் இளைஞன் வையையுள் வாழைத் தண்டு பற்றி நீந்திச் சென்றபோது, ஒரு பெண்ணைக் கண்டு, உடனே கருத்திழந் தான். அதனால் சோர்வுற்றிருந்த அவனால் அப்பெண் நிற்குமிடத்து நீந்திச் செல்ல இயலவில்லை. யாறு நீரோடும் வழி அவனை ஈர்த்துச் சென்றது. இதனைக் கண்டு அவனிடம் மனம் பறிகொடுத்த அப்பெண் ஆயத்தின் நீங்கி அவனைத் தொடர்ந்தாள். தொடர்ந்ததைக் கண்ட தாய் அக்காதலை அறியாது மகளைத் தடுத்துத் தன்னுடன் இருக்கப் பணித்தது அவளைப் பெரிதும் கவற்றியது.

நகரமாந்தர், மாலையும் கண்ணியும் அணிவகைகளும் புனைந்து வையை விழாவுக்குச் சென்றனர். அப்பொழுது சிலர் பிறர் தாங்கிய அணிகலன்களை நோக்கிக் கொண்டே வந்தனர். அப்பொழுது பரத்தையின் கையிலே தம் தலைவி யின் வளைகளும், மார்பிலே ஆரமும் பொலியக் கண்டு, தோழியர் அவளை, 'இவள் நம் தலைவியின் மாற்றாள்' என எள்ளி நகையாடினர். பரத்தையர்க்கு அவற்றைப் பரிசாக வழங்கிய தலைவனும் அப்பொழுது தலைவியுடன் இருந்தான். தோழியர் கண்டுபிடித்து விட்டதை யறிந்து தன்னிலை யாதாகுமோவென அஞ்சி நாணி நின்றான் தலைவன். அவ் வாயத்தார் ஆரத்தையும் வளையையும் பரத்தைக்கு நல்கிய இக் கள்வனின் சமழ்ப்பு முகத்தைப் பாருங்கள் எனச் சுட்டிக் காட்டினர். இதனைக் கேட்ட பரத்தை, வையை கடலிற் கலக்கச் செல்வது போல மகளிர் குழாமாய காட்டுக்குள்ளே மிக விரைந்து ஓடி ஒளிந்தனள்.

ஆயத்தாரும் அவளை விட்டபாடில்லை; தொடர்ந்தனர். பின்னர் பரத்தை மனந்தேறி, அவர்களை நோக்கி, 'என்னைத் தொடரக் காரணம் யாது?' எனத் துணிந்து வினவினள். தலைவி இந்நிலையில் மனம் குழம்பித் திகைத்து வறிதேநின்ருள். பரத்தையை நோக்கிக், 'காமத்தைப் பொய்யொடுங் கூட்டி மயக்கும் விலைக்கணிகையே! ஒருவற்கு உரிமையின்றி வாழும் பொதுமகளே! ஐம்புல உணர்ச்சியைப் பெறும் காமுகராய பன்றிகள் நுகரும் தொட்டியே! வனப்பாகிய வயலிலே கள்ளாகிய நீரை விட்டுக் காமமாகிய கலப்பையால் எம்எருது மடிகொண்டிராது உழுகின்ற பழைய சாலே! பொருள்தரு வாரைப் புறத்தே விடாது, கண்ணே கயிருகத் தோளாகிய தறியோடு பிணைத்துக் காம இன்பம் மிக, யாழிசை எழுப்பி நுகரச்செய்து அவ்வளவன்றி எம் அணிகலன்களாலும்ஒப்பனை செய்து கொண்டு அழகையும் நுகரச்செய்யும் இன்பத்துறைப் பொதுவியே! காணு தொழிந்த எருதைத் தேடிப் பிடித்துத் தமக்குரிமையாக்கிக் கொள்வதல்லது தொழில் செய்யாது ஓடவிடுதல், வேளாளர் கடனன்று (தலைவனைப் பரத்தைக் குரியனுக விடோம்). தலைவன் தந்த ஆரத்தை நீ அணிய நின் மார்பும் தலைவியின் மார்பும் ஒத்தனவாகுமோ? என்று ஆயத்துள் ஒருத்தி பலவாருக ஏசினுள். அப்பரத்தை தலைவி பால் வன்சொல் கூறத் தொடங்கினள்.

உடனே முதுமகளிர் சிலர், 'சிந்திக்கப் பிணி தீரும் கடி பினுளைச் சினவற்க, நின் தீவினை நீங்க அவளை வழிபட வருக' என்றனர். அதற்குப் பரத்தை, பகைவரைப் பகைவர் தொழு தல் இழிவாதல் போல மாற்ருளை மாற்ருள் வணங்குதலும் பீடன்று என்றனள்.

தலைவி குறுக்கிட்டு, எந்தையீந்த இவ்வளையும் ஆரமும் களவின் வழி நினக்கு வரவில்லை எனின், நினக்குத் தந்தானை எனக்குக்காட்டி நின் பெருமையைப் பேசிக்கொள் என்றனள். தலைவியைப் பார்த்து, 'நின் அன்பிற்குரிய தலைவன் எனக்கும் அன்பன் ஆதலின், அவ்வணிகலன்களை மாலையணிய விலையாக (புணர்வின்பத்துக்காகத்) தந்தான். அவை மட்டுமன்றி நாளை நின் காலிலுள்ள சிலம்புகளையும் கழற்றித் தருவான். அதனுல்

நான் கள்வியல்லேன்; அவன் கள்வன். அவனுடன் சண்டையிடு' எனச் சூடாக மாற்றமிறுத்தாள் பரத்தை. அவண் குழுமியிருந்த மகளிர் பரத்தையிடம் 'நும்மை விழையும் காமுகர் தரும் பொருள் நாடிய நும்முடையனவே' எனக்கூறி அமைதிப்படுத்தினர்.

மேலும் அவர்கள் தலைவியை நோக்கிச், 'சேக்கை இனிய பரத்தையர்பாற் செல்வானைத் தடுத்து நிறுத்தலும், சென்றவனைத் தள்ளி வைத்து வாழ்தலும் மனைவிக்கு இயலுமோ? கற்பு மங்கையர் சால்பு மிக்கவர்; தம்மை இகழினும் கொழுநரை ஏத்தி இறைஞ்சும் இயல்பினர்; விலைமகளை விழைந்து தோய்ந்த கொண்கனை இனித் தழுவேம் என்றிருத்தல் யார்க்கும் கைகூடுவதன்று. ஆகலின் சினவாதே. காமம் தகுதியான இடத்தில் நிற்குமோ?' என அறிவுரை கூறி அமைதியுறச் செய்தனர்.

இவ்வாறு வையை துனிக்கும் புலவிக்கும் காரணமாயிற்று. பின் புலவி தீர்ந்து ஆடவரும் பெண்டிரும் கட்பருகிக் காதல் மீக்கூர்ந்து புனலாடி மகிழ்ந்தனர். பிரிந்தவரும் ஒன்று சேர வையை துணை புரிந்தது.

தைந்நீராடல்

முன்பனிப் பருவத்தே மார்கழி மாதத்தில் திங்கள் மறுவொடு நிறைந்த திருவாதிரை நாளின்கண் திருவாதிரைக்குத் தெய்வமாகிய இறைவனுக்கு ஆகமங்களை உணர்ந்த பூசகர் விழாத் தொடங்கினர். புரிநூலந்தணர் பொலங்கலம் ஏந்தினர். முதுபார்ப்பன மகளிர் நோன்பியற்றும் முறையைச் சிறுமியர்க்குக் கற்பித்தனர். உலகம் மழை பொழிந்து வளஞ்சுரக்க என இறைவனை வேண்டி, விடியற் காலத்தே நீராடினர். நீராடிய பின்றை அந்தணர் ஓம்பிய வேள்வியினருகிற் சென்று, தம் ஈர ஆடைகளை உலர்த்திக் குளிர் காய்ந்தனர். அவ்வந்தணர் வேள்வித்தீயிற் கொடுத்த அவி வையைக்கு வாய்த்தது. கன்னி மகளிர் ஐம்புலன்களை அடக்கித் தவத்தைப் பன்முறை இயற்றியதால், தம் தாய்

மார்க்கருகே நின்று தைந் நீராடலாகிய தவத்தை எய்தினர். இவ்வகையில் கன்னியர் தைந்நீராடலை அந்துவனார் புனைந்துள்ளார்,

இயற்கைப் புனைவுகள்

சில இயற்கைப் புனைவுகளும் அந்துவனார் பாடலை அணி செய்கின்றன. மகளிர் கைபோல் குவிந்த காந்தளரும்புகளும், அரவு வெகுண்டு படம் எடுத்தாற் போலவும் குடைவிரிந்தாற் போலவும் உள்ள காந்தட் பூக்களும், சுனையினின்று கழிந்து கீழ் விழும் மலர்களும், மரங்களிலிருந்து உதிரும் பூக்களும், புதர்களில் தோன்றிய போதுகளும் ஆகிய இவற்றை அருவிகள் சொரிந்தன. பூக்களோடு சுருங்கையின் நடுவழியாக நீரைக் கடிமதில் சொரியும் பொழுது அப்புனல் களிறுகள் கையைத் தூக்கி விசிறும் நீரை ஒத்திருந்தது. தன்னைக் கவர்ந்த ஒரு மலரில் தும்பி தங்கியிருந்தது. அதனைக் கொய் தவளை வெகுண்ட நெஞ்சமோடு தாக்கிச் சினந்தணியாது, மீண்டும் தாக்க ஒலித்து வரும் அத்தும்பியின் கடுஞ்சினத்தைப் பட்டாங்கு பாடியுள்ளார்.

வையையை வரம் வேண்டுதல்

வையை சென்ற மாந்தர் ஆராதனைப் பொருள்களை வழங்கி வரம் வேண்டுகின்றனர். கழுத்திற் கைபோட்டுக் கொண்டு இன்பமாக இருப்பதினின்றும் பிரியாது காதலரைத் தழுவும் வீறு பெறுக என வேண்டுவர் சிலர். மலரில் விழும் வண்டு தேன் உண்டதும் அதனை விட்டொருவுதல் போலாது யாம் மணந்த கணவர் தணவாது நின்று எம்மைப் புரப்பாராக என இரப்பர் சிலர். எம் கொழுநரும் யாமும் கிழவர் கிழவியர் ஆகாமல் நிலைத்த இளமை பெற்றுச் செல்வத்தோடும் சுற்றத்தோடும் பொலிக எனப் பாடுகிடப்பார் சிலர்.

'கழுத்தமை கைவாங்காக் காதலர்ப் புல்ல
விழுத்தகை பெறுகென வேண்டுதும் என்மாரும்
பூவீழ் அரியிற் புலம்பப் போகாது

யாம் வீழ்வார் ஏமம் எய்துக என்மாரும்
கிழவர் கிழவியர் என்னுதேழ் காறும்
மழவீன்று மல்லற்கேண் மன்னுக என்மாரும்.'

(பரி : 11 : 116 – 121)

இவ்வடிகள் இளம் பருவத்தினரின் காதல் வரத்தை அவர்கள் கருதியாங்கே உணர்த்துதல் காணலாம்.

'பரிபாடலாற் புகழ்பெற்ற வையையே! முற்பிறப்பிற் செய்த தவப்பயனுல் இப்பிறப்பில் இத் தைந் நீராடலை எய்தினேம்; அதனை நின் நீர் நிறைவின் கண்ணே மறுபிறப்பிலும் எய்துவோமாக!' எனக் கன்னியர் அவ்வாற்றை விளித்து வேண்டுதலையும் அந்துவனுர் பாடியுள்ளார்.

தமிழ் வையை

இப்புலவர் வையையைத் 'தமிழ் வையைத் தண்ணம் புனல்' எனச் சிறப்பித்துள்ளார்.[17] இங்ஙனம் தமிழோடு தொடர்புபடுத்தி வையையைச் சிறப்பித்த தனிப் புலவர் அந்துவனுரே.

குன்றம் பூதனுர் காதற் காமம்[18] எனவொரு புதுச் சொல்லை உருவாக்கியது போன்று, அந்துவனுர் 'காதலங் காமம்'[19] என ஒரு சொல்லைப் படைத்துள்ளார். இவை யெல்லாம் மொழியாக்கத்திற்குத் துணை புரிவனவாகும்.

அகத்திணை நிகழ்ச்சிகளைச் சுவைபடக் கூறுவனவாய், உவமை நலம் மிக்கனவாய், பண்டைச் செய்திகளை அறிவிப்பனவாய், சொல்லாக்கம் உடையனவாய். தமிழ்ப் பற்று ஊட்டுவனவாய் விளங்குதலின், நல்லந்துவனுர் பாடல்கள் நவிலுறும் நூனயம் பயக்கும் என்பதில் ஐயமில்லை.

17. பரி. 6 : 60.
18. பரி. 9 : 14.
19. பரி. 6 : 71.

2. இளம்பெருவழுதியார்

பாண்டிய மரபினர்

திருமாலைப் பாடிய நான்கு புலவர்களுள் இளம்பெரு வழுதியார் ஒருவராவார். இவர் 15ஆம் பரிபாடலைப் பாடியுள்ளார். இவர் பெயரிற் காணப் பெறும் 'வழுதியார்' எனும் சொல்லே பாண்டிய மரபினைச் சார்ந்தவர் என்பதைப் புலப்படுக்கும். இளமையிலேயே பெருமையுற்று விளங்கியமையின், இளம்பெருவழுதியார் எனப் பெயர் பெற்ருர் போலும். 'சிறுமுதுக்குறைவி' எனக் கண்ணகியும், 'சிறிய பெருந்தகையார்' எனத் திருஞான சம்பந்தரும் குறிப்பிடப் பட்டிருத்தலை ஒப்பு நோக்குக. ஆகவே, இஃது அவர்தம் இயற்பெயராகத் தெரியவில்லை. புறநானூற்றில் 182 ஆம் பாடலைப் பாடியவர் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி. இவ் வழுதியும் பரிபாடல் (15) பாடிய வழுதியும் ஒருவரா? பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை இவ்விருவரும் ஒருவரல்லர் என்பர். மேலும் புறம் 182ஆம் பாட்டில் இந்திரர் என்னும் பன்மைச் சொல் ஆட்சி பெறுதலானும், அப்பாட்டு சீரிய அறம் உரைத்தலானும், இளம் பெருவழுதியார், சமணராதல் வேண்டும் என்றும் உரைப்பர்.[20] இந்து மதத்தின் விழுத் தெய்வங்களுள் இந்திரனும் ஒன்று. இந்து மதப் புராணங்கள் இந்திரர் பலர் உண்மையைத் தெரிவிக்கின்றன. சைவ சமய குரவருள் ஒருவரான திருநாவுக்கரசர் கங்கை மணல் அணுக்களினும் தேவர்கள் பலராவர் எனப் புகன்றுள்ளார்.[21] தேவர்கள் எய்திய அமிழ்தினையே 'இந்திரர் அமிழ்தம்' எனப் புறநானூறு புகல்வதாகக் கொள்ளலாம். ஒவ்வொரு சமயத்துக்கும் தனக்கென உரிய நீதிகளுண்டு. நீதிகளைக் கூறுவதால் மட்டும் ஒரு சமயத்தைச் சார்ந்ததாகக் கொள்ளவியலாது. எனவே பேராசிரியர் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதியைச் சமணர் எனக் கூறும் கருத்து பொருந்தாது.

---

20. History of Tamil Language and Literature, p. 29.
21. அப்பர் தேவாரம், பக். 364 (சமாசப் பதிப்பு)

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனும் ஒருவரேயாவர். குளமுற்றத்துத் துஞ்சிய எனும் அடைமொழி பெற்றதால் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கிள்ளிவளவனினும் வேருகார். இதனை ஒப்பவே, கடலுண் மாய்ந்த இளம் பெருவழுதியும் இளம்பெருவழுதியின் வேறுபட்டவர் ஆகார். ஒரு மன்னன் இறந்த இடத்தை மாய்ந்த பின்னர் அவன் பெயருக்கு முன் இயைத்து வழங்குதல் சங்க கால வழக்கம். ஆகவே இருவழுதியும் ஒருவராதல் வேண்டும். டாக்டர் உ. வே. சா. அவர்களும் பரிபாடல் பாடினேர் வரலாற்றில், 'கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி பாடிய 'உண்டாலம்ம' என்னும் செய்யுளும் இப் பாட்டும் பரோபகாரச் செய்தி முதலிய கருத்துகளில் ஒத்திருத்தலானும், பெயரொப்புமை யானும் அவரும் இவரும் ஒருவர் என்றே கொள்ளுதல் முறை யாகும்' எனக் கூறியுள்ளார்.

வழுதியர் மூவரும் ஒருவரா ?

நற்றிணை 55. 56 ஆம் பாடல்கள் பாடியவர் பெருவழுதி யாவர். இப் பெருவழுதி, இளம்பெருவழுதி, கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி ஆகிய மூவரும் ஒருவரா ? 'இளம் எனும் அடை பெருவழுதிக்கின்மையின், பெருவழுதியும் இளம் பெருவழுதியும் வேருவர் என்பர் டாக்டர் உ. வே. சா. ஆனல் நற்றிணைக்கு உரை வரைந்த பின்னத்தூர் அ. நாராயண சாமி ஐயரவர்கள் தாம் வரைந்த நற்றிணைப் புலவர்கள் வரலாற்றில் முற்கூறிய மூவரும் ஒருவரே என முடிப்பர். அவர் முடிபை ஏற்பின் இளம்பெருவழுதி, புறம் 182 ; நற்றிணை 55, 56; பரிபாடல் 15 ஆகிய நான்கு பாடல் களுக்கும் ஆசிரியராவர். இப்புலவர் அகமும் புறமுமாகிய இருதிணையும் பாடியவர் என்னலாம். கடலுண் மாய்ந்த எனும் அடைமொழியால் கடலில் மரக்கலத்திற் சென்ற போது இளம்பெருவழுதிக்குச் சாக்காடு நேர்ந்திருக்கலாம் என்பர் கல்வெட்டறிஞர் சதாசிவ பண்டாரத்தார்.[22]

22. பாண்டியர் வரலாறு, பக். 12.

சோலைமலைத் திருமாலைப் பேரார்வங் கொண்டு பாடியிருத்தலின், இப்புலவர் திருமாலிய மதத்தினர் எனக் கருதப் பெறுவர். இவர் பாடற்குப் பண்வகுத்தவர் மருத்துவன் நல்லச்சுதனாராவர்.

சோலைமலைச் சிறப்பு

இவர்தம் பாடல் திருமாலிருஞ் சோலைமலையை நன்கு புனைவதாகவும், ஆங்கெழுந்தருளியுள்ள திருமாலின் சீர்த்தி பாடுவதாகவும் அமைந்துள்ளது. பாடற்கரிய புகழொடு உலகிற் பிறங்கும் மலைகள் பல உள. அவற்றுள் உணவுப் பொருள் நல்கிப் பசித்துன்பந் துடைத்துப் பயன்பெற நின்றொளிரும் குன்றுகள் சில. அச்சிலவினும் தெய்வம் விழையும் மலரையுடைய தாடகங்களுடனே மேகத்தைத் தழுவும் கோட்டினையுடைய குலவரைகள் சிறந்தன. அக்குல வரைகள் சிலவற்றுள்ளும் கண்ணனும் பலதேவனும் ஒருங்குறையும் திருமாலிருஞ் சோலைமலையே சிறந்தது. இவ்வாறு உலக மலைகளைப் படிப்படியாக உயர்த்தி இச்சோலைமலையைத் தனக்குவமையில தாக்குவர்.

திருமாலும் பலதேவனும்

பரிபாடற் காலத்துத் திருமால் கண்ணனாகவும் பலதேவனாகவும் சோலைமலையில் வழிபடப்பட்ட ஓர் அரியசெய்தியை இவர் பாடல் நமக்கு அறிவுறுத்துகிறது. அவ்விரு தெய்வங்களும் நிறத்தால் கடலுங்கானலும் போல நீலமும் வெண்மையுமாக வேறுபட்டிருப்பினும், சொல்லும் பொருளும் போல ஒன்றுபட்டுப் புரத்தற்றொழில் ஒன்றனையே புரிகின்றன. கமழ்துழாய் மாலையணிந்த திருமாலின் அருளின்றி வீறுபெறு துறக்கத்தை யாரும் எளிதிற் பெறவியலாது என வற்புறுத்திக் கூறுகிறார் இளம் பெருவழுதியார். அத் துறக்கவின்பத்தை எளிதிற் பெற வேண்டுமாயின், திருமாலிருங் குன்றத்தைப் போற்றி இறைஞ்சுவதே சிறந்த நெறியாம் என்பது அவர் கருத்து. திருமாலிருஞ் சோலைமலை, அதன்கண் அமைந்த

சுனை ஆகியவற்றைப் புனைவதன்கண்ணும் அவர்தம் இறை யார்வத்தினைக் காணலாம். சுனையெலாம் நீலம் மலர, சுனை சூழ் சினையெலாம் அசோகும் வேங்கையும் மலரத் தோன்றும் அம்மலைக் காட்சி மணிமுடியுடன் பொலம்பூ வாடையணிந்த மாயோனை ஒத்துள்ளது, அதனால்தான் மலையும் அவர்க்கு வழிபடு பொருளாகின்றது. அம்மலை அனைத்துத் துன்பங் களையும் மாய்க்கும் மருந்து எனப் பிறரையும் கருதுமாறு வேண்டுவர். திருமாலை அழகர்மலை சென்று நேரே கண்டு வழிபட முடியாதாரைத் தையலவரொடும் தந்தாரவ ரொடும் கைம்மகவோடும் காதலவரொடும் தெய்வம் பேணி அத்திசை நோக்கியேனும் இறைஞ்சுமாறு விழைகின்றார். இப்புலவர் அருளிய 'நினைமின் மாந்தீர்!'; 'சென்று தொழு கல்லீர் கண்டு பணிமின்மே', 'தெய்வம் பேணித் திசை தொழுதனிர் சென்மின்' எனும் தொடர்கள் திருமால்பால் கொண்டுள்ள அடங்காஆர்வத்தினையும், தம்மைப் போன்றே பிறரும் விழுமிய துறக்கவின்பந் துய்க்க வேண்டும் என்னும் விழைவினையும் காட்டவல்லவாம்.

வழுதியும் ஆழ்வாரும்

நாலாயிரப் பிரபந்தத்திலுள்ள ஆழ்வார்தம் தெய்வப் பாசுரங்கள் பலவற்றுக்கு இப் பரிபாடல் அடிப்படை என்ன லாம். வரும் பிறவியிலும் இவ்விருங்குன்றத்தடியின்கண் உறைதல் வாய்ப்பதாக எனக் கண்ணன் பலதேவன் இரு வரையும் தொழுது பரவிப் பாடலை முடிக்கின்றார் இளம்பெரு வழுதியார்.

'இருங் குன்றத் தடியுரை இயைகெனப்
பெரும் பெயர் இருவரைப் பரவுதுந் தொழுதே.'

இக்கருத்தின் சாயலைத் திருவேங்கடமலையில் மீனக, குருகாக, மரமாக, அல்லது ஏதேனுமாகப் பிறந்து அண்மையிலே இருந்து திருமாலைக் கண்டு களிக்கவேண்டும் என்று குலசேக ராழ்வார் பாடிய பெருமாள் திருமொழியிற் காணலாம்.[23]

23. நாலாயிரம் : 677, 678, 680. 686.

பலதேவ வழிபாடு—மறைவு

பரிபாடலைப் போலவே புறநானூற்று 58 ஆம் பாடலும் கண்ணனையும் (மாயோன்), பலதேவனையும் (வாலியோன்) ஒரு தெய்வமாகவே கூறுகிறது. இதனால் சங்ககாலத்தே இவ்விரு கடவுளையும் ஒன்றாகவே கருதி வழிபட்டனர் என்பது பெறப்படும்.

சங்க காலத்துக்குப் பிந்திய நாலாயிரம் பாடிய ஆழ்வார்கள் சோலைமலையைப் பற்றிப் பாடிய பாசுரங்களில் திருமாலைப் பாடியுள்ளனரேயன்றிப் பலதேவனைப் பாடிற்றிலர். எனவே சங்க காலத்துக்குப் பின் இரு கடவுளரும் பிரிக்கப்பட்டுப் பலதேவ வழிபாடு வழக்கு வீழ்ந்திருத்தல் வேண்டும். கண்ணன் பலதேவன் ஆகிய இருவரையும் ஒரு சேரக்கூறும் இப்பாடல் பரிபாடலின் கால ஆராய்ச்சிக்குத் துணைபுரிய வல்லது. இப்பாடலே திருமாலின் வளை, ஆழி, வில், வாள், தண்டு என்னும் ஐம்படைகளையும் கூறுவதாகும்·

'வலம்புரி வய நேமியவை
வரிசிலை வயவம்பினவை
புகரிணர் சூழ் வட்டத்தவை, புகர்வாளவை.' (15: 59–61)

இரட்டுற மொழிதலாகச் சொல்லாட்சி செய்வதையும் இவர் பாடலிற் காணலாம்.

'சிலம்பிற் சிலம்பிசை ஓவாது (15-44)

இவ்வடியில் சிலம்பு என்னுஞ் சொல் மலை, ஒலி எனும் பொருளில் பயிலப்பட்டிருத்தல் காண்க.

இளம் பெருவழுதியார் புறநானூற்றில் பண்புடையார் இருத்தலினாற்றான் ஞாலம் 'நிலைபெறுகிறது எனக் கூறியுள்ளார்.

'பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.' (996)

என்ற குறளிலும் அக்கருத்துக் காணப்படும். குறள் கூறும்

பண்புடையார் இயல்புகளை இளம்பெருவழுதியாரின் புறநானூற்றுப்பாடல் விரித்துக் கூறுவது போல்அமைந்துள்ளது.

'இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் விருந்து புறத்திருக்கத் தமியராய் உண்ணார்; எஞ்ஞான்றும் பிறரை இகழார்; அஞ்சப்படுவதற்கு அஞ்சுவர்; தீயவை செய்யார்; புகழெனின் உயிரும் கொடுப்பர்; பழியெனில் உலகுடன் பெறினும் கொள்ளார்; தமக்கென முயலாது பிறர்க்கென முயலும் பெருந்தன்மை வாய்ந்தவர்.' இத்தகைய பண்புடையார் இருத்தலினால்தான் உலகு இயங்குகின்றது என்பதுவே அப்புறப்பாடலின் கருத்தாகும்.

3. கடுவனிளவெயினனார்

கடுவனிளவெயினனார் திருமாலைப் பற்றி இரண்டும் (3,4) செவ்வேளைப் பற்றி ஒன்றும் (5) ஆக மூன்று பாடல்கள் பாடியுள்ளார். இவரது பெயர் கடுவனிள வெயினார் என ஓரேட்டில் காணப்படுகிறது. எயினனார் அல்லது எயினார் என்பதிலுள்ள எயின் என்னுஞ் சொல் இப்புலவர் வேட்டுவ மரபினர் என்பதைக் காட்டும். கழார்க்கீரன் எயிற்றியார், குறமகள் குறி எயினி, குறமகள் இளவெயினி ஆகியோர் வேட்டுவ மரபில் வந்த சங்க காலப் புலமைச் செல்வியராவர். எயிற்றியனார், எயினந்தையார், எயினந்தை மகன் இளங்கீரனார், புல்லாற்றூர் எயிற்றியனார் என்பாரும் அம் மரபில் தோன்றிய புலவர்களே. கடுவன் என்பது இளவெயினனார் தம் ஊர்ப் பெயர் போற்றேன்றுகிறது. கடுவன் இளமள்ளனார், கடுவன் மள்ளனார் என்னும் இரு புலவருங்கூட அவ்வூரினரேயாவர்.[24]

இளவெயினனாரின் திருமாலைப் பற்றிய இரு பாடல்களுக்குப் பெட்டனாகரும், செவ்வேளைப் பற்றிய ஒரு பாட

24. குறுந்தொகை : பாடினோர் வரலாறு, பக். 132.

லுக்குக் கண்ணனாகனாரும் பண் வகுத்துள்ளனர். நற்றிணை 263ஆம் பாடலை இளவெயினனார் இயற்றியதாகத் தெரிகிறது. இவ் விளவெயினனாரும் கடுவனிள வெயினனாரும் ஒருவரா என்பது ஐயத்திற்கிடனாய் உள்ளது.[25] பரிபாடலும் நற்றிணையும் நடையில் வேறுபடுவதால் இருவரும் வெவ்வேறு புலவராதல் வேண்டும். 'கடுவன்' எனவரும் அடையும் மேற் கருத்தைத் தெளிவுபடுத்தும்.[26]

புராணக் கதைகள்

திருமாலைப் பாடிய புலவர் நால்வரில் கடுவனிள வெயினனாரே திருமாலின் பெரும்பாலான அவதாரங்களையும் அவரைப்பற்றிய புராணக் கதைகளையும் குறிப்பிட்டுள்ளார். திருமால் அவுணர்களை அழித்த கதை ஒன்றையேகீரந்தையார் சுட்டுவர்.

நல்லெழுனியார் திருமாலின் வராகவதாரமொன்றையே குறிப்பர். ஆனால் இப்புலவரோ வராகம்[27], நரசிங்கம்[28], வாமனன்[29], கண்ணன்[30], பலதேவன்[31] என்னும் ஐந்து அவதாரங் கூறியுள்ளார்.

இவர் குறிப்பிடும் புராணக் கதைகள் பின்வருவன :

1. திருமால் அன்னப் புள்ளாய்த் தோன்றித் தன் சிறகால் வெள்ளத்தைப் புலர்த்தியது. (3: 25, 26)
2. விண்ணோர்க்கு அமிழ்தளித்தது. (3: 33, 34)
3. அவுணர்களை அழித்தது. (3: 54-56)
4. கருடனின் செருக்கொழித்தது. (3: 60, 61)
5. திருமாலின் உந்தித் தாமரையில் நான்முகன் தோன்றியது. (3 : 11 13)

---

25. இலக்கிய வரலாறு: கா. சு. பிள்ளை, பக். 234.
26. பரிபாடற் சொற்பொழிவுகள், பக். 49.
27. பரி. 4: 22–24.
28. பரி. 4: 10-21.
29. பரி. 3: 20.
30. பரி. 3: 31; 3-83.
31. பரி. 4: 38-40.

செவ்வேளைப் பாடிய ஏனைய புலவரெல்லாம் அவர் சூரபதுமனைக் கொன்ற கதையை மட்டுமே கூறுகின்றனர். கடுவனிளவெயினனார் அவர் இந்திரனைப் புறங்கண்டதையும் கூறியுள்ளார். இவர் பாடல் முருகனது பிறப்பை விவரித்துக் கூறும். அக்கினி, இந்திரன், யமன் ஆகிய மூவரும் முறையே சேவல், மயில், யாடு ஆகியவற்றைத் தம்முடலினின்றும் தோற்றுவித்து முருகனுக்குப் பரிசாக நல்கினர் என உரைக்கும். திருமாலின் பல அவதாரங்களையும் அவரைப் பற்றிய புராணச் செய்திகளையும் எடுத்துரைத்தலின், பரிபாடற் புலவர்களுள் இப்புலவரே காலத்தாற் பிந்திய வராவர் என அறுதியிடலாம். திருமாலின் பல் பிறப்பு களையும் கதைகளையும் விரித்துச் செல்லுதலால் இவர் பாடல் களில் இயற்கைப் புனைவுக்கு வாய்ப்பின்றிப் போயிற்று. பரிபாடல் பிற்கால நூல் என அறிஞர் சிலர் புகலுதற்கு இவர் பாடல்களே அடிகோலின. அட்ட மூர்த்தங்கள், வியூகா வதாரங்கள், முப்பத்து மூன்று தேவர், பதினொருருத்திரர், சாங்கிய தத்துவங்கள் இருபத்தைந்து, விரிசடைக் கடவுள் திரிபுரமெரித்தது முதலியவற்றை யெல்லாம் இப்புலவர் குறிப்பிட்டுள்ளார். திருமாலை இவர் தனித்துப் பாடினும், அவரே முருகன், அயன், சிவன் என மொழிந்துள்ளார் (3: 37-40).

எல்லாம் திருமாலே

முருகன், அயன், அரன் எனும் மூன்று பெயர்களும் திருமாலின் வேறு பெயர்களே. இங்ஙனம் அப்புலவர் கருதிய கருத்தே அவரைச் சிவன், முருகன் என்பவர்க்குரிய இடமான ஆலமும் கடம்பும் திருமாலுக்குரியவை எனப் பாடத் தூண்டியது.

'ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்
அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்!' (பரி. 4 : 67-69)

இவ்வடிகளால் திருமால் வேறு வேறு பெயரோடு வேறு வேறிடங்களில் உறைகின்றார் என்பது போதரும். பலதேவ

னுக்கும் முருகனுக்குமுரிய கொடிகளைத் திருமாலுக்குரியவாக அப்புலவர் கூறுதலும் நோக்கத்தகும்.

'நின்னென் றுயர்கொடி பனை ;
நின்னென் றுயர்கொடி நாஞ்சில் ;
நின்னென் றுயர்கொடி யானை.' (பரி. 4. : 38-40)

உலகத்து அனைத்துப் பொருளினும் பரவியிருக்கும் திருமாலை இப்புலவர் தம் கவிதையில் கவினுறப் பின் வருமாறு பாடியுள்ளார்.

'நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள ;
நின் தண்மையும் சாயலுந் திங்களுள ;
நின் சுரத்தலும் வண்மையும் மாரியுள ;
நின் புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள ;
நின் நாற்றமும் ஒண்மையும் பூவையுள ;
நின் தோற்றமும் அகலமும் நீரினுள ;
நின் உருவமும் ஒலியு மாகாயத் துள ;
நின் வருதலு மொடுக்கமு மருத்தினுள.' (பரி. 4 : 25-32)

பிறிதொரு வாழ்த்துப் பாடலில் திருமால் தீயினுள் வெம்மையாகவும், மலரில் மணமாகவும், கல்லினுள் மணியாகவும், சொல்லினுள் வாய்மையாகவும், அறத்தினுள் அன்பாகவும், மறத்தினுள் வன்மையாகவும், வேதத்து உபநிடதமாகவும், பூதத்துள் விண்ணாகவும், ஞாயிற்றில் ஒளியாகவும், திங்களில் தண்மையாகவும், எல்லாப் பொருளாகவும், எல்லாப் பொருளின் உட்பொருளாகவும் இலங்குவதை இசைத்துள்ளார்.

'தீயினுள் தெறல் நீ, பூவினுள் நாற்றம் நீ,
கல்லினுள் மணியும் நீ, சொல்லினுள் வாய்மை நீ,
வேதத்து மறை நீ, பூதத்து முதலு நீ,
அறத்தினுள் அன்பு நீ, மறத்தினுள் மைந்து நீ,
வெஞ்சுட ரொளியு நீ, திங்களுள் அளியு நீ,
அனைத்து நீ, அனைத்தினுட் பொருளு நீ!' (பரி. : 63-68)

இயற்கைப் பொருள்கள் எல்லாவற்றிலும் இறைவன் இரண்டறக் கலந்திருப்பதாகக் கருதி இறைஞ்சுதலைச் சங்க விலக்கியங்களுட் பரிபாடலிற் காணலாம்.

ஒரே கருத்தை மீண்டும் வலியுறுத்துக் கூறுதல் இப்புலவர் தம் இயல்பு. திருமாலுக்குக் கேளிருமிலர் பகைவருமிலர் என்னும் கருத்தும் ஞாயிற்றில் ஒளியாகவும் திங்களில் அளியாகவும் அவர் விளங்குகிறார் என்னும் கருத்தும் இருமுறை வந்துள்ளன.

'பகைவர் இவர் இவர் நட்டோ ரென்னும்
வகையு முண்டோ நின் மரபறி வோர்க்கே.' (பரி. 3 : 57–58)

'நினக்கு
மாற்றேரும் இலர் கேளிரு மிலரெனும்
வேற்றுமை யின்றது போற்றுநர்ப் பெறினே' (பரி. 4 : 53–55)

'வெஞ்சுட ரொளியு நீ; திங்களுள் அளியுநீ' (பரி. 3 : 67)

'நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள
நின் தண்மையுஞ் சாயலும் திங்களுள.' (பரி. 4 : 25-26)

புலவர் உள்ளம்

செவ்வேளைப் பற்றிய பாடலின் இறுதியில், இப்புலவர் பொருளுலகில் தமக்குள்ள வெறுப்பையும் அருளுலகில் தமக்குள்ள விருப்பையும் செவ்வனம் புலப்படுத்துவர்.

'யாஅம் இரப்பவை
பொருளும், பொன்னும் போகமுமல்ல ; நின்பால்
அருளும், அன்பும், அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலி தாரோயே!' (பரி. 5 : 78-81)

'நின்னை யாம் இரப்பவை நுகரப்படும் பொருள்களும் அவற்றை உளவாக்கும் பொன்னும் அவ்விரண்டாலும் நுகரும் நுகர்ச்சியுமல்ல; எமக்கு வீடு பயக்கும் நின்னருளும் அதனை உண்டாக்க நின்னிடத்து யாம் செய்யும் அன்பும் அவ்விரண்டானும் வரும் அறனுமாகிய இம் மூன்றுமே' என்னும் பரிமேலழகர் தெளிவுரையும் ஈண்டு அறியத்தகும்.

பாட்டியல்பு

'பயந்தோ ளிடுக்கண் களைந்த புள்ளினை
பயந்தோ ளிடுக்கண் களைந்த புள்ளின்
நிவந்தோங் குயர்கொடிச் சேவலோய்'' (பரி. 3 : 16-18)

''மலையாற்றுப் படுத்த மூவிரு கயந்தலை
மூவிரு கயந்தலை முன்நான்கு முழவுத் தோள்' (பரி. 5: 11-12)

என அந்தாதித் தொடை வகைகளும்,

பாம்பு தொடி பாம்பு முடிமேலன
பாம்பு பூண் பாம்பு தலைமேலது
பாம்பு சிறை தலையன பாம்பு!' (பரி. 4 44, 46)

எனச் சொற்பொருட் பின்வருநிலை யணியும் இவர் பாட்டில் வந்துள்ளன.

திருமால் அனைத்துலகும் ஆள்கின்றார் என்பதை எண்ணுப் பெயர் கொண்டு நயம்படப் பாடியுள்ளார்.

அருள் குடையாக அறங் கோலாக
இரு நிழல் படாமை மூவே முலகமும்
ஒரு நிழலாக்கிய ஏமத்தை மாதோ! (பரி. 3 : 74-76)

'ஐந்திருளற நீக்கி நான்கினுட் டுடைத்துத்தம்
ஒன்றுற்றுப் படுத்த நின்னார்வலர்' (பரி. 4: 1-2)

என்னும் அடிகளிலும் எண்ணுப் பெயர் ஆட்சியினைக் காணலாம்.

திருமாலைத் 'தொல்லியற் புலவ', 'நல்லியாழ்ப்பாண' 'இடவல', 'குடவல' என விளி கொண்டதால் திருமால் முத்தமிழாக விளங்குதல் அறியலாம். இவர் திருமாலிடமும் செவ்வேளிடமும் அளவிலா ஆர்வமுடையவர். மறுபிறப்பில் நம்பிக்கை இல்லாதாரை மடவோர் என எள்ளுவர்.

புலமைத்திறன்

நரசிங்காவதாரம் இவர் பாடலில் அழகுறப் புனையப் பட்டுள்ளது. திருமாலைப் பிரகலாதன் புகழ்ந்தேத்தியபோது,

இரணியன் மார்பகத்தே பூசியிருந்த சந்தனம் வெகுளியின் வெம்மையால் உலர்ந்துதிர்ந்தது என அவன் சீற்றமிகுதியைச் செவ்விதிற் காட்டுவர். திருமால் தூணினின்று தோன்றிச் சினன்று இரணியனது வரையன்ன மார்பில் உதைத்து நகத்தாற் பிளந்தெறிந்தார்.

'இன்ன லின்னரொ டிடிமுர சியம்ப
வெடிபடா வொடிதூண் தடியொடு
தடிதடி பலபட வகிர் வாய்த்த உகிரினை! (பரி. 4 : 19-21)

நரசிங்காவதாரத்தின் கடுஞ்சினம் வல்லோசை புணர்ந்து இப்பகுதியில் நயமுறக் காட்டப் பெறுகின்றது.

அங்கிங்கெனாதபடி எங்கும் கலந்திருத்தலான் திருமாலை 'எவ்வயினோயும் நீயே' என விளித்துள்ளார். வடமொழியில் 'விட்டுணு' என வழங்குவதும் இக்கருத்துப் பற்றியேயாம்.

4. கரும் பிள்ளைப் பூதனார்

வையைப் புனைவு

வையை பாடிய ஐம்புலவர்களுள் கரும்பிள்ளைப் பூதனார் ஒருவராவார். பத்தாம் பரிபாடலில் வையைச் செம்புனலை யும் மதுரைவாழ்நர் அணி அணியாகப் போந்து பேராரவாரத் தோடு அயரும் புனல் விழாவினையும் செய்யுள் நலங்கனிய இவர் விரித்துரைத்துள்ளார். இவர் பாடல் வேறு எந்நூலி லும் காணப்பட்டிலது. புனலாட்டில் கலந்து கொண்டவர் கள் வையையை மலரும், மாலையும், நறும்புகையும் கொண்டு வழிபட்டு வணங்கினர். அவற்றோடு பொன்னாலாய சங்கு, நண்டு, இறால், வாளை முதலியவற்றை யாற்றிலிட்டு இவ் வுயிரினங்கள் பல்கி யாறு வளஞ் சுரப்பதாகுக என வாழ்த் தினர்.

'நத்தொடு நள்ளி நடையிறவு வயவாளை
வித்தி அலையில் விளைக பொலிகென்பர்.' (பரி. 10: 85-86)

பொன்மீன், பொன் நண்டு முதலியவற்றை யாற்றுக் களித்து இறைஞ்சும் பண்டைவழக்கினை இப்புலவரே அறிவிக்கின்றார். புனலாட வையைக்குச் சென்ற இளமகளிரை முகைப் பருவத்தார் (பூப்பெய்தாதார்) அலர் வாயவிழ்ந் தன்னார் (பூப்பெய்தினார்) என்றும், முதியோரை விரவு நரையோர், வெறு நரையோர் என்றும் பிரித்துப் புதுப் பெயர் சூட்டுவது சிறப்பாக அமைந்துள்ளது.

வெள்ளம் வருதலை முரசறைந்து குடிமக்கட்கு முன் கூட்டியறிவிக்கும் வழக்குண்மையை இவர் பாட்டலே அறிவிக்கின்றது. நீராடச் சென்றோர் மாலை, மான்மதம், அணிகலன்கள் முதலிய பொருள்களை வையைக் களித்து அணி செய்கின்றனர். மேலும் அதனைக் கள்ளும் பருகச் செய்வர் வையை நீராடல் தவச்செயல் என்றும், அஃது அருட் பயனளிக்குமென்றும் எண்ணி இறைஞ்சி அந்நீராட்டு மறுபிறவியினும் வாய்ப்பதாக என வேண்டுவர்.

இசை நுட்பம்

முதியர், இளையர், இடைப்பருவத்தினர் எல்லாம் வையை நோக்கிச் செல்கின்றனர். யாற்றெதிரே செல்கின்ற இவர்கள் விரைவாகவும் மெதுவாகவும் இரண்டிற்குமிடைப் பட்டும் இயங்கும் நடைவேறுபாடுடையரேனும் கூட்ட நெருக்கத்தால் அனைவருமே பையச் செல்ல வேண்டியதாயிற்று. இக்காட்சி பல்வேறு இசைக்கருவிகள் தமக்குள் ஒன்றற்கொன்று கூறுவேறுபாடுடைய வேனும் விளம்பித நடையுடையதாள கதியால் எல்லாம் மென்னடையாய்ச் செல்லுவது போன்றிருந்தது என்பர். இவ்வுவமையால் புலவர்தம் இசை நுணுக்கம் புலனும்

'முதிய ரிளையர் முகைப்பரு வத்தர்
வதிமண வம்பலர் வாயவிழ்ந் தன்னர்
இருதிற மாந்தரும் இன்னினி யோரும்
விரவு நரை யோரும் வெறுநரை யோரும்

பதிவத மாதர் பரத்தையர் பாங்கர்
அதிர்குரல் வித்தகர் ஆக்கிய தாள
விதிகூட் டியவிய மென்னடை போலப்
பதிஎதிர் சென்று பரூஉக்கரை நண்ணி. பரி. (10: 19–26)

உவமைக் கருவூலம்

புனலாட்ட இருபாலாரினும் இளையரும், முதியரும், குதிரை, யானை, எருது, கோவேறு கழுதை, தேர், சிவிகை முதலிய ஊர்திகளிலிவர்ந்து வையைக்கு ஏகினர். ஆடவர் களிற்றின் மீதும், மகளிர் பிடியின் மீதும் ஏறிச் சென்றனர். தனக்குப் பக்கத்தே வரும் பிடியைக் கண்டு காம மயக்கங் கொண்டு களிறு அவர்கள் நடத்தவும் செல்லாது ஆங்குள்ள புலிமுக மாடத்தருகே நின்றது. பிடியும் மேலே நடவாது காமுற்று மயங்கி நின்றது. பின்னர், பிடி புலிமுகமாடத்திருந்த புலியை உண்மைப் புலி எனக் கருதி, அது களிற்றின்மேற் பாயுமென அஞ்சித் தன்மேல் அமர்ந்துள்ள மகளிர் நடுங்கு மாறு கைக்கடங்காது மீறியது. களிறும் அதனைக் கண்டு பிளிறி மீறியது. பின் களிற்றைப் புலிமுகமாடத்தினின்றும் கடத்திப் பிடியின்பால் சேர்த்தனர். பிடியும் களிறும் அமைதியுற்றன. மகளிரும் அச்சம் தவிர்ந்தனர். இங்ஙனம் ஆடவர் அம் மகளிர்தம் அச்சந்தவிர்த்த செயல் காற்றால் பாயும் பாய்மரமும் கயிறும் சிதையும் நிலையில் இருந்த மரக் கலத்தைத் திருத்தி, அதன் உள்ளேயிருந்த மக்களின் அச்சத் தைத் தவிர்த்த மீகாமன் செயல் போன்றது என இப்புலவர் உவமை கூறியுள்ளார்.

தாம் நினைத்த பட்டினம் சென்று, கொண்டு சென்ற பண்டங்களைக் கொடுத்து வேறு பண்டம் ஏற்றி வரும் கலத் தின் வரவை எதிர்பார்த்திருக்கும் வணிகர்போலப் புனலாடி இன்புறுதற் பொருட்டுப் பருவ மங்கையர் பாட்டியர் காவலையும் தடையையும் கடந்து வந்து தாம் விழைந்த காதலரை வையைக்கண் எதிர்நோக்கி யிருந்தனராம்.

வையையில் எழுந்த யாழிசையும் ஆடல் பாடல்களும் காதலுணர்ச்சியை எழுப்பின. 'ஊடல் கொண்டிருந்த

தலைவியின் உறுதியும் அவளுடன் உரையாடலாகா தென்றிருந்த தலைவனின் உறுதியும் உடைந்தன. இருவரும் புணர்ச்சி வேட்கையுற்றாராயினும், யார் முன் பேசுவது என்னும் பொய்ம்மானத்தால் வாளாவிருந்தனர். இந்நிலை யானது நெடிது பொருது களைத்த இருபெரும் படைகள் உடன்பாட்டிற்கு வரவிழைந்தும், சமாதானம் பேச யார் முன் செல்வது எனும் பொய்ம்மானம் நோக்கி வாளா விருப்பது போன்றது என அக நிகழ்ச்சிக்குப் புறத்திணை பற்றிய உவமை கூறுவது நயம் பயப்பதாம்.

வையைக் கரையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி களின் பந்தையும் கழங்கையும் சிறுவர்கள் வாரி எடுத்துக் கொண்டு ஓடி வையையிற் குதிக்கின்றனர். அதனால் ஒளிறுவாள் கொண்டு களிறெறியும் மறவர்தம் அமர்க்களம் போல, வையை நீர் தன்னிற மாறிச் செந்நிறமாயிற்று. வறுமையில் வாடிய புலவர்கட்குப் பொன்னை வழங்கும் பாண்டியன் போல, வையை வயல்களிடத்துப் பொன்னைப் பரப்புகிறது என்னும் இவ்வுவமை வேந்தன்மாட்டு வைத்த இப்புலவர் தம் செய்ந்நன்றியைப்புலப்படுத்தும். இவ்வாறாகப் பல உவமைகளைக் கொண்டொளிர்தலின், இப்பாடலை உவமைக் கருவூலம் என்னலாம்.

குறளாட்சி

'தாம் வீழ்வார் மென்தோள்' (1103) என்னும் குறள் தொடர், 'தாம் வீழ்வாராகம் தழுவுவோர்' (பரி. 10 : 31) எனும் அடியில் ஆட்சி பெற்றுதுள்ளது. 'காமக் கணிச்சியாற் கையறவு வட்டித்து' (பரி. 10:33) என்னும் பரிபாடலடியில், 'காமக் கணிச்சி உடைக்கும் நிறை யென்னும் நாணுத்தாழ் வீழ்த்த கதவு' (1251) என்னும் குறட் கருத்தைக் காணலாம். 'இல்லது நோக்கி இளிவரவு கூறுமுன்' (பரி. 10;87) என்னும் அடி 'இலனென்னும் எவ்வமுரையாமை ஈதல் குலனுடையான் கண்ணே உள' (223) என்னும் குறளைத் தழுவி நிற்கின்றது. இவ்வாறாக, இப்புலவர் குறட் கருத்துகளையும் சொற்களையும் தம்பாடலில் பொன்னேபோற் போற்றுதல் காணலாம்.

5. கீரந்தையார்

பெயர் ஆராய்ச்சி

திருமாலைப் பற்றிய ஒரு பாடலையே கீரந்தையார் இயற்றியுள்ளார். பிற சங்க இலக்கியங்களிலும் இவர் பாடல் காணப்பட்டிலது கீரன் தந்தையார் என்பதே கீரந்தையார் என மருவியிருக்கலாம் என்பர் டாக்டர் உ.வே. சா.[32] 'தப்பா முதற் பாவால்' எனத் தொடங்கும் வெண்பாவைக் கீரந்தையார் பாடியதாகத் திருவள்ளுவமாலை கூறும். இந்நூலின் காலம் இன்னும் வரையறுக்கப்படவில்லை. ஆனாலும் இதனைச் சங்ககால நூல் என ஆய்வாளர்கள் ஒப்புவதில்லை. எனவே திருவள்ளுவமாலை பாடிய கீரந்தையார், பரிபாட்டுப் புலவரான கீரந்தையாரினும் வேறானவர் எனக் கொள்ளலாம். சிலப்பதிகாரத்தில் (காதை 23: 42) கீரந்தையார் எனும் பெயர் வருகிறது. இவரும் பரிபாடற் கீரந்தையாரும் ஒருவரா? என்பது ஐயமே எனக் கூறுவர் டாக்டர் உ.வே.சா. இவர் பாடிய பாடலில் சில அடிகள் முழுதும் காணப்படவில்லை.

திருமாலின் பழமை

பாடலின் தொடக்கத்தே நிலம், நீர்; தீ, வளி, வான் என்னும் ஐம்பூதங்களின் ஊழிகள் தோன்றிய முறையைக் குறிப்பிட்டுள்ளார். முதலில் விசும்பு கெட்டே ஊழிகள் தோன்றின. பின் விண்ணினின்று தோன்றிய காற்றினூழியும், இதனைத் தொடர்ந்து காற்றினின்று தோன்றிய தீயின் ஊழியும், பின் தீயினின்று தோற்றிய நீரின் ஊழியும், இறுதியில் நீரிற்றோன்றிய நிலத்தினூழியும் தோன்றின. இவ்வூழிகட்குப்பின் நெடுநாட் கழித்து உயிர்கள் தோன்றுவதற்காகத் திருமால் கேழல் உருவம் (வராகவதாரம்) தாங்கி வெள்ளத்தினின்று உலகினைக் கொணர்ந்தார். அக்காலம் 'கேழல்

---

32. குறுந்தொகை; பாடினோர் வரலாறு. பக். 122

திகழ்வரகி கோலமொடு பெயரிய ஊழி''(வராக கற்பம்) என வழங்கப் பெற்றது. ஆகவே திருமால் தோன்றிய காலத்தை நினைத்துப் பார்ப்பதும் அரியதொன்றும்.

திருமால் இயல்பு

திருமால் பன்றி உருக்கொண்டு வெள்ளத்தினின்றும் ஞாலத்தைக் கோட்டிற்றுங்கிக் கொணர்ந்தது, அவர் நில மகளை மணந்ததொக்கும். முன்னர் மணந்து கொண்ட திருமகளை மார்பகத்து வைத்துக் கொண்டே, மீண்டும் நில மகளை மணத்தல் பொருத்தமற்றதாகத் தோன்றுகின்றது எனப் பழிப்பது போல முழுமுதற்றன்மையைப் புகழ்வர்.

'நித்தில மதாணி யத்தகு மதிமறுச்
செய்யோள் சேர்ந்தநின் மாசி லகலம்
வளர்திரை மண்ணிய கிளர்பொறி நாப்பண்
வைவான் மருப்பிற் களிறுமண னயர்பு
புள்ளி நிலனும் புரைபடல் அரிதென
உள்ளுநர் உரைப்போர் உரையொடு சிறந்தன்று'

(பரி. 2:30-35)

திருமாலின் மார்பில் விளங்கும் நித்தில மதாணி மதி போலவும் ஆண்டுறையும் திருமகள் மதிக்கண் மறுப்போலவும் தோன்றும் என்பர்.

சங்கனைய வெண்ணிறமும் பனைக்கொடியும் இருள்நிற உடுக்கையுமுடைய பலதேவனுக்கு இளையன் என்பார்க்குப் பிறப்பு முறையால் இளையனுகவும், முதியன் என்பார்க்குச் சிறப்பு முறையால் முதியனுகவும் திருமால் தோற்றமளிப்பர். அவர் உயிர்தொறும் கரந்து எங்கும் பரந்திருப்பவர்.

புலமைச் சிறப்பு

திருமால் அவுணர்களைக் கொன்றதைப் புனைகின்ற பகுதியில், புலவர்தம் யாப்புவன்மையினையும் கற்பனைத் திறனையும் காணலாம். வெஞ்சினம் மிக்க கொடிய அவுணர்

களைத் திருமாலின் ஆழி அழித்தது. அவர்தம் கொடிகள் அறுந்து வீழ்ந்தன. திருமாலின் சங்கு இடிபோல் முழங்கியது. அவுணர்தம் தலைகள் நெடும்பனை மரத்திலிருந்த விழும் பெரும் பழங்கள் போல உருண்டோடிப் போர்க்களத்தைச் செந்நிற மாக்கின: வல்லோசை புணர்த்துப் போர் நிகழ்ச்சியின் கடுமையைப் புலவர் நயமுறக் காட்டியுள்ளார்.

'ஒடியா உள்ளமொ டுருத்தொருங் குடனியைந்
திடியெதிர் கழறுங் காலுறழ் செழுந்தவர்
கொடியறு பிறுபு செவிசெவிடு படுபு
முடிகள் அதிரப் படிநிலை தளர
நனிமுரல்வளை முடியழிபிழிபு
தலையிறுபு தாரொடுபுரள
நிலைதொலைபு வேர்தூர் மடல்
குருகு பறியா நீளிரும் பனைமிசைப்
பலபதி னுயிரம் குலைதரை யுதிர்வபோல்
நில்லா தொருமுறை கொய்பு கூடி
ஒருங்குருண்டு பிளந்து நெறிந்துருள்பு சிதறு
பளறுசொரிபு நிலஞ்சோரச்
சேரா ரின்னுயிர் செகுக்கும்
போரடு குரிசில்நீ யேந்திய படையே,' (பரி. 2. 36–49)

ஈண்டு அவுணர் என்றது இராவணனைக் குறிக்கலாம் எனக் கருதுவர் டாக்டர் உ. வே. சா. அக் கருத்துக்கு,

'இலங்கையர் கோனைப்
பானுநேர் சரத்தாற்
பனங்கனி போலப்
பருமுடி யுதிரவில் வளைத்தோன்.' (பெரிய: 9. 1:7)

எனும் நாலாயிரப் பிரபந்த அடிகளை மேற்கோள் காட்டுவர்.

திருமாலின் மேனியொளி இருண்ட நீலமணி போன்றது. அவர்தம் கண்கள் இணைந்த தாமரை மலர்களை ஒக்கும். வாய்மை, தவறாது வரும் நாளையும்; பொறை, நிலத்தையும்; அருள், நீர் நிறை மேகத்தையும் ஒக்கும். அவர் கருடக்

கொடி உடையவர். அளவிறந்த புகழினர். தேவர்கட்குக் கடல்கடைந்து அமிழ்தத்தை கொடுக்க வேண்டும் என்று நினைத்த அளவிலே அத்தேவர்கட்கு அதன் பயனாகிய மூவா மரபும் ஓவா நோன்மையும் சாவா மரபும் வாய்த்தன. வேதக் கருத்துகள் சில இவர் பாடலில் காணப் பெறும். பாடலின் இறுதியில், 'நின்னடி தலையுறச் சுற்றத்தோடு பன்முறை வணங்குகின்றேம். மனமாசின்றி ஒருமைப்பாட்டுடன் ஏத்துகின்றேம். எம்மறிவு மருளுறாது மெய்யுணர்வு பெறுவதாக!" என வேண்டுகின்றார்.

'நின்னடி
தலையுற வணங்கினேம் பன்மாண் யாமும்
கலியில் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்
கடும்பொடும் கடும்பொடும் பரவுதும்
கொடும்பா டறியற்க எம்மறி வெனவே.' (பரி. 2: 72-66)

எண்ணுப் பெயர்

பேரெண் சுட்டும் எண்ணுப் பெயர்கள் ஐ, அல், அம் எனும் விகுதி கொண்டு முடியும் எனத் தொல்காப்பியர் விதி கூறியுள்ளார்.

'ஐயம் பல்லென வரூஉ மிறுதி
அல் பெயரெண்.'
(தொல்.393)

தொல்காப்பிய உரைகள் தாமரை, வெள்ளம், ஆம்பல் என்னும் மூன்று காட்டுகளே மேலை நூற்பாவுக்குத் தந்துள்ளன. இவற்றில் ஆம்பல் வெள்ளம் என்னுமிரண்டுமே பரிபாடல் நீங்கிய சங்கத் தொகை நூல்களில் காணப்படுகின்றன. இப்புலவர்தம் பரிபாடலில் நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம் (இது தாமரை எனவும் வழங்கப் பெறும் என்பர் உ. வே. சா), வெள்ளம் என்னும் ஆறு எண்ணுப் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். மேலைத் தொல்காப்பிய நூற்பாவுக்கு இவ்வாறும் சிறந்த எடுத்துக்

33. பதிற். 63 : 19-21 ; மதுரைக். 22; ஐங். 281,

காட்டுகளாகும். இவ்வெண்ணுப் பெயர்களின் விளக்கத்தை விபுலானந்த அடிகளின் யாழ்நூலிற் காணலாம்.[34]

6. குன்றம் பூதனுர்

பெயர் வரலாறு

திருப்பரங்குன்றத் துறையும் செவ்வேளைக் குறித்துக் குன்றம்பூதனுர் இருபாடல்கள் யாத்துள்ளார். இருபாக்களின் இறுதியிலும் முருகனடிக்கண் உறைதலையே வேண்டி நிற்றலின் இப்புலவர் செவ்வேள்பால் கொண்டிருந்த தணியா ஆர்வம் நன்கு புலப்படும். நற்றிணை 29 ஆம் பாடல் பூதனுர் இயற்றியதென அறிகிருேம். 'பரிபாடற் சொற்பொழிவுகள் என்னும் நூலில் திரு. கணபதி முதலியாரவர்கள் பூதனுரும் குன்றம்பூதனுரும் ஒருவராயிருக்கலாம் எனக்குறிப்பிடுவர்.[35] திருப்பரங்குன்றத்தைக் கவினுறப்புனைந்த பின்னரே குன்றம் எனும் அடை புணர்க்கப்பெற்றுக் குன்றம்பூதனுர் ஆயினர் எனச் சிலர் கூறுப. திரு. கணபதி முதலியார்தம் கருத்துக்கு அஃது அரணுதல் காணலாம்.

செவ்வேள் இல்லறம்

குன்றம்பூதனுர் செவ்வேளின் பிறப்பைக் கூறுங்கால், அவர் இமயத்துக் கார்த்திகை மகளிர்க்கும் மணிமிடற் றண்ணற்கும் பிறந்ததாகக் குறிப்பிடுவர். இப்புலவர் வள்ளியையும் தேவசேனையையும் முருகன் மணம்புணர்ந்ததைத் தெரிவிப்பர்.

செவ்வேள்மான்மறியாகிய வள்ளியைக் களவின் மணந்த ஞான்று ஆயிரங்கண்ணனுன இந்திரன் மகளாகிய தேவசேனை கண்ணீர் உகுத்தனள். அதுபோலவே பரங்குன்றத்தில் முதுவேனிற்கண் கார்ப்பருவம் ஒப்ப மழை பொழிந்தது.

34, யாழ் நூல், பக். 292, 294,

35. பரிபாடற் சொற்பொழிவுகள், பக், 49.

உடனே, வள்ளியிற் பிரிந்து தேவசேனையின் சீற்றம் தணிக்க முருகன் அவளை அண்மினன். தேவசேனை அவனைத் தொழுது 'மாயனே வாழ்வாயாக! நின்னைத் தெளிய உணராது மயங்கி யகப்பட்ட மகளிர் நிலை மழையை எதிர் நோக்கியிருக்கும் பொழில் நிலை யொக்கும். ஆகவே, அம்மகளிர் தவறுடைய ராவரல்லது, நீ தவறுடையையல்லை. நின்னை எய்தும் திரு வுடை மகளிர்தம் மென்றோளில் துயின்று அருளுதலும் நின் பால் இல்லை. ஆகையால் யான் நின் மாணலம் துய்க்கப் பெறுவனே?' என்றனள். உடனே முருகன் தேவசேனையைத் தன் கண்ணி அவள் நற்றாளைத் தோயுமாறு இறைஞ்சி, வணக்கமாகிய திறையைக் கொடுத்தனன். அவள் புலவி நீங்கி, 'வருந்தற்க' எனக் கூறி, அவற்கு மார்பளித்தனள்,

இதனைக் கண்ட வள்ளி கண்சிவப்ப அவளை நெருங்கேல் எனக் கூறி, முருகன் கைகளை இறுகக்கட்டி, தன் கோதை கோலாகப் புடைத்தனள். இக்காட்சியைக் கண்ணுற்றதும் வள்ளி தேவசேனையர்தம் மயில்கள் ஒன்றோடொன்று இகலிப் பொருதன. இருவர்தம் கிளிகளும் வைது கொண்டன. வள்ளியின் குன்றத்து வண்டு தேவசேனையின் கூந்தல் மேலிருந்த வண்டின்மேற் பாய்ந்தது. இப்போரைக் கண்ட தேவசேனையின் தோழிமார் வள்ளியின் பாங்கியரோடு பகைத்துப் பொருததால் மாலைகள் சிக்குற்றன. தம்மார்பின் கச்சினைக் கொண்டு அடித்தனர். கோதையும் பந்தும் கொண் டெறிந்தனர். மயிலியலினராய வள்ளியின் தோழியர் மதக் களிற்றின் தன்மை எய்திக் குதிரைபோல் குதித்து வந்தனர், தேர்ப்படைபோல வடிக்கயிற்றைக் கொணர்ந்தனர். வில் வளைத்தனர்; வாளேந்தினர்; தோள் வளையாம் ஆழி சுழற்றினர். அவர்தம் பொருமுறை கண்ட தேவசேனையின் தோழிமார் முருகனைச் சூழ்ந்தனர். சுனையுட்புக்கு மறைந்து நீராடினர். அங்கே வண்டாக நின்று முரன்றனர். மயிலாக ஆடினர். குயிலாகப் பாடினர். விண்ணக மடந்தையராதலின் தம் மாயையால் இங்ஙனம் பல்வேறு உருமாறினர். எனினும், குறிஞ்சி நிலக் குறமகளிர்க்கு எதிர் நிற்றலாற்றாது

உடைந்தனர். இங்ஙனம் வித்தகத்தும்பை விளைத்தலான் வென்வேலாற்குத் தண்பரங்குன்று தகுதியுடைத்தாயிற்று.

உலகிற் காணும் ஓரகத்தியார் குடும்பச் சண்டையைக் கருத்திற் கொண்டு, தேவசேனையும் வள்ளியும் பொருதனர் எனக் கற்பித்துத் தேவ மடந்தையார்க்குத் தக உருமாறினர் என்றும், குற மடந்தையர்க்குத் தக விற்போர் உடற்றினர் என்றும் புனைந்து காட்டிய குன்றம்பூதனர் புலமைத் திறன் நினைதொறும் இன்பம் பயப்பதொன்றாகும்.

இப்புலவர்தம் இருபாடற்கண்ணும் முருகன் சூரபதுமனை யழித்தமையைக் குறிப்பிட்டுள்ளார்.

> 'கடுஞ்சூர் மாமுதல் தடிந்தறுத்த வேல்
> அடும் போரான.' (பரி. 9 : 70-71)

> 'நீர்நிரந் தேற்ற நிலந்தாங் கழுவத்துச்
> சூர்நிரந்து சுற்றிய மாதபுத்த வேலோய்.' (பரி 18 : 3-4)

கலைப் போட்டி

முருகன் தோன்றியதால் புகழ் வாய்ந்த இமயவெற்பும் அவர் விழைவதால் புகழ்பெற்ற பரங்குன்றமும் ஒன்றற் கொன்று இசைப்போட்டியிடுகின்றன. பரங்குன்றத்துச் சுனைகளின் பக்கத்தே, ஆடல், பாடல், சூது, பிற கலைகள் என்னும் இவற்றில் தேர்ந்தாரெல்லாம் தம்மோடு இகலிவந்த வல்லாளரை வென்று வெற்றிக் கொடி நாட்டினர்.

> 'நின் குன்றின்மிசை
> ஆடல் நவின்றோர் அவர்போர் செறுப்பவும்
> பாடல் பயின்றோரைப் பாணர் செறுப்பவும்
> வல்லாரை வல்லார் செறுப்பவும்
> அல்லாரை அல்லார் செறுப்பவுமோர் சொல்லாய்
> செம்மைப் புதுப்புனல்
> தடாகம் ஏற்ற தண்சுனைப் பாங்கர்
> படாகை நின்றன்று.' (பரி. 9 : 71-78)

ஊடற் புனைவுகள்

முருகன் தன் தேவிமாரது ஊடலுரிமையை நயந்தமையை இப்புலவர் குறிப்பிட்டுள்ளார்.

"கற்பிணை நெறியூ டற்பிணைக் கிழமை
நயத்தகு மரபின் வியத்தகு குமர!' (பரி. 9: 81-82)

18 ஆம் பாட்டில் ஒரு தலைவி கொண்ட ஊடலை விரித்துக் கூறியுள்ளார். ஒகையுடன் தோகை விரித்தாடிய ஒரு மயிலின் அழகிய மென் சாயலைக் கண்ட ஓர் ஆடவன், அது தன் காதலியின் சாயலொடு ஒத்திருப்பதை உளங்கொண்டு உற்று நோக்கினன். இதனைக் கண்ட தலைவி தான் காதலித்த வேறொரு நங்கையின் சாயலை அதனோடு ஒப்பிடுவதாகக் கருதி ஊடலுற்று, தலைவனை நோக்கி, 'நீ நினைத்ததறிந்தேன்; என்னை நோக்காது புறக்கணிப்பதேன்? நின் உள்ளக் கருத்தை ஒளியாதுரைப்பாயாக' என வினவினள். தலைவன், 'நின் சாயலைக் களவுகொள்ளக் கருதி அது பெறாது ஏங்கிக் கவன்ற மயிலையே நோக்கினேன்; நீ நின்னைப் புறக்கணிப்ப தாகப் பிறழ உணர்ந்தனை' எனத் தெளியக் கூறினன். உடனே தலைவி ஊடல் தவிர்ந்தனள்.

பரத்தைமாட்டுத் தொடர்புடையான் எனக் கேட்டுத் தலைவன்பால் ஊடல் கொண்டிருந்த தலைமகளிடம் சென்று, பாணன், தலைமகன் பரத்தை உறவினன் அல்லன் என்று உரைத்து, அவனது ஒழுக்கத் தூய்மையைப் பாடி வாயில் வேண்டினன். தலைவனது பரத்தை முயக்கத்தை நகக்குறி யாலாய வடு மெய்யிலிருப்பக் கண்டுணர்ந்த தலைவி, பாணனின் பொய்ம்மையைப் புலப்படுத்தினள். காமத்துக் கின்பமாய ஊடலைப் பலமுறையில் இவர் பாடல் புனைந் துரைக்கும்.

சோலையும் சுனையும்

செவ்வேளின் ஊர்தியான பொன்னோடையணிந்த யானை, திருப்பரங்குன்றம் போல் தோன்றுகிறது. யானை பிளிறுதல், பரங்குன்றத்து இடிமுழக்கம் போலவும் யானையின் பொன்

ஞெடை (நெற்றிப் பட்டம்) குன்றத்தொளிரும் மின்னல் போலவும் காணப்படுகின்றன. இப் புலவர் போலவே நல்லச்சுதனாரும் செவ்வேளின் களிற்றூர்திக்குப் பரங்குன்றை உவமிப்பர்.[36] பரங்குன்றிலுள்ள ஓவியந் தீட்டப் பெற்ற அழகிய அம்பலம் அம்புத் தொழில் கற்பிக்கும் மன்மதனது பயிற்சிச்சாலை ஒக்கும். மலர் செறிந்து காணப்பெறும் சோலையும் சுனையும் மன்மதனின் மலரம்பு நிறைந்த அம்பறாத்தூணி ஒக்கும். கார்காலத்து மலரும் செறிந்த காந்தட் குலைகள், மதன் போரில் தோற்றுக் கட்டுண்டார் கையொக்கும். தும்பியினாற் கட்டவிழ்க்கப்பெறும் காந்தள் முகைகள், யாழ் நரம்பின் கட்டை நெகிழ்ப்பார் கையை ஒக்கும். பரங்குன்றத்தில் முன்பனிக் காலத்து மேகம் ஆர்ப்பரித்து இந்திரனது வான வில்லை வளைத்தது. அங்குள்ள மரங்கள் இந்திர வில் சொரியும் கணைகளைப் போல மென்மலர்களை உதிர்த்தன. அக்குன்றத்தில் தாள ஒலியும் இயங்களின் ஆர்ப்பும் மேக முழக்கும் போர்முழக்கும் போல ஒலித்தன. குன்றினின்று இழிதரும் அருவி முத்துமாலை அணிந்திருப்பது போல் காட்சியளித்தது. குருவிகள் ஆரவாரஞ் செய்யுமாறு தினைகள் விளைந்தன. சுனைக்குப் பக்கத்திலிருந்து சாய்ந்து வளைந்த மூங்கிலை முட்டுகின்ற பன்னிற மலர்கள் மிக்க சுனை இந்திர வில்லை வளைத்தவானை ஒக்கும். இவ்வகையாகப் பரங்குன்றத்துள்ள சோலையையும் சுனையையும் குன்றம்பூதனார் அழகுறப் புனைந்துள்ளார்.

காதற் காமம்

நான்மறை விரித்து நல்லிசை விளக்கும் வடமொழிப் புலவர்களை விளித்துத் தமிழிலுள்ள பொருளதிகாரச் சிறப்பினைச் செவிமடுக்குமாறு குன்றம்பூதனார் கூறுவர். இப் புலவர் உள்ளப் புணர்ச்சியின் வழிவந்த மெய்யுறு புணர்ச்சியே வெறும் மெய்யுறு புணர்ச்சியிலும் சிறந்தது என மொழிகுவர்.

---

36. பரி, 21 : 12-15

'காதற் காமம் காமத்துச் சிறந்தது
விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி.'

டாக்டர் வ.சுப. மாணிக்கனார் சங்கஇலக்கியத்தில் அகத்திணை என்னும் ஆங்கில நூலில் 'காதற்காமம்' என்னும் சொல்லுக்கு விளக்கந் தருவர். மெய்யுறு புணர்ச்சியில்லாத உள்ளப் புணர்ச்சியும் உள்ளப்புணர்ச்சியில்லாத மெய்யுறு புணர்ச்சியும் அத்துணைச் சிறவா. உள்ளப்புணர்ச்சியையும் மெய்யுறு புணர்ச்சியையும் ஒருங்கே இயைத்துக்கூறும் ஒரு சொல் தமிழில் இல்லை. காதல் என்பது உள்ளப் புணர்ச்சி; காமம் என்பது மெய்யுறுபுணர்ச்சி. இவ்விரு புணர்ச்சிகளையும் சுட்டக் குன்றம்பூதனார் 'காதற் காமம்' என ஒரு புதுச் சொல்லைப் படைத்துள்ளார். அதற்கு மனமொத்துப் புணர்தல்—விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி—என்பது பொருள்.[37]

கற்பா? களவா?

கற்பு புலத்தலாற் சிறந்தது. அப்புலவி தலைவன் வாயில் வேண்டலும், தலைவி வாயில் நேர்தலுமாகிய இவையுள்ளீடாகத் தலைவனது பரத்தமையான் வருவது. தலைவன் இன்பம் நுகரும் பரத்தையில்லத்திருக்குங்கால், தலைவி தன் தோழி ஒருத்தியைக் காலையில் செவ்வணி யணிவித்து அனுப்பித் தன் பூப்பை அறிவிப்பாள். அப் பண்புறு கழறலால் தலைவன் தலைவிபாற் போந்து உவக்கும் புணர்ச்சியையுடையது கற்பொழுக்கம். அப்புணர்ச்சி தலைவிக்குப் பாங்காயினர் கேட்டுக் கவலுமாறு பரத்தையராலே பழிக்கப்படும். அப் புணர்ச்சியின்பம் இயல்பாக வாராது ஊடலால் வருவது. கற்பிற் புணர்ச்சியினும் களவிற் புணர்ச்சியே விழுமிது; ஏனெனில், பிரிவுத் துன்பில்லை என்பர் குன்றம் பூதனார். மேலும் தமிழின் பொருளிலக்கணத்தை நன்காராயாதார் களவொழுக்கத்தைச் சிறப்பெனக் கருதார் என்றும் கூறியுள்ளார்.

ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல் எனப் பிரிவுகள் களவில் உள்ளன. ஆதலால்

---

37. The Concept of Tamil Love.

குன்றம் பூதனர் களவில் பிரிவுத்துன்பில்லை என்பது பொருந்தாது என்று 'தமிழ் வரலாறு' என்னும் நூலில் மகாவித்துவான் இராகவையங்கார் காட்டியுள்ளார். ஆனல், களவிற் பிரிவைக் கற்பிற் பிரிவுடன் ஒப்பிட்டு நோக்குங்கால், முன்னது நெடும் பிரிவாகத் தோன்ருது. அதனல் களவிலே பிரிவில்லை எனப் புலவர் உயர்வு நவிற்சியாக உரைத்திருக்கலாம் என்றும் தெரிவிப்பர்.[38]

இப்பகுதியில் உரையாசிரியர் பரிமேலழகர் வரைந்த 'இக் கற்பிற் போலத் தலைவர் நீங்குதலறியாக் களவிற் புணர்ச்சி' என்னும் உரையையும் மேற்கருத்துக்குத் துணையாகக் காட்டுவர். களவில் ஊடல் இல்லை என்னும் குன்றம் பூதனர் கருத்து, தொல்காப்பியக் களவியல் 20 ஆம் நூற்பாவுக்கு நச்சினர்க்கினியர் வரைந்த உரையோடும் நற்றிணை 119 ஆம் பாவிஞேடும் மாறுபடுகின்றது என்பர் இராகவையங்கார். இவர் ஆரியர்களின் எண்மணத்துள் ஒன்ருய காந்தருவத்தையே களவெனக் குன்றம் பூதனர் கூறியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இராகவையங்கார் கருத்துப்படி காந்தருவமும் களவும் ஒன்ருகும். ஆனல் அவை இரண்டற்கும் சில வேறுபாடுகள் உள. இறையனர் களவியல் உரை அவை இரண்டினுக்குமுள்ள ஒற்றுமைகளைக் கூறுவதோடமையாது வேற்றுமைகளையும் கூறும்.[39]

பொருளை அகமென்றும் புறமென்றும் பகுக்கும் பாகுபாடு தமிழ்மொழியின் சிறப்பியல்களுள் ஒன்றெனப் பாயிர விருத்தியில் வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்லுநரான சிவஞானமுனிவர் தெரிவித்துள்ளார்.[40] நாவலர் வேங்கடசாமி நாட்டாரும் மறைமலையடிகளாரும் அகத்திணையுள் களவு சிறந்ததென்பர்.[41] களவினைக் குறிப்பிடும் போது தம் காப்பியமாய சிந்தாமணியில்

38. தமிழ் வரலாறு பக். 113, 114.
39. இறையனர் களவியலுரை. பக். 30,33.
40. தொல். பாயிரவிருத்தி, பக். 7.
41. கலித்தொகைச் சொற்பொழிவுகள், பக். 5,6.
பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம், பக். 71.

திருத்தக்க தேவர் 'தென்றமிழ் மெய்ப் பொருள்' என்றும் 'இன்றமிழியற்கை யின்பம்' என்றும் பாடுவர்.[42] பத்துப் பாட்டுள் ஒன்றாய குறிஞ்சிப் பாட்டினைப் பார்ப்பன மரபிற் றோன்றிய கபிலரென்பார், தமிழின் களவுச் சிறப்பை ஆரிய அரசன் பிரகத்தனுக்கு அறிவுறுத்தற்காகப் பாடினார் என்பது யாவரும் அறிந்த ஒன்று. களவுப் புணர்ச்சி வடமொழி இலக்கியங்களில் சிறப்பிக்கப் பெற்றிருக்குமானால், ஆரிய அரசனுக்கு அதனை அறிவுறுத்தக் கபிலர் முற்பட்டிரார். எனவே, குன்றம்பூதனார் குறிப்பிடும் களவு வடமொழிக் காந்தருவமாகாது. தமிழுக்கே உரிய தனிச்சிறப்பு வாய்ந்த தாகும். இப்புலவர் நான்மறை விரிக்கும் ஆரியப் புலவர்களை நோக்கித், 'தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழாய் வந்திலார் கொள்ளாரிக் குன்று பயன்' எனக் கூறுவது காண்க. தமிழிலுள்ள பொருளதிகாரச் சிறப்பை நன்கறியாத ஆரியப் புலவர்கள் களவுப் புணர்ச்சியை விழுமிதெனக் கொள்ளார் என்பதே இதன் கருத்தாகும்.

மகாவித்துவான் இராகவையங்கார் அவர்கள் மெய்யுறு புணர்ச்சியில்லாத உள்ளப் புணர்ச்சி, உள்ளப்புணர்ச்சியுடன் கூடிய மெய்யுறு புணர்ச்சி எனக் களவுப் புணர்ச்சி இரு வகையின தென்றும், அவற்றுள் முன்னதே பின்னதிலும் சிறந்ததென்றும் கூறுவர்.[43]

சங்ககாலப் பெரும் புலவரும் நூற்றுக் கணக்கான பாடல்கள் பாடியவருமான கபிலர், களவின் பல்வேறு நிலை பற்றிப் பாடியுள்ளார். அவர் பாடல்களில் பல களவில் மெய்யுறு புணர்ச்சி உண்டு எனக் கூறுகின்றன. அவரைப் போலவே உடன்வாழ்ந்த மற்றைப் புலவர்களும் தம் அகத்திணைப் பாடல்களுள் களவில் மெய்யுறு புணர்ச்சியைச் சுட்டியுள்ளனர்[44]. ஆகவே, களவில் மெய்யுறு புணர்ச்சி

42. சிந்தாமணி, 1328, 3063.
43. தமிழ் மொழி வரலாறு, பக். 118
44. அகம் 62, 162, 332,
குறுந்தொகை, 57, 62.

சிறப்பாகக் கருதப்படவில்லை எனும் இராகவையங்கார் கருத்து, பொருத்தமாகப் படவில்லை. களவின் சிறப்புப்பற்றி குன்றம்பூதனார் சில அடிகளைப் பாடியதன் நோக்கம், தமிழறிஞர்கள் கண்ட கருவூலமான பொருளதிகாரத்துக் காணப் படும் இச்சீரிய கருத்தை வடமொழிப் புலவர்கட்கு அறிவிக்க வேண்டுமென்பதுதான்.

'நான்மறை விரித்து நல்லிசை விளக்கும் வாய்மொழிப் புலவர்கள் தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமென விளங்கும் பொருளதிகாரச் சிறப்பை உணரார் என்பதை நிலை நாட்டவேயாம். ஆதலின்,

'தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன்!'

என்னும் பகுதியில் வரும் 'தண்டமிழாய் வந்திலார், என்பது, பொருளதிகாரத்தை அறியாத தமிழர்களைக் குறிப் பதாகும் என மகாவித்துவான் இராகவையங்கார் விளக்கந் தருவது ஏற்புடையதன்று.

'நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது
காதற் காமம் காமத்துச் சிறந்தது
விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி
புலத்தலிற் சிறந்தது கற்பே அதுதான்
இரத்தலும் ஈதலும் இவை உள்ளீடாப்
பரத்தை உள்ளதுவே பண்புறு கழறல்
தோள்புதி துண்ட பரத்தையில் சிவப்புற
நாளணிந்து உவக்கும் சுணங்கறை யதுவே
கேளணங் குறமனைக் கிளந்துள சுணங்கறை
சுணங்கறைப் பயனும் ஊடல் உள்ளதுவே
அதனால்,
அகறல் அறியா அணியிழை நல்லார்
இகல்தலைக் கொண்டு துனிக்கும் தவறிலரித்

தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன். (பரி, 9 : 12-26)

இப் பகுதிகள் சிறந்தவை. இவை களவு கற்பினை விளக்கிக் கற்பினும் களவு விழுமிது என்பதை வடமொழிப் புலவர்க்கு விளக்குவனவாம்.

7. கேசவனர்

செவ்வேளைப் பற்றிய 14ஆம் பரிபாடல் ஒன்றனையே கேசவனர் பாடியுள்ளார். இப்பாடலுக்கு இப் புலவரே பண் அமைத்துள்ளார். மகளிர் யாழெழுப்பிப் பாடும் பாட்டினை விழைந்தோய்-

கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை
எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே'

எனச் செவ்வேளைப் பாடியுள்ளார். இக்கருத்து இப்புலவர் தம் இசைப்புலமையைப் புலப்படுத்தும். கிடைத்த பரி பாடல்களுள் இவர் பாடலே மிகச் சிறியது. செவ்வேளைப் பாடிய புலவர்கள் ஒப்பவே இப்புலவரும் அவர் சூரபதுமனைக் கொன்றதைக் குறிப்பிட்டுள்ளார். செவ்வேளையும் அவருறையும் பரங்குன்றையும் எழிலுறப் பாடியுள்ளார்.

பரங்குன்றப் புனைவு

பரங்குன்றத்துள்ள சுனைகள் மழைவெள்ளத்தால் நிரம்பி மலர்கள் நிறையப் பூத்துள்ளன. தண்ணறுங் கடம்ப மலரிலே கமழ்தாது ஊதும் வண்ண வண்டுகள், பண்போல இமிர்ந்தன. குன்றத்துள்ள மூங்கில்கள் ஆண்டு உறையும் ஆடுமகளிரின் தோள்களை ஒத்தன. வாகைப்பூப் போன்ற கொண்டையுடைய மயில் அகவுங் குரல் மணந்து தணந் தோரை 'நீடன்மின் வாரும்' என்பவர் சொற் போன்றது. நாண்மலர்க் கொன்றைகள் பொலந்தார் போன்றன. அழுஞ் சிறுரை அழுகைநீக்கத் தாய்மார் 'புலிபுலி' யென்றுகூறுமாறு

வேங்கைப் பூக்கள் அகன்ற பாறைக்கண் பரவிக் கிடந்தன. நெருங்கிய அரும்புகளையுடைய காந்தள்கள் மலர்ந்தன. அவற்றிடையே பவழத்தன்ன கொடிப் பூக்களும் செங்காந் தளும் பூத்துக் குலுங்கின. இங்ஙனம் பரங்குன்றம் கார் காலக் கவின் பெற்றுப் பொலிந்தது.

செவ்வேளின் சிறப்பு

குன்றினைப் புனைந்த பின்னர்க் குமரவேளின் குன்றாப் புகழ் பாடத் தொடங்குவர் கேசவனார். 'ஒளி காலும் வேற் படையால் சூரனையும் அவனது சுற்றத்தையும் அழித்தொழித் தோய்! கார்காலத்தில் வெண்மேகம் விண்ணிடைக் கிளர்ந்து எழுந்தாற் போன்ற அகில் முதலியவற்றாற் புகைத்த நறும் புகை விழைந்தோய்! ஆறுமுகமும் பன்னிரு தோளும் கொண்டு வள்ளியெனும் மலரனைய மகளை நயந்தோய்! ஒருவிய கேளிர் மருவுதற் பொருட்டு நங்கையர் யாழெடுத்துப் பாடும் பாட்டமர்ந்தோய்! பிறந்தபோதே நின்னைக் கண்டு விண்ணவர் அஞ்சும் வீறு பெற்றோய்! இரு பிறப்பும் இரு பெயரும் செந்தண்மையும் இசையும் வாய்ந்த அந்தணர்தம் அறத்துறைவோய்! இன்னணம் யாமறி அளவை நின்னை மேவிப் பாடி அடுத்தடுத்து வழிபடுவதன் பயனாக நின் புகழி னும் பலவாக எம் வழிபாடுகள் பல்குக' எனக் கேசவனார் வாழ்த்திச் செவ்வேளை வேண்டுகின்றார். கேசவனார் இறை வழிபாட்டினை வேண்டுவதொத்தே அடியவர்கள் இறைவன் பால் வரம் கேட்டதைப் பெரியபுராணத்தும் நாலாயிரப் பிரபந்தத்தும் காணலாம்.

கூடு மன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'

(பெரிய- திருக்கூட்டம், 8,)

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தங் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

(நாலா. 873)

'போர் மலிந்து
சூர்மருங் கறுத்த சுடர்ப்படை யோயே
கறையில் கார்மழை பொங்கி யன்ன
நறையின் நறும்புகை நனிய மர்ந் தோயே
அறுமுகத்து ஆறிரு தோளால் வென்றி
நறுமலர் வள்ளிப் பூநயந் தோயே
கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை
எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே
பிறந்த ஞான்றே நின்னை உட்கிச்
சிறந்தோர் அஞ்சிய சீருடை யோயே
இருபிறப்பு இருபெயர் ஈரநெஞ்சத்து
ஒருபெயர் அந்தணர் அறனமர்ந் தோயே
அன்னை யாகலின் அமர்ந்தியாம் நின்னைத்
துன்னித் துன்னி வழிபடு வதன்பயம்
இன்னும் இன்னும் அவை யாகுக
தொன்முதிர் மரபின்நின் புகழினும் பலவே!'

(பரி. 14; 16-32)

எனும் கேசவனார் பாடற்பகுதி இசையுடன் பாடி வழிபாடு செய்தற்கு ஏற்றதாதலைப் பல்கால் ஓதி உணரலாம்.

8. நப்பண்ணனார்

செவ்வேளைப் பற்றிய பாடல் ஒன்று மட்டுமே (19) நப்பண்ணனார் பாடியதாகப் பரிபாடலிற் காண்கின்றோம். நப்பூதனார், நக்கீரனார், நப்பசலையார் என்னும் பெயர்களி லுள்ள 'ந' எனும் முன்னொட்டு அப்புலவர்தம் பெருமையை உணர்த்துமாப் போலவே, நப்பண்ணனார் என்னும் பெயரி லுள்ள 'ந' என்பதும், இப்புலவர்தம் சீர்மையைப் புலப் படுக்கும்.

பரங்குன்றச் செலவு

விண்ணகத் தேவர்கள் கண்டின்புற ஆண்டு முருகன் விரும்பி எழுந்தருளியது போலவே, இம்மண்ணக மக்களும்

கண்டின்புறுதற்கு அவர் திருப்பரங் குன்றத்துக் கடம்ப மரத் தடியின்கண் உறைந்துள்ளார். வானுலகத்துத் தேவ சேனையை மணந்ததற்கு மாறாக மண்ணக மடந்தை வள்ளி யையும் செவ்வேள் மணம் புணர்ந்தனர் போலும். மைந்தரும் மகளிரும் ஆடை அணிகலன்களால் ஒப்பனை செய்து கொண்டு குதிரையிலும் தேரிலுமாகப் பரங்குன்றம் ஏறிச் செல்கின்றனர். அவர்கள் அங்ஙனம் செல்வது அறம் பெரி தாற்றி அதன் பயன் பெறுதற்குச் சிறந்தோருலகம் செல்வது போன்றுள்ளது.

பாண்டியர் பாசறையா?

பரங்குன்றில் விழா நிகழும்போது மதுரையிலிருந்து இக் குன்றுவரை, மக்கள் ஒரே கூட்டமாகத் திரண்டு விடுவர். அவர்கள் தலையில் அணிந்த கண்ணி (தலைமாலை) இடை வெளியின்றி நிறைந்திருத்தலான் ஒத்த பூக்களை நிறைய வைத்துக் கட்டி நிலத்திற்கு இட்ட மாலைபோலக் காட்சியளிக் கிறது. பாண்டிய வேந்தன் மயிலனைய மனைவியரொடும் கண்ணனைய அமைச்சரொடும் நாட்டு மக்களும் நகரமக்களும் புடைசூழப் பரங்குன்றேறிக் கோயிலை வலம் வருதல், திங்கள் விண்மீன்களுடன் மேருமலையை வலம் வருவது போன் றுள்ளது. திருப்பரங்குன்றத்துக்கு வந்தோர் சிலர் மலையடி வாரத்து மரங்களில் யானைகளைக் கட்டினர். குதிரைகளை வழி யினின்று நீக்கினர். தேர்களை ஒதுக்கி ஒரு புறமாக நிறுத் தினர். கரி, பரி, தேர் முதலியன ஆண்டுப் பரந்து காணப் பெற்றமையால் குன்றின் கீழுள்ள நிலப்பரப்பு பாண்டியனது பாசறை போலத் தோற்றமளித்தது.

ஒலி மலிவு

குன்றேறி நின்றார் சிலர் ஆண்டுள்ள குரங்குகட்குத் தின் பண்டம் வழங்கினர். சிலர் கருங்குரங்குகட்குக் கரும்பு நல்கினர். இசைஞர்கள் சிலர் தெய்வத் தன்மையுடைய பிரம வீணை எழுப்பினர். வேய்ங்குழல் ஊதினர் சிலர். யாழைச் சமனாக வாசித்தனர் சிலர். பூசனையின் அழகியலைப்

புகன்றனர் சிலர். யாழோசைக் கேற்ப முரசு முழக்கினர் சிலர்.

ஓவிய அழகு

தண்பரங்குன்றத்து முருகன் கோயிலில் கண்ணைக் கவரும் பலவகை ஓவியங்கள் இருந்தன. சிலர் அவற்றைக் கண்டு ஓவென வியந்தனர். சுவரில் வரைந்துள்ள நாண்மீன்களையும் தாரகைகளையும் உடைய சுடர்ச் சக்கரத்தைப் பொருந்திய கதிரவன் முதலாக வரும் கோள்களின் நிலையை அறிவார் சிலர். வண்ண ஓவியங்களைச் சுட்டிக்காட்டி இவை யாவை யென வினவிய மனைவிமார்க்கு 'இவள் இரதி, இவன் காமன், இப்பூனை இந்திரன், இவள் அகலிகை, இவன் அவ்விடத்திற் சென்ற கவுதம முனிவன், இவன் சினம் மிகுதலால் இவள் கல்லுருவெய்தியவாறு இது' எனக் கணவன்மார் விடையிறுத் தனர். இவ்வாறு பலப்பல எழிலோவியங்களாற் பண்டைக் காலத்தே பொலிவுற்று விளங்கியது பரங்குன்றத்து முருகன் கோயில்.

பரங்குன்ற விளையாட்டு

பேதைச் சிறுமி ஒருத்தி தன் தமரினின்றும் பிரிந்துபோய் விட்டாள். பிறகு அவர்களைத் தேடித்தேடி அலைந்து காணாது திகைத்து 'ஏ ஏ, ஓ ஓ' என்று அரற்றினாள். அவ்வொலியைக் குன்றின் குகைகள் எதிரொலித்தன. அதனை அறியாத சிறுமி, தமர் தன்னை அழைப்பதாகக் கருதிக்கொண்டு அங்கு மிங்கும் ஓடி, அவர்களைக் காணாது வறிதே மீண்டாள். மீண்டும் தமரை யழைத்தாள். இவ்வாறு குன்று சிறு மகளிரை ஏமாற்றமுறச் செய்தது.

இளம் பெண்கள் தளிர்களைப் பறித்துச் சுனையிலிட்டனர். அவை ஆண்டுள்ள மலர்களையும் அரும்புகளையும் பொருந்தித் தலை தூக்கிக் கிடந்தன. இவற்றுள் மலரைப் பொருந்திக் கிடந்த தளிரை ஐந்தலையரவென்றும், முதிர்ந்த பேரரும்போடு

பொருந்திக் கிடந்ததை அதன் மூத்த பிள்ளையென்றும், இளம் அரும்போடு கிடந்ததை அதன் இளையபிள்ளை என்றும் கருதி, அச்சிறு மகளிர் மயங்கினர்.

பலவகை மலர்களின் நிறம் வடிவு முதலியவற்றை நன் கறிந்து அவற்றிற்குத் தக அடைமொழி புணர்த்துக் கூறியுள் ளமையை நப்பண்ணனார் பாடலிற் காணலாம்.[45] மகளிர் வாய்போல் ஆம்பல் மலர்ந்தன. கைபோல் கமழ்குலைக் காந்தள் கட்டவிழ்ந்தன. வேங்கை மலர்கள் நிறத்தால் எரியென விரிந்தன. தோன்றி, நறவம், கோங்கம் ஆகியவை மலர்ந்து பொலிந்தன. இம்மலர்கட்கு நிறத்தால் வேறுபட்ட இலவு பூத்தது. இவையெல்லாம் தெற்றின மாலைகள் போல மலர் நிறைந்தும், கோத்த மாலைகள் போல நிறம் மாறுபட்டும், தொடுத்த மாலைகள் போல இடையிட்டும், தூக்கிக் கட்டின மாலைகள் போல நெருங்கியும் மலர்ந்து பன்னிறத்தோடு காணப்பெறும் கீழ்வானத்தை ஒத்திருந்தது.

பழைய வழக்கம்

இப் புலவர் பண்டைய வழக்காறு ஒன்றனைத் தம் பாடலில் குறித்துள்ளார். கன்னிப் பெண்களும் மணந்த நங்கையரும் செவ்வேளின் ஊர்தியாகிய யானையை அணி செய்வர். அதன் சென்னியைக் குங்குமத்தால் அழகுபடுத்திப் பூவும் நீரும் தெளித்துக் கவரி சார்த்திப் பவழக் காம்புடைய பொற்குடையை ஏற்றுவர். பின் பூசனை புரிந்து வழிபடுவர். அப்பூசைக்கண் அந்த யானையுண்ட கவழமிச்சிலை விருப்புடன் உண்பர். அதனை உண்ணுநராயின் மங்கையர்தம் கணவன் மாரின் சிறந்த அன்பைப்பெற வியலாதென்றும், கன்னியர் குறைவிலாக் கொழுநரைப் பெறவியலாதென்றும் கருதினர்.

'பன்மண மன்னு பின்னிருங் கூந்தலர்
கன்னிமை கனிந்த காலத் தார்நின்

45 Treatment of nature in sangam Literature, P. 95.

'கொடியேற்று வாரணங் கொள்கவழ மிச்சில்
மறுவற்ற மைந்தர்தோள் எய்தார் மணந்தார்
முறுவற் றலையளி எய்தார்நின் குன்றம்
குறுகிச் சிறப்புணக் கால்.' (பரி. 19 : 89-94)

செவ்வேளின் செம்மை

முருகனின் ஆடையும் மாலையும் சிவப்பாக உள்ளன. வேற்படையும் பவழ நிறம் பெற்றுள்ளது. அவர்தம் நிறம் எரிகின்ற தீயை ஒத்துள்ளது. முகம் இளங்கதிரவன் போன்றுள்ளது. இவ்வாறு அனைத்தும் செந்நிறமாயிருப்பதைப் புனைந்து செவ்வேளின் பெயர்ப் பொருத்தத்தைக் குறிப்பிற் காட்டுவர். முருகனைப் பாடிய பிறபுலவர்களை ஒப்பவே நப்பண்ணனாரும் மாமரமாகவும் கிரௌஞ்ச மலையாகவும் உருவெடுத்த சூரபதுமனை அழித்தொழித்தமையைக் குறிப்பிட மறந்தாரிலர்.

9. நல்லச்சுதனர்

பரிபாடலில் செவ்வேளைப் பற்றிய இருபத்தோராம் பாடல் ஒன்று மட்டுமே பாடியவர் நல்லச்சுதனர் ஆவார். பரிபாடலுக்குப் பண் வகுத்த மருத்துவனர் நல்லச்சுதனர் இந் நல்லச்சுதனரினும் வேருவர். இப் புலவரே வேறு சிலர் பாடிய பாடல்களுக்குப் பண் வகுத்துள்ளார். ஆனால் இவர் பாடலுக்குப் பண் வகுத்தவர் கண்ணனாகனராவர். ஆகவே, இவர் புலவர் மட்டுமன்றி இசைஞருமாவர் என அறிகின்றோம் இவர் இசைஞர் ஆதலின், இசைபற்றிய பல குறிப்புகள் இவர் பாடலிற் காணப் பெறுகின்றன. அவற்றை 'இசைஞர் கள்' எனப் பின் வரும் பகுதியில் 'நல்லச்சுதனர்' எனும் தலைப்பின்கிழ்க் காணலாம்.

புலவர் வேண்டுகை

இப்புலவர் செவ்வேள்மாட்டும் அவர் அமர்ந்துறையும் திருப்பரங்குன்றத்தும் அடங்கா ஆர்வலர். இப்பொழுது

முருகனைக் கண்டின்புறுதல் போல எஞ்ஞான்றும் பரங் குன்றத்தடியிலே தங்கிச் செவ்வேளடியினைத் தமரொடு பரவுதல் வேண்டும் என இருமுறை வேணவாவுடன் வேண்டுவர்.

செவ்வேளும் ஊர்தியும்

'நன்றமர் ஆயமோ டொருங்குநின் அடியுறை
இன்றுபோல் இயைகெனப் பரவுதும்
ஒன்றூர்த் தேய்த்த செல்வநிற் றெழுதே! (பரி. 28 : 68-70)

'தரைவிசும் புகந்த தண்பரங் குன்றம்
குன்றத் தடியுறை இயைகெனப் பரவுதும்
வென்றிக் கொடியணி செல்வநிற் றெழுது! (பரி. 21: 15-17)

இப்புலவர் தம் பாடலில் முருகனை ஆறு தலையும் பன்னிரு கையுமுடையராகக் கூறியுள்ளார். இவ்விறையின் ஊர்தி எரியொக்கும் பொன்னோடை பொலிந்த சென்னியினையுடைய வேழமாகும். திருவடியிலே விளங்குவது தாமரை போன்ற அவ்வடிக்கியைந்ததும் தோலால் தைக்கப் பெற்றதும் பீலியால் புனையப் பெற்றதுமாய அடையற் செருப்பு. இவர் மிதியடி அணிந்துள்ளதாக இப் புலவரே கூறியுள்ளார். மாமுதல் தடிந்து கிரௌஞ்சகிரியைப் பிளந்து வென்ற வேல் அவர் கையிலுள்ளது. அவர் அணிந்திருப்பது வள்ளிப் பூவை இடையிட்டுத் தொடுத்த கடப்பந்தாராகும். அவர் அமர்ந் திருப்பது ஏழிலைப் பாலையையுடைய தாழ்வரையாகிய இலகடத்தையும் (யானை மேற்றவிசு) அருவியாகிய முகபடாத் தினையும் உடைய யானையைப் போன்று விசும்புநிவந்த தண் பரங்குன்றம். இப் புலவர்க்கும் பரங்குன்று யானைபோல் காட்சி அளிக்கிறது. குன்றிலுள்ள ஏழிலைப்பாலையின் மணம் புலவர்க்குக் களிற்றின் மதநாற்றம் போல் தோன்றுகிறது. புலவரேறாகிய கம்பரையும் இவ்வுவமை கவர்ந்துள்ளது. அவர் மலைக்காட்சியைப் புனைகின்றபோது ஏழிலைப்பாலையை யும் அதன் மணத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

பாத்த யானையின் பதங்களிற் படுமதம் நாறக்
காத்த வங்குசம் நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப்
பூத்த வேழிலம் பாலையைப் பொடிப்பொடி யாகக்
காத்தி ரங்களாற் றலத்தொடுந் தேய்த்ததோர் களிறு.'

(வரைக் காட்சிப் படலம், 6.)

மனைவியர் மனப்பாங்கு

திருப்பரங்குன்றத்து நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை இப் புலவர் சித்திரித்துள்ளார். தன் அடியிற் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப ஓர் ஏந்திழை நல்லாள் துடி முழக்கத்துக் கியையத் தோளசைத்துத்தேறல் உண்ட மகிழ்ச்சி தடுக்க ஆடினள். ஆடினளது அழகில் உள்ளத்தைப் பறிகொடுத்த கொழுநன்மார் தம் அருகே மனைவியர் இருப்பதைப் பார்த்தும் அவளையே உற்று நோக்கினர். இதனைப் பொருது ஒருத்தி அவ்வாடல் நங்கையின் அழகினை வியந்து, இஃது இவனைப் பேதுறுத்தும் என உட்கொண்டு, செவ்வேல் எனச் சிவந்த நோக்கொடு சீற்றமுற்றுத் துணிந்து நோக்கித் தன் கணவனைத் தன்பால் ஈர்த்தனள். இவளினும் அழகாக ஒப்பனை செய்து கொள்ளின், தன் கொண்கன் அவளை நோக்கான் என எண்ணிய ஒரு மங்கை கண்ணடியைப் பார்த்துக் கதிர்விடும் அணிகலன்களைத் திருத்தித் தன் அழகிற்கு அழகு செய்தாள். தன் கொண்டானை மணத்தால் கவரக்கருதிய வேறொரு மடந்தை தன் பருத்த நகிலிடைச் சந்தனத்தைப் பூசி உதிர்த்து மணம் நிலைபெற்ற வழி தன்னை மணக்க வருவான் எனக் கருதி, அச்சந்தனத்தை மீண்டும் மார்பகத்தே பூசினள். இம் மகளிர் தம் நிலை கைவல்லான் பரங்குன்றத்துத் தீட்டிய ஓவியமெனப் பொலிகின்றது.

'சுடுபொன் ஞெகிழத்து முத்தரிசென் றார்ப்பத்
துடியின் அடிபெயர்தத்துத் தோளசைத்துத் தூக்கி
அடுநறு மகிழ்தட்ப ஆடுவாள் தகைமையின்
நுனையிலங்கு எஃகெனச் சிவந்த நோக்கமொடு

துணையணை கேள்வனைத் துனிப்பவள் நிலையும்
நிழல்காண் மண்டில நோக்கி
அழல்புனை யவிரிழை திருத்துவாள் குறிப்பும்
பொதிர்த்த முலையிடைப் பூசிச் சந்தனம்
உதிர்த்துப் பின்னுற ஊட்டுவாள் விருப்பும்
பல்லூழ் இவையிவை நினைப்பிலன் வல்லோன்
ஓவத் தெழுதெழில் போலும் மாதடிந்
திட்டோய்நின் குன்றின் மிசை.' (பரி. 21 : 18-29)

இயற்கைப் புனைவு

உளங்கவர் இயற்கைப் புனைவுகளும் இப்புலவர் பாட்டிற் கண் உள்ளன. மேக ஒலி கேட்டு மயில்கள் மகிழ்ந்து, நீல ஆலவட்டம் விரித்தாற் போன்று, தம் கோலக் கலாவம் விரித்தாடுகின்றன. வண்டினம் யாழிசை ஒப்ப, இசைக் கின்றது. வங்கியத்துக்கிசை இயையத் தும்பிகள் மலரூதி முரல்கின்றன. அருவி முழவு நிகர்ப்ப, ஒலித்தோடுகின்றது.

சுனையில் மூழ்கிப் புனலாடும் காரிகை கரையில் நிற்கும் காதலனை மூங்கிலைப் புணையாகத் தருக என வேண்டினள்; அவன் அதற்கு மாறாக அரக்குநீர் கரந்த வட்டை எறிய அது கொண்டு நீந்தப்பெறாது ஆழநீர் நிலைக்கட் சென்று அமிழ்ந் தனள். அவ்வளவில் ஆருயிர்க் காதலன் அவளை அணுகி, ஆரத்தழுவிக் கரை சேர்த்தனன். இப் பெற்றித்தாய இன்பினையும் நல்குஞ் சிறப்புடையது தண்பரங்குன்றம்.

மாலையணிந்த மைந்தர் பூசிய சந்தனத்தை உலர்த்தும் காற்றும், கயல்புரை கண்ணியர் பூந்தாதினை உதிர்த்த கூந்தலினூடு புகுந்து அசைந்து வந்த காற்றும், முருகவேளின் பூசைக் கெடுத்த நறுமணப் புகையிடைத் தவழ்ந்து வந்த காற்றும், பரங்குன்றத்தே மணங்கமழ வீசுகின்றன. இது போலவே பல நறுமணமுள்ள இடங்களெல்லாம் நுழைந்து மதுரைத் தென்றல் வீசுவதாக இளங்கோ புனைவதும் ஒப்பு நோக்கத்தக்கது.

10. நல்லழிசியார்

வையையைப் பற்றிய 16ஆம் பாடலும் செவ்வேளைப் பற்றிய 17ஆம் பாடலுமான இரண்டுமே நல்லழிசியாரால் பாடப் பெற்றவை. ஓரேட்டில் நல்லழுசியார் என்று இவர் பெயர் காணப்படுகின்றது.

வையை வரவு

வையைக் கரை, துறை, வயல்கள் என்னுமிவற்றை இப் புலவர் புனைந்துள்ளார். வையை யாற்றின் கரைமீது மிளகுக் கொடி, சந்தனம், நெய்குடை தயிர்போன்ற நுரை முதலிய வற்றைப் 'பாண்டியனது ஈகை போன்றன' என்று கண்டார் கூறும்படி அலைகள் மேன்மேல் வீசிக் கொண்டேயிருக்கும். முத்துவடம், தலைக்கோலமுத்து, பொன்னணி, நீர் கொணர்ந்த மணிகள், நீராடும் சிறார் தலையிலணிந்த முஞ்ச மென்னு மணி இவற்றால் வையைத்துறை நிறைந்திருக்கும். அயலிலுள்ள வயல்கள், விடுமலர் சுமத்தலானும் பூவும் நீரும் நிறைதலானும் நடன மாதர் ஆடும் அரங்கினை ஒக்கும். பொழில்கள் தமக்கு விருந்தயர்ந்த நீருக்குத் தாம் எதிர் விருந்தாற்றுதல் போலச் சுரும்பிமிர் தாதொடு நறுமலர்களை வையைக்கு அளிக்கும். வையை வரவால் சோலையும், குளங் களும் ஆற்றிடைக் குறையும் தேனார்ந்து வண்டு ஒலிக்கப் பூக்கள் நிறைந்து பொலிவுடன் விளங்கின.

புதுப்பூம்புனல்

புனலாட்டில் நிகழும்காதற் காட்சிகள் சிலவற்றை இப் புலவர் குறிப்பிடுவர். ஆயத்தார் மூங்கிற் குழாயினால் அரக்கு நீரைக் காதற்பரத்தை ஒருத்தியின் குரும்பை நகிலின்மீது வீசினர். அவள் அதனைத் துடையாது முன்றானை யால் ஒற்றி நின்றாள். அவ்வமயம் அவள்பால் தலைமகன் ஏகினன். 'பூத்தனள் நங்கை அவள்பால் சேறற்க' எனத் தோழியர் குழாம் நகையாடி நின்றது. மணத்தால் செஞ்சாந் தென அறிந்த தலைமகன், புன்னகையுடன் அவளை அண்மி,

கடலை நோக்கி ஓடும் யாறெனை அவளை விரைந்து இல்லிற் கழைத்துச் சென்று, களிப்பு மிக்க தேறலும் பருகாளுய்க் குருதி போலும் நீரைத் துடைத்துப் புல்லினன். ஆயத்தார், 'பூத்தனள் நங்கை பொலிக' என அவள் இல்லத்தார்க்குக் கூற, அம்மங்கை நாணி நின்ருள். இதற்கெல்லாம் காரண மாய் வையையில் புதுப்புனல் வந்தது.

வையைக் காட்சி

கரையில் நின்ற மரங்கள் உதிர்த்த மலர்களும் மகளிர் கூந்தலினின்றும் வீழ்ந்த பூக்களும், மைந்தர் மார்பினின்று சோர்ந்த மலரிதழ்களும் கொண்டிலங்குதலால், வையை மீனுகிய முத்துப் பூத்துப் பொலிந்த விண்ணின்கண் உள்ள கங்கையை ஒத்துள்ளது.

கெண்டையைப் போன்ற 'கண், கட்குடியாலும், புனலாட்டாலும் புலவியாலும் சிவக்கவும், கூந்தலின் மலரி னின்று தேனெழுகவும் புனலாடிய, காதற்பரத்தையைத் தலைவன் பன்முறை தழுவினன். அதனுல் அவன் மார்பி லுள்ள கத்தூரிக் குழம்பு அழிந்ததும் அழியாததுமாகச் சிதைந்து காணப்பட்டது. அத்தோற்றம் பனியால் வளைந்த மூங்கில், அப்பனி நீங்கி மேலெழுந்து விசையுடன் தாக்கு தலால், தேன் சோர்ந்து விழும் மலையை ஒத்திருந்தது.

கண்ணியும் தாரும் அணிந்த ஆடவரும், கோதையணிந்த பெண்டிரும், செய்த ஈகைப் பயனுகிய இன்பத்தை நுகர் தற்காக நாடோறும் புனலாடுகின்றனர். புனலாடும்போது அவர்கள் கையுறையாக அளிக்கும் பொன்மீன் முதலி யனவும், நறுஞ்சாந்தும், கோதையும், பூத்தபுகையும் அவியும் இடையருமல் வாய்க்க வானம் மழை பொழிவதாக; அம் மழையால் வெள்ளம் பெருகி வையை வற்ருதொழிக என்று கூறி இப்பாடலை முடிக்கின்ருர்.

பரங்குன்ற விழா

இப்புலவர்தம் பிறிதொரு பாடலில் செவ்வேளுறையும் பரங்குன்றினைப் பாடியுள்ளார். அன்பர் அக்குன்றிற்கு மலர்

களையும் குழைகளையும், பூந்துகிலினையும், மணியினையும், வேரினையும் சுமந்து செல்கின்றனர். அவர்களைத் தொடர்ந்து வருவோர் நெருப்பையும் இசைக்கருவிகளையும் சந்தனத்தையும் கொடியையும் தாங்கிச் செல்கின்றனர். அவர்களெல்லாம் முருகன் விரும்பியுறையும் கடம்பமரத்தை எய்தி வழிப்பட்டுப் பாடி அக்குன்றிலேயே தங்குகின்றனர். அங்குள்ளவர்களில் யாரும் விண்ணுலகு சென்று வாழ்தலை வேண்டிற்றிலர்.

விழாக்காலத்து இயற்கையும் கலைஞரும் போட்டியிடுவதாக இப்புலவர் கற்பிப்பர். ஒரு பக்கம் பாணர்களின் யாழ் ஒலி எழும். அதற்கு மாறாக வண்டினம் இமிர்தல் ஒரு பக்கம். ஒரு பக்கம் குழலோசை; பிறிதோர் பக்கம் தும்பியின் முழக்கம். ஒருபால் முழவிசை; அதற்கெதிராக அருவி நீர் ததும்புதல் ஒருபால். விறலியரின் ஆடல் ஒருதிறம்; வாடைக்காற்றால் பூங்கொடி நுடங்குதல் பிறிதொரு திறம். ஒருசார் பாண் மகளது பாலைப்பண் நிறைகுறைவோடு ஒலிக்கும்; ஒருசார் ஆடும் மயிலின் அரித்தெழும் குரல் எழும்.

உயர்வு நவிற்சி

மதுரையும் பரங்குன்றமும் அண்மையிலிருப்பினும் முருகனை வழிபடச் செல்லும் மக்கள் நெருக்கத்தால் மிகத் தொலைவிலுள்ளனபோல் தோன்றும். மைந்தரது குஞ்சியினின்றும் வீழ்ந்த மாலைகளால் மதுரையிலிருந்து பரங்குன்றுக்குப் போகும் பெருவழி மறைப்புண்டு வழியே இல்லாது போயிற்று. அன்பர்கள் வேட்டுச் செய்யும் பூசைக்கண் நல்கும் அகிற்புகை மேலே சேறலால் இமையா நாட்டத் திறைவரும் கண் இமைத்தனர். கதிரவன் மண்டிலமும் மறைந்தது. இவ்வாறு உயர்வு நவிற்சிபடப் பரங்குன்றம் புனையப்பட்டுள்ளது.

இயற்கைக் காட்சி

அழகிய நங்கையர் தம் காதலரொடு சுனையாடுவதால் ஆண்டுறையும் வண்டுகள் மலர்த்தேன் பருகாது அஞ்சிப்

பறந்தன. குன்றினின்றிழிதரும் அருவி உழவர்தம் வயலிற் பரந்தோடும். அங்கு விளையாடு மகளிர் இயங்குதலால் அவர் பூண்டிருந்த அணிகலன்களிலிருந்து வீழ்ந்த மணி நீலம் நிலத்தைச் சிதைக்கும். கொழுநர் வினைமுடித்து விரைவின் வந்து கூடுதற்காக, மகளிர் பரங்குன்றத்து முருகனுக்கு விழா வயர்வர். விழாவயர்வின் பயனாகத் தம் துணைவர் வந்தெய் தியதும் வையையிற் புதுப்புனலாடுவர். பாண்டிய வேந்தர் களின் தலைநகராய மதுரையில் விருந்தோம்புவர்.

செவ்வேள், 'பிணிமுகம்' எனப் பெயரிய யானையை ஊர்தியாகவும், மயிலையும், கோழியையும் கொடியாகவும் கொண்டுள்ளரர்.

'பிறவிப் பெருங்கடல் நீந்திப் பேரின்பம் எய்த வேண்டு மென்றே யாமும் எம் சுற்றமும் மக்களைப் பணிந்தொழுகாது' நின் இசை ஏத்திப் பரங்குன்றம் பாடிப் பரவுகின்றேம். என்னுங் கூற்று நல்லழிசியாரின் செவ்வேட் பற்றைக் காட்டு கின்றது.

11. நல்லெழுனியார்

திருமாலைப் பற்றிய பதின்மூன்றும் 'பாடலின் ஆசிரியர் நல்லெழுனியார் ஆவர். இதனைத் தவிர வேறு எத் தொகை நூலினும் இவர் பெயர் இடம் பெறவில்லை. சில ஏடுகள் நல்லெழினியார் என இவரை அழைக்கின்றன. எழினி என்னும் பெயர் இவர் கடை எழு வள்ளல்களுள் ஒருவரான அதிகமானெடுமானஞ்சி மரபினைச் சார்ந்தவராகலாம் எனக் கருதற்கிடந்தருகிறது. திருமாலின் புனைவு இவர் பாடலில் அழகுற அமைந்துள்ளது.

திருமாலின் உருவம்

நீல மலையிற் பரந்த இளஞாயிறு போன்று நீலவண்ண னாகிய திருமால் பொலம் பூவாடையினையும் பொன்முடியினை யும் அணிந்துள்ளார். மலையினின்று ஓடிவரும் அருவியினை

யொப்பத் தம் மார்பில் மாலை அணிந்துள்ளாரேனும், அம் மாலை நிறத்தால் அருவியொடு மாறுபட்டுள்ளது. பாம்புப் பகையும் பன்னிறமுடையதுமான கருடனெழுதிய கொடியை கொண்டுள்ளார். தீயாரைத் தெறுதற்கும் அன்பரை அளித் தற்கும் அணங்குடைய தண்ணளி கொண்ட ஆழி ஏந்தி யுள்ளார். கார்ப் பருவத்துக் கரிய மேகம் இருபக்கமும் ஞாயிறும் திங்களும் கொண்டிலங்குவது போலத் திருமால் நேமியும் சங்கும் தன்னிரு கைகளில் ஏந்தியுள்ளார். அவர் மார்பகத்துள் பொன்னணி மின்போல் ஒளிரும். முத்தாரம் வரையினிழிதரும் அருவி ஒக்கும். இக்கருத்தைத் தழுவித் திருவேங்கட மலையில் உள்ள திருமாலின் நின்ற வண்ணத்தை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்துப் புனைந்துள்ளார்.

'விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ராரம் மார்பிற் பூண்டு
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்,'

(சிலம்பு. 11 : 43–51.)

திருமாலின் சிறப்பு

திருமாலுக்குரிய உயர்ந்த துறக்கத்தைத் திருமகள் உறையும் அவர்தம் அகன் மார்பத்தைத் தொழுவோர் எளிதிற் பெறுவர். மணங் கமழும் துளபமாலை யணிந்து தன்னிறத்துக்கு மாறுபட்ட பாற்கடல் நடுவண் ஆயிரந்தலை விரித்த ஆதிசேடன் மேல் பள்ளி கொண்டுள்ளவரும் திருமாலே; ஒழுக்கம் பிறழ்ந்து பெரும் படையொடுவரும் மாற்றலர்மார்பினை, நாஞ்சிற் படையால் புழுதியைஉழுமாறு போல உழும் பலதேவனும் திருமாலே; கேழலுருவாய்த் தோன்றி ஊழி வெள்ளத்தினின்றும் உலகினைக் கோட்டாற் கொணர்ந்தவரும் திருமாலே; மூவுருவாகப் பிரிந்து ஒருருக் கொண்டு விளங்குபவரும் திருமாலே. இவரை நான்மறையும் புகழ்ந்து பாடும். மேகம், காயாம்பூ, கடல், இருள், நீலமணி

என்னும் ஐந்தினையும் ஒக்கும் நிறமுடையவர். திருமாலைப் பாடிய புலவர்களுள் மேனிக்கு ஐந்துவமை கூறிய புலவர் இவரே யாவர். திருமாலின் அருண்மொழி வலம்புரி முழக்கையும் மறை முழக்கையும் நிகர்க்கும். செறுமொழி வான் முழக்கையும் உருமேற்றின் முழக்கையும் ஒக்கும். இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலமும் கடந்து, அவைதாம் பொருந்திய தாணிழல் உடையவர். அவர்தம் நற்றுள் தொழுவார்க்கு இருள்சேர் இருவினையும் சேரா. படைத்தல், புரத்தல், அழித்தல் எனும் முத்தொழிலுடைய ரெனினும், உலகுபுரத்தலையே விழையும் உள்ளத்தினர். அடி, கை, கண், வாய் ஆகிய இவையெல்லாம் பேரிதழ் வாய்ந்த தாமரைப் பூவொக்கும். தொடியும் உந்தியும் தோளணி வலயமும், தாளும் தோளும் எருத்தும் பெரியன. மார்பும் அல்குலும் மனமும் பரியன. வேள்வியும் அறனும் விருப்பொடு விழைபவர். நீங்கா மறமும் செறுச் செங்கண்ணும் உடையவர். எரியை ஒத்த வெட்சி மலரை இடையிட்டுத் தொடுத்த துழாய் மாலையை மார்பிற் கொண்டவர்.

அனைத்தும் அவரே !

திருமால் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்களாகவும், கண், காது,மூக்கு. வாய், மெய் என்னும் ஐம்பொறிகளாகவும் விளங்குபவர். ‘புலன்கள் ஐந்தனுள் ஒன்றுய ஓசையாலறியப்படும் விண்ணும் நீயே; ஓசையானும் ஊற்றானும் அறியப்படும் காற்றும் நீயே; ஓசை, ஊறு, ஒளி களால் அறியப்படும் தீயும் நீயே; ஓசை, ஊறு, ஒளி, சுவை, களால் அறியப்படும் நீரும் நீயே; ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றங்களால் அறியப்படும் நிலனும் நீயே!’ எனத் திருமாலை விளித்துள்ளார். எனவே, திருமால் அனைத்துலகுக்கும் அடிப் படைக் காரணமானவர் என்பது போதரும். திருமாலை இங்ஙனம் புனைந்துரைத்தலின் இப்புலவரை மெய்யுணர் வாளர் (தத்துவஞானி) என்னலாம்.

‘முற்பிறப்பில் யாம் செய்த தவப்பயனால் நின் திருவடி களைத் தொழுது பன்மாண் இறைஞ்சி வழுத்தும் பேறெய்

திஞேம்; யாம் மேலும் மேலும் விழைவது இங்ஙனம் பாடிப் பரவுவதையே. அதற்கு அருள் செய்வாயாக' என இப்புலவர் வேண்டித் தம் பாடலே முடித்துள்ளார்.

12. நல்வழுதியார்

வையை பாடிய பரிபாடற் புலவர் ஐவருள் நல்வழுதியார் ஒருவராவர். பன்னிரண்டாம் பாடல் ஒன்றே இவர் பெயரிற் காணப்படுவது. வேறு தொகை நூற்கண்ணும் இவர் பாடல் காணப்பட்டிலது. இவர் பெயரில் வரும் 'வழுதி' என்னும் சொல் பாண்டிய மரபினரென்று காட்டும். கரையிலுள்ள நாகம், அகில், சுரபுன்னே, ஞெமை, சந்தனம் முதலியமரங்கள் வருந்தத் தகரத்தையும், ஞாழலேயும், தேவதாரத்தையும் ஏந்திக்கொண்டு உதிர்ந்த மலர் தன்மேல் பரவிக் கிடக்க, வையை மலேயினின்று ஓடி வருவது, கடல் கிளர்ந்து வருவது ஒக்கும். வையைப் புதுப்புனல் மதுரை மதிலேப் பொரும் ஓசை கேட்டு, அந்நகர மக்கள் புனல்விழாக் கொண்டாடப் புறப்படுவர். அக்காட்சியைப் புலவர் புனேந்துள்ள திறம் இன்புறுத்துவதாகும்.

புனலாடப் போதல்

மின்னல் போல் விளங்கும் அணிகளே வேய்பவரும், பொலம்பூவணியைப் புனேபவரும், சந்தனச் சாந்தை மாற்றி அகிற்சாந்தைப் பூசுவோரும்,கார்கொள் கூந்தல் கதுப்பமைப் போரும், நறுவேருடன் கட்டிய பன்மலரை (கதம்பம்) அணி பவரும், புனலாடற்குரிய ஆடை (புட்டகம்) முதலிய உடுப் போரும், அழகிய மாலேகளே அணிவோரும், கண்ணுடி நோக்கி வாசவெண்ணெயைத் தடவி வெள்ளிய நறும்பொடி பூசுவோரும், மணமுள்ள துவர்ப்பாக்கை வாயிடுவோரும், வளே, தொடி, கட்டுவடம், காலாழி முதலிய புனேவோரும், தேன் பிலிற்றும் மாலே அணிவோரும், ஓசனே கமழும் வாச மேனியரும், பரிமேலும் கரிமேலும் தேர்மேலும் இவர்ந்து ஏகினர்,

வையைக் கரை நிகழ்ச்சி

மதுரை நகர மக்கள் புதுப்புனலைக் காண வையைக்கரையில் குழுமினர். காண்பாரது காதல் வெள்ளத்தை யெல்லாம் பருகியது போல, வையை வெள்ளம் கரையினும் மிகுந்தது. கரையில் பல்லியம் கறங்கின. சிலர் இசைக் கருவிகளுடன் பாடினர். ஆதலின் அங்கு உரையாடிய மக்களின் பேச்சு கேட்கவில்லை. இருப்பினும் ஒருசில தாம் கேட்டவற்றைப் புலவர் குறிப்பிட்டுள்ளார். பரத்தையிற் பிரிந்தான் தலைமகன் என அவன்பால் ஊடலுற்ற தலைவி அதனை மறந்து புதுப்புனல் வெள்ளத்திலே யானையின் முதுகில் தன் காதலனொடு ஏறினள். இதனைக் கண்ட சிலர் நாணுக்குறைவிடவிடமான குலமகளாக இருந்தும் இவள் நாணமுற்றிலளே என்று உரையாடிக் கொண்டனர். கூட்டத்திலிருந்த பூங்கொம்பர் போன்றுளொருத்தியின் குவிமுலை நோக்குவானைக் கண்டு, 'இவன் ஒட்டை மனவன், உரமிலி' எனச் சிலர் குறை கூறினர். வழியே செல்லுபவன்பின் தன் நெஞ்சைப் பறிகொடுத்தாள் ஒருத்தி. அதனைக் கண்டு பெண்டிர் தம் அன்பு மிகுந்தால் நிறையழியும்; அதனால் அன்பு மிகுதியை நீக்குவேமல்லமோ என்றார் சிலர். ஒரு நங்கை யணிந்துள்ள முத்தாரத்தின் எழிலை நோக்கி இதற்கேற்றன இவள்தம் இணை நகில்கள் எனக் கூறி ஒருவன் அவற்றை உற்று நோக்கினன். அதற்கு அப்பெண் நாணவில்லையே என நாணினர் சிலர்.

காதற் புனைவு

பின்னர் ஆண்டு நிகழ்ந்த சில காதல் நிகழ்ச்சிகளைப் புலப்படுத்துகின்றார் புலவர். தன் கொழுநனை ஒருத்தி நோக்க அதனைக் கண்டு மனம் பொறாத இல்லக்கிழத்தி, நீ தவறுடையை எனச் சொல்லி அவனைக் கோதை கோலாக புடைத்துத் தன் மாலையால் முன்கையை இறுக்கிக் கட்டினள் பிழை செய்யாத தூய அக்கணவன், தான் செய்த பிழை யாதென அவளைத் தொழுது வினவுகின்றான். இதே வகையில் வேறொரு தலைவியும் ஊடல் கொள்கின்றாள். தலைவன் சூளுரைத்தும், வெகுண்டும் ஊடல் தீர்க்கவும்,[1] அவள் தீராளாய் மிகப்

புலந்து, அரக்குநீர் நிறைந்த வட்டை அவன் மார்பில் வீசி எறிந்தாள். அச்செந்நீர், அவள் உண்கண்ணின் வேலேறு போலும் நோக்கப்பட்ட புண்ணிற் குருதி சோர்வது போல அவன் மார்பினின்றும் சோர்ந்தது. அத் தலைமகனும் மனஞ் சோர்ந்து கீழே விழுந்து ஊடல் நீக்க வணங்கினான். தலைவி வட்டெறிந்ததால் தலைவன் குருதிசோரக் கீழே வீழ்ந்ததாகக் கருதி அஞ்சி மயங்கி முன்புள்ள புலவியெல்லாம் நீங்கப் பெற்று அவன் மார்பகம் சேர்ந்தாள். இங்ஙனம் காதலரைச் சேர்ப்பிக்கும் வல்லமையுடையது வையைப் புனல்.

வையைப் புகழ்

மல்லிகை, முல்லை, சண்பகம், அல்லி, செங்கழுநீர், தாமரை, ஆம்பல், துளவு, வகுளம், குருக்கத்தி, பாதிரி, நாகம், நறவம், சுரபுன்னை ஆகிய எல்லா மலர்களும் கமழ் கின்ற இரு கரைகளுக்கிடையே வையை ஓடிவருகிறது. அணை களால் தேங்கி நிற்குமிடத்து வையை மாலைக் காலத்துத் தெளிந்து துறக்கத் தொழிலைத் தன்நீரிற் காட்டும். காலையில் புனலாட்டால் கலங்கிக் குருதி போல் நிறம் மாறிவிடும். இவ்வகையிலேயே நல்லந்துவனாரும் தம் பாடலிற் குறிப்பிட் டுள்ளார். பொலங்குழை ஒப்பத் தொங்குமாறு அசோகந் தளிரைக் காதிற் செருகிக் கொண்டு, பூங்கொடியைப் போல அசைந்து நின்று, முன் கையால் தன் கூந்தற் கண்ணியை அழகுடையதாகத் திருத்துவது போல நெஞ்சம் பிணிக்கும் மார்பினைக் குறிப்பிற் காட்டி நின்றாள். இத்தொழிலால் அருகிலிருந்தவன் அவள் கொழுநனாயிருந்தான்; இதனைக் காண்மின் என்றனர். பூ வேலைப்பாடு நிறைந்த துகில் போலப் புனலாடுவார் அணிகளிலிருந்து வீழ்ந்த மணிகள் தாங்கிய வையை தோன்றியது. மக்களின் மார்பினின்றும் வீழ்ந்த சாந்துகளால் மணற்பாங்கான வையைக் கரை சேறாகியது. அவர்தம் ஈர ஆடையினின்று வடியும் நீரால் கரை கார்காலத் தன்மை பெற்றது. புனலாட்டயர்ந்த ஆடவரும் பெண்டிரும் கவர்ச்சியான தோற்றத்தோடு காட்சி யளித்தனர். வையையில் புனல் விழா நடைபெற்றதால்

விண்ணகமும் தன் சிறப்பிழந்தது. இவ்விழாவால் மதுரை மக்கள் அடைந்த இன்பமும் கவினும் மிகப்பல. ஆகவே வையைப் புகழ் இந்நிலவுலகிற் கடங்காதாயிற்று என வையையின் புகழ்பாடி முடிப்பர் நல்வழுதியார்.

விசும்பு கடிவிட்டன்று விழவுப் புனலாங்க
இன்பமும் கவினும் அழுங்கல் மூதூர்
நன்பல நன்பல நன்பல வையை
நின்புகழ் கொள்ளாதிம் மலர்தலை யுலகே.' (பரி. 12 : 99-102)

13. மையோடக் கோவனூர்

வையை பாடிய ஐம்புலவர்களுள் மையோடக் கோவனூரும் ஒருவராவர். இவர் வையைப் பற்றிய ஏழாம் பரிபாடல் ஒன்று மட்டுமே பாடியுள்ளார். இப்பாட்டிற்குப் பண் வகுத்தவர் பித்தாமத்தர். பித்தாமக்கர் என்ற பாடமுமுண்டு. டாக்டர் உ. வே. சா. தாமெழுதிய பரிபாடற் புலவர்கள் வரலாற்றில், 'இப்புலவர் புனல் விளையாட்டுக் கருவியாகிய ஓடத்தை, எவ்வகையிலோ புனைந்து கூறியது பற்றி இப்பெயர் பெற்றிருக்கலாமென்று ஊகித்தற்கிடமுண்டு' என்று மொழிந்துள்ளார். பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், 'மையோடம்' என்பது அப்புலவர் தம் ஊர்ப்பெயராக இருக்கலாம் எனக் கூறியுள்ளார்.[46] அண்மையில் கல்வெட்டுச் சான்றுகளால் மையோடை என்பது பாண்டு நாட்டகத்துள்ள ஒரூர்[47] எனத் தெரிகின்றமையின், ஊர்ப்பெயர் என்பது தேற்றம். தம் பாடலில் பாண்டி மன்னனை உவமையாகக் கூறியிருத்தலின், இப்புலவர் பாண்டிய அரசன்பால் கொண்ட ஈடுபாடு புலப்படும்.

வையை வெள்ளமும் காதல் வெள்ளமும்

புதுவெள்ளம் புனலாட்டுகளைப் புனையுங்கால் இப்புலவர் காதல் நிகழ்ச்சிகளைச் சித்திரித்துள்ளார். தலைமகன் தலை

46. இலக்கிய வரலாறு. கா. சு. பிள்ளை, பக். 235.
47. கலைக்களஞ்சியம் தொகுதி, IV பக். 767.

மகளோடு புனலாடினான் எனக் கேட்டு இன்புற்ற செவிலித் தாய், தோழியை நீங்களாடிய புனலணியின்பம் கூறுக என வினவ, அதற்கு அப்புனலணியின்பமும் பல்வேறுவகைப்பட்ட இன்பமும் தலைமகன் காதன்மையும் கூறி, யாம் இந்த நீரணி யின்பம் என்றும் பெறுக என வேண்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

கடல் வற்றுமாறு நீரை முகத்த மேகம் தன் மேல் ஏறிய பாரம் சுமக்கமாட்டாது கரையுடை குளமென மலையிடை மழை பொழிந்தது. மலையுச்சியினின்றும் அருவிநீர் பெருகிற்று. அந்நீர் மற்றையிடங்களிலிருந்து வந்த புனலோடு கூடி அல்லும் பகலும் சேறற்கரிய இடமென்றும் பாராது கிளர்ந்தெழுந்தோடியது. அது வெற்றி முரசுடைய பாண்டியனின் போர்ப்படை, பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கிளர்ந்தெழுவது போன்றிருந்தது. வையைப் பெருக்கினால் பாண்டிநாடு நன்மை யெய்திற்று. நன்செயும் புன்செயும் விளைவாற் பொலிந்து நலம்பல நல்கின. இதனைப் புலவர்.

'பெயலாற் பொலிந்து பெரும்புனல் பலநந்த
நலனந்த நாடணி நந்தப் புலனந்த
வந்தன்று வையைப் புனல் (பரி. 7: 8-10)

என்று ஓசை நயமும் அணி நயமும் சிறக்கச் செவி குளிரப் பாடியுள்ளார்.

புனலோட்டம்

வையைப் புனல் நரந்தம் புல்லிற் பரந்தும், வேங்கைப் பூக்களைத் தன்மேல் அணிந்தும், மலைமரங்களை வேரோடகழ்ந்தும் மேட்டிலுள்ள பொருள்களைப் பள்ளத்திற் பரப்பியும் விரைந்து சென்றது. ஆடலியல்பு அறியாத அரிவையைப் போலத் தான் வேண்டிய இடங்களில் நடந்தும், ஊடல் இயற்கையறியாத ஊடலுவகையள் கணவனைக் கடந்து நீங்குமாறு கட்டிய அணைகளை உடைத்தும் வையை சென்றது. வையைப் புனலின் சிறப்பை இங்ஙனம் பல உவமைகளால் இப்புலவர் புலப்படுத்தியுள்ளார் இப்

பெருக்கினைக் கண்ட உழவர்கள் உவகையுற்றனர். முழவும் பறையும் முழங்கின. நூன்முறைப்படி செய்த மெய்யிற் பூசும் கலவைச் சாந்தின் மணம் போலப் பல்வேறு மணத்தை உள்ளடக்கி மேலே புதுமணத்தை எழுப்பியது வையைப் புனல் என வையையின் மணப்பெருமையைக் குறிப்பிட்டுள்ளார்.

ஊரார் பேச்சு

வெள்ளப் பெருக்கைக் கண்ட ஊரார் தமக்குள்ளே பலவாறு உரையாடுகின்றனர். ஓடையிற் பூத்த கழுநீர் மலர்களெல்லாம் வெள்ளத்தால் மூழ்கினவே என்றும், இளஞ் சிறுமியர் மணலில் எழுதிய பாவைகளை அலைகள் சிதைக்கவே அவர்கள் அழுதனர் என்றும், கழனியில் இருந்த இளநெல் லிடத்தும் அரிக்கிடையிலும் புனல் பரந்தது எனத் துடி முழக்கினர் என்றும், ஊரைக் கடல் சூழ்ந்தது என்றும், வானத்தி லுள்ள மேகம் ஓடையாயிற்று என்றும், வெள்ளம் பாடுநர் உறையும் பாக்கத்தைக் கொண்டது என்றும், ஆடுநர் உறையும் சேரியை அடைந்ததென்றும், வயல்களில் வெள்ளக்கால் வந்து கோத்ததென்றும், வெள்ளம் தெங்கு, கமுகுகளின் கழுத்தை முட்டுதலான் வாளை அவற்றின் பாளையை உண்ட தென்றும், நாற்றங்கால் வண்டலிட்டு மேடாயிற்று என்றும் கூறியவை அவர்தம் உரையாடல்களில் சில.

வையையும் வழுதியும்

ஊடலைத் தாம் உணர்ந்தவும் உணராத மகளிரைக் கூட்டுவித்தற்கு முயலும் கொண்கனது ஆசை வெள்ளம் போல் வையை வெள்ளம் விரைந்தது. விலாப் புடைக்க உண்ட உழவர்கள் தம் சுற்றத்தோடு சினைவளர் வாளை போலத் தம் தொழில் செய்யப் புனற்கண்ணே பரந்தனர். அவ் வையைப் புனல் மலை ஒத்த இருவர்களுக் கிடையே வரையனைய நுரையும் மலர்களும் சுமந்து பொழிலிடைப் பரவியது. புனலாடிய மகளிர் செவிகளில் தளிரைச் செருகியது. மைந்தர் கண்ணியைப் பறித்தது. மகளிர் கைவளை

யும், தலைக் கோலமும் உடுத்த துகிலும் இருவடமாய்த் துகிற் குள்ளணியும் மேகலையும் எண்வடமாய் அதன் புறத்தணியும் காஞ்சியும் மைந்தராழி மோதிரமும் வாகுவலயமும் என்றிவை யெல்லாவற்றையும் கவர்ந்தது. இதனால் ஒன்னார் உடைபுலத்துத் தென்னவன் புகுந்த தன்மையை ஒத்தி ருந்தது.

புனலாட்டம்

இப்புலவர் ஆண்டு நிகழ்ந்த சில காதற் காட்சிகளைக் காட்டுகின்றார். வையைக்கு வந்தவர்கள் பலவகைப் புன லாட்டயர்கின்றனர். ஒரு பெண்ணின் முகத்தில் ஒருத்தி செந்நீரை விசியதும் உடனே அவள் கண்ணைக் கைகளால் மறைத்துக் கொள்கிறாள். அவ்விளையாட்டில் அவள் தோற்ற தாகக் கருதி மறைத்த கைகட்கு விலங்கிடுகின்றாள். அவள் மீது இரக்கங் கொண்ட ஒருத்தி அவளிருக்கு மிடத்திற்கு நீரிற் பாய்ந்து சென்று விலங்கு களைந்து விடுதலை நல்கினள். பாய்ந்த பெண்ணின் கண்ணிலுள்ள மைந்நிறத்தால் புனலின் செந்நிறம் கருநிறமாக மாறியது.

புனலாடிய நங்கை ஈரந்தீர நறவு பருகினள். பருகுதற்கு முன் நெய்தல் மலர்போல் இருந்த கண்கள் பின் நறவ மலர் போற் செந்நிற முற்றன. அச்செங்கண்ணைப் பலபடப் பாராட்டிப் பாணரைப் போலே பாடினான் தலைவன். இப் பாட்டைச் செவிமடுத்த வேறொருத்தி தன் எழிலைப்பாராட்டி இசைத்ததாகக் கருதி அவனை முயங்க நினைந்து அவலித்தாள். இதனைக் கண்ட தலைவன் தலைவி இந்நிகழ்ச்சி அறியின் தனக்கு என்ன துன்பம் நேருமோ எனக்கவன்று தலைவியை நெருங்கி நடுங்கி நின்றனன். அந் நிலையறிந்த தலைவி அவன்மேல் சினங்கொண்டு தன் மாலையைப் பிய்ந்து எறிந்தாள். நற வயர்ந்ததால் சிவந்த கண்கள் ஊடலால் பின்னும் சேந்தன. அவ்வமயம் அவள் எழினலம் ஏத்திய கொழுநன் கீழ் வீழ்ந் திறைஞ்சினன். அவன் தலைமிதித்தும் அவட்கு ஊடல் தீர்ந்திலது என இலக்கிய மரபினை ஒட்டி ஊடலைப் புனைந்துள் ளார் இப்புலவர்.

திருமருத முன்றுறை

திருமருத முன்றுறைக் கண்ணே யாழும் மிடற்றுப் பாடலும் இயைந்து நின்றன. சுருதியும் வங்கியமும் ஒலித்தன. முழவுகள் முழங்கின. அரங்கேறிய தலைக்கோல் மகளிரும் பாணரும் ஆடலைத் தொடங்கினர். ஆவ்வார்ப் பரிப்போடு கரையைப் பொருது ஓடும் நீரொலி இடியோடு சேர்ந்த மழை முழக்கொத்தது. இத்துறையில் விளையாடு வாரின் மாலைகளைப் புனைகின்ற வையாய், 'இன்று நின்னைப் படிந்து நீங்காத இப்பயனை எய்தியாங்கு யாம் என்றும் பயன் பெற்று நின்னைப் பாராட்டித் துன்பம் நீங்கி இன்புறுவேமாக' என வாழ்த்திப் பாடலை முடிப்பர் கோவனூர்.

இசைஞர்கள்

1. கண்ணகனுர்

நற்றிணையில் 'பாடினோர் வரலாறு' என்னும் பகுதியில் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் இப்புலவர் பெயர் நாகனுராதல் வேண்டும் என்றும், கண்ணனுர் எனும் புலவரின் மைந்தராதலால் சில போது இவர் கண்ணனுகனுர் என அழைக்கப்பெற்றுப் பின் இவரே கண்ணகனுர் எனத் தவருக வழங்கப் பெற்றிருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். பரி பாடல் 21ஆம் பாடற்கு இசை வகுத்ததோடு புறநானூற்றில் ஒரு பாவும் (218) நற்றிணையில் ஒரு பாவும் (79) இயற்றி யுள்ளார். எனவே கண்ணகனுர் தாம் இசை வகுத்த பாடலைப் பாடிய நல்லச்சுதனுரைப் போலவே, புலவரும் இசைஞரு மாவர் என அறியலாம். செவ்வேளைப் பற்றிய பரிபாடற்குப் பண் வகுத்திருத்தலின் இவர் முருகன்பால் பேரார்வலர் எனச் சிலர் கருதுப.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த ஞான்று, தன் உயிர் நண்பர் பிசிராந்தையார் விரைவில் இவண் வருவரென் றுணர்ந்து அவர்க்குத் தன்பக்கல் ஓர் இடம் ஒதுக்குமாறு தன் தமரைப் பணித்தான். சோழன் எதிர்பார்த்த வண்ணம் பிசிராந்தையார் வந்து சேர்ந்தார். இவ்விருவர் மாட்டும் அமைந்திருந்த உணர்ச்சி ஒத்த நட்பாங்கிழமையைப் பாராட்டிப் புறம் 218 இல் பாடியுள்ளார் கண்ணகனுர். பண் புடையார் எத்துணைச் சேய்மையில் இருப்பினும், சிறந்த

அணிகலன் செய்யும்போது, தொலைவில் வெவ்வேறிடத்துள்ள பொன், பவழம், முத்து, மலையிற்றோன்றியமணி முதலியவை ஒன்றாகச் சேர்வதுபோல ஒன்றாகச் சேர்வர் என்றும், அது போலவே பண்பிலாதாரும் தம்முள் ஒன்றாகக் குழுமியிருப்பர் என்றும் கூறுவர். நற்றிணையில் இப்புலவர் பாலைத்திணை பற்றிப் பாடியுள்ளார். இவர் பிசிராந்தையார், பொத்தியார் எனும் புலவர் காலத்தும் கோப்பெருஞ்சோழன் காலத்தும் உடன் வாழ்ந்தவராவர்.

2. கண்ணனாகனார்

செவ்வேளைப் பற்றிய கடுவனிள வெயினனாரின் பரிபாடலுக்குப் (5) பண் வகுத்தவர் கண்ணனாகனார் ஆவர். இவரும் கண்ணகனாரும் வேறானவர் என்பது டாக்டர் உ. வே. சா. கருத்து. கண்ணனார் என்பாரின் மைந்தரே கண்ணகனார், என்னும் பின்னத்தூர் நாராயணசாமி ஐயரின் கருத்தினை ஒத்துக் கொள்ளின், கண்ணகனாரும் கண்ணனாகனாரும் ஒருவர் என முடிவு கட்டலாம். இவர் பெயர் கண்ணகனாகனார், கண்ணாகனார், கண்ணகனார் எனப் பலவாறு ஏடுகளில் காணப் பெறும். இவர் வகுத்த இசை பண்ணுப் பாலையாழாகும்.

3. கேசவனார்

பதினான்காம் பரிபாடலைப் பாடிய புலவர் கேசவனார் தம் பாடலுக்குத் தாமே பண் வகுத்துள்ளார். பரிபாடற்கு இசை வகுத்தவர்களுள் கண்ணகனார், நன்னாகனார். நல்லச்சுதனார், கேசவனார் என்போர் புலவர்களுமாவர். கண்ணகனார், நன்னாகர் இருவருமியற்றிய பாக்கள் புறநானூற்றின்கண் உள்ளன. நல்லச்சுதனார் இசைஞராயினும் அவர் பாடற்கு அவர் பண் வகுத்திலர். கண்ணகனாரே பண் வகுத்துள்ளார். ஆனால் கேசவனார் பாடல் அவராலேயே பண்ணோதிறத்தால் இசையமைக்கப் பெற்றுள்ளது. தம் பாடலுக்குத் தாமே இசைவகுத்த பெருமை இவருக்கேயுண்டு. கேசவனார் எனும் திருமாற் பெயரினராயினும் இவர் பாடிய பாடல் செவ்வேள்

மேலது; இஃது அக்காலத்திய புலவர்தம் சமயப் பொது நோக்கைக் காட்டுவதாகும்.

தம்பாடலில் முருகனையும், அவர் அமர்ந்துறையும் பரங் குன்றினையும் அழகாகப் புனைந்துள்ளார். புலவர்கள் எனும் பகுதியில் கேசவனார் எனும் தலைப்பில் அதனைக் காணலாம். இசைஞர் ஆதலால், 'கெழீஇக் கேளிற் சுற்ற நின்னை எழீஇப் பாடும் பாட்டமர்ந்தோயே' என முருகனை விளித்துள்ளார். பரங்குன்றத்துக் கடம்ப மலர்களில் கமழ்தாது ஊதும் வண் டொலியும் இசையொலியாகவே இப்புலவர்க்குத் தோன்று கிறது.

4. நந்நாகனார்

நல்வழுதியார் வையைபற்றிப் பாடிய 12ஆம் பாடலுக் குப் பண் வகுத்தவர் நந்நாகனார் ஆவர். புலவரும் இசைஞரு மாய நன்னாகனாரும் இந்த நந்நாகனாரும் டாக்டர். உ.வே.சா. கருத்துப்படி வேறாவர். நப்பண்ணனார் என்பதிலுள்ள முன் னொட்டாய 'ந'வும் பெருமை உணர்த்துவதாகும். சில ஏடுகளில் இவர் பெயர் நன்னாகனார் என்றும் காணப் பெறு கின்றது. எனவே, நன்னாகனாரும் நந்நாகனாரும் ஒருவராகலாம் எனவும் கருதலாம். இவர் வகுத்த இசை பண்ணுப் பாலை யாழாகும்.

5. நல்லச்சுதனார்

செவ்வேள் பற்றிய ஒரு பாடலை (21) மட்டும் நல்லச் சுதனார் பாடியுள்ளார். இவரும் மருத்துவன் நல்லச்சுதனாருமே பெரும்பாலான பாடல்களுக்குப் பண் வகுத்துள்ளனர். நல்லழிசியார் பாடிய 16, 17ஆம் பாடல்கள், குன்றம்பூதனார் பாடிய 18ஆம் பாடல், நல்லந்துவனார் பாடிய 20ஆம் பாடல் ஆகிய நான்கு பாடல்கட்கும் இவர் பண் வகுத்துள்ளார். இவராற் பாடப் பெற்ற பண்கள் நோதிறம், காந்தாரம்

என்பன. நல்லழிசியார் பாடல்கள் நோதிறப் பண்ணிலும், குன்றம்பூதனுர் நல்லந்துவனுர்பாடல்கள் காந்தாரப்பண்ணிலும் இசையூட்டப் பெற்றன. புலவர் வரிசையில் நல்லச்சுதனுர் என்னும் தலைப்பில் இவர் பாடற் கருத்தைக் காணலாம்.

இவர் புலவரும் இசைஞருமாதலின் இவர்தம் பரங்குன்றப் புனேவில் இசைபற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அக்குன்றின்கண் வங்கியத்தின் இசையொப்ப மலர்க்கண் தும்பி இமிர்கின்றது. யாழிசை யொப்ப வண்டினம் முழங்குகின்றது. முழவிசை நிகர்ப்ப அருவிநீர் ததும்புகின்றது. காற்றிலாடும் பூங்கொடிபோல ஆடல் நங்கை தன் கணவன் கொட்டும் துடி ஒலிக்குத்தகத் தோளசைத்து ஆடுகின்ருள். இப்புலவர்தம் உவமைகள் பெரும்பாலும் இசை பற்றியனவாக இருத்தல் அவர்தம் இசை ஈடுபாட்டினே உணர்த்தும்.

6. நன்ஞகனுர்

திருமாலேப் பாடிய கீரந்தையரர் பாடற்கு (2) நன்ஞகர் பண் வகுத்தார் என ஓர் ஏடு கூறும். பிறிதோர் ஏடு அப் பாடற்கு மருத்துவன் நல்லச்சுதனுர் பண்வகுத்தார் என்னும். நன்ஞகனுர் வகுத்த இசை பண்ணுப் பாலேயாழ். மருத்துவன் நல்லச்சுதனுர் வகுத்தவை பண்ணுக் குறிஞ்சியாழ், பண்ணுப் பாலேயாழ் என்பனவாகும். டாக்டர். உ. வே. சா. கருத்துப் படி நன்ஞகனுர் என்பார் நாகனுர், நந்நாகனுர் என்பவர் களினும் வேறுபட்டவராவர். இந்த நன்ஞகனுரும் புறத்திணே நன்ஞகனுரும் ஒருவரா என்பது ஐயத்திற்குரியது என அவர் குறிப்பிடுவர். ஆனுல், புறத்திணே நன்ஞகனுர் பெயர் சில ஏடுகளில் நன்ஞகனுர் என்றும் நன்ஞதனுர் என்றும் காணப் படுகின்றது. ஆகவே இந்த இரண்டு நன்ஞகனுர்களும் ஒருவரே என்னலாம். புறநானூற்றில் புறத்திணேநன்ஞகனுர் பாடியதாக நான்கு பாக்களும் (176, 376, 379, 384), நன்ஞகனுர் பாடியதாக ஒரு பாவும் (381) காண்கின்றன.

381ஆம் புறப்பாட்டில் நன்னுகனுர் கிரரி கரும்பழனுரப் புகழ்ந்து பாடியுள்ளார். புறத்திணை நன்னுகனுரும் அக் கரும்பனூர் கிழானையே தம் 384ஆம் பாவில் பாராட்டிக் கூறியுள்ளார். ஆகவே இருபுலவர்களும் ஒருவராகவே இருக் கலாம் எனக் கருத இடமுண்டு. புறநானூற்றில் சில பாக்கள் பாடிய நன்னுகனுரும், இரண்டாம் பரிபாடற்குப் பண்வகுத்த நன்னுகனுரும் ஒருவரே எனக் கொள்ளின் இவர் புலவரும் இசைஞருமாவர் என அறுதியிடலாம்.

7. நாகனுர்

நல்லந்துவனுர் பாடிய வையை பற்றிய பதினேராம் பரிபாடற்குப் பண் வகுத்தவர் நாகனுராவர். இவர் அப்பாடற்கு வகுத்த இசை பண்ணுப் பாலையாழ். இவரைப் பற்றி வேறோர் குறிப்பும் கிடைத்திலது.

8. பித்தாமத்தர்

வையை பற்றிப் பாடிய மையோடக்கோவனுரின் ஏழாம் பரிபாடற்கு மட்டும் பண் வகுத்தவர் பித்தாமத்தராவர் சில ஏடுகள் இவர் பெயரைப் பித்தாமக்கர் என்றும் கூறும். இவர் அப்பாடற்கு வகுத்த இசைபண்ணுப் பாலையாழாகும்.

9. பெட்டனுகனுர்

கடுவனிளவெயினனுர் திருமாலைப் பாடிய மூன்றும் நான்காம் பரிபாடல்கள் பெட்டனுகனுரால் பண் வகுக்கப் பெற்றன. அவர் இருபாடற்கும் வகுத்த இசை பண்ணுப் பாலை யாழேயாம். திருமாலைப் பற்றிய பாக்களுக்குப் பண் வகுத்திருத்தலின் இவர் திருமாலிய மதத்தினர் எனக் கருது வாருமுளர்.

10. மருத்துவன் நல்லச்சுதனார்

பரிபாடற்கு இசை வகுத்தோருள் நல்லச்சுதனாரும், மருத்துவன் நல்லச்சுதனாருமே பல பாடல்களுக்குப் பண் வகுத்துள்ளனார். இவ்விருவருள் மருத்துவன் நல்லச்சுதனார் ஆறு பாடல்களுக்கும் (6, 8. 9, 10, 15, 19), நல்லச்சுதனார் நான்கு பாட்லகளுக்கும் (16, 11, 18, 20) பண் வகுத்துள்ளனர். பெட்டனாகனார் இரு பாடல்களுக்குப் (3;4) பண் அமைத்துள்ளார். பிற இசைஞர்களெல்லாம் ஒவ்வொரு பரிபாடற்கே பண் வகுத்தவராவர். மருத்துவன் நல்லச்சுதனாரும் நல்லச்சுதனாரும் ஒருவரல்லர் என்பர் உ.வே.சா. மருத்துவன் தாமோதரனார் எனும் பெயரிற் காணப்படுவது போல இவர் பெயரிற் காணப்பெறும் மருத்துவன் என்னும் அடை மருத்துவர் என்பதைப் புலப்படுத்தும். எனவே இவர் இசைஞரும் மருத்துவருமாவர் என்பது போதரும். நல்லந்துவனார், குன்றம்பூதனார், கரும்பிள்ளைப் பூதனார், இளம்பெருவழுதியார், நப்பண்ணனார் என்னும் புலவர்கள் யாத்த பரிபாடல்களுக்கு இவர் இசையமைத்தவராவார். பரிபாடலில் காணப்பெறும் பண்ணுப் பாலையாழ், பண்ணோதிறம், காந்தாரம் என்னும் மூன்று பண்களிலும் இசையமைத்த பெருமை இவருக்கே உண்டு.

6. திருமால்

திணை கடந்த தெய்வம்

பண்டைக்காலத் தமிழர்கள் இயற்கையை வழிபட்டனர். முல்லை நிலத்தினர் இயற்கை எழிலை—அடவியின் அடர்த்தியான கருமையை—மாயோன் எனக்கருதிப் போற்றிப் புகழ்ந்தனர். காட்டில் மலர்ந்த காயாம் பூவினையும் அந்நில மக்கள் பரவி ஏத்தினர். இம்மலர்கள் அவர்கட்குத் திருமாலின் நிறத்தை நினைவூட்டின. மன்னர்களைப் பாராட்டெடுக்கும் போது, புலமைச் செல்வர்கள் அவர்களைத் திருமாலுக்கு ஒப்பிட்டுப் பாடுவர். இவ்வகை வாழ்த்து தொல்காப்பியத்தே பூவைநிலை எனப்படும்.

'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவைநிலையும்.' (தொல். 1006)

பூவை என்பது காயம்பூவைக் குறிக்கும். அஃது ஈண்டு உருவகமாக நின்று திருமாலை உணர்த்துகின்றது. தொல்காப்பியம் தெய்வத்தைக் கருப்பொருள்களுள் ஒன்றாக வைத்தெண்ணும். அந்நூல் தமிழ் நூல்களின் தெய்வங்களைச் சேயோன், மாயோன், வேந்தன், வருணன் எனக் கூறும்.

'மாயோன் மேய காடுரை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.'

(தொல். 951)

இக்கூறப்பட்ட தெய்வங்களுள் திருமால் எனப்படும் மாயோன் முல்லைத்திணைத் தெய்வமாகும். இத்தெய்வங்கள் நிறஞ்சுட்டி மாயோன், சேயோன் என அழைக்கப் பெற்றமையின், தொல்காப்பியர் காலத்தே உருவ வழிபாடு இருந்தது எனக் கருதலாம் என்பர் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார். பல்வேறு தெய்வங்களுக்கும் பண்டு கோயில் உண்மைக்குப் பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்கள் சான்று பகர்கின்றன. சங்க இலக்கியங்களுள் பரிபாடல் ஒன்றே தனித்துத் தெய்வம் சுட்டுவதாதலின், அந்நாற்கண் கடவுட் கொள்கையினையும், பழங்கதைகளையும், மெய்ந்நெறிகளையும் (தத்துவங்களையும்) பரக்கக் காணலாம். தொல்காப்பியர் காலத்து, முல்லைத்திணைத் தெய்வமாக மட்டும் விளங்கிய திருமால், பரிபாடற் காலத்து எல்லா நிலமக்களாலும் வழிபடப் பெற்றுத் திணை கடந்த தெய்வமாயினர்.

பரிபாடலிலும் பிற தொகை நூல்களிலும் திருமால்

பத்துப்பாட்டு, எட்டுத்தொகைகளாகிய சங்கஇலக்கியங்களில் திருமாலைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் விட்டுணு, வைணவம் போன்ற சொற்கள் பயிலப்படவில்லை. சங்க இலக்கியத்து ஆட்சி பெறும் மால், மாயோன், நெடியோன் என்ற பெயர்கள் பிற்காலத்து விட்டுணு என்னும் பெயரால் வழங்கப் பெற்றன. மால் என்னும் சொற்குக் கருமை எனப் பொருள்.[1] ஆகவே பசும்புல் வெளியும் கரிய அடவியும் மிக்க முல்லைத்திணை கருநிறக் கடவுளாகிய திருமாலை இயல்பாகவே நினைக்கச் செய்தது. முல்லைக்கலி திருமாலைப் பற்றிய பல புராணக் கதைகளைப் புகல்கிறது. ஐங்குறுநூறும் குறுந்தொகையும் திருமாலைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாதிருப்பது வியப்பாகவே உள்ளது. பரிபாடலிற் காணப்பெறும் திருமாலைப் பற்றிய கருத்துகள் பிற தொகை நூற்கண்ணும் காணப்படுகின்றன. ஆயினும், சில கருத்துகள் பிறதொகை நூல்களில் காணுமாறில்லை.

1. பெரும்பாணாற்றுப்படை, 487. நச். உரை.

சில வேறுபட்டுக் காணப்படுகின்றன. அவற்றை இனிக் காண்போம்.

ஒற்றுமைகள்

திருமால் குள்ள வடிவிற் போந்து, பின் பேருருவங் கொண்டு அனைத்துலகையும் தன் அடியால் அளந்தார்.[2] திருமாலின் உந்தியில் மலர்ந்த முளரியினின்றும் அயன் தோன்றினார்.[3] தனக்குவமையில்லாத ஆயிரந்தலையுடைய ஆதிசேடன் மீது திருமால் பள்ளி கொண்டுள்ளார்.[4] அவுணர்களை யழித்தார்.[5] அவர்க்குரிய அடையாளக் கொடி கருடக் கொடியாகும்.[6] திருமால் மாயோன் என்று அழைக்கப் பெறுவர்.[7] அவர் அனைத்துலகினும் பரவியிருப்பவர்.[8] அழிக்கும் படை நேமியாகும்[9]. துளபமாலை அணிந்துள்ளார்.[10] அவர் மார்பு திருமகளின் உறைவிடம் ஆகும்.[11] குதிரை வடிவிற்றோன்றிய கேசி என்னும் அரக்கனைக் கொன்றவர்.[12] சங்கினால் முழக்கம் செய்தவர்.[13] அவர்தம் மார்பில் அணிந்த மாலை வானவில் போன்றது.[14] நீலமணியொத்த உருவினர்.[15] பலதேவனும் கண்ணனும் பிரியாது ஒருங்கிருப்பவர்.[16]

---

2. பரி. 3:20; பெரும். 29–31; கலி. 124:1.
3. பரி. 3:12, 13; 3:93,94, பெரும், 403-405.
4. பரி. 13:26-29: பெரும். 371-383; கலி. 105:71,72.
5. பரி. 2:36-49; மதுரைக் 590, 591; கலி. 52:5.
6. பரி. 2;60; முருகு. 148-151; புறம் 56: 6; கலி 145:64.
7. பரி. 3:10; நற். 32:1.
8. பரி 13:14-24; நற். கடவுள் வாழ்த்து.
9. பரி 1:58; பதிற். 31:8.
10. பரி. 4:58; பதிற். 31:8, 9.
11. பரி. 1:36, பதிற். 31:7: கலி. 104:110
12. பரி. 3:31, 32; கலி. 103:53-55.
13. பரி. 2:37-40 கலி. 105:9.
14. பரி. 13:11, 12; அகம். 175;14-16.
15 பரி. 3:3; புறம். 56:5.
16. பரி. 15:65, 66; புறம். 58:14–16.

வேற்றுமைகள்

பதிற்றுப்பத்துப் பதினைந்தாம் பாட்லும் கலித்தொகை நூற்று நாற்பதாம் பாடலும் திருமாலை நெடியோன் எனக் கூறும். இப் பெயரால் பரிபாடல் திருமாலைக் குறிப்பிடவில்லை கலித்தொகையில், 'மயில் எருத்து வண்ணத்து மாயோன்'[17] எனத் திருமாலின் நிறத்துக்கு மயிலின் கழுத்து உவமமாக வந்துள்ளது. இந்நிறவுவமை பரிபாடலில் வரவில்லை.

பரிபாடலில் காணப்பெருமல் பிற தொகை நூல்களில் மட்டும் காணப்படும் திருமால் பற்றிய செயல்களும் புராணக் கதைகளும் பின்வருவன:

(க) கரிய திருமால் பாம்பால் விழுங்கப்பட்ட மதியை உய்வித்தார். (கலி.104:37-38)

(உ) மாயோன், அவுணர் இவர்ந்து வந்த களிற்றின் நுதலில் ஆழியை அழுத்தி அவர்களை அஞ்சியோடச் செய்தார். (கலி. 134:1-3)

(ங) ஆய மகளிரொடு தொழுநை யாற்றங்கரையில் கண்ணன் நீராடும்போது பலராமன் வரவே, அவன் பார்வை படாமல் மறைந்து நின்று அம்மகளிர் தழையுடை அணிந்து அற்றம் மறைக்குமாறு குருந்த மரமேறி அதனைத் தாழச் செய்தார். (அகம். 59:4-6)

(ச) இராமன் தன் கருமச் சுற்றத்தோடு மறைபேச இடையூருக இருந்தமையான், ஆலமரத்து ஆரவாரஞ் செய்த புட்களின் ஒலியவித்தார். (அகம்: 70:13-17)

(ரு) பரசுராமன் மழுவாள் கொண்டு மன்னர்மரபினரை அடியோடழித்துப் பின் முயன்று வேள்வி செய்தார். (அகம். 220: 5,6)

(சு) பேராற்றல் வாய்ந்த சிவனும் மாலும் ஒருங்கு உடனியைந்திருந்தனர். (அகம். 360 : 6, 7)

---

17. கலி 108:38.

எ. திருமால் சீர்த்திக்கும் பலதேவன் மறத்துக்கும் காட்டாக விளங்கினர். (புறம். 56; 12; 57; 2,3)

அ. அவுணர்கள் ஞாயிற்றை மறைத்து உலகுக்கு அல்லல் விளைக்கவே, திருமால் அதனை மீண்டும் கொணர்ந்து விண்ணி றுத்தி மக்களின் இடும்பை தீர்த்தார். (புறம். 174:1-5)

அ. சீதையை இராவணன் தூக்கிச் சென்றபோது, அவள் தன் அணிகலன்களைக் கீழே எறிந்தனள். அவற்றைக் குரங்கு கள் அணியும் முறையறியாது விரலில் அணிவதைச் செவிக்கும் செவியிலணிவதை விரற்கும் அரைக்கிடுவதை மிடற்றுக்கும் மிடற்றுக்கிடுவதை அரைக்குமாக முறைமாறி அணிந்தன. (புறம். 378: 18–21)

திரட்டுப்பாடல்களையும் சேர்த்து இப்பொழுது கிடைத்த 24 பாடல்களில் ஏழு பாடல்கள் திருமால் பற்றியன. இவற்றுள் ஒன்று பரிபாடல் திரட்டிற் காணப்படுவது. முதற் பரிபாடலையும், பரிபாடல் திரட்டில் அமைந்த முதற் பாடலையும் பாடிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

புலவர் பெயர்	பரிபாடல், திரட்டு இவற்றின் தொடர் எண்	மொத்த அடிகள்
....	1	65
கீரந்தையார்	2	76
கடுவனிளவெயினனார்	3	94
கடுவனிளவெயினனார்	4	73
நல்லெழுநியார்	5	64
இளம்பெருவழுதியார்	6	66
திரட்டு	7	82
	மொத்த அடிகள்	520

அவதாரங்கள், தெய்வப் பண்புகள், அடிமுதல் முடி காறும் திருமாலின் உருவப் புனைவு ஆகியவற்றைப் பரிபாடற் புலவர்கள் பேரார்வங்கொண்டு பாடியுள்ளமையை இனிக் காண்போம்.

தலை: ஆயிரந்தலையுடை ஆதிசேடன், சீற்ற நோக்கோடு திருமாலின் தலைக்கு ஊறு வாராது காக்கின்றது. கதிரொளி படர்ந்த மலைக்குவடு போன்றும், வேங்கை மலர்ந்த குன்றம் போன்றும் திருமாலின் பொன்முடி மிளிர்கின்றது.

நிறம்: திருமாலின் மேனியழகில் ஈடுபட்டு உள்ளம் பறி கொடுத்த புலவர்கள் எட்டு உவமைகளைக் கையாண் டுள்ளனர். காயாம்பூ, மணி, கடல், கார்மேகம், இருள், தாமரை இலை, குன்று, நீலமலர் ஆகிய இவையே உவமைக ளாக வந்தவை. திருமாலைப் பாடிய புலவர்கள் எல்லாரும் திரு மேனிக்கு நீலமணியை உவமித்துள்ளனர். இது மட்டும் ஏழு முறை உவமையாக வந்துள்ளது. அதற்கடுத்து உவமை யாட்சி பெற்றது காயாம்பூ. இது நான்கு பாடல்களில் நான்கு முறை உவமையாக வந்துள்ளது. உவமைகளுக்குத் தகுந்த அடைகளைப் புணர்த்துத் திருமாலின் மேனிப் பொலிவைக் காட்டுவது சிறப்பாக அமைந்துள்ளது. காட்டாக 'மண்ணுறு மணி' (1:59); 'திரை பாடவிந்த முந்நீர்' (4:6); "(வருமழை யிருஞ்சூல்' (4:7) என வருதல் காண்க. கடுவனிளவெயினனார் மாலின் நிறத்துக்கு மூன்று வமைகள்—நீலமணி, அலையற்ற கடல், சூலுண்டமேகம்— கூறியுள்ளார். நல்லெழுனியார் மேகம், காயா, கடல், இருள், மணி என்னும் ஐந்துவமைகள் கூறியுள்ளார். இப் புலவர் தாமரை இலையை வெளிப்படையாக உவமங் கூறா விடினும், 'அடையிறந்தவிழ்ந்த வள்ளிதழ்த் தாமரை' என்னு மடியிற் குறிப்பிற் பெறவைத்துள்ளார். இதனையுஞ் சேர்த்துக் கொள்ளின் இவர் கூறிய உவமை ஆறாகும். தாமரையிலை மேனிக்குவமையாதல் 'அக்கமலத்திலை போலுந் திருமேனியடி களுக்கே' என்னும் திருவாய் மொழியானும் பெறப்படும் பரிபாடற் புலவர்கள் மேனி நிறத்திற்கு உவமைகளை அடுக்கிக்

கூறியது பிற்கால ஆழ்வார்களையும் கம்பரையும் கவர்ந்துள்ளது.

'குன்றுடி கொழுமுகில் போல்
குவளைகள் போல் குரைகடல் போல்
நின்றுடு கணமயில்போல் நிறமுடைய நெடுமால்
(நாலா.410)

'பைம்பொழில்வாழ் குயில்காள், மயில்காள்,ஒண்
[கருவிளைகாள்,
வம்பக் களங்கனிகாள், வண்ணப்பூவை நறுமலர்காள்,
ஐம்பெரும் பாதகர்காள், அணிமாலிருஞ் சோலைநின்ற
எம்பெருமா னுடையநிறம் உங்களுக் கென்செய்வதே''
(நாலா. 590)

'வெய்யோனொளி தன் மேனியில் விரிசோதியின் படர
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும்
[போனான்
மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
ஐயோ இவன் வடிவென் பதோர் அழியா அழகுடையான்.'
(கங்கைப் படலம், 1)

கண்: திருமாலைப் பாடிய புலவர்கள் எல்லோருமே அவர் கண்களுக்குத் தாமரை மலரையே உவமை கூறியுள்ளனர். எஞ்ஞான்றும் இயல்பாகவே சிவந்திருத்தலின் இவர் கண்கள் 'செறூஅச் செங்கண்' (13-57) என்றும், 'செயிர் தீர் செங்கண்' (4-40) என்றும் பாராட்டப் பெற்றுள்ளன. திருமாலின் இரு கண்களுக்கு ஒரு தாமரைமலர் உவமையாகாது என்றெண்ணிப் பொருளுக்குத்தக உவமையினை யமைத்தல் வேண்டுமென்று இணைந்த தாமரையை உவமையாக்குவர் கீரந்தையார்.

'கண்ணே, புகழ்சால் தாமரை
அலரிணைப் பிணையல்'' (பரி. 2:53)

கடுவனிளவெயினரும் இளம்பெருவழுதியாரும் திருமாலின் உந்தியில் மலர்ந்த முளரியினையே அவர்தம் கண்கட்கு உவமை கூறியுள்ளனர். தெய்வத் தன்மை பொருந்திய அவர் கண்கட்கு நீர்வளர் தாமரையை உவமை கூறுதல் ஒவ்வாதென்பது அப்புலவர்தம் நோக்குப் போலும்.

'நின்னிற் றோன்றிய நிரையிதழ்த் தாமரை
அன்ன நாட்டத் தளப்ப ரியவை' (பரி. 4: 60, 61)

'புவ்வத் தாமரை புரையுங் கண்ணன்' (பரி. 15: 49)

வாய்: வாயினைப் பற்றிப் பரிபாடலில் ஒரே ஒரு குறிப்புத்தான் காணப்படுகின்றது. நல்லெழுநியார் திருமால் வாய் தாமரைமலரை ஒக்கும் எனக் கூறுவர். திருவடி, கை, கண்கள் எல்லாம் அவருக்குத் தாமரை மலராகவே தோன்றுகின்றன.

அடையிறந் தவிழ்ந்தவள்ளித்தழ்த் தாமரை
அடியும் கையும் கண்ணும் வாயும்.' (பரி. 13: 50,51)

மார்பு: திருமாலின் மார்பகம் திருமகளுக்கு உறைவிடமாதலின், அது மிகச் சீரிய உறுப்பாகக் கருதப் பெறும். எனவே, திருமாலைப் பாடிய எல்லாப் புலவர்களும், இளம்பெருவழுதியார் தவிர, மார்பகத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

'மாயிடை மலர் மார்பு' (பரி. 1:3)

'செய்யோள் சேர்ந்தநின் மாசில் அகலம்' (பரி. 2:31)

'பொன்னிற் றோன்றிய புனைமறு மார்ப' (பரி. 4: 59)

'திருவரை யகலம்' (பரி. 13: 13)

கௌத்துப மணி அவரது மார்புக்கு அணி செய்கின்றது. (1:8,9) வரையனைய மார்பில் விளங்கும் முத்தாரம் வானவில் போலவும் அருவிபோலவும் திகழ்கின்றது (2:28, 29; 13:11). அவர் மார்பிலுள்ள நித்தில மதாணி திங்கள் போலவும், ஆண்டுத் திருமகள் தங்கியிருப்பது மதிக்கண் மறுப்போலவும் தோன்றும் (2:28–31). தீப்போன்ற நிறமுடைய வெட்சி

மலர் இடைஇடையே தொடுக்கப் பெற்ற மணம் கமழும் துளபமாலையைத் தம் மார்பில் அணிந்துள்ளார். திருமகள் தங்கும் மார்பிடத்துள்ள மறுவைப் பொன்னிறமெனக் கூறுவர் கடுவனிள வெயினனார் (4 : 59). மற்றைப் புலவர்கள் அதனைக் கருநிறமுள்ளதாகவே கூறியுள்ளனர். அம்மறு பொன்னிற மென்பதற்கு நாலாயிரப் பிரபந்தத்தில் கூடச் சான்று காணுமாறில்லை.

இறைவனின் நற்றாளைப் பணிந்தேத்துவதே அன்பர்களின் நெறிமுறையாகும். ஆனால், பரிபாடலில் திருமாலின் மார்பகத்தைப் பணிந்தேத்தும் குறிப்பு உள்ளது. அன்பர்கள் மாயோன் மார்பகத் துறையும் மங்கையின் அருள்பெற்ற பின்னரே, மாயோனின் அருளைப் பெற முடியும் என்பது திருமாலியக் கோட்பாடு. அச் சமயத்தினர் இதனைப் 'புருடகாரம்' எனப் புகல்வர்.[18] இக்கருத்துக்கு அடிப்படை பரிபாடலில் உள்ளது. திருமகள் தங்கும் திருமாலின் மார்பினை வழிபட்டிறைஞ்சுவோரே விழுமிய துறக்கவின் பத்தினைப் பெறுவர் என நல்லெழுனியார் மொழிந்துள்ளார்.

'...............................நின்
திருவரை அகலம் தொழுவோர்க்கு
உரிதமர் துறக்கமும் உரிமைநன் குடைத்து' (13 : 12, 13)

முதற் பரிபாடலில் வரும் 'அல்லியந் திருமறுமார்ப நீயருளல் வேண்டும்' என்னும் அடியும் இக்கருத்தினைக் குறிப்பிற் புலப் படுத்தும்.

கையுந் தோளும் : திருமாலின் கைகள் அவர் புகழ்போல் எண்ணிறந்தன (3 : 32). அவர் கைகளுக்கும் தாமரையே உவமையாகக் கூறப்பட்டுள்ளது. எங்கும் பரவி எல்லாமா யிருக்கும் முதன்மையை உணர்த்த அவர்க்கு இரண்டிலிருந்து நூறாயிரம் வரை கைகள் உண்டு எனக் கடுவனிள வெயினனார் தம் பாடலிற் குறிப்பிடுவர் (3 : 35-45).

---

18. கட்டுரைக் கோவை. பக் 34

திருமாலை, 'ஐங்கைம் மைந்த' எனக் கடுவனிளவெயினனார் விளித்திருத்தலின், அவர் விநாயகராகவும் கூறப்பட்டுள்ளதாக அறிஞர் சிலர் கருதுப. 'பிறந்ததெப்படியோ' என்ற தம் நூலில், பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள், சங்க இலக்கியத்தில் பிள்ளையார்பற்றிய குறிப்பு யாண்டுமில்லை என்றும், பல்லவ மன்னனான நரசிங்கவர்மன் தான் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாதாபியிலிருந்து தமிழகத்துக்கு முதன்முதல் பிள்ளையாரைக் கொணர்ந்தான் என்றும் மொழிந்துள்ளார். கடுவனிள வெயினனார் தம் பாடலில் திருமாலைப் பல கைகளையுடையராகக் கூறக் கருதி, 'இருகை மா அல் முக்கை முனிவ நாற்கை அண்ணல்' என எண்ணு முறைப்படி விளித்துக் கூறினரேயன்றி, ஒவ்வொரு விளியும் ஒவ்வொரு கடவுளைச் சுட்ட வேண்டுமென்னும் நோக்கில் கூறிற்றிலர். ஐங்கைம் மைந்த, அறுகை நெடுவேள் எனவருவன கொண்டு விநாயகரையும் முருகனையும் சுட்டினார் எனக் கருதின் ஒவ்வொரு எண்ணுப் பெயர்க்கும் கடவுளரைத் தேட வேண்டிவரும். நூறு, ஆயிரம், பதினாயிரம் கைகளையுடைய கடவுளர்களைத் தேடினாலும் கிடைத்தல் அரிது. ஆகவே, ஐங்கைம்மைந்த என்பது பிற்காலக் கடவுளராகிய விநாயகரைச் சுட்டும் எனக்கூறுவது அமைதியுடையதாகாது. பாற்கடல் கடைந்து அமிழ்தமெடுக்க விண்ணவரும் அசுரரும் ஈடுபட்டனராயினும், திருமால் விண்ணோர்க்கு மட்டும் அமிழ்தம் நல்கினர். அசுரர்களுக்கு நல்காமையின் திருமாலின் கையை இச்செயலால் நடுவுநிலை பிறழ்ந்ததாகக் கருதி இப் புலவர்,

'நடுவுநிலை திறம்பிய நயமி லொருகை' (3 : 34)

என வஞ்சப் புகழ்ச்சியாகக் கூறுவர்.

உந்தி : திருமாலின் உந்தி, தாமரை மலரைப் போன்றுள்ளது. கடுவனிளவெயினனார் தம் பாடலில் திருமாலின் உந்தித்தாமரையினின்றும் பிரமன் தோன்றியதாக இரு முறை குறிப்பிட்டுள்ளார்.

'வாய்மொழி யோடை மலர்ந்த
தாமரைப் பூவினுட் பிறந்தோனும் தாதையும்
நீயென மொழியுமால் அந்தணரரு மறை' (3:12-14)

'வாய்மொழி மகனொடு மலர்ந்த
தாமரைப் பொகுட்டுநின் நேமி நிழலே.' (3:93-94)

திருவடி : பிறப்பு நீங்குதற்கும் வீடு பேறுறுதற்கும் இறைவனின் திருவடிகளே துணையாதலின் எல்லாப் புலவர்களும் அவற்றையே போற்றி வழிபடுவராயினர். பரிபாடற் புலவர்களும் இதற்கு விதிவிலக்கல்லர். அவர்தம் திருவடி, 'மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடி' (3:2) எனப் பாராட்டுப் பெற்றுள்ளது. இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலங்களையும் கடந்தவராயும், அவற்றைப் பொருந்திய திருவடியை உடையராயும் திருமால் விளங்குகின்றார். அவர்தம் திருவடி இறைஞ்சுவார்க்கு இருள்சேர் இருவினையுஞ் சேரா.

'முடிந்தது முடிவது முகிழ்ப்பது மவைமூன்றும்
கடந்தவை யமைந்த கழலின் நிழலவை
இருமை வினையுமில ஏத்துமவை' (13:46-48)

அவர்தம் திருவடித் தாமரையால் இஞ்ஞாலம் முழுதையும் அளந்துள்ளார்.

'கீழே ழுலகமும் உற்ற அடியினை' (3: 20)

வீடு பேறு அளிக்கும் வீறு நோக்கித் திருமாலினும் அவர் தம் திருவடியே விழுமிதெனக் கடுவனிள வெயினனார் குறிப்பிட்டுள்ளார்.

'நின்னிற் சிறந்த நின் தாளிணையவை' (4:62)

இது பிற பாடல்களிற் காணப் பெறாத புதிய அரிய கருத்தாகும். இத்தகு சிறப்பு வாய்ந்திருத்தலினாற்றான் அன்பர்கள் அனைவரும் தம் முடிதாழ்த்து அடிகளை இறைஞ்சுகின்றனர்.

பிற உறுப்புகள் : திருமாலின் எருத்து பெருத்தும் அல்குல் பருத்தும் காணப்படும்.

"தாளும் தோளும் எருத்தொடு பெரியை
மார்பு மல்குலும் மனத்தொடு பரியை" (13:53, 54)

உடை: ஆடையைப் பற்றிக் குறிப்பிடும்போது திருமால் பொன்னுடை புனைந்திருப்பதாகவே பரிபாடற் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[19] அவ்வுடை அவர்தம் நிறத்துக்கு மாறாக உள்ளது. (4:8). எரியாற் சூழப்பெற்ற மலைபோன்றும், ஞாயிற்றின் கதிர் தோய்ந்த கருங்குன்றம் போன்றும், இள வெயில் சூழ அதனிடையே வளரும் இருள் போன்றும் திருமால் பொலம்பூவாடை புனைந்துள்ளார்.[20] பரங்குன்றத் திலுள்ள சுனை நிறைய நீலம் மலர்ந்துள்ளது. அருகே அசோகு பூத்துக் குலுங்கிப் பொலிவுடன் நிற்கின்றது. இக் காட்சி மாயோன் பொன்னுடை புனைந்திருப்பது போன்று இளம்பெருவழுதியார்க்குத் தோன்றுகிறது. பக்கத்து அசோகு மலரப்பெற்ற நீலச்சுனை இப்புலவர்க்கு உவமேயப் பொரு ளாக அமைந்துள்ளது. பொலம்பூவாடை பூண்ட மாயோனை உவமமாக்கியுள்ளார். இங்ஙனம் மாயோனை உவமப்படுத்தல் இலக்கியத்து அருகிக் காணப்படும்.

அணிகள்: திருமாலின் மார்பு ஒளிரும் அணிகலன் களாற் பொலிகின்றது. சிறந்த மணிகளாலாய மாலை வான வில் போலத் தோன்றும் (2:28, 29). முத்தாலாய நித்தில மதாணி எனும் அணி அவர் மார்புக்கு அழகு செய்கிறது. மார்பகத்துள்ள பொன்னணிகள் மின்னல் போல் ஒளிர் கின்றன; முத்துமாலைகள் வரையினின்றிழிதரும் அருவி யொப்ப இலங்குகின்றன (13:10, 11). தொடியும் தோளணி வலயமும், ஒரு குழையும் அவர் அணிந்துள்ள வேறு சில அணி களாகும் (13:52; 15:55).

மாலை: மரங்களை வழிபட்டு வணங்கியது சிவ வழி பாட்டில் ஒன்றியதுபோல, உடல் நலம் பயக்கும் துளசி வணக்கமும் திருமால் வழிபாட்டில் ஒன்றியது எனச்

19. பரி. 1:56; 3:88; 15:28.
20. பரி. 1:9, 10; 13:1, 2; 15: 27, 28.

சீநிவாச ஐயங்கார் கூறியுள்ளார்.[21] பெரும்பாலான பாடல்கள் திருமாலின் துளப மாலையையே விதந்துரைக்கின்றன. சில பாடல்களில் வேறு மாலைகள் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. தம் நிறத்தொடு மாறுகொள்ளும் முத்துமாலை அருவிபோல் அவர்தம் மார்புக்கு அழகு தருகின்றது.

அவர் தலையில் சூடியிருக்கும் கண்ணியும் கமழ்குரல் துழாயாலானதே; இடையிடையே எரியொக்கும் நிறமுடைய வெட்சிப் பூவாற் றொடுக்கப்பட்ட துளவமாலையையும் தம் மார்பில் அணிந்துள்ளார். துளவத்தைப் பற்றிய செய்தி சங்க இலக்கியத்து அருகிக் காணப்படும். பதிற்றுப்பத்து முப்பத்தோராம் பாடல் துளவத்தைக் கமழ்குரல் துழாய் என்ற அடை கொடுத்துச் சிறப்பித்துள்ளது. அங்ஙனம் சிறப்பித்தமையான் அதனையே தன் பெயராகக் கொண்டு அப்பாடல் விளங்குகிறது. பதிற்றுப்பத்து பழைய உரை, 'மணமில்லாத் துழாயினை மங்கல வழக்காகக் கமழ் குரல் துழாய் என்ற அடை கொடுத்துச் சிறப்பித்தமையின் அப் பாடல் அப்பெயர்த்தாயிற்று' எனக் கூறும் இவ் விளக்கம் பிழைபாடுடையது.

துழாயின் நறுமணங் கருதிக் கடுவனிளவெயினனர், 'நக்கலர் துழாய் நாறிணர்க் கண்ணி' (4:58) என்றும், இளம் பெருவழுதியார் 'நாறிணர்த் துழாய்' (15:15) என்றும் தம் பாடல்களுள் கூறுவது காண்க.

கொடி : திருமால் பனை, நாஞ்சில், யானை முதலிய பல கொடிகளை உடையரேனும், அவருக்குச் சிறப்புரிமையுடையது கருடக் கொடியேயாம். பிறகொடிகள் தனக்கு உவமையாகாதவாறு இக் கருடக்கொடி தனிச்சிறப்புப் பெற்றுள்ளது என ஒரு புலவர் கூறியுள்ளார். கொடியைப்பற்றிப் பேசும் போதெல்லாம் அனைத்துப் புலவர்களும் கருடக்கொடியையே விதந்து பேசுகின்றனர்.

---

21. History of the Tamils, P. 76.

'செவ்வா யுவணத் துயர்கொடி யோயே!' (2 : 60)

'நிவந்தோங் குயர்கொடிச் சேவலோய்!' (3 : 18)

'படர்சிறைப் பன்னிறப் பாப்புப் பகையைக்
கொடியெனக் கொண்ட கோடாச் செல்வனை!' (13 : 38, 39)

'புள்ளணி பொலங்கொடியவை! (15 : 56)

கருடன் பாம்பைக் கொல்லுமியல்பிற்றுதலின், பாம்புப் பகை எனவும் அது பெயர் பெறும். பரிபாடலில் கருடன் என்னும் சொல் ஆட்சி பெறவில்லை. சேவல், புள், உவணம், பாப்புப் பகை என்னும் சொற்களே கருடனைக் குறிக்க வந்துள்ளன.[22] 'ஊர்தி' எனப் பின்வரும் தலைப்பில் கருடனின் செயற்கருஞ் செயல்களும் பிறவும் காணலாம்.

படைகள் : இளம்பெருவழுதியார் தம் பாடலில் திருமாலின் ஐம்படைகளையும்—சங்கு, 'சக்கரம், வில், தண்டு, வாள்—குறிப்பிட்டுள்ளார். இப்படைகளுள் சக்கரமே பல முறை பாராட்டப்பட்டுள்ளது. படை என்ற சொல்லே சக்கரத்தை உணர்த்தும். சக்கரத்தைத் தம் வலக்கையில் திருமால் தாங்கியுள்ளார். இப்பொழுது வழக்கிலுள்ள சக்கரம் எனும் சொல் பரிபாடலில் இடம் பெறவில்லை. நேமி, ஆழி, பருதி, திகிரி என்னும் சொற்களையே பரிபாடற் புலவர்கள் சக்கரத்தைக் குறிக்கக் கையாண்டுள்ளனர். பகைமையை அழித்தொழித்து வெல்வதற்காகவே அவர் ஆழியினை ஏந்தியுள்ளார். அது திங்கள் போன்ற தன் தண்ணளியால் அன்பர்க்கு நலம் புரிகின்றது. இக்காரணத்தால் ஒரு புலவர் திருமாலின் நேமி உலகிற்கு நிழலாகின்றது எனப் பாராட்டிக் கூறியுள்ளார். ஆழிப்படையால்தான் திருமால் அவுணர்களின் தலைகளை அறுத்துப் பனங்கனிகள் உருண்டோடுவது போல உருளச் செய்தார். ஆழி, பகைவர்களைத் தகைப்பதில் கூற்றம் ஒக்கும். நிறத்தால் உருக்குகின்ற பொன்னொடு மிளிரும் நுடங்கழலை ஒக்கும். சங்கு என்னும்

22. பரி. 1: 11; 1 : 57; 2 : 60; 13 : 38.

இப்பொழுதைய வழக்குச் சொல் பரிபாடலிற் காணப்படா விடினும், அதனைக் குறிக்க வளை, கோடு, வலம்புரி என்னும் சொற்கள் பயின்றுள்ளன. திருமால் அவுணர்களைக் கொன்ற காலை, எழுப்பிய சங்க முழக்கம் இடி முழக்கம் போன்றிருந்தது.

கருநிற மாயோன் ஒரு கையில் ஞாயிறன்ன ஆழியும், ஒரு கையில் திங்களன்ன சங்கமும் ஏந்தி, எழிலுடன் மிளிர்கின்றார். சக்கரப் படையை அடுத்துச் சங்கே பெரிதும் பரிபாடலில் சிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏனை மூன்று படைகளும் பதினைந்தாம் பரிபாடலில் பெயரளவிலே காணப்படுகின்றன.

'வரிசிலை வய அம்பினவை;
புகரிணர்சூழ் வட்டததவை, புகர்வாளவை.'

ஊர்தி: திருமாலுக்கு ஊர்தி கருடனென்றே. அவர் தம் கொடி கருடக் கொடியே. இஃது ஆயிரந்தலையுடை அரவினைத் தன் வாயில் கொண்டுள்ளது. இதன் அலகு சிவந்திருத்தலின் 'செவ்வாயுவணம்' என்ப. பல நிறச் சிறகர் உள்ள இவ்வூர்தி பாம்பினத்துக்குக் கேடு பயத்தலின் 'படர் சிறைப் பன்னிறப் பாம்புப் பகை' எனச் சிறப்பிக்கப் பெற்றுள்ளது. இது நஞ்சுடையரவத்தையும் கொல்லும் ஆற்றல் சான்றது. இது பாம்புகளையே மடிக்கட்டாகவும் (உதர பந்தம்) தொடியாகவும் கண்ணியாகவும் கொண்டு தலை, கழுத்து, சிறகுகளுக்கும் அவற்றையே அணிகலன் என்ன அணிந்துள்ளது.

'அவன் மடிமேல் வலந்தது பாம்பு
பாம்புதொடி; பாம்புமுடி மேலன;
பாம்புபூண்; பாம்பு தலைமேலது
பாம்பு சிறை தலையன.' (4 : 43-46)

இது பகைவர்களின் செருக்கினை அடக்கியது. இதற்கு இரை பாம்பேயாகும். இதனை வைணவர்கள் 'பெரிய திருவடி' என வழங்குப.

கடுவனிளவெயினனார் இவ்வூர்தி பற்றிய இரு புராணக் கதைகளைச் சுட்டியுள்ளார்.

'ஏஎர், வயங்குபூண் அமரரை வௌவிய அமிழ்தின்
பயந்தோ ளிடுக்கண் களைந்த புள்ளினை.' (3: 15, 16.)

'ஆயிர வணர்தலை அரவுவாய்க் கொண்ட
சேவ லூர்தியும் செங்கண் மாஅல்
ஓவெனக் கிளக்குங் கால முதல்வனை.' (3 : 59-61)

அக்கதைகள் பரிமேலழகர் உரையில் விரிவாகக் காணப்படும்.

1. அமரரிடமிருந்து அமிழ்து கொணர்ந்து தன் தாயைச் சிறை வீடு செய்தது : இந்திரனது குதிரைவால் வெள்ளை நிறமென்றும், அன்றாயின் தான் அடிமையாவதாகவும் கத்துருவினோடு கருடன் தாயாகிய வினதை போட்டியிட்டுப் பந்தயம் (பணையம்) வைத்தாள். கத்துரு வஞ்சனையால் வாலைக் கருநிறமாக்கியமையின் அவட்கு வினதை அடிமையாயினள். பின்னர் இந்திரனது அமராபதி சென்று ஆண்டுள்ள அமிழ்தம் கொணர்ந்துதரின் அடிமையினின்று மீளலாம் எனக் கத்துரு கூற, உடனே கருடன் ஆண்டுச் சென்று அமிழ்து எடுத்து வந்து தன் தாயினைச் சிறை மீட்சி செய்தான்.

2. திருமால் கருடனின் செருக்கழித்தது : மாயோன் இந்திரற்கு இளையோனாய்த்தோன்றி அசுரரை வென்றபோது, 'இவ் வெற்றியெல்லாம் இவனின் ஆயவல்ல, இவனைத் தாங்கிச் செல்லும் என்னின் ஆய' என்று கருடன் தன்னை வியந்திருந்தான். அக்கருத்தை உணர்ந்த இறைவன், அச் செருக்கினை அடக்கக் கருதி, 'நீ என் மெய்ம் முழுதும் தாங்கல் வேண்டா; ஒரு கைச் சிறு விரலினைத் தாங்கினை எனின் நீ கருதியவாறேயாம்' என்று சொல்லி, அவ்விரலை அவன்மேல் வைப்ப, அப்பாரம் தாங்ககில்லாது கீழுலகம் புக்கு வீழ்ந்து நெடுங்காலம் போற்றி வழிபட்டான்.

ஆதிசேடன் : நாகவழிபாடு இந்தியாவில் பல பாகங்களிலும் பரவியிருந்தது. சிவபெருமானின் அரவ அணிகலன்களும்

திருமாலின் ஆதிசேடப் படுக்கையும் அந்நாக வழிபாட்டினை நினைவுறுத்தும் என்பர் சீநிவாச ஐயங்கார்.[23]

ஆதிசேடன் என்ற சொல் பரிபாடலில் இல்லை. ஆனால் அது வேறு சொற்களால் குறிக்கப்பட்டுள்ளது.

'ஆயிரம் விரித்த அணங்குடை அருந்திறல்' (1 : 7)

'ஆயிரம் விரித்த கவைநா அருந்தலை' (13 : 27. 28)

'அணங்குடை அருந்தலை ஆயிரம் விரித்த——
கணங்கொள் சுற்றத்து அண்ணல் (திரட்டு 1 : 79. 80)

'இருகேழ் உத்தி அணிந்த எருத்தின்
வரைகெழு செல்வன்' (திரட்டு 1: 48, 49)

'புனையிழை பூமுடி நாகர்' (திரட்டு 1: 58 59)

'குளவா யமர்ந்தான்' (திரட்டு 1: 63)

ஆதிசேடன் ஆயிரந்தலை யுடையதாகவும், அச்சுறுத்தும் சீற்றப் பார்வையுடையதாகவும், தன் தலைகளை உயர்த்துத் திருமாற்குக் குடைபோற் கவிப்பதாகவும் பரிபாடலில் வருதல் காணலாம். தன் உருவொடு மாறுபடும் நிறமுடைய பாற்கடல் நடுவண் திருமால் ஆயிரம் தலையுடைய ஆதிசேடன் மீது பள்ளி கொண்டுள்ளார். (13 : 26-29). மதுரைக்கடுத்த குளவாய் நகரில் ஆதிசேடனுக்காகத் தனித்த கோயில் இருந்தது எனப் பரிபாடல் திரட்டு முதற் பாடல் கூறும். இச்செய்தி வேறெங்கும் காணப்பட்டிலது. நல்வினை உஞற்றி அதன் பயன் துய்ப்பார் உறையும் துறக்கம் போன்றது அக் கோயில். யாழிசை ஒப்ப வண்டும் தும்பியும் ஆண்டு முரலும்; இடிமுழக்கம் போல் களிறுகள் பிளிறும்; ஓடிவரும் அருவியும் அதிரும்; முரசும் முழங்கும். மையுண் கண்ணினர் காதலரொடு கூடி ஆடலும் பாடலும் தொடங்குவர், இளையரும் முதியரும் ஆடவரும் பெண்டிரும் அவிப்பொருள் தந்து ஆதிசேடனை இறைஞ்சித் துறக்கவின்பம் பெறுவர். அத்திரட்டுப்

23. History of the Tamils, P. 76.

பாடல் இங்ஙனம் கோயிலைப் புனைந்து கூறுவதோடு ஆதி சேடன் செயல்களையும் விரிக்கின்றது.

மலையை மத்தாகக் கொண்டு விண்ணவரும் அவுணரும் அமிழ்துபெறக் கடலைக் கடைந்த காலத்து நாணாகியிருந்து உதவியவன் ஆதிசேடன் (திரட்டு 1 : 67-71). பெருங் காற்றால் வந்த இடரைத் தடுத்து மேருமலையைக் காத்தவனும் அவனே. உலகை அணியெனத் தன் தலையில் தாங்கியவனும் அவனே. விடைப் பாகனாகிய விரிசடைக் கடவுள் திரிபுரம் எரித்த காலை, மேருமலையாய வில்லுக்கு நாணாக இருந்து அவர்க்குப் புகழ் தந்தவனும் ஆதிசேடனே யாவன்.

'மணிபுரை மாமலை ஞாறிய ஞாலம்
அணிபோல் பொறுத்தாரும் தாஅம்; பணிவில் சீர்ச்
செல்விடைப் பாகன் திரிபுரம் செற்றுழிக்
கல்லுயர் சென்னி இமயவில் நாணாகித்
தொல் புகழ் தந்தாரும் தாம்.' (திரட்டு 1: 74-78)

பிறப்புகள் (அவதாரங்கள்)

மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், பலராமன், இராமன், பரசுராமன், கிருட்டிணன், கல்கி என்னும் பத்து அவதாரங்களையும் திருமால் கொண்டதாக நாலாயிரப் பிரபந்தம் கூறும்.[24] ஆனால் பரிபாடற் காலத்து எல்லா அவதாரங்களும் சிறப்பாகக் கருதப்படவில்லை. திருமால் எல்லாப் பிறப்புமாகத் தோன்றினாலும், அவர்க்குப் பெற்றோர் இல்லை என்பதனைப் 'பிறவாப் பிறப்பிலை பிறப் பித்தோர் இலையே' என்னும் கடுவனிளவெயினனார் கூற்றால் அறியலாம். பத்துப்பாட்டு எட்டுத்தொகையாகிய சங்க இலக்கியங்களுள் மச்சம், கல்கி என்னும் இரண்டவதாரங் களைத்தவிரப் பிற அவதாரங்களெல்லாம்கூறப்பட்டுள்ளன.[25]

24. நாலாயிரம் 1982-1991.
25. பெரும். 29-31; மதுரைக். 591; புறம். 58, 378; அகம். 59, 220; பரி. 23;4.

பரிபாடல் மட்டுமே நரசிங்காவதாரமும் வராகவதாரமும் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.[26] மற்றைய சங்க இலக்கியங்களில் அவை பற்றிய செய்தியில்லை. பரசுராமாவதாரமும், பலராற் புகழ்ந்து பாராட்டப் பெறும் இராமாவதாரமும் பிற சங்க இலக்கியங்களிற் காணப்படுகின்றனவேயன்றிப் பரிபாடலிற் காணுமாறில்லை. ஆகவே, இப்பொழுது கிடைத்துள்ள பரி பாடல்களால் மச்சம், கல்கி, பரசுராமன், இராமன் என்னும் நான்கு அவதாரங்கள் பற்றி அறிவதற்கில்லை. திருமாலைப் பற்றிப் பாடினோருள் இளம்பெருவழுதியார் தவிர மற்றைய வர்களெல்லாரும் வராகவதாரத்தையே பன் மாணும் சிறப்பாகப் பாராட்டிக் கூறியுள்ளனர். ஆனால் ஆழ்வார் களோ, இராம கிருட்டிணுவதாரங்களையே பலபட விரித்துத் தம் பாசுரங்களில் பாடியுள்ளனர். பரிபாடற் காலத்து இராமகாதை தமிழகத்து வழக்காற்றிலின்மையினாலேதான் அந்நூல் இராமவதாரத்தைக் குறிப்பிடவில்லை என்பர் மறை மலையடிகள்.[27] திருமாலின் அவதாரங்களெல்லாம் வடபுல ஆரியர்களது படைப்பென்றும், தமிழகத் திருமாலுக்கும் இவ் வவதாரங்கட்கும் யாதொரு உண்மைத் தொடர்புமில்லை என்றும் அடிகளார் மேலும் கருத்துரைப்பர்.[28] ஆயரினத்தின் வீர வழிபாட்டிற்குரிய பலராமனும் கிருட்டிணனும் பிற் காலத்துப் பார்ப்பனரால் திருமாலின் அவதாரங்களாகச் சேர்க்கப்பட்டனர் என்பர் கனகசபைப்பிள்ளை.[22]

வராகவதாரம்

திருமால் பன்றியுருக் கொண்டு ஒரு காலத்துத் தன் கோட்டினால் உலகினை ஊழிவெள்ளத்தினின்றும் கொணர்ந்

---

26. பரி. 4:10-21; 3:23-24.
27. மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், தொகுதி 1, பக்கம் 401.
28. மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்: தொகுதி II, பக்கம் 447.
29. The Tamils 1800 years ago, P. 231.

தார். அக்காலம் 'கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய ஊழி' (வராக கற்பம்) எனப் பெயர் பெற்றது. திருமாலாய கேழல், நிலத்தை வெள்ளத்தினின்றும் கொணர்ந்ததனை, அவர் நிலமகளை மணம் புணர்ந்ததாக ஒரு புலவர் மொழிந் துள்ளார் (21:32, 33). பண்டு கரிய கழுத்தாற் றூங்கி இவ் வுலகை வெள்ளத்தினின்றும் எடுத்து அசையாது நிலையுறச் செய்த தொழில் மேருவின் தொழிலோடொக்கும்.

'புருவத்துக் கருவல் கந்தத்ததல்
தாங்கியிவ் வுலகந் தந்தடிப் படுத்ததை நடுவன்
ஓங்கிய பலர்புகழ் குன்றினோ டொக்கும்.' (4:22–24)

வராகவதாரத்தைக் கூறும் புலவர் நல்லெழுநியார். அது தன் கோட்டில் பொன்னாலாய கிம்புரி என்னும் அணியை அணிந்த தாகப் புனைந்துள்ளார்.[30] இப்பொழுது வழங்கும் வராகம் என்னும் சொல் பரிபாடலில் காணப் பெறவில்லை. அதனைக் குறிக்கக் கேழல், களிறு என்னும் சொற்களே வழங்கு கின்றன.[31]

நரசிங்காவதாரம்

கடுவனிளவெயினனார் தம் பாடலில் இவ்வவதாரத்தை அழகுறச் சித்தரித்துள்ளார். பிருங்கநாதன் திருமாலைப் புகழ்ந்து பாடியது கேட்டு அவன் தந்தை இரணியன் கடுஞ் சீற்றமுற்றான். அச்சினத் தீயால் அவன் மேனியிற் பூசியிருந்த சாந்தம் உலர்ந்து உதிர்ந்தது. மைந்தனைத் தந்தையின் தொல்லையினின்றும் விடுவிக்கத் திருமால் திடீரெனத் தூணிற் றோன்றி, இரணியனின் வரையனைய மார்பினைக் காலாற் கடிந்து தன் உகிரால் கிழித்தெறிந்தார். நரசிங்கம் என்னும் சொல் ஆட்சியில்லை. இவ்வவதாரம் நயமுறச் சித்திரிக்கப் பட்டுள்ளது.

'செயிர்தீர் செங்கட் செல்வ நிற்புகழப்
புகைந்த நெஞ்சிற் புலர்ந்த சாந்திற்

30. பரி. 13:35, 36.
31. பரி. 2:16; 3:24; 2:33; 13:36.

பிருங்க லாதன் பலபல பிணிபட
வலந்துழி. மலர்ந்த நோய்கூர் கூம்பிய நடுக்கத்
தலர்ந்த புகழோன் தாதை யாகலின்
இகழ்வோன், இகழா நெஞ்சின னுகநீ யிகழா
நன்று நட்டவவன் நன்மார்பு முயங்கி
ஒன்று நட்டவன் உறுவரை மார்பிற்
படிமதஞ் சாம்ப ஒதுங்கி
இன்னல் இன்னரொடு இடிமுர சியம்ப
வெடிபடா ஒடிதூண்டு தடியொடு
தடிதடி பலபட வகிர் வாய்த்த உகிரினை (பரி. 4: 10-21)

கூர்மாவதாரம்

அமரர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்து அமிழ்தம் எடுத்த ஞான்று, திருமால் ஆமை உருக்கொண்டு தம் கழுத்தால் மேருமலையைத் தாங்கினர். கூர்மம் என்ற சொல் காணப்படவில்லையேனும் இவ்வவதாரம் பற்றிய கதைக் குறிப்பு காணப்படுகின்றது.

'திகழொளி முந்நீர் கடைந்தக்கால் வெற்புத்
திகழ்பெற வாங்கித்தஞ் சீர்ச்சிரத் தேற்றி
மகர மறிகடல் வைத்து நிறுத்து' (திரட்டு 1:64-66)

பலதேவன் : ஆழ்வார்கள் காலத்துப் பலதேவனைத் திருமாலின் அவதாரம் எனக் கருதினர். ஆனல், சங்க காலத்து, அவர் தனிக்கடவுளாகவும் சிறந்த கடவுளருள் ஒருவராகவும் கருதப் பெற்றூர். பின்வரும் பலதேவன் என்னும் தலைப்பில் இதுபற்றிய கருத்தினை விரிவாகக் காணலாம்.

கிருட்டிணுவதாரம் : குதிரை வடிவில் வந்த கேசியைக் கொன்றதும் கூத்தாடியதும் தவிரக் கிருட்டிணுவதாரம் பற்றிய பிற குறிப்புகள் இந் நூலகத்துக் காணப்பட்டில. ஆய்ச்சியர்களோடு இடம் வலம் நின்று ஆடியதும் தலையிலும் தோளிலும் குடம் வைத்தாடியதும் இவர்தம் கூத்து

களாகும். கண்ணன் அல்லது கிருட்டிணன் என்ற சொல் ஆட்சி பெற்றிலதெனினும், காட்டிய கதைக் குறிப்பால் அது கிருட்டிணாவதாரம் பற்றியது எனத் தெள்ளிதின் அறியலாம்.

'இடவல குடவல கோவல காவல' (3:8-3)

கூந்த லென்னும் பெயரொடு கூந்தல்
எரிசினங் கொன்றோய் (3:31, 35)

இவ்வடிகளே அவ்வவதாரம் பற்றி அறியத் துணைபுரிவன.

வாமனாவதாரம் : திருமால் குள்ள உருவில் தோன்றிப் பின்னர் பேருருக் கொண்டு ஞாலமெல்லாம் அளந்தார். இக்கதைக் குறிப்புத்தவிர வாமனன் அல்லது திருவிக்கிரமன் என்னும் சொல் ஆட்சி பெறவில்லை. கடுவனிளவெயினனார் என்னும் புலவர் ஒருவரே இவ்வதாரத்தினைச் சுட்டியுள்ளார்.

'கீழே ழுலகமும் உற்ற அடியினை' (3:20)

என்னும் அடியே அதனைக் குறிப்பதாகும்.

திருமாலைப் பற்றிய பிற கதைகள்

க. கொடிய அவுணர்களைத் திருமால் தன் ஆழியால் அழித்தொழித்தது. இதனைக் கீரந்தையார் தம் பாடலில் விரிவாகப் புனைந்துள்ளார். (2:40-49)

உ. பெருமாள் உலகளந்தபோது அவுணர்கள் அவர் தம் ஆண்மையும் பெருமையும் அறிந்து அஞ்சி ஓடிக் கடலிலொளிந்தனர். (3:54-56)

ந. அன்னப்புள்ளாய் வடிவுகொண்டு தன் சிறகால் வெள்ளத்தை வற்ற செய்தது. (3:25, 26)

ச. தன் ஊர்தியான கருடனின் செருக்கினை முருக்கியது. (3:59-62)

ரு. தேவர்கள் பாற்கடல் கடைந்தபோது அவர்கட்கு உதவியது (திரட்டு 1: 6'-71)

7. அசுரர்களை விடுத்துத் தேவர்கட்கு மட்டும் அமிழ்து வழங்கியது. (3: 34, 34)

பலதேவன் : ஆழ்வார் காலத்தே பலதேவன் அவதாரமாகக் கொள்ளப்படினும், சங்ககாலத்தே அவர் தலையாய கடவுளாக—சிவன், திருமால், செவ்வேள், பலதேவன்-என்னும் தெய்வங்களுள் ஒருவராகக் கருதப் பெற்றார். பலதேவனுக்குரிய பனைக்கொடி பற்றித் தனியே தொல்காப்பியத்து ஒரு நூற்பா காணப்படுகிறது. (தொல். 285). அதுகொண்டு பலதேவ வழிபாடு தொல்காப்பியர் காலத்தே இருந்தது என உய்த்துணரலாம். வடஇந்தியர்களால்தான் பலதேவ வணக்கம் தமிழகத்தே தோன்றியது என அறிஞர் சிலர் கருதுப.[32] 'இவ் வழிபாடு தமிழ் நாட்டுக்கு உரியது; பலதேவனுக்குரிய கோயில்கள் புகார், மதுரை நகரங்களில் பண்டு இருந்தனவேயன்றி வடநாட்டில் இல்லை. பலதேவனுக்குரிய பெயர்களான வெள்ளையன், வெள்ளன் என்பன தமிழகத்துக் குடிமக்கள் சிலர்க்குப் பெயராக இன்னும் விளங்குகின்றன. ஆகவே, வட நாட்டிலிருந்து இவ்வழிபாடு வந்தது எனக் கூறுவது தவறு என்பர் சீநிவாச ஐயங்கார்.[33]

சங்க இலக்கியங்களில் பலதேவனைப் பற்றிப் பல குறிப்புகள் காண்கின்றன. அளவிறந்த ஆற்றலுக்கு அவர் பெயர் வாய்ந்தவர்; பால்போலும் நிறத்தினர்; பனைக் கொடியுடையவர்; திருமாலும் பலதேவனும் எஞ்ஞான்றும் ஒருங்கே காணப் பெறுவர். இக் கடவுளரை ஒருவராகவே கருதி மக்கள் வழிபட்டனர் எனப் பரிபாடல் கூறும். இவ்விருவரும் நிறத்தால் வேறுபட்டிருப்பினும் தொழிலால் ஒன்றுபடுவர். உலகுபுரத்தலே அவர்கட்குரிய தொழிலாம். (15 : 11-13). எனவேதான் பலதேவனுக்குரிய மாலை, அணிகலன்கள், கொடி, படைக் கருவிகள் எல்லாம் திருமாலுக்குமுரியவாகப் பரிபாடற் புலவர்கள் பாடியுள்ளனர்.

---

32. ஆராய்ச்சித் தொகுதி, பக். 54.
33. History of the Tamils, P. 204.

'நின்னென் றுயர் கொடிபனை
நின்னென் றுயர் கொடி நாஞ்சில்
நின்னென் றுயர் கொடி யானை.' (4 : 38-40)

'ஒள்ளொளியவை ஒருகுழையவை
புள்ளணி பொலங் கொடியவை
வள்ளணி வளைநாஞ்சிலவை
சலம்புரி தண்டேந்தினவை.' (5 : 55-58)

பரிபாடலில் பலதேவன் நிறத்துக்கு வெண் சங்கம் உவமையாக வந்துள்ளது. (2 : 20). கண்ணனுக்குத் தமைய னுவர் பலதேவன். இவர் வாலியோன் எனவும் நாஞ்சிலோன் எனவும் பனைக்கொடியோன் எனவும் அழைக்கப் பெறுவர்.[34] நாஞ்சிலும் தண்டும் அவர் தம் இருபடைகளாம். ஒரு குழை அணிந்த செவியினர். இருளன்ன உடையினர். பனையும் நாஞ்சிலும் யானையும் எழுதிய கொடியினர். வெண் கடப் பந்தார் அணிந்த மார்பினர்.

பரிபாடற் காலத்துப் பரவி வழிபாடு செய்யப் பெற்ற பலதேவ வணக்கம் பிற்காலத்தே மறைந்தது. திரு. கனக சபைப் பிள்ளையவர்கள் பண்டைத் தமிழர் தம் கடவுள்கள் மாய்ந்தொழிந்தன என்றும், முன் இருந்த இந்திர பலதேவ வழிபாடுகளை இன்றைய தமிழர்கள் மேற்கொள்ளவில்லை என்றும் குறித்துள்ளார்.[35]

திருமாலின் பதிகள் : பழைய காலத்துத் திருமாற் பதி யெனப் புகழ்பெற்று விளங்கியவை திருமாலிருஞ்சோலை மலை, திருவேங்கடம், திருவரங்கம் என்னும் மூன்றுமாம் எனப் பரிபாடல் சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் அறிவிக்கின்றன. பாண்டியர்களின் கோயில்கள் பற்றியே பரிபாடல் குறிப்பிடுவதாகலின், அது சேரசோழ நாடுகளி லுள்ள கோயில்களைக் குறிப்பிடவில்லை. பரிபாடல் புகழ்ந்து ஏத்தும் திருப்பதிகள் திருமாலிருஞ் சோலைமலை, இருந்தையூர், குளவாய் என்னும் மூன்றுமேயாம்.

34. பரி, 2 : 20; 13 : 33; 2: 22.
35. The Tamils 1800 years ago,p 238.

திருமாலிருஞ்சோலைமலை: இப்பதி, திருவரை (13:12) இருங்குன்று (15 : 35), திருமாலிருஞ்சோலைமலை (15 : 22, 23) என்னும் பெயர்களால் வழங்கப் பெற்றுள்ளது இக்குன்றம் சோலைகள் அடர்ந்து இருண்டு காணப்படுதலின் 'மாலிருங் குன்று' எனப் பெயர் பெற்றது. இங்குத் திருமாலும் பலதேவனும் ஒருசேர உறைந்தமையின், இதன் புகழ் அளவிறந் தோங்கியது. சிலம்பாறு பலதேவன் மார்பிற் பொலிந்து நிற்கும் வெண் கடப்பந்தார்போல ஆர்த்திழிந்து ஓடி, அக் குன்றுக்கு அணி செய்யும். அக்குன்றின்கண் உள்ள சுனைக ளெல்லாம் நீலம் மலர்ந்துள்ளன. பாங்கர் ஓங்கிய அசோகு பூத்துக் குலுங்கிப் பொலிகின்றன. குரங்குகள் தம் குட்டி களுடன் தாவி விளையாடும். வேய்ங்குழல் ஓசையும் மிடற்றுப் பாடலும் குயிலோசையினையும் அதன் எதிரொலியினையும் ஒத்து ஒலிக்கின்றன. ஆண்டெழும் தாள ஒலியும் முழவொலி யும் மயிலது அகவலையும் அதனெதிரொலியையும் போன்று இசைக்கின்றன. இங்ஙனம் இக்குன்றின் சிறப்பைப் பல்வேறு முறையில் இளம் பெருவழுதியார் படம் பிடித்துக் காட்டுவர்.

சிலப்பதிகாரம் இப்பதியினைத் திருமால் குன்றம் எனக் கூறுவதோடு, ஆண்டுள்ள புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என்னும் மூன்று பொய்கைகளையும், அவற்றில் மூழ்குதலாலாம் பயன்களையும் விரித்துரைக்கின்றது. இச் செய்திகள் பரிபாடலில் கூறப்பெறவில்லை. இக்குன்றத்தினை முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளுள் ஒன்றான பழமுதிர் சோலை எனத் திருமுருகாற்றுப்படை இயம்பும். அக்குன்றத் தில் இப்பொழுது புண்ணிய சரவணம் என்னும் பொய்கை காணப்படுதலின், சங்க காலத்தில் அங்கு ஒருங்குறையும் திருமால் பலதேவர்கட்கு ஒன்றும், செவ்வேளுக்கு ஒன்றும் ஆக இரு கோயில்கள் இருந்தன என்று ஊகித்தற்கு இட னுண்டு.[36] அக்குன்றத்தை உள்ளுதலும் அது நிற்கும் திசை நோக்கித் தொழுதலும் திருமாலின் அருள்பெறத் துணை செய்யும் என்று ஆழ்ந்த நம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் இளம்பெருவழுதியார் பாடியுள்ளார்.

36. பத்துப்பாட்டு-முன்னுரை: உ. வே. சா.

இருந்தையூர்

வையை யாற்றங்கரையில், மதுரைக்கருகில் உள்ள பகுதியே இருந்தையூர் என்பது. 'இருந்தையூர் அமர்ந்த செல்வ' (திரட்டு 1 :5) என்னும் விளித் தொடரில் உள்ள அமர்தல் என்பது குந்துதலைக் குறிக்கும். சிலப்பதிகார உரையாளரான அரும்பதவுரைகாரர் இத்திருமாலை இருந்த வளமுடையார் எனக் குறிப்பர்.[37] இருந்தவளம் என்பதும் இருந்தையூர் என்பதும் ஒரு பகுதியையே குறிப்பன. திருமால் இப்பகுதியில் குந்திய கோலத்தில் விளங்குவதால் அப்பதி இருந்தவளம் எனவும் இருந்தையூர் எனவும் வழங்கலாயிற்று. நின்றவூர், நின்றை என மருவியாங்கு இருந்தவூர் இருந்தை என மருவலாயிற்று.[38] கூடலழகர் வீற்றிருக்கும் மதுரையம்பதியின் ஒரு பகுதியே பண்டு இருந்தையூர் என வழங்கியது. இருந்தையூர் கருங்கோழி மோசியார், இருந்தையூர் கொற்றம் புலவன் என்னும் இரு சங்கப் புலவர்களும் இவ்வூரினரே என்பதும் அறியத்தகும்.

பரிபாடல் திரட்டிலுள்ள முதற் பாடல் இப்பதியைப் புனைந்துரைக்கின்றது. இருந்தையூரின் ஓர்பால் வேங்கை, மராம், மகிழ், அசோகு முதலிய மரங்கள் செழித்து நிற்கும் குன்றம் உள்ளது. மற்றோர்பால் விண்ணில் மிளிரும் மீனெனச் சுனை நிறைய மீன்கள் திகழ்கின்றன. ஆங்குள்ள தாமரைப் பூவில் வண்டுகள் ஆர்க்கின்றன. அதன் பக்கத்துத் திருமகளையும் கவரத்தக்க வகையில் கலித்தெழுந்த கழனிகள் உள்ளன. உழவர்களும், நாற்று நடுபவர்களும் ஆண்டுக் களிப்புடன் ஆடிப்பாடி வேலையில் ஈடுபடுகின்றனர். இப்பதிக்கு அண்மையில் துறவியர், உழவர், வாணிகர் முதலிய பலநிலை மக்களும் குழுமுதற் கிடனான ஒரு நகரமுள்ளது.

---

37. சிலம்பு. 18 : 4–உரை.
38. ஆராய்ச்சித் தொகுதி, பக். 242.

குளவாய்: இப்பதியும் மதுரைக்கருகிலே உள்ளது. இதனை மாடக்குளக் கீழ் மதுரை எனவும் கூறுப.[39] இங்கே ஆதிசேடனுக்கெனத் தனித்த கோயில் இருந்தது. (திரட்டு 1 : 63) ஆதிசேடனுக்குத் தனித்த கோயிலுண்மை சுட்டுவது, பரிபாடலில் மட்டுமே காணப்படும் அரிய செய்தியாகும். இளையரும் முதியரும், ஆடவரும் பெண்டிரும், ஆக எல்லாரும் ஆராதனைப் பொருள்களொடு சென்று, ஆதிசேடன் கோயில் நண்ணி இறைஞ்சி ஏத்தினர்.

இறையியல்பு

திருமால் யாண்டும் பரவி உள்ளார். பரிபாடலில் இரு முறை காணப்பெறும் 'எவ்வயினோயும் நீயே' (2:59; 4:70) என்னும் தொடர் அக் கருத்தை வலியுறுத்தும். அவர் ஐம்புலன்களிலும் ஐம்பொறிகளிலும் ஐம்பூதங்களிலும் விரவியுள்ளார். (13 : 14-24). அனைத்துலகத்தையும் அனைத்துயிரையும் படைத்தவர் அவரே.[40] அயனாகவும் சிவனாகவும் பல தேவனாகவும் விளங்குபவரும் அவரே. அவர் மூவேழு உலகையும் அருளொடும் அறத்தொடும் ஆட்சி புரிந்து அனைத்துயிர்களையும் புரந்து வருகின்றார்.

'அருள் குடை யாக அறங்கோ லாக
இருநிழல் படாமை மூவே ழுலகமும்
ஒருநிழ லாக்கிய ஏமத்தை மாதோ!' (பரி. 3:74-76)

திருமால் பல அவதாரங்கள் எடுத்தாலும் அவரைப் பிறப்பித்தோரிலர் (3:72). அவர்க்கு ஆலமும் கடப்பும் நல் யாற்றுள நடுவும் மலைகளும் உறைவிடமாகும். எவ்விடத்தும் எப்பொருளிலும் இருப்பார். தனக்கெனத் தனி உறைவிடம் இல்லை. ஒருமித்த உள்ளத்தோடு வழிபடுவதற்காக அன்பர்கள் திருமாலுக்கென விதந்து சில உறைவிடங்களைக் குறிப்பிட்

39. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் 12 : 13.

40. பரி. 3 : 12-14 ; 1 : 43-46; 1 : 5.

டுள்ளனர். உண்மையில் நோக்குழி அவ்விடங்களோடு திருமாலின் உறைவிடம் அமைந்து விடுவதில்லை. எனவே, அவர்க்கெனச் சில இடம் சுட்டிக்கூறுதல் தவறாகும்.

'அனைத்துநீ அனைத்தினுட் பொருளுநீ யாதலின்
உறைவும் உறைவது மிலையே யுண்மையும்
மறவியில் சிறப்பின் மாயமா ரனையை' (பரி. 3 : 68-70)

இவ்வாறு கடுவனிளவெயினனார் அக் கருத்தைத் தெளிவு படுத்துகிறார். பிற கடவுளர்கட்குரிய கொடி, படைக்கருவி, உறையுள் ஆகியவற்றைத் திருமாலுக்கு ஏற்றிக் கூறுதலின் வாயிலாகப் புலவர்கள் அவ்விறையின் சிறப்பினையும் முழு முதற்றன்மையினையும் புலப்படுத்தியுள்ளனர்.[41]

திருமாலின் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர் யாமித்துவம், அர்ச்சை என்னும் ஐந்நிலைகளையும் பரிபாடல் சுட்டுகின்றதென்னலாம்.[42]

'நாறிணர்த் துழாயோன் நல்கி னல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம். (பரி. 15 :15 - 16)

இவ்வடிகள் பரத்துவ நிலையை உணர்த்தும். கண்ணன், பலதேவன், பிரத்தியும்நன், அநிருத்தன் எனத் திருமால் கூறப் பெறுதலின், நால்வகை வியூக நிலை பெறப்படும்.

'செங்கட் காரி, கருங்கண் வெள்ளை,
பொன்கட் பச்சை, பைங்கண் மாஅல்' (பரி. 3 : 81-82)

திருமால் வேதமாகவும் அயனாகவும் உலகுயிர்களின் தோற்றமாகவும் விளங்குகின்றான் என்பது அந்தர்யாமித்துவ நிலையை உணர்த்தும்.

'நலமுழு தளைஇய புகரறு கட்சிப்
புலமும் பூவனு நாற்றமும் நீ' (பரி. 1 : 45, 46)

---

41. பரி. 15 : 58; 4 : 36–41; 15 : 55; 4:66-69.
42. தமிழிலக்கியவரலாறு, (E. S. வரதராசையர். P. 229-30.

திருமாலின் அவதாரங்களைக் கூறுதலின், விபவநிலையினை அறியலாம். திருமாலிருஞ்சோலைமலையில் கண்ணனுக்கும் பலதேவனுக்கும் ஒருசேரக் கோயில் இருந்தமை கூறுதலின், அர்ச்சை நிலையும் அறியப்படும் (15 : 65-66). பரிபாடற்காலத்திலேயே தமிழர்கள் பஞ்சராத்திர ஆகமம்- (விட்டுணு-வாசுதேவர், நான்கு வியூகங்கள்-)பற்றிய கொள்கையை அறிந்திருந்தனர் எனக் கொள்ளலாம் என்பர் கிருட்டிணசாமி ஐயங்கார்.[43]

திருமால் எல்லாப் பொருளினும் உட்பொருளாய் விளங்குகிறார். அவர்தம் இறைமைப் பண்புகள் இயற்கைபால் ஒளிர்கின்றன. இக் கருத்தைக் கடுவனிளவெயினனார், திருமால் பற்றிய தம் இரு பாடல்களிலும் புலப்படுத்தியுள்ளார்.

தீயினுள் வெம்மையென, மலரில் மணமென, கல்லில் ஒளியென, சொல்லில் வாய்மையென, அறத்தில் அன்பென, மறத்தில் வன்மையென, வேதத்தில் மறையென, பூதத்தில் விண்ணென, ஞாயிற்றில் ஒளியென, திங்களில் அளியெனத் திருமால் விளங்குகின்றார் (3:63-67). திருமாலின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றின்கண்ணும், தண்மையும் மென்மையும் திங்கட்கண்ணும், சுரத்தலும் கொடையும் மாரியின் கண்ணும், புரத்தலும் பொறையும் நிலத்தின்கண்ணும், மணமும் ஒளியும் காயாவின்கண்ணும், வெளிப்பாடும் பெருமையும் நீரின்கண்ணும்,உருவமும் சொல்லும் விண்ணின் கண்ணும், தோற்றமும் ஒடுக்கமும் காற்றின்கண்ணும்அமைந்துள்ளன (4:25–32). உலகுயிர்களின் தோற்றத்துக்கும் நிலைபேற்றுக்கும் ஒடுக்கத்துக்கும் திருமாலே காரணர் ஆவர். உலகுயிர்கள் அவரிடம் இருந்தே பிரிந்து அவராலே காக்கப்பெற்றுப் பின் அவரிடமே சென்று அடங்குதலான் அங்ஙனம் கருதுவர்.

43. A History of Tiruppathi, Vol. I, P. 199.

'இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்
ஏம மார்ந்தநிற் பிரிந்து
மேவல் சான்றன வெல்லாம்
சேவலோங் குயர்கொடி யோயே!' (பரி 4:33-36)

திருமாலின் வாய்மை பற்றிய குறிப்பு, பரிபாடலில் இரு முறை காணப்படுகிறது. 'வாய்மை வயங்கிய வைகல்' (2:54) எனக் கீரந்தையாரும், 'சொல்லினுள் வாய்மை நீ'(3:64) எனக் கடுவனிளவெயினனாரும் கூறுதல் காண்க. திருமாலுக்குப் பகைவருமிலர் கேளிருமிலர் என்னும் கருத்தினைக் கடுவனிள வெயினனார் தம் திருமால்பற்றிய பாடல்களில் இருமுறை கூறி வற்புறுத்தியுள்ளார்.

'பகைவர் இவர்இவர் நட்டோர் என்னும்
வகையு முண்டோநின் மரபறி வோர்க்கே?' (பரி. 3:57, 58)

'.....................நினக்கு
மாற்றோ ரும்இலர் கேளிரு மிலரெனும்
வேற்றுமை யின்றது போற்றுநர்ப் பெறினே!' (பரி. 4:53-55)

தீயவர்க்கு மறக்கருணை உடையவராகவும் நல்லவர்க்கு அறவுருவினராகவும் திருமால் தோன்றுவர். மாற்றலர்க்கு அணங்கும், ஆர்வலர்க்கு அளியும் புரிவர். இதனால்தான் திருமாலைத் தீயினுள் தெறலாகவும் திங்களுள் அளியாகவும் விளங்குபவர் எனப் புலவர்கள் கூறினர் போலும்! மக்கள் இன்புறுவதும் துன்புறுவதும் தத்தம் வினைகளாலேயே. அவர் தம் பிறப்பும் நல்வினை தீவினைகளாலே அமைகின்றன. ஆகவே திருமால் தம் பகைவர்க்குத் தீங்கிழைத்தலும் நண்பர்க்கு நன்றாற்றலுமில்லை. காரணம் அவர்க்குப் பகைவரும் இலர், நகைவரும் இலர் என்பதுதான். வழிபடும் அன்பர்கள் விரும்பித் தொழும் வடிவமின்றித் திருமாற்கு வேறு வடிவமில்லை (4:55). திருமாலைத் தெளிய உணர்வது மருளறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிது. ஆயினும், ஒருமை உள்ளத்தினராய் வழிபடும் மெய்யன்பர்க்குத் திருமால் ஏவலாளனாகவும் பணி புரிவர் (4-72). இக்கருத்து கீதையிலும் காணப்படும். இவர் வேள்வியை விழைவார். வேள்வியாசான்

ஓதும் வேதமொழி திருமாலின் உருவமாம்; வேள்வியிற் கொடுக்கும் யாடு அவர்க்கு உணவாம்; வேள்வித் தீயின் சுடர்ப் பெருக்கம் அவர்தம் தோற்றமாகும்

''கேள்வியுட் கிளர்ந்த ஆசான் உரையும்
படிநிலை வேள்வியுட் பற்றியாடு கொளலும்
புகழியைந் திசைமறை யுறுகனல் முறைமுட்டித்
திகழொளி யொண்சுடர் வளப்பாடு கொளலும்
நின்னுரு புடனுண்டி
பிறருடம் படுவாரா
நின்னொடு புரைய
அந்தணர் காணும் வரவு. (பரி. 2:61-68)

பரிபாடற் புலவர்கள் இம் முறையில் இறையியல்புகளைப் புலப்படுத்தியுள்ளனர். துறவிகளானும் உணர முடியாத கடவுட் பண்புகளைத் தாம் எங்ஙனம் உணர்ந்து கூற இயலு மென்று கூறி, ஏதோ ஆர்வத்தால் சிலவற்றைக் கூறியிருப் பதாக அப்புலவர்கள் சுட்டியுள்ளனர். ஆகவே திருமாலின் தொன்மையையும் பெருமையையும் உணர்தல் யாவர்க்கும் அரிது (2:17, 18; 3: 46).

வேண்டுகோள் : திருமாலின் பக்கத்திலேயே உறையும் பேரின்பம் வேண்டும் என்றே அவரைப் பாடிய புலவர்கள் அனைவரும் அடிக்கடி வேண்டுகின்றனர்.[44] கீரந்தையார் சுற்றத்துக்கும் தமக்கும் மாசற்ற மெய்யுணர்வு வேண்டும் எனத் திருமாலைப் பரவுகின்றார் (2 : 72-76). திருமாலை எஞ் ஞான்றும் பாடிப் பரவும் பேற்றினை அருளவேண்டும் என இறைஞ்சுகின்றார் நல்லெழுநியார். மறுபிறவியிலும் திரு மாலிருங்குன்றத்து அடியுறைந்து இறைவனை வழிபடும் பேறு வாய்க்க வேண்டும் என்று கண்ணனையும் பலதேவனையும் தொழுகின்றார் இளம்பெருவழுதியார்.

புலவர்கள் தாம் மட்டும் அன்றித் தம் சுற்றத்தினரும் புடைசூழத் திருமாலை இறைஞ்சுகின்றனர். அங்ஙனமே தமக்கு

44. பரி. 1: 62-65; 13 : 61-64; 15 : 65; 66; பரி. திரட்டு 1 : 79-82.

மட்டுமன்றித் தம் சுற்றத்திற்கும் துறக்கவின்பம் விழைந்து, வேண்டிநிற்கின்றனர் என்பதைப் பரிபாடல் உணர்த்து கின்றது.

'......................நின்னடி
தலையுற வணங்கினேம் பன்மாண் யாமும்
கலியில் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்
கடும்பொடும் கடும்பொடும் பரவுவதும்
கொடும்பா டறியற்க எம்மறி வெனவே.' (பரி. 2 :73-76)

'காமரு சுற்றமோ டொருங்குநின் னடியுறை
யாமியைந் தொன்றுபு வைகலும் பொலிகென
ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
வாய்மொழிப புலவ நின் தாணிழல் தொழுதே.' (1 : 62-65)

இவ்வகை வேண்டுகோளைத் தழுவி ஆழ்வார்கள் பாசுரங் கள் பாடியிருத்தலை நாலாயிரப் பிரபந்தத்துக் காணலாம்.

'உம்ப ருலகாண் டொருகுடைக்கீழ், உருப்பசிதன்
அம்பொற் கலையல்குல் பெற்றாலும் ஆதரியேன்,
செம்பவள வாயான் திருவேங் கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமே லேதேனு மாவேனே''
(நாலாயிரம், 684)

'பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய்க்
கமலச் செங்கண்,
அச்சுதா! அமர ரேறே! ஆயர்தம்
கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர
லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா
நகரு ளானே!' (நாலாயிரம், 873)

அன்பர்களின் வேண்டுகோளை நோக்குங்கால், வைணவப் பிர பந்தங்கட்குப் பரிபாடற் புலவர்கள் முன்னோடிகள் என்று

தோன்றுகிறது. மேலும் அப் புலவர்களின் ஆழ்ந்த திருமால் பற்றை நோக்கும்போது அவர்களைப் பரிபாடலாழ்வார்கள் என அழைப்பதும் பொருந்தும்.

பரிபாடலும் நாலாயிரப்பிரபந்தமும்

இடைக்கால வைணவ வளர்ச்சிக்குப் பரிபாடல் எங்ஙனம் வழிவகுத்தது என்பதையும், ஆழ்வார்கள் பாசுரங்கள் இயற்றுதற்கு அது யாங்ஙனம் துணைபுரிந்தது என்பதையும், இத்தலைப்பிற் காண்போம். வைணவ இலக்கிய வளர்ச்சியின் வரலாற்றில், பரிபாடலின் பங்கினை நாம் அறியாவிடின் பயனில்லை. ஆகலின், இப் பகுதியில் பரிபாடற் புலவர்கள் பிற்கால ஆழ்வார்களுக்கு முன்னோடிகள் என்பதையும் பாடுபொருளிலும் பாடும் முறையிலும் திருமாலைப் பற்றிய பரிபாடல்களைப் பின்பற்றியிருத்தலின், .நாலாயிரப்பிரபந்தம் அவற்றிற்கு கடமைப்பட்டது என்பதையும் அறிய முற்படுவோமாக. வகுக்கப் பெற்ற இசையுடன் பரிபாடல் ஓதப்பட்டமை கண்டு, ஆழ் வார்களும் தம் பாசுரங்களைப் பண்ணோடு பாடுதற்குரிய நெறியில் அமைக்கலாயினர். நாயன்மார்களும் இம்முறை தழுவிப் பாடினர். நாலாயிரமும், தேவார திருவாசகங்களும் பண் அமைத்துப் பாடப் பெற்றதற்குக் காரணம் பரிபாடல் என்பது உளங்கொளற்குரியது.

திருமாலின் மேனிக்குக் கார், காயாம்பூ, கடல், இருள் மணி என்பவை உவமையாகப் பரிபாடற் புலவர்களாலும் ஆழ்வார்களாலும் கூறப்பட்டுள்ளன. ஆழ்வார்கள் நிறத்திற்கு மேலும் சில உவமைகளைக் கையாண்டுள்ளனர். அவை அஞ்சனம், குவளை, கருவிளை, மயில், குயில், பூவைப்புள், களங்கனி, குழல், அந்தி என்பன.[45] வியூகாவதாரம்பற்றிக் குறிப்பிடும்போது பரிபாடலும் நாலாயிரமும் ஒன்று போலவே, வெண்மை, செம்மை, பசுமை, கருமை ஆகிய நாணிறங்களையும் குறிப்பிடுகின்றன.

---

45. நாலாயிரம். 53, 410, 589, 590, 1378, 1450, 2657.

செங்கட் காரி கருங்கண் வெள்ளை
பொன்கட் பச்சை பைங்கண் மாஅல்!' (பரி. 3; 80, 81

பாலினீர்மை செம்பொனீர்மை பாசியின்ப சும்புறம்
போலுநீர்மை பொற்புடைத்த டத்துவண்டு விண்டுலாம்
நீலநீர்மை யென்றிவைநி றைந்தகாலம் நான்குமாய்
மாலினீர்மை வையகம்ம றைத்ததென்ன நீர்மையோ?

(நாலாயிரம். 795)

பரிபாடலும் நாலாயிரப் பிரபந்தமும் தாமரையையே அவர்தம் கண்ணுக்கு உவமையாகக் கூறுகின்றன.[46] பரிபாடலில் அவர் வாய்க்கும் தாமரை உவமையாகவந்துள்ளது. ஆழ்வார் பாக்களில் பவழம், கோவைக்கனி, கிளி வாய் (அலகு) என்னும் மூன்றும் வாய்க்கு உவமைகளாம்.[47] திருமாலின் மார்பில் திருமகள் மட்டும் உறைவதாகப் பரிபாடல் கூறும். ஆனால் நாலாயிரப் பிரபந்தம் அது திருமாலுக்கு மட்டுமின்றி, சிவபெருமானுக்கும் நான்முகனுக்கும் உறையுளாம் எனக் கூறுகின்றது.[48] திருமால் மார்பில் புரிநூல் அணிந்திருப்பதாக நாலாயிரம் கூறுகிறது.[49] ஆனால் பரிபாடலில் அதற்குச் சான்றில்லை.

பரிபாடலும் நாலாயிரமும் திருமாலின் சங்கு சக்கரங்களைக் குறிப்பிடுகின்றன. ஆனால் நாலாயிரமே திருமால் வலக்கையில் ஆழியினையும் இடக்கையில் சங்கினையும் ஏந்தியிருப்பதாக இயம்புகிறது.[50] திருமால் சங்கினைத் தாங்கியுள்ள கை எது எனப் பரிபாடல் கூறவில்லை. திருமாலின் ஐம்படைகள் பாஞ்ச சன்யம் (சங்கு), சுதர்சனம் (சக்கரம்,) சாரங்கம் (வில்), நாந்தகம் (வாள்), கௌமோதகம் (தண்டு) எனவும் பெயர் பெறும். இப்பெயர்களுள் பாஞ்ச சன்யம் சாரங்கம், நாந்தகம் என்னும் மூன்று பெயர்களே நாலாயிரப்

46. பரி. 2: 53: நாலா. 2829.
47. நாலா. 1651, 2829; 3606.
48. பரி. 1: 8; நாலா. 3650.
49. நாலா. 3309.
50. நாலா. 1488.

பிரபந்தத்தில் காணப்படுவன.[51] இக் கூறிய ஐம்பெயர்களுள் ஒன்றும், பரிபாடலில் காணுமாறில்லை. பேயாழ்வார் பாடல்[52] திருமால் தன் அட்டபுயகரத்து எண்படைகளைத் தாங்கியுள்ளார் எனக் கூறும். குலசேகராழ்வார் ஆதிசேடனை 'அனந்தன்' என்றும் அழைப்பர்.[53] ஆதிசேடனுக்கும் திருமாலுக்குமுள்ள தொடர்பே உடம்புக்கும் உயிருக்குமுள்ள தொடர்பு போன்றது என்பர்.[54]

திருமாலுக்கு ஆதிசேடன் பலவகையில் உதவுவதாகப் பாடுகின்றார் பொய்கையாழ்வார்.

'சென்றால் குடையாம் இருந்தால்சிங் காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்(கு) அரவு.'

(நாலாயிரம் 2134

பரிபாடற்கும் நாலாயிரத்திற்கும் உள்ள அவதாரங்கள் பற்றிய வேற்றுமைகளை 'அவதாரங்கள்' என்ற தலைப்பில் முன்னர்க் கண்டோம். திருமங்கை ஆழ்வார் காட்டும் நரசிங்காவதாரப் புனைவு பரிபாடலில் வரும் நரசிங்கப் புனைவுக்கு வேறுபடுகின்றது. பரிபாடற்படி திருமால் இரணியனை மார்பிலுதைத்துத் தன் நகத்தால் கீறிப் பிளந்து எறிகின்றார்.

பிரபந்தம், திருமால் அந்திப் போதில் இரணியனின் மயிரைப் பிடித்திழுத்துத் தன் மடிமீது இருத்தி, நகத்தாற் கொன்றார் எனக் கூறுகிறது.[55] திருமாலிருஞ்சோலை மலையில் கண்ணனையும் பலதேவனையும் ஒருசேர வழிபட்டனர் எனப் பதினைந்தாம் பரிபாடல் கூறும். ஆண்டு இரு கடவுளரையும் சேர்த்து வழிபட்டற்கு ஆழ்வார் பாக்களிற் சான்றில்லை

51. நாலா. 2, 12, 421.
52. நாலா. 2380.
53. நாலாயிரம் 647.
54 A History of Tiruppati, Vol. I, P. 68.
55. நாலா. 1345, 2674, 100-105.

பாண்டிய நாட்டைச் சேர்ந்த திருமாலிருஞ்சோலைமலை, இருந்தையூர், குளவாய் என்னும் திருமாற்குரிய முப்பதிகளையே பரிபாடல் பாடியுள்ளது. ஆனால், நாலாயிரப் பிரபந்தம் தமிழ்நாடு முழுதுமுள்ள பெரும்பாலான—நூற்றெட்டுத் திருமால் திருப்பதிகளைப் பாடியுள்ளது. பூதத்தாழ்வார் திருமாலிருங்குன்றக் கோயிலை "இளங்கோயில்' என்று குறிப்பிட்டுள்ளார்.[56] ஆழ்வார்களின் பாடல்கள் அழகர் மலை (திருமாலிருஞ் சோலைமலை)யின் இயற்கைக் காட்சிகளையும் அதன் பெருமையினையும் நன்கு புலப்படுத்துகின்றன. திருமால் முழுமுதற்கடவுள் என்பதைப் பரிபாடல் நாலாயிரப் பிரபந்தம் ஆகிய இரு நூலும் அறிவிக்கும்.

---

56. நாலா. 2235.

7. செவ்வேள்

இயற்கையே செவ்வேள்

தொல்காப்பியர் பொருளதிகாரம் ஐந்தாம் நூற்பாவில் சேயோன் (முருகன்) மலைவாழ் மக்களின் தெய்வமெனக்கூறி யுள்ளார். பாறையற்ற மண்பகுதி தோன்றுதற்குமுன் மலைப் பகுதியே ஞாலத்தின் முதற்பகுதியாகக் கடலினின்றுதோன்றியது என்று கருதுவோர் சிலர்.[1] இக்கருத்தை முதலாக கொண்டு மலைக்கடவுளாய முருகனே பல தெய்வங்களினும் தொன்மையும் முதன்மையும் வாய்ந்தவர் என அறிஞர் சிலர் அறுதியிடுப. மலைமீது உறைவோர் கருங்கடலினின்று காலையில் உதித்தெழும் கதிரவனின் இயற்கை அழகிலும் மாலையில் மறையும்ஞாயிற்றின் எழிலோவியத்திலும் ஈடுபட்டு உள்ளம் பறிகொடுத்தனர். இக்காட்சியினைக் கண்டு உவந்த மாங்குடி மருதனார், முடத்தாமகி கண்ணியார், நக்கீரர், பரணர், மதுரை மருதனிள நாகனார் என்னும் சங்கப் புலவர்கள் தம் பாக்களில் அரசன், தெய்வம் முதலியோரைக் குறிப்பிடுங்கால் அவ்வினிய காட்சியினையே உவமைப்படுத்தியுள்ளனர்.

அரசன்:

'முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்' (மதுரைக். 768)

'பவ்வ மீமிசைப் பல் கதிர் பரப்பி
வெவெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்கு'(பொருந. 135-136)

தெய்வம்:

'பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டா அங்கு' (முருகாற். 2)

அரசன்:

'மாக்கடல் நிவந்தெழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினை' புறம்.(4:15-16)

---

1. மதுரைக். 1-4,புறப். வெ. மாலை. வெ. 35.

வாய்மை:

'.........ஓங்கு திரை
முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி,
ஏமுற விளங்கிய சுடர்' (நற். 283:5-7)

மாக்கடலினின்றும் நிவந்தெழுந்த இளஞாயிற்றின் இயற்கை அழகில் உள்ளந்தோய்ந்த அன்பர்கள், அதனையே இறையென வழிபட்டு வணங்கினர். அதுவே பின்னர் நீல மயில்மீது வீற்றிருக்கும் செவ்வேள் வழிபாடாக மலர்ந்தது. நீலக்கடலை நீலமயிலாகவும், அதில் எழும் காலைக் கதிரோனைச் செந்நிற முருகனாகவும் கண்டனர். சேயோன், செவ்வேள், முருகன் என்பன ஒருபொருட் கிளவிகள். முருகன் என்ற சொல்லுக்கே மணம், இளமை, இறைமை, அழகு எனப் பல பொருள்கள் காண்பர் திரு. வி. க.[2] திருமுருகாற்றுப் படையில் வரும் 'மணங்கமழ் தெய்வத் திளநலம் காட்டி' என்னும் அடியே அங்ஙனம் பொருள் கொள்ளக் காரணமாகும். இவ் வடிப்படையில் முருகன் இயற்கை எழில்-இயற்கை இன்பம் என்னும் சூழலில் நிலைத்த பேரின்பத்தின் வடிவமாக இலங்கு கின்றார் என்னும் ஒரு புதுக்கருத்தினையும் புலப்படுத்தியுள்ளார் திரு.வி.க.

தொல்காப்பியர் காலத்துக் குறிஞ்சித் திணை மக்கள் மட்டும் சேயோனை வழிபட்டனர். ஆனால், பிற்காலத்திலே திணை வேறுபாடின்றி அனைத்து நிலத்தினரும் அவரை வழி படலாயினர்.[3] வேட்டையாடுவோரும் மலையினத்தாருமாகிய குறவர்கள் பண்டைக் காலத்தே, முருகனைப் போர்த் தெய்வமாக இறைஞ்சினர். பெரும்பாலான முருகன் கோயில்கள் மலையுச்சியிலே அமைவவாயின. திருமுருகாற்றுப்படை கூறும் முருகனின் ஆறுபடை வீடுகளுள் ஐந்து, மலை மீதே உள்ளன.

மலை வாழ்நர்க்கு வேட்டையாடுதலே, பழைய முதன்மையான தொழில் ஆதலின், அதற்குரிய வேற்படையை முருகன் கையிற் கொடுத்து வேலன் எனப் பெயரிட்டழைத்தனர்.

2. முருகன் அல்லது அழகு, பக்.24.
3. முருகாற்றுப்படை. 12-217

முருகனுக்குப் பூசனைப் புரியும் பூசாரியும் தன்கையில் அவர்க்குரிய வேல் வைத்திருத்தலின், வேலன் எனப் பெயர் பெற்றான். மலையில் வாழும் விலங்குகளுள் மிகப் பெரியதாகிய யானை, அவர்க்கு ஊர்தியாயிற்று. மலைப்பறவையான மயிலும் சேவலும் அவர்க்கு ஊர்தியாகவும் கொடியாகவும் அமைந்தன. குறவர் மகளான வள்ளியை முருகன் மணம் புணர்ந்தார். முருகன், எரிதீ ஒப்பவும், கதிரவன் போன்றும் ஒளிர்கின்றான் என உவமை கூறுவர். பிற நிலத்து வாழ்பவரினும், குளிர் காலத்தில் மலையகத்து வாழ்வார்க்குத் தீயும் கதிரவனும் வேண்டப்படுதலின், முருகனுக்கு அவற்றையே உவமையாக்கினர். முருகனைப் பரவும் அன்பர்களும், மலைப்பகுதியிலுள்ள காந்தளும் கடம்பும் வெட்சி முதலிய செந்நிற மலர்களும் தூவியே வழிபடுகின்றனர். அவர்கள் படைக்கும் பொருளும் தேனும் தினையும் மறியின் குருதியுமாகவே உள்ளன. முருக வழிபாட்டின் வளர்ச்சியை ஆராயுங்கால் அவர்க்குரியவாக அளிக்கப்படும் எல்லாப் பொருளும் மலையுறை தெய்வத்துக்குரியவாகவே இருக்கின்றன.[4]

புலவர் பெயர்	பாடலின் தொடர் எண்	மொத்த அடிகள்
கடுவனிளவெயினனார்	5	81
ஆசிரியன் நல்லந்துவனார்	8	130
குன்றம் பூதனார்	9	85
கேசவனார்	14	32
நல்லழிசியார்	1	53
குன்றம்பூதனார்	18	56
நப்பண்ணனார்	19	105
நல்லச்சுதனார்	21	70
	மொத்த அடிகள்	612

4. Nature in ancient Tamil Poetry p. 69.

செவ்வேளின் உருவப் புனைவைப் புலவர் பலரும் ஈடு பாட்டுடன் பாடியுள்ளனர். அதனை முறையே இனிக் காண்போம்:

மேனி: கடுவனிளவெயினனார் செவ்வேளின் நிறம் கதிரவன் ஒளி ஒக்கும் என்பர். கொழுந்து விட்டெரியும் தீயின் நிறத்தை உவமையாக்குவர் நப்பண்ணனார்:

'ஞாயிற் றேர் நிறத்தகை' (பரி. 5:12)

'உருவும் உருவத்தீ யொத்தி' (பரி. 19:99)

இவ்விரு உவமைகள் தவிர அவர் நிறத்துக்கு வேறு உவமை காணப்பட்டிலது.

தலை: ஆறு தலைகளையும் இளங்கதிர்மண்டிலம் போன்ற முகத்தினையும் உடையவர் செவ்வேள்.

'மூவிரு கயந்தலை' (பரி. 5:10)

'முகனும் விரிகதிர் முற்று விரிசுட ரொத்தி' (பரி. 19:100)

கைகள்: செவ்வேள் தன் பன்னிரு கைகளிலும் பன்னிரு படைகளைக் கொண்டுள்ளார்.

'மறியும் மஞ்ஞையும் வாரணச் சேவலும்
பொறிவரிச் சாபமும் மரனும் வாளும்
செறிநிலை ஈட்டியும் குடாரியுங் கணிச்சியும்
தெறுகதிர்க் கனலியும் மாலையும் மணியும்
வேறுவேறு உருவினிவ் வாறிருகைக் கொண்டு'
(பரி. 5:63-68)

அவர்தம் முந்நான்கு தோளும் முழவினை ஒக்கும் (பரி. 5:11). முருகனது பேரறிவையும் பேராற்றலையும் புலப் படுத்தவே, ஆறுதலைகளையும் பன்னிரு கைகளையும் உடைய ராக, அவரை உருவகஞ் செய்துள்ளனர்.[5]

---

5. மாணிக்க வாசகர் வரலாறும் காலமும், தொகுதி II, பக். 487.

மார்பு: மலையை ஒப்ப ஆற்றலும் அகலமும் கொண்டது செவ்வேளின் மார்பு அதன்கண் வாளால் வெட்டப்பெற்ற வெற்றித் தழும்புகள் நிறைய உள்ளன (9:27 28) சந்தனம் முதலிய நறுமணப் புகை கமழ மலர் மாலையும் முத்து மாலையும் செவ்வேள் மார்பினை அணி செய்கின்றன (9: 28, 29.).

அடி: தன் திருவடித் தாமரையில் முருகன் மயில் தோகையால் அணி செய்யப்பெற்ற தோலாலாய அடையற் செருப்பினை அணிந்துள்ளான்.

'தொட்டதை, தைப்பமை சருமத்திற் ருளியை தாமரை
துப்பமை துவர்நீர்த் துறைமறை யழுத்திய
வெரிநத் தோலோடு முழுமயிர் மிடைந்த
வரிமலி யரவுரி வள்புகண் டன்ன
புரிமென் பீலிப் போழ்புனை அடையல்.' (21: 3-7)

இவ்வாறு மிதியடியைப் புனைந்துரைத்தல் நல்லச்சுதனார் பாடல் ஒன்றிலேதான் காணப்படுகின்றது.

அணியும் ஆடையும்: முருகனது ஆடை செந்நிறமானது. பசும் பூணினையும் முத்தாரத்தினையும் அவர் அணிந்துள்ளார்.

மாலை: உருளிணர்க் கடப்பந்தாரும் முத்து மாலையும் அவர்தம் மார்பினுக்கு அழகு செய்கின்றன. தலையில் கண்ணியும் அணிந்துள்ளார். அவருடைய உடையை ஒப்பவே, மாலையும் செந்நிறமாக உள்ளது.

'உடையும் ஒலியலும் செய்யை' (பரி: 19-97)

அவர் வள்ளிப்பூவினை இடைஇடையே தொடுத்த நறுமணங் கமழும் கடப்பந்தாரினையும் உடையவர். செவ்வேட்குரியது கடம்பு ஆதலால், பெரும்பாலான புலவர்கள் அவரைக் கடப் பந்தார் சூடியவராகவே பாடியுள்ளனர்.

'உருளிணர்க் கடம்பின் ஒலி தாராயே' (பரி: 5:81)

'பூண்டதை, சுருளுடை வள்ளி யிடையிடுபு இழைத்த
உருளிணர்க் கடம்பின் ஒன்றுபடு கமழ்தார்' (பரி 21: 10-11)

படைகள்: செவ்வேளைப் பாடிய புலவரெல்லாம் அவர்தம் வேற்படையினையும் சூரபதுமனை அழித்ததையும் குறிப்பிட மறக்கவே இல்லை. வேல் பரிபாடலில் 'சுடர்ப்படை' (14-18) ஏந்திலை (17-2) 'எஃகு (9-79) என்னும் பல்வேறு பெயரால் வழங்கப் பெறும். சூரபதுமனையும் அவன் சுற்றமாய அவுணர் களையும் அவ்வேல் கொன்றொழித்தது. அவ்வசுரன் மாமர மாகவும் கிரௌஞ்ச மலையாகவும் வடிவெடுத்து வந்தபோது வெட்டி வீழ்த்தி உடைத்தெறிந்ததும் அவ்வேற் படையே யாம் (5: 3-10). அப்படையின் வினை நோக்கி, 'மறவேல்' என்றும் 'ஒளிர் வேல்' என்றும் புகழ்ந்துள்ளனர் (21:66). பகைவரைக் குத்தியதால் குருதி தோய்ந்திருந்த அச்செவ் வேலைப் படையும் பவழக் கொடி நிறங்கொள்ளும் (19-98) என ஒரு புலவர் பாடியுள்ளார். முருகன் வேல்மீது ஒருவன் பொய்ச்சூள் உரைப்பானாயின் அஃது அவனைத் துன்புறுத்தும் என்ற நம்பிக்கை மன்பதைக் கிருந்தது என நல்லந்துவனார் பாடல் அறிவிக்கின்றது.

'என்னை அருளி அருண் முருகு சூள்சூளின்
நின்னை யருளில் அணங்கான் மெய்வேல் தின்னும்'
(பரி. 8: 65-66)

இவ் வேற்படை தவிர, அக்கினி, இந்திரன், யமன் முதலிய வர்கள் பரிசிலாக நல்கிய வேறு பதினொரு படைகளும் முருகனிடம் இருந்தன (5: 63-68).

கொடி: சேவலும் மயிலும் எழுதிய கொடிகளே முருகனுக்குரியன. இவர்க்கு இவ்விரு கொடிகளும் உரிய வாதலைப் புலவர் நல்லழிசியார் கூறியுள்ளார்.

'மணிநிற]மஞ்ஞை யோங்கிய புட்கொடி' (பரி. 17:48)

ஊர்தி: யானையையும் மயிலையும் ஊர்தியாக உடையவர் செவ்வேள் (19: 8: 8-67). கடுவனிள வெயினனாரும் நல்லழிசி யாரும் பாடிய பாடல்களால் யானை ஊர்தியின் பெயர் பிணி முகம் என்று அறிகின்றோம்.

'சேயுயர் பிணிமுகம் ஊர்ந்தம ருழக்கி' (பரி. 5: 2)
'பிணிமுக மூர்ந்த வெல்போர் இறைவ' (பரி. 17: 49)

போரில் பகைவரை வென்று புகழ் எய்தியமையால், இவ்வியானை, 'பொரு சமங்கடந்த புகழ்சால் வேழம்' எனப் போற்றப்பட்டுள்ளது. முருகன் வீற்றிருக்கும் பரங்குன்றமே குன்றம் பூதனார்க்கு அவர்தம் யானை ஊர்தியாகக் காட்சி யளிக்கிறது (18: 22-27). இவ்வூர்திக்கும் பூசனை புரிந்து ஆராதனை செய்து பெண்டிர் வழிபடுவர். திருமாலுக்குக் கருடன் கொடியாகவும் ஊர்தியாகவும் பயன்படுவது போலவே, முருகனுக்கு மயில் இருவகையிலும் பயன்படுகிறது.

கடம்பு: பரங்குன்றில் கடம்ப மரத்தடியிலே செவ்வேள் விரும்பியுறைவர். கடப்பந்தாரே அவருக்கு உவப்பாகும். அன்பர்கள் அவர் வீற்றிருந்தருளும் கடம்பினை வழிபட்டு வாழ்த்துவர். வேலன், தான் கொணர்ந்த மறியாட்டினைக் கடம்ப மரத்தடியில் கட்டுதல் வழக்கம் (17: 1-8).

வெறியாட்டு: வெறியாட்டத்தைப் பரிபாடல் விரிவாகப் புனையவில்லை. முருகனைப் பாடிப் பரவும் வேலனைப் பற்றிப் பேசும் போது இடையே சொல்லளவில் வெறியாட்டம் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது (5: 13-15). வேலன் செய்யும் வெறியாட்டத்தை உவந்து ஏற்றுக் கொள்ளுதலின் வெறி கொண்டான் (9: 44) எனச் செவ்வேளை அழைப்பர்.

செவ்வேளின் பெயர்கள்

அழகு, இளமை, மணம் என்றெல்லாம் பொருள்படும் முருகு என்னும் சொல்லிலிருந்து வந்த முருகன் என்னும் பெயர் பரிபாடல் உட்பட எல்லாச் சங்க இலக்கியங்களிலும் பயின்று வந்துள்ளது[6] (17:1-8). விழைவு எனப் பொருள் படும் 'வேள்' (8:61) எனுஞ் சொல் அடைசேர்ந்து 'நெடு வேள்' (3:37) 'வேல் வேள்' (18:36) 'செவ்வேள்' (5:13; திரட்டு 11) எனப் பரிபாடலில் காணப்படும். செவ்வேள்

6. முருகு 169 அகம் 158; பரி. 5:50; புறம். 53; ஐங் 249.

எனும் பெயர் பரிபாடலில் மட்டும்தான் வந்துள்ளது. அதனால்தான் முருகனைப் பற்றிய பாடல்களைச் செவ்வேள் என்ற தலைப்பில் பரிபாடலில் அமைத்தனர் போலும். முருகனைக் குறிக்கும் பழைய சொல்லான சேயோன் என்பதனைத் தொல்காப்பியத்திற் காணலாம். இச்சொல் விகுதியின்றிச் சேய் எனப் பரிபாடலில் வந்துள்ளது (6: 69, 5:54). சேயோன் என்பது செந்நிறமுடையான் எனப் பொருள்படும். இது செய்யோன் என்பதினின்றும் பிறந்தது. நச்சினார்க்கினியர் செய்யவன் என்பதே சேயோன் என நீண்டிருக்க வேண்டும் எனக் கருதுவர்[7]. சேஎய் என்பது செம்மை, மகன் என்ற இரு பொருளிலும் பரிபாடலில் பயின்றுள்ளது. 'கா அய் கடவுட் சேய்' (5:13) என்னும் அடியில் சேய் என்பது மகனைக் குறிக்கும். 'சேஎய் குன்றம்' (6: 69) என்பதில் சேய் செந்நிறமுடைய செவ்வேளைக் குறிக்கும். மனம், மொழி, மெய் உலகுகளைக் கடந்து சேய்மையில் நிற்றலான் முருகன்சேயோன் எனப்பட்டான் எனக் கருத்துரைப்பர் சிலர் (3). ஈண்டுச் சேய் என்பதற்குத் தொலைவு என்பது பொருள். சேய் சேயோன், செய்யோன், சேந்தன் என்பனவெல்லாம் செம்மை என்பதனடியாகப் பிறந்த ஒரு பொருட் கிளவிகள். முருகன் நீண்டிருத்தலின் நெடுவேள் என்றும், நெடியோன் என்றும் பெயர் பெறுவர் (3:37: 19-18). வேள் என்னும் பெயர்க்குப் பிறரை எழிலாற் கவரும் திருவுடையான் என்பது பொருளாகும்.[8] வேள் என்னும் சொல் மன்மதன், முருகன் இருவர்க்கும் பொதுவாக இருந்தமையான், அடைபுணர்த்து முறையே கருவேள் என்றும் செவ்வேள் என்றும் அவர்களை அழைப்பாராயினர். இளமையாயிருத்தலின் 'குமரன் (: 81) என்றும், திருமாலுக்கு மருமகனுயிருத்தலின் 'மாஅல் மருகன்" (19:57) என்றும், சிவபெருமானுக்கு மைந்தனுதலின் 'காஅய் கடவுட்சேய்' (5:13) என்றும் முருகனுக்கு வேறு பல பெயர்களும் உள்ளன. வேலன் ஆடும் வெறியாட்டத்தை ஏற்றுக் கொள்வதால் 'வெறிகொண்டான்' (9:44) என்றும்

7. முருகு. 61. நச். உரை.
8 வேலும் வில்லும். பக். 1.

முருகன் அழைக்கப் பெற்றார். எனவே, செவ்வேட்கு முருகன் சேய், வேள், நெடுவேள், வேல்வேள், நெடியோன், குமரன், மா அல் மருகன், காஅய் கடவுட்சேய், வெறிகொண்டான் எனப் பல பெயர்களுண்மையைப் பரிபாடல் அறிவிக்கும்.

செவ்வேளின் பிறப்பு

செவ்வேளைப் பற்றிப் பாடிய புலவர்களுள், கடுவனிள வெயினனாரே அவர் பிறப்பை விரிவாகக் கூறியுள்ளார். திரிபுரத்தை அழலம்பால் எரித்த பின்றைச் சிவபெருமான் உமையோடு எஞ்ஞான்று மில்லாதவாறு அமையாத புணர்ச்சியொடு ஒரு காலத்து இருந்தான். இந்திரன் அவனிடத்து ஒரு வரம் பெற்று, 'இப்புணர்ச்சியாற் றோன்றிய கருவை அழிப்பாயாக' என வேண்டினன். சிவ பெருமான் வாய்மையன் ஆதலின், தான் முன் கொடுத்த வரத்தை நிறைவேற்றல் அரிதென மாற்றாமல், இவ்வேழு உலகமும் தன் மெய்ம்மையை வியக்குமாறு, அக்கருவினைப் பல கண்டமாகச் சிதைத்தான். சிதைக்கப்பட்ட கரு அமரர் சேனைக்குத் தலைவனாகும் எனச் சமாதியானுணர்ந்த தெய்வ முனிவர்கள் எழுவரும், இந்திரனுக்கே ஊறு வாராதென உறுதி கூறி, அவனிடமிருந்து அச் சிதைந்த கருவை ஏற்றுச் சென்றனர். அதனை அப்படியே தம் மனைவியர் தரித்துச் சமைவிப்பாராயின் சாலார் எனக் கருதி, அம்மாதவர் அழல் வேட்டு அதன்கண் அவியுடனே அக் கருவைப் பெய்தனர். பின்னர் அதனை அருந்ததி நீங்கலாகக் கார்த்திகை மகளிர் அறுவர்க்கும் வழங்கினர். மறுவற்ற கற்பினையுடைய அம் மாதவர் மனைவியராய இவ்வறுவரும் அதனை அயின்று, நிறையுடைமையின் நீங்காது, சூலுற்றுப் பின் இமயமலை யிலுள்ள சரவணப் பொய்கையில் தாமரைப் பூவாகிய பாயலில் குழந்தைகளை ஈன்றனர். ஈன்ற அப்பொழுதே இந்திரன் இகல்கொண்டு முனிவர்கட்குத் தான் கொடுத்த வரத்தை மீறி வச்சிரப்படையால் அவற்றை வெட்டினான். அவை ஆறு துண்டமாகச் சிதைந்தன. ஆறு துண்டமும் ஆறு குழந்தைகளாகிப் பின் ஒன்றாயின. குழந்தைப் பருவத்

திலேயே படையின்றி விளையாட்டாகச் செய்த போரில் முருகனுக்கு இந்திரன் தோற்றோடினன். ஆதலின் இவ்வாற்ற லுடைய முருகன் நம் சேனைக்குத் தலைவன் எனக் கருதி, அனலன் தன் மெய்யிற் பிரித்துக் கோழியை முருகனுக்குப் பரிசாகக் கொடுத்தான். இந்திரன் அங்ஙனமே மயிலை அளித்தான். ஞமனும் வெள்ளியாடு நல்கினன். சரவணப் பொய்கைத் தாமரையில் தோன்றியமையின், 'நளினத்துப் பிறவியை' (5:12) என முருகனை விளிக்கலாயினர். மழவிளம் பருவத்தே இந்திரனை வென்றமையின், முருகனைப்

'பிறந்த ஞான்றே நின்னை உட்கிச்
சிறந்தோ ரஞ்சிய சீருடை யோயே' (பரி. 14:25-26)

எனப் பாராட்டெடுத்தனர். முருகனைக் கார்த்திகை மகளிர், உமையம்மை இருவர்க்கும் மகனெனப் பரிபாடல் கூறுகிறது (8:127, 128). இந்நூலிற் காணப்பெறும் முருகன் பிறப்பைப் பற்றிய கதையினும் கந்தபுராணக் கதை மாறுபடுகின்றது. வசிட்டரின் மனைவியான அருந்ததி, சிவன் முருகன் என்னும் இரு கடவுளரைவிடப் பெருமை வாய்ந்தவள் என்பதை நிறுவவே முருகன் பிறப்புப்பற்றிக் கதை கட்டிவிடப்பட்டுள்ளது என மறைமலையடிகளார் கருதுவர்.[9] முருகன் பிறப்புப் பற்றிய கதையின் உட்பொருள், அவன் மண், புனல், தீ, வளி, வெளி என்னும் ஐம்பூதங்கட்கும் காரணனுயுள்ளான் என்பது தான். சிவம்–வெளி; வாயுவும் அக்கினியும் முறையே காற்றும் தீயும்; சரவணப் பொய்கை-புனல்; பூமி-மண் என விளக்கந் தருவர் திரு. வி. க.[10] இறைவனுடைய 'முதன்மையும் உமையின் அருள் உரமும் முனிவருடைய ஞானமும் மகளிருடைய கற்பும் வேள்வியின் தியாகமும் கலந்து அமைந்த தெய்வப் பிழம்பே முருகனின் திருவுருவம். இதையே கதையாக்கி, கவியாக்கி, புராணமாக்கி விரித்தனர் பழங்கால மக்கள் என்பது முருகன் பிறப்புப் பற்றிய திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களின் கருத்தாகும்.[11]

9. தமிழர் மதம், பக். 207.
10. முருகன் அல்லது அழகு, பக். 123
11. பெரும் பெயர் முருகன், பக். 76.

சூரபதுமனை அழித்தல்

முருகன் சூரபதுமனைக் கொன்றது பண்டைத் தமிழிலக்கியங்களிற் காணப்படாத புதுச்செய்தியன்று. சங்கப் புலவர்கள் அச்செய்தியைக் குறிப்பாகவும் விரித்தும் தம் பாக்களில் பாடியுள்ளனர். இராமகாதை முருககாதையோடு பலவகையில் ஒப்புமை உடைமையின், முன்னது பின்னதைத் தழுவியே அமைந்ததாகும் எனச் சிலர் கருதுவர். பல பரிபாடல்கள் முருகன் சூரனை மாய்த்ததைக் குறிப்பிட்டுள்ளன. செவ்வேளின் வேற் படையைப் புனையும் போதெல்லாம் புலவர்கள் அதன் மறவினையாகிய சூரனையழித்ததைப் பெரும்பாலும் குறிப்பிடத் தவறியதில்லை.[12] புராணக்கதைகளை ஆர்வமுடன்விரித்துரைக்கும் இயல்பினரான கடுவனிளவெயினனார் சூரபதுமன் அழிவினையும் பாரித்துப் பாடியுள்ளார். முருகன் தன் பிணிமுகமென்னும் யானை மீதிவர்ந்து சூரன் தங்கி வாழும் கடற்குச் சென்றார். அவன் மாமரமாகவும் மலையாவும் வேற்றுருக் கொண்டு மறைந்தனன். உடனே தன் வேலெறிந்து மாமுதல் தடிந்தார்; மலையினைத் தவிடு பொடியாக்கினார். சூரனின் சுற்றத்தினராய அவுணர்களையும் பூண்டோடு அழித்தொழித்தார். முன்னர் வெற்றி எய்தியமையின் நல்வினையாளர், தீவினையாளர் என்னும் இரு கூறுய மக்களுள் நல்வினையாளர் எனப் பெயரளவில் அழைக்கப் பெற்றவர்கள் அவ்வவுணர்கள். மேலும் அவர்கள் தீவினையும் கொன்றுணல் அஞ்சாக் கொடுமையும் வாய்ந்தவராவர்.

'வென்றியின் மக்களுள் ஒருமையொடு பெயரிய
கொன்றுணல் அஞ்சாக் கொடுவினைக் கொஃறகை
மாய அவுணர்'
(பரி. 5 : 12-14)

கடுவனிளவெயினனார் இவ்வடிகளால் அவுணர் இயல்பினைக் காட்டியுள்ளார். கிரௌஞ்சகிரி என்ற வடமொழிப் பெயர் பரிபாடலில் இடம் பெறவில்லை. 'குருகொடு பெயர் பெற்ற மால்வரை' (5 : 9) 'புள்ளொடு பெயரிய பொருப்பு'

12. பரி: 5:7 8:70; 14:18; 18:4; 19:101-103; 21;8-9.

(21 : 9) என்றே தமிழ்ப்படுத்தி அது வழங்கப் பெற்றுள்ளது. இந்நெறி சங்க இலக்கிய நெறியாகும். கிரௌஞ்சம் என்பது அன்றிற் பறவையைக் குறிக்குமாதலால் அம்மலையைப் பறவையின் பெயர் பெற்ற மலை—புள்ளொடு பெயரிய பொருப்பு — எனத் தமிழுணர்ச்சியோடு கூறியிருத்தல் பாராட்டிப் பின்பற்றத் தக்கதாகும்.

முருகனுக்கும் சூரனுக்கும் நடந்த போர், ஓர் உட்பொருளைக் கொண்டதாகும் என விளம்புவர் திரு. வி க. 'ஒவ்வொருவரது உள்ளமும் போர்க்களமாகும். அக்களத்தில் நாடோறும் சூரனுக்கும் முருகனுக்கும்—முனைப்புக்கும் அருளுக்கும்—போர் நடந்த வண்ணமிருக்கிறது. முனைப்பு உயிரைத் தன் பக்கம் இருத்தி வைக்கிறது. உயிரை முனைப்பினின்றும் மீட்க ஆண்டவன் அருள் புகுகிறது. இரண்டிற்கும் போர் நிகழ்கிறது. இப்போரே சூரன் - முருகன் போரென்க.' முருகனது வேல் தன்முனைப்பை யழிக்கும் அறிவொளியை (ஞானசக்தி) உணர்த்தா நிற்கும்.[13]

முருகனின் மனைவியர் : விண்ணக மடந்தை தேவசேனையை மணந்தது போலவே, மண்ணக மடந்தை வள்ளியையும் மணந்தமையால் விண்ணுலகும் மண்ணுலகும் முருகனுல் இன்புற்றன 19 : 1-71). தேவசேனை ஆயிரங் கண்ணனுன இந்திரன் மகளாவள். குறிஞ்சி நிலத்து வாழும் குன்றவன் மகள் வள்ளி. அவளை 'மான்மறி' என்று குன்றம் பூதனுர் கூறியுள்ளார். வள்ளிமாட்டுச் செவ்வேள் கொண்ட காதலை உளங் கொண்டு கேசவனுர்:

'அறுமுகத் தாறிரு தோளால் வென்றி
நறுமுகர் வள்ளிப் பூநயந் தோயோ' (14 : 21-22)

என வள்ளியைப் பூவாக உருவகித்துப் பாடி மகிழ்வர்.

முருகனும் ஊடலும்

முருகனிடம் ஊடல் கொண்டு வள்ளி, தேவசேனை இருவரும் சண்டையிடுவதை ஒன்பதாம் பரிபாடலில் விரித்துரைக்

13. முருகன் அல்லது அழகு. பக். 66-77.

கின்றூர் குன்றம் பூதனூர். இந் நிலவுலகப் பெண் தன் கொழுநனிடம் ஊடல் கொள்ளுமாப்போல, வானுலகப் பெண்ணுயிருந்தும் தேவசேனையும் முருகனிடம் ஊடியதாக அவர் புனைவுசெய்வர். புலவி காரணமாக இரு மடந்தை யரும் தம்முள் பொருகின்றனர். இப் போரினைத் தம்முள் இகலி அணிவகுத்துப் பொரும் மாற்றூர் சண்டை போலச் சித்திரித்துள்ளார். வள்ளியின் தோழியரும் தேவ சேனையின் பாங்கியரும் மாலை சுழற்றியும் பந்தெறிந்தும் போர் செய்கின்றனர். வள்ளியின் மயில், கிளி, வண்டு கள் எல்லாம் தேவசேனையின் மயில், கிளி, வண்டு களோடு கடும் போரிடுகின்றன. மலைவாழ்நர் ஆதலின், வள்ளியும் அவள் தோழிமாரும் வேலும் வில்லும் கொண்டு தேவசேனை குழுவுடன் மறப்போருடற்றினர். தேவசேனையும் அவளைச் சூழ்ந்தோரும் வானக மடந்தையராதலின் தம் மாயையினால் வண்டாகவும் மயிலாகவும் குயிலாகவும் மாறித் தம் பகைவரிடமிருந்து மறைந்து உய்ந்தனர் (9 : 27-69). இவ் வூடற் போர் கண்டு செவ்வேள் கழிபேருவகை எய்துவர் (9 : 81, 82).)

வழிபடு நெறி

அன்பர்கள் செவ்வேளையும் அவர் உறையும் பரங் குன்றத்தையும் மட்டுமன்றி அவர்க்குரிய கடம்பினையும் பிணிமுக ஊர்தியினையும் வழிபடுவர். மலர் தூவி முருகனை இறைஞ்சுப. சிலர் வேள்வியியற்றி அவர்கட்கு அவி அளிப்ப (8-80). ஆர்வலர் புகைக்கும் அகில் முதலியவற்றின் நறும் புகை, முகில் போன்று பரங்குன்றிற் பரவி மேலெழுந்து, சில சமயம் கதிர்மண்டிலத்தையும் மறைத்து விடும் (17 : 28-32). இந் நறும் புகையை விழைதலின் முருகனைக்

'கறையில் கார்மழை பொங்கி யன்ன
நறையி னறும்புகை நனியமர்ந் தோயே'

(பரி. 14 : 19-20)

எனப் புலவரும் இசைஞரும் ஆகிய கேசவனார் விளித்துப் பாடுவாராயினர். வழிபடுங்காலை, இறையடியவர்கள் யாழ், முழவு முதலிய இயங்களுடன் தெய்வப்பண் ணிசைத்தனர். இலர் மறை முழங்கினர் (18 : 51, 52). செவ்வேள் யாழொடு பண் இசைத்தலை நச்சுதலின், 'எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே' (14 : 24) எனப் புலவர்கள் பாடிப் பரவினர். இறைவனை இறைஞ்சுங்கால், மணியடிக்கும் வழக்கமும் உண்டு (8 : 88). பரங்குன்றத்துக்கு முருகவேளை வழிபடச் செல்வோர், தம்முடன் சந்தனம், பலவகை நறும் புகைகள், நந்தா விளக்கு, மணமலர்கள், முழவு, மணி, கயிறு, மயில், குடாரி, யானை, குழை, பூவாடை, வேல் முதலியன கொண்டு செல்வர்.[14] முருகனது யானையை நன்னீராட்டிச் சென்னியிற் குங்குமமிட்டுக் கவரி சார்த்தி, அணி செய்து, பவழக் காம்பி னுலாய பொற்குடை ஏற்றி, மகளிர் வழிபட்டுப் பூசை செய்வர். யானையின் கவழமிச்சலை உண்ணின், குறைவற்ற கொழுநனைக் கொள்ளலாமென்றும், தணந்த தலைவனைத் தழுவலாமென்றும் கருதி, அம்மகளிர் அதனை அயின்றனர் (19 : 90–94).

செவ்வேளின் மாட்சி

முருகனே இவ்வுலகிற்கெல்லாம் தலைவன். சிலர் நல்வினைப் பயனால் சிறப்புடைய உயர் பிறப்பினராதலும், சிலர் தீவினைப் பயனால் இழிபிறப்பினராதலும் அவனது ஆணையேயாம்.

'சிறப்பினு ளுயர்பாகலும்
பிறப்பினு ளிழிபாகலும்
ஏனோர்நின் வலத்தினதே. (பரி. 5 : 19-21)

ஏழுலகத்தையும் ஆட்சி புரிபவனும் அவனே (8:64). திருத்துழாய் மாலையும் கருடக் கொடியுமுடைய திருமாலும், விடையூர்தியுடைய சிவபெருமானும், மலரிற்றோன்றிய பிரமனும்; ஆதித்தர் பன்னிருவரும், மருத்துவரிருவரும், அட்டவசுக்களும், பதினோருருத்திரர்களும், எண்திசை காப்

14. பரி. 8 : 96-102; 17 : 1–6.

போரும், மற்றைத் தேவர்களும், அசுரர்களும், முனிவர்களும், பிறரும் குழுமித் திருப்பரங்குன்றத்துக்கு முருகனைக்காண்டல் வேண்டி வந்துறைந்தனர் (8: 1-11). இக் கடவுளர் குழாத்தில் இந்து சமயப் பெருங்கடவுளரான அயன், அரி, அரன் மூவரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இங்ஙனம் எல்லாக் கடவுளரும் முருகனைக் கண்டேத்தச் சென்றனர் எனக் கூறும் முகத்தான் நல்லந்துவனார், முருகனின் தனக்குவமையில்லாத் தன்மையைப் புலப்படுப்பர்.

இறைவனது அருட் பண்பைப் பெற்ற அறமுடையோரும், வீட்டின்பம் விழையும் மாதவரால் வணங்கப் பட்டோருமே, செவ்வேளின் திருவடி சேர்வர். உயிர்களை அழிக்கும் தீய உள்ளத்தினையுடைய சீற்றமிக்கோரும், அறத்தின்கட் சேராத புகழிலாரும், கூடாவொழுக்கத்தால் அழிந்த தவக்கோலமுடையோரும், இப்பிறப்பின் நுகர்ச்சியே உள்ளது மறு பிறப்பில்லை என்னும் மடவோருமாகிய இவர்கள் அவ்விறைவனின் திருவடி சேரார்.

'நின்குணம் எதிர்கொண்டோர் அறங்கொண்டோர் அல்லதை
மன்குணம் உடையோர் மாதவர் வணங்கியோர் அல்லதை
செறுதீ நெஞ்சத்துச் சினநீடி னோரும்
சேரா வறத்துச் சீரி லோரும்
அழிதவப் படிவத் தயரி யோரும்
மறுபிறப் பில்லென்னும் மடவோரும் சேரார்
நின் னிழல் அன்னோ ரல்ல தின்னோர்
சேர்வார்............... (பரி. 5:71-78)

தான் பிறந்தவுடனேயே தேவர்கள் எல்லாம் கண்டு அஞ்சியோடுதற்குக் காரணமான சிறப்பினை முருகன் பெற்றிருந்தார். அவர் இருபிறப்பினையும் அப்பிறப்பால் வந்த இரு பெயரினையும் ஈர நெஞ்சத்தினையும் இணையிலாப் புகழினையும் உடைய அந்தணரது அறத்தை விரும்புவர் (14:25-28). அன்பர்கள் தன்னைப் பரவிப் போற்றிப் பாடுவதையெல்லாம் விரும்புதலின் முருகனை 'வாழ்த்துவப்பான்' எனப் புகன்றார் நப்பண்ணனார் (19:66).

செவ்வேளை வேண்டுதல்

அன்பர்கள் செவ்வேளையும் திருமாலையும் நோக்கி இரந்து கேட்கும் வேண்டுதலில் பெரிதும் வேறுபாடில்லை. ஆயினும் இவ்வுலகவின்பம் பற்றி இறைவனை வரங்கேட்டல் செவ்வேள் பாடல்களில் காணப்படுகின்றதே அன்றித் திருமால் பாடல் களில் காணுமாறில்லை. பலவகைப் பருவத்தினரும் பரங் குன்றத்தில் செவ்வேளை வழிபட்ட பின்னர் வரம் கேட் கின்றனர். கனவிற் கண்ட காதலரை நனவிற் பெற வையையில் புதுப்புனல் பெருகுக எனச் சிலரும், கருவயிறு உறுக எனச் சிலரும், செய்பொருள் வாய்க்க எனச் சிலரும், போரில் தம் தலைவர் வாகை சூடுக எனச் சிலருமாக முருகனை நோக்கி வரங் கிடக்கின்றனர் (8: 102-108). பரங்குன்றினின்றும் அருவிகள் எஞ்ஞான்றும் வற்றாது நீர் பெருகட்டும் என வேண்டுவாரும் உளர் (8:128-130). சுற்றத்தொடும் இறைவனை இறைஞ்சுதல் (2:75), தமக்கும் தம் தமர்க்கும் துறக்கவின்பம் விழைதல் (1:62-65), தெய்வம் தங்கும் குன்றத்தடியுறை இயைக என இரத்தல் (15:65, 66), எஞ்ஞான்றும் கடவுளின் புகழ்பாடும் பேறு வாய்க்க என வேண்டுதல் (18:61-64), இத்தகைய வேண்டுகோள்களே திருமாலைப் பாடிய புலவரிடத்தும் செவ் வேளைப் பாடிய புலவரிடத்தும் காணப்பெறும் ஒப்புமை களாம். செவ்வேளைப் பற்றிப் பாடிய தம் இரு பாடல் களிலும் குன்றம்பூதனர் அவர்தம் திருவடிக்கண் எப் பொழுதும் தங்கவேண்டும் என வேண்டுகிறார் (9:82-85; 18: 54-56). நல்லச்சுதனர் குன்றத்தடியுறை யியைக எனவும், செவ்வேளின் அடியுறைதல் இன்றுபோல் என்றும் இயைக எனவும் தம் ஒரே பாட்டில் இரக்கின்றார் (பரி. 21). தாமும் தம் சுற்றமும் பிறவித் துன்பம் நீங்கிப் பேரின்பம் பெற வேண்டும் என்பது நல்லழிசியார் வேண்டுகை (பரி 17) கடுவனிள வெயினனர், 'யாம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமு மல்ல, நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும்' என்கின்றார் (பரி. 15). இப் பரிபாடற் புலவர்களின் வேண்டுதல் ஆழ்வார் நாயன்மார் பாசுரங்களில்

வரும் வேண்டுதல்களுக்கு ஊற்றாகவும் உறுதுணையாகவும் அமைந்திருக்கலாம்.

பரங்குன்றம்

செவ்வேள் திருப்பரங்குன்றத்துக் கடம்ப மரத்தடிக்கண் உறைந்துள்ளார். இக்குன்று அவர்தம் ஊர்தியாகிய யானை போல் காட்சியளிக்கிறது.[15] கடவுளர்களும் ஈண்டு முருகனைக் கண்டு ஏத்த வந்தமையின், இக் குன்று இமய வெற்பினை ஒக்கும் (8:1-11). பரங்குன்று என்பதிலுள்ள 'பரம்' என்னும் சொல் பெருமையைக் குறிக்கும். இருங்குன்று என்பதிலுள்ள இரும் என்னும் அடையும் பெருமையைக் குறிப்பதாம் என்பது ஈண்டு நினைவு கூர்தற்குரியது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இக் குன்றம் அடர்ந்த அடவியாலும் பொழிலாலும் அரித்தோடும் அருவியாலும் புனலாடுதற்கேற்ற சுனையாலும் எதிரொலிக்கும் குகையாலும் புலன்களுக்கு விருந்து நல்கி எழில் பூத்துப் பொலிந்து நின்றது. ஆனால் இன்று, எல்லா இயற்கை எழிலும் இழந்து வறுநிலமாகக் காணப்படுகின்றது. பரிபாடற் புலவர்கள் அக் குன்றத்துள்ள ஓவியங்களையும் சுனையாடல்களையும் இயற்கை எழிலையும் காதற் காட்சிகளையும் படம்பிடித்துக் காட்டியுள்ளனர்.

ஓவியங்கள்

திருப்பரங்குன்றத்தில் ஓவியந் தீட்டப்பெற்ற அழகிய அம்பலம் காமவேள் படை பயிற்றுவிக்குமிடம் (சிரமச்சாலை) போல் காணப்படுகிறது (18:27-29) கோயிலில் தீட்டப் பெற்ற எழிலார்ந்த ஓவியங்கள் காண்பாரைத் தடுத்து நிறுத்தும் கவர்ச்சியன. துருவ சக்கரத்தைப் பொருந்தி வரும் கதிரவன் முதலிய கோணிலை ஓர்பால் தீட்டப்பெற்றிருந்தது. இரதி காமன் உருவங்கள் ஓர்பால் அழகுசெய்தன. இந்திரன் பூனை உருவெடுத்தது, கவுதமன் அகலிகையைச் சபித்தது, அவள் கல்லுருவானது எல்லாம் வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பெற்றிருந்தன.

15. பரி. 9:82–85; 18:54-56

'என்றூ முறவரும் இருசுடர் நேமி
ஒன்றிய சுடர்நிலை யுள்படு வோரும்
இரதி காமன் இவளிவன் எனூஅ
விரகியர் வினவ வினுவிறுப் போரும்
இந்திரன் பூசை யிவளக லிகையிவன்
சென்ற கவு நமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிதென் றுரைசெய் வோரும்
இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்.' (பரி. 19: 46-53)

சுனை

திருப்பரங்குன்றத்துள்ள அருவி தங்கும் சுனைகள், இமய வெற்பினுள்ள முருகனை ஈன்ற தாமரை நிறைந்த சரவணப் பொய்கை ஒக்கும் என நல்லந்துவனுர் கூறியுள்ளார் (8:1-16). சுனைகள் மலர் நிறைந்திருத்தலால் மன்மதனது அம்பருத்தூணி போன்றுள்ளது (18:30-33). கரையினின்றும் சாய்ந்த கொறுக்காந்தட்டையை முட்டுகின்ற பன்னிற மலர்கள் நிறைந்த சுனை, இந்திர வில்லை வளைத்த வானை ஒத்திருந்தது (18:48-50)' இளம் பெண்கள் விளையாட்டாகத் தளிர்களைச் சுனையிலிட்டனர். அவை அரும்புகளின் பக்கத்தும் மலர்களின் பக்கத்தும் விழுந்து, தலை தூக்கிக் கிடக்கின்றன. பூத்த மலரோடு பொருந்திக் கிடந்ததை ஐந்தலையரவ மென்றும், அதனருகில் போதோடு கிடந்ததை அதனின் மூத்த பிள்ளை என்றும், முதிரா அரும்போடு கிடந்ததை அதன் இளைய பிள்ளை என்றும் கருதி மயங்கினர் (19 : 67-75). சுனையின் கரையில் ஆடல் பாடல் முதலிய பல கலைகளில் வல்லுநரைப் போட்டியில் வென்றவர்கள், தம் வெற்றிக் கொடிகளை நாட்டியுள்ளனர் (6 : 71-78).

காதற் காட்சி

கவின் மிக்க காரிகையர் தம் காதலரொடு சுனையிற் குதித்துப் புனலாட்டயர்ந்தனர். அதனுல் ஆண்டுள்ள மலர்களில் தேன் பருக வந்த வண்டுகள் பருகாமலே அஞ்சிப் பறந்தோடின (17 : 33-39). சுனையில் விளையாடிய

ஒரு பெண், நீந்துதற்கு ஒரு மூங்கிற் புணையொன்று வேண்டுமெனத் தன் அன்பனைக் கேட்டனள். அவன் அதனை நல்காது சிவந்த நீர் நிறைந்த ஒரு வட்டினை வீசி எறிந்தான். அதன் துணையால் நீந்தவியலாது அவள் நீருள் மூழ்கிய காலை, அவன் துணையாகச் சென்று அவளைத் தழுவிக் கரை சேர்ந்தனன் (21:39-45).

இயற்கைக் காட்சி

பரங்குன்றப் பூம்பொழில் பலவகை மலர்கள் பூத்துப் பொலிதலின், மன்மதனின் அம்புப் புட்டில் போன்றுள்ளது (18:30-33). நாண் மலர்க் கொன்றை பொன் மாலை போலப் பொலிகின்றது. வேங்கைப் பூக்கள் பாறையில் பரவிப் புலிபோற்றோன்றும். காரிப் பருவத்து மலரும் செறிந்த காந்தட்குலைகள், அழகால் போர்தோற்றுக் கட்டுண்டார் கையை ஒக்கும். மேகம் ஆர்த்துப் பரங்குன்றத்தில் இந்திரனது வானவில்லை வளைத்தது. இந்திரனது வில் மலரம்புகளை உதிர்ப்பது போல, மரங்கள் புதுப் பூக்களை உதிர்க்கின்றன. வேங்கை மலரிணர் தீயினை ஒப்பச் சிவந்து காணப்படும். பன்னிறப் பூக்களைக் கொண்ட சோலைகளையுடைய குன்றம், விடியற்காலத்துப் பல நிறத்தையுடைய மேகம் நிறைந்த வானம் போலக் காட்சியளிக்கும் (19:76-84) மலர்களின் தேன்மாரியால் மரங்கள் நனைகின்றன. பரங்குன்றத்திலே வீசும் காற்று நறுஞ்சாந்து, மண்மலர், கமழ் புகை முதலியவற்றினூடே நுழைந்து வருதலின் எஞ்ஞான்றும் நறுமணமுடையதாகும் (21:46-53). செவ்வேளை வழிபடும்போது. அன்பர்கள் எடுத்த நறும்புகை முகிற்குழாம் போல் மேலெழுந்து கதிர் மண்டிலத்தையும் மறைக்கும் (17:28-32). செவ்வேளை வணங்க மதுரையினின்று பரங்குன்றத்துக்குச் செல்பவர் தலையிற் சூடிய கண்ணியும் மார்பிலணிந்த தாரும் கீழே வீழ்ந்து அந் நெடுஞ்சாலையினையே மூடி மறைத்து விட்டன (17:22-27).

பரங்குன்றின் புனைவு

கார் மேகத்தைக் கண்டதும் மயில்கள் களிநடம் புரிகின்றன. பரங்குன்றத்தில் அன்பர்கள் குரங்குக்குப் பலி

ணியம் அளிக்கின்றனர். கருங்குரங்குக்கும் யானைக்கும் கரும்பு நல்குவார் சிலர் (19:38,39). தும்பி காந்தள் முகையின் கட்டவிழ்ப்பது, யாழ் நரம்பினது புரியை நெகிழ்ப்பார் கையை ஒத்துள்ளது (18:36,37). அருவி ஓடிவரும் குன்றம் முத்துமாலை அணிந்திருப்பது போறறேன்றுகிறது (18:46). தண்ணறும் கடம்பின் கமழ்தாது ஊதும் வண்ண வண்டின் இமிர் குரல், பண் போன்றுள்ளது (14:3,4). வாகைப்பூப் போன்ற உச்சிக் கொண்டையுடைய மயில்கள் அகவுவது, 'மணந்து தணந்தோரை நீடன்மின் வாரும்' என்பவர் சொற்போன்றுள்ளது (14:8,9). மலர்கிகண் இமிரும் தும்பியின் ஒலி, வங்கிய இசையை ஒத்துள்ளது (21:33,34). முழவிசை போல அருவிநீர் ததும்பும் (21:36). மேகத்தின் முழக்கம், களிறு பிளிறுவதை நினைவூட்டுகிறது. அம்முழக்கத்தைக்கேட்ட கோழி,வெருவிக் குன்று எதிர்கூவகிகூவுகிறது. மதக்களிறு அக்குரலுக்கு ஏறுமாறுகப் பிளிறுகின்றது. மலைமுழை இவ்வொலிகளை எல்லாம் எதிரொலிகின்றது (8:17-21) மதுரையில் முழங்கும் முரசொலி, காற்றால் ஏறுண்ட கடல் போலவும், கடலைக் குடிக்கும் மேக முழக்கம் போலவும், இந்திரனது இடிமுழக்குப் போலவும் அதிர்ந்தது. பரங்குன்றும் அம்முழக்கொலிக்கு எதிர்குதிராக அதிர்ந்தது (8:29-35). போர்க்கண் மிகும் அரவம் போலப் பரங்குன்றத்து முருகன் கோயிலில் தாள ஒலிகள் கேட்கும் (18:44,45). பாடுவாரது பாட்டிற்குரிய தாளமும், ஆடுவாரது கூத்திற்குரிய தாளமும், மலையில் தோன்றும் எதிரொலியும் கலத்தலால் ஆண்டுப் பெருமுழக்குண்டாயிற்று (8:109-111). இக்குன்றின் ஒரு பக்கம் பாணர் யாழோசை எழ, அதனெதிரே வண்டின் இமிர் இசை எழும். ஒருபால் வேய்ங்குழல் இசைப்ப, அதனெதிர் தும்பி முரலும். ஒரு சார் முழவு அதிர, அதனெதிர் அருவி நீர் ததும்பும். ஒரு திறம் விறலியர் ஆட, அவர்க்கெதிரே பூங்கொம்பர் காற்றில் அசையும். ஓரிடத்தில் பாடுமகள் பாலைப் பண்ணின் நிறை குறையோடு இசைப்ப, அதனெதிர் ஆடுமயிலின் அரிகுரல் தோன்றும். இங்ஙனம் கலைகளில் வெற்றியறிய நடத்தும்

போட்டியரங்கம் போன்று பரங்குன்று தோன்றுகிறது (17:19-21). குன்றத்தருவி உழவர்தம் கழனியில் பாயும். குமரியர் அருவி குடைந்தாடுங்காலே, அவர்தம் அணிகலன்களிலிருந்து விழுந்த நீலமணி அவ் வுழுநிலத்தைச் சிதைக்கும் (17:40,41).

குன்றின் எதிரொலி

உறவினர் கூட்டத்தினின்றும் பிரிந்துவிட்ட சிறு பெண் ஒருத்தி அவர்களைக் காணாது தேடித் திரிந்து 'ஆ, ஓ' எனக் கூவினாள். இவ்வொலியை மலை மூழைஞ்சு எதிரொலித்தது. இவ்வொலியை தமரின் மறுமொழி எனப் பிறழ உணர்ந்த அப்பேதைப் பெண், அவ்வொலி எழுந்த இடத்துக்குத் தமர் நாடிச் சென்றாள். தமரைக் காணாமையின், அவளை மீண்டும் மீண்டும் கூவி அழைக்கும்படி செய்தது அப் பரங்குன்றம் (19: 58-66).

ஊடற் காட்சிகள்

ஓர் ஆடல் நங்கை தன் நடிப்புக் கலையால் காண்பார் உள்ளங்களை எல்லாம் கொள்ளைகொண்டனள். பெண்டிர் சிலர்தம் கொழுநர் அவளை உற்று நோக்குதல் கண்டு அழுக்காறெய்தினர். ஒருத்தி வெகுளி நோக்கால் அவளைக் காண்டலினின்றும் கணவனைத் தன்பால் ஈர்க்கக் கருதினள். மற்றொருத்தி தன்னை ஆடைஅணிகலன்களால் நன்கு ஒப்பனை செய்து கொள்வதன் வாயிலாகத் தன் அன்பனைக் கவர நினைத்தாள். மூன்றாமவள் மார்பகத்து நறுசாந்து பூசி மணத்தால் தன் மணவாளனைத் தன் பக்கம் திருப்ப முயன்றாள். பரங்குன்றக் காதல் நிகழ்ச்சிகளைக் காட்டுவதன் வழியாகப், பல்வேறு மகளிரின் உள நிலையைப் புலவர்கள் படம் பிடித்துக் காட்டியுள்ளனர் (21:18–29).

ஓர் ஆடும் மயிலைக் கண்ட நம்பி அதன்கண் தன் நங்கையின் சாயல் இருப்பக்கண்டு ஆழ்ந்து நோக்கினன். அதனைக் கண்ட அவள் தலைவன் காதலித்த வேறொருத்தியின் சாயலை

அம்மயிலிடைக் கண்டு உற்று நோக்குவதாகப் பிறழ உணர்ந்தனள். பின் அவனை நோக்கி, 'நீ உள்ளியதுணர்ந்தேன் என்னிடம் மறைக்காது உள்ளத்துள்ளதை உரைப்பாயாக என வினவி ஊடினாள். அதற்குத் தலைவன் 'காதலாய்! நின் அழகிய சாயலைக் களவு கொள்ள எண்ணி முயன்று, அது பெருது வருத்தமுற்ற மயிலினை நோக்கி, நின் அருமையை நினைக்க, நீ மாறாகக் கருதுகின்றாய்' என்று கூறினன். தலைவியும் அதுகேட்டு ஊடல் தணிந்தாள் (218-29).

தலைவனின் பரத்தைமையையறிந்த தலைவி, அவனுடன் உறவு கொள்ள மறுத்தனள். தலைவன் வையைக்குப் பக்கத்துள்ள பொழில்மீதும் பரங்குன்றத்தின்மீதும் பார்ப்பார் மீதும் ஆணையிட்டுத் தன் ஒழுக்கத்தினை வற்புறுத்துகின்றான். தன்மேல் எழும் மணம் குன்றிலுள்ள கனிகள் மீதும் மலர் மீதும் தவழ்ந்து வந்த மெல்லிய காற்றாலாயதே தவிரப் பரத்தையின் தொடர்பினால் ஆயதில்லை என மேலும் கட்டுரைத்தான். தோழி இதற்கிடையே குறுக்கிட்டுத் தலைவனை நோக்கி, 'இத் தலைவி ஒரு தாய்க்கு ஒரு பெண்; ஆதலால் முருகன்மீது ஆணையிடாதே; நின் ஆணை பொய்யாயின் அவன் கைவேல் நின்னை ஒறுக்கும்' என்றனள். தலைவன் மீண்டும் வையையின் மணலைத் தொட்டும், பரங்குன்றத்தடி தொட்டும் தான் வழுவிலன் எனக் காட்டினன். பின்னர்த் தலைவன் தோழியை நோக்கித் தலைவியின் பொய்யாய ஊடலை மெய்யெனக் கருதி முருகன் சினந்தால் என் செய்வது? என எண்ணி, அவனது சீற்றத்தைத் தணிக்குமாறு வேண்டுகின்றான். உடனே தோழி 'நின் ஆணை பொய்யாதலை இப்பொழுதறிந்தேன்; தலைவி பெருங்கற்பினளாதலின், முருகன் சினங் கொள்வதற்கு முன்னே வழிபட்டிறைஞ்சி அவன் சீற்றந் தணிப்பாள்; நீ கவலாதே' என்றனள் (8:47-89).

பரிபாடல், மக்கள் ஊடல்களை மட்டுமின்றிக் கடவுள் ஊடலையும் கூறுகிறது. வள்ளியும் தேவசேனையும் முருகன் பால் கொண்ட காதல் காரணமாக ஊடிப் பொருதல்

அழகுறப் புனையப்பட்டுள்ளது. அவர்கள் மட்டுமின்றி, அவர்தம் தோழியரும், கிளி மயில் வண்டு முதலியனவும் தம்முட் சண்டையிடுதலைக் குன்றம்பூதனர் தம் பாடலில் விரித்துக் கூறுவர். பரங்குன்றம் களவு, கற்புப்புணர்ச்சிகளாலாய இன்பினை நல்குகின்றது (8:40–46). பரங்குன்றத்து இழிந்தோடும் அருவியும், அசைந்தாடும் தென்றலும் தாலாட்டிக் காதலை மிகுக்கும் (6:52-55). ஆடலும் பாடலும் நாடொறும் நிகழும். மகிழ் பெருக்கும் கலைநிகழ்ச்சிகட்குச் சீரிய இடமாகப் பரங்குன்று அஞ்ஞான்றும் சிறந்து விளங்கியது.

பரிபாடலும் திருமுருகாற்றுப்படையும்

பரிபாடலின் முதற்பாடலே திருமாலைப் பற்றியதாதலின், அந்நூற்கெனத் தனித்த கடவுள் வாழ்த்தில்லை. இதுபோலவே பத்துப்பாட்டின் முதற் பாட்டு முருகனைப் பற்றியதாதலின், அதற்கும் தனித்த கடவுள் வாழ்த்தில்லை. பரிபாடல் பாண்டிநாட்டை மட்டும் பாடும் நூலாகலான், அது பரங்குன்றம் ஒன்றனையே பாராட்டியுள்ளது. ஆனால், முருகாற்றுப்படை ஆற்றுப்படை முறையில் தமிழகத்துள்ள திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன் குடி திருவேரகம், குன்று தோறாடல், பழமுதிர்சோலை என்னும் முருகனுடைய ஆறுபடை வீடுகளையும் பாடிப்புகழ்ந்துள்ளது. முருகாற்றுப்படை பழமுதிர்சோலையை முருகனுக்குரியதென்னும். ஆனால், பரிபாடலோ அதனைத் திருமாலுக்குரியதாகக் கூறும். இவ்விரு நூல்களிலும் முருகனைப் பற்றிய கருத்தொப்புமைகள் பலப்பல காணப்படும். கண்ணுதற் பெருங்கடவுட்கு உமையம்மையாரிடம் பிறந்தவர் முருகன்; கார்த்திகை மகளிர் அறுவரால் புரக்கப் பெற்றவர்; ஆறு தலையும் பன்னிரு கையுமுடையவர்; என இரு நூல்களும் கூறும். முருகனது ஊர்தி, கொடி, படைக்கருவி, உறையும் மரம், மாலை, அணிகள், நிறம், மனைவியார் இவற்றைப்பற்றிக் கூறுவதிலும் அந் நூல்கள் ஒன்றுக்கொன்று மாறுபடவில்லை. மரமரமாகவும் குருகொடு பெயரிய குன்றாகவும் வழிவெடுத்து

வந்த சூரனை, முருகன் கொன்றொழித்ததைக் குறிப்பிட அந் நூல்கள் மறந்தில. 'பெரும் பெயர் முருகன்' என்ற தொடர் ஆட்சி இரு நூல்களிலும் காணப்படும். வெறியாட்டம் பற்றிய சொற்குறிப்பே பரிபாடலில் உள்ளது. ஆனால் முருகாற்றுப்படையில் அதன் விரிவு காணலாம்.[16] முருகாற்றுப்படையிலும் பரிபாடலே செவ்வேளினது பிறப்பை விரிவாகக் கூறியுள்ளது. முருகனின் ஊர்திகளுள் ஆடும் ஒன்றென முருகாற்றுப்படை புகலும்.[17] இக் குறிப்புக்குப் பரிபாடலிற் சான்றில்லை. முருகாற்றுப்படை செவ்வேள் படைக் கருவிகட்குப் பெயர் கட்டியிருத்தல் போலவே, பரிபாடலும் சுட்டியிருக்கிறது. அதனோடு அப் படையைச் சேயோற்கு வழங்கியவர் யாவர் என்பதையும் பரிபாடல் அறிவிக்கும். வள்ளி தேவசேனையரிடையே நிகழ்ந்த ஊடற் பூசல், மகளிர் யானை ஊர்திக்கு அளித்த கவழமிச்சிலை அயிறல், ஆராதனைப் பொருள் வழங்கல், பரங்குன்றத்துச் சுனைகள் அருவிகளின் இயற்கைப் புனைவுகள்,—ஆகியவை பரிபாடலிலேதான் இடம் பெற்றுள. முருகனுக்கு வழங்கும் செவ்வேள், மால் மருகன் எனும் பெயர்கள் பரிபாடலில் உள்ளனவேயன்றி முருகாற்றுப் படையில் இல்லை. பரிபாடற் கருத்துக்கள் சிலவற்றை முருகாற்றுப்படை பாரித்துரைத்தலையும் காண்கின்றோம். திருமால், சிவன், அயன் முதலிய கடவுளர்கள், பரங்குன்றத் திற்கு முருகனைக் கண்டேத்தச் சென்றனர் என்று பரிபாடல் கூறும். மெய்ப்பொருளுணராமையான் தெய்வக் குழந்தை முருகனால் சிறைப்படுத்தப்பட்ட தாமரை மலரில் தோன்றிய நான்முகனைச் சிறைவீடு செய்யவே சிவன், மால், இந்திரன் முதலிய தேவர்கள் அனைவரும் திரளாகச் சென்றனர் என்று முருகன்பால் இக் கடவுட் குழாம் ஏகியதன் காரணத்தை முருகாற்றுப்படை புலப்படுத்தும். முருகனைப் பலவகைப் பட்ட மக்கள், வேதமுணர்ந்த பார்ப்பனர், தவ முனிவர்

16. முருகாற். 218–244.
17. முருகு. 210.

ஆற்றல் சான்ற தேவர்கள், மலைவாழ்நர், அழகிய அணங்குகள், பூதங்கள் எல்லாம் பல்வகைச் சடங்குகளோடு வழிபட்டனர். முருகாற்றுப்படை ஒன்றே முருகனின் ஆறுதலைகளும் பன்னிரண்டு கைகளும் புரியும் பணியினை விரித்துரைக்கும். அஃது ஆசிரியப் பாவாலானது. பரிபாடலோ பரிபாடல் எனப் பெயரிய இசைப்பாவாலாயது அதனால்தான் பரிபாடல் பண் வகுக்கப்பட்டுள்ளது. முருகாற்றுப்படை பண் வகுக்கப்பட்டிலது. எனினும், சைவமத ஓதுவார்களும் முருகாற்றுப்படையையே தெய்வப் பாடலாகக் கருதிப் பண்ணுடன் பாடுகின்றனரேயன்றி இசைப் பாடலாகவே உள்ள முருகனைப் பற்றிய பரிபாடல்களை அங்ஙனம் பாடுகின்றிலரே என்பதனை நினைக்க நனியிரக்கமாகின்றது; அவலம் மிகுகின்றது. இசைக் கருவிகளின் பக்கத் துணையால் பாடுதற்கியைந்த இசையிற் சிறந்த இறைமைப் பரிபாடல்கள் பண்டு போல் பாடப்பெற்று, வழிபடுமன்பர்களின் உள்ளங் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கச் செய்யும் நாள் எந்நாளோ?

பரிபாடலும் பிற தொகை நூல்களும்

முருகாற்றுப் படையைத் தவிர, பிற சங்கத் தொகை நூல்களிற் காணப்பெறும் முருகனைப் பற்றிய குறிப்புகளைப் பரிபாடல்களில் வரும் செவ்வேட் குறிப்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் நோக்கோடு இத் தலைப்புத் தரப்பட்டுள்ளது. குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துப் பாடல் முருகனைச் சுருக்கமாக நன்கு புனைந்துள்ளது. குறுந்தொகை பதிற்றுப்பத்து அகநானூறு என்னும் தொகை நூல்களின் முதற் பாடல்களால் முருகனைப் பற்றிய செய்தி அறியப்படும். இக்குறிப்பு முருகனின் சிறப்பினையும் செல்வாக்கினையும் காட்டவல்லது. சங்க இலக்கியங்களிற் காணப் பெறும் முருகனைப் பற்றிய குறிப்புகளால் நாம் அறிவதைவிடச் செவ்வேளைப் பற்றிய தனித்த எட்டுப் பரிபாடல்கள் மிகுதியான செய்தியை நமக்கு அறிவிக்கின்றன.

முருகன் பெயர்கள்

சங்க இலக்கியங்களில் 'நெடுவேள்'[18] 'சேஎய்'[19] 'முருகு'[20] 'விறல்வேள்'[21] 'ஆலமர் செல்வன் மகன்'[22] வேலன்[23] இறை[24] அருந்திறற் கடவுள்[25] மலையுறை கடவுள்[26] கொற்றவை சிறுவன்[27] என்பவை முருகனுக்குப் பெயர்களாக அமைந்துள்ளன. பரிபாடலில் வேலன் என்னும் பெயர் முருகனை உணர்த்தாது, பூசாரியை உணர்த்துகின்றது. சங்க இலக்கியத்து ஆட்சி பெற்ற 'கந்து'[28] எனும் சொல்லே கந்தன் எனும் பெயர் அமைந்ததற்குக் காரணமாகலாம். குமரன்[29] செவ்வேள்[30] மாஅல் மருகன்[31] எனும் பெயர்கள் பரிபாடலில் மட்டும் வந்துள்ளன.

குறுந்தொகைக் கடவுள் வாழ்த்து முருகனது சேவடி தாமரை புரையும்; திருமேனி பவழமொக்கும்; உடுக்கை

---

18. முருகு 273; பெரும் 75; மதுரைக். 614; நற். 173; 9, 288, 10; அகம் 272, 382; புறம். 55.
19. குறிஞ்சி. 51; குறுந். 1; அகம். 266; புறம். 120; 125 209.
20. குறுந். 362; ஐங். 245; 308; அகம். 118; புறம். 56; 259.
21. ஐங். 250.
22. கலி. 83; 81
23. ஐங். 244.
24. அகம். 288
25. ஐங். 182.
26. ஐங். 259.
27. முருகு. 256.
28. அகம். 307; முருகு. 226.
29. பரி. 9:82.
30. ஷை. 5:13
31. ஷை. 19:57

குன்றிமணியின் நிறம் போலும் எனப் புனைந்துள்ளது. இப் புனைவு கீழ்வரும் பரிபாடலடிகளைத் தழுவியது என்பதனை ஒப்பிட்டுக் காண்க.

'உடையும் ஒலியலும் செய்யைமற் றுங்கே
படையும் பவழக் கொடிநிறங் கொள்ளும்
உருவும் உருவத்தீ யொத்தி, முகனும்
விரிகதிர் முற்று விரிசுடர் ஒத்தி.' (பரி. 19 : 97-100)

முருகன் வெள்ளாடை அணிந்துள்ளார்.[33] அவர்தம் ஊர்தி ஆடு, மயில், பிணிமுகம் எனப் பெயரிய யானை.[36] ஆட்டினை ஊர்தியாகப் பரிபாடல் கூறவில்லை. சேவற் கோழியும் மயிலும் எழுதிய கொடியை உடையவர்.[34] அவர் விரும்பி யுறைவது கடம்ப மரத்தடியாகும்.[35] அம் மரத்தினையும் அன்பர்கள் வழிபடுகின்றனர்.[36] மின்னல் அவர்தம் வேலுக்கும் வேல் மின்னலுக்குமாக அவை மாறிமாறி உவமையாக வந்துள்ளன.[37] மறம், சீற்றம் போர் விழைவு, இவற்றிற்கு எடுத்துக்காட்டாக முருகன் விளங்குகிறார்.[38] விரும்பி நினைத்ததை முடிப்பாரை முருகனுக்கு ஒப்பிட்டுள்ளார் நக்கீரனார்.

'முன்னியது முடித்தலின் முருகொத்தீயே' (புறம். 56)

மாலைப் பொழுதில் செவ்வானத்திலே பைங்காற் கொக்கினம்

32. கலி. 105:17.
33. புறம். 56:7-8; முருகு. 201; குறுந். 1.
34. முருகு. 122, 210-211; அகம். 149:15-16; புறம். 56:7-8.
35. பெரும். 75; மதுரைக். 613-614.
36. கலி. 101:13-14.
37. நற் 51:6; குறிஞ்சிப். 51-53.
38. பொருந. 131; பெரும். 75; மதுரைக் 181: நற். 225:1; அகம். 1:3; புறம். 14:19; 16:12; 120:20-21; 209:18-19.

வரிசையாகப் பறந்து செல்லும் காட்சி, முருகப் பற்றினரான அப் புலவர் பெருந்தகைக்குச் செவ்வேள் மார்பிற் பூண்டிருக்கும் முத்தாரம் போன்று தோன்றுகிறது.

'நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
செவ்வாய் வானம் தீண்டிமீன் அருந்தும்
பைங்காற் கொக்கினம் நிரைபறை உகப்ப.' (அகம். 120)

திருமுருகாற்றுப் படையோடு புறநானூற்றிலும் அகநானூற்றிலும் காணப்பெறும் நக்கீரர் கருத்துகளைச் சேர்த்து நோக்குகின்றுழி, அவர் முருகன்பால் இடையறு அன்பினர் என்பது நன்கு புலனுகின்றது. நற்றிணை எண்பத்திரண்டாம் பாட்டு முருகன் வள்ளியுடன் உடன்போக்கு நிகழ்த்தியதை உரைக்கும். புறநானூறு ஐம்பத்தைந்தாம் பாடல் முருகன் செந்திலம் பதியில் உறைவதாகப் புகல்கின்றது. செவ்வேள்மீது சூளுரைத்தல் அஞ்சத் தகுந்ததெனக் குறிஞ்சிப் பாட்டு கூறுகின்றது.[39]

நற்றிணையும் ஐங்குறுநூறும் நீங்கிய சங்கத் தொகைப் பனுவல்கள் எல்லாம் முருகன் சூரபதுமனைக் கொன்றதைக் குறிப்பிட்டுள.[40] சூரன் தன்னிடம் முருகன் போர் புரிய வந்ததைக் கண்டு மாமரமாகவும் கிரௌஞ்ச மலையாகவும் மாறி நின்றனன். அஞ்ஞான்று, முருகன் தன் வேலெறிந்து அவற்றை அடியோடழித்தனன். சிதறித் துகளான அக் குன்றம், முருகாற்றுப் படையிலும்[41] குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துப் பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மாமரம் தடிந்த செய்தியும் சங்க இலக்கியத்துக் காணப்பெறும்.[42]

---

39. குறிஞ்சிப். 208-210.

40. முருகு. 45-46; பெரும். 457-459. பதிற். 12:3-6. கலி. 27:15-16; 9::25-26; 104:13; அகம். 59:10-12; புறம். 23:3-5.

41. முருகு. 266-267.

42. முருகு. 59-61; கலி. 27:15-16, 104:13.

தேவர்தம் தானைத் தலைவனாக முருகனைக் குறிக்கும் திருமுருகாற்றுப்படை.[43]

வெறியாட்டு

களவுப் புணர்ச்சி நிகழ்தற்கேற்ற குறிஞ்சி நிலத்துக் கடவுள் முருகன். பலியிட்ட ஆட்டின் குருதியொடு தினையைக் கலந்து குறிஞ்சி நிலத்தவர் குமரனுக்குப் பூசனை புரிவர். வேல் வைத்திருத்தலின் முருகனை வேலன் என்று அழைத்தனர். ஒரோவழி அதே காரணத்தால் பூசாரியும் வேலன் எனப்பட்டான். இப் பூசாரி வெறியாடற் சடங்குகள் இயற்றி மகளிரின் காதனோயினைத் தீர்ப்பான் என மக்கள் எண்ணினர். இவ் வேலனும் பூசனைக்குரிய இடத்தைத் தூய்மை செய்து மலர் முதலியவற்றால் அலங்கரித்து மறி யறுத்துக் குருதியிற்றோய்ந்த செந்தினையைப் படைத்துப் பெண்ணின் காதல்நோய் தணிக்க முருகனை வேண்டி வெறி யாட்டயர்வான். முருகன் அப்பொழுது ஆண்டுத் தோன்று வான் என்று மக்கள் ஆர்வத்தோடு எதிர்நோக்குவர். கழங்கு வைத்து எண்ணி அதன் வழியாகப் பெண்ணின் நோய் முதல் அறிந்து அவள் குன்றுறை தெய்வமாகிய முருகனால் பீடிக்கப்பட்டிருப்பதாகக் கூறுவான்.[44] ஆதலால், மற்றை மகளிரெல்லாம் குரவைக் கூத்தாடுவார்கள்.[45] ஐங் குறுநூற்றில் வெறியாட்டுப் பத்து என்னும் பகுதியில் உள்ள பத்துப் பாடல்களும் இவ்வெறியாட்டத்தைப் புனையும். தாம் பாடிய எல்லாப் பாடல்களிலும் வெறியாட்டத்தைப் புனைந்துரைத்த சிறப்பால் பெண் புலவர் ஒருவர் வெறி பாடிய காமக் கண்ணியார் எனப் பெயர் பெற்றார். வெறி யாட்டு, களவு நிகழ்ச்சியைப் புலப்படுத்த உதவுவதால் அகத் திணையில் இது சிறப்பிடம் பெறுகிறது. பரிபாடலில் வெறி யாட்டம் விரிவாகப் புனையப்படவில்லை.

43. முருகு. 260.
44. நற். 32, 322; குறுந். 105, 111; அகம். 22, 114, 136, 156.
45. மதுரைக். 611-615.

குறிஞ்சிக் கடவுளான செவ்வேளைப் பாடிய பாடல்களில் காதற் காட்சிகளைக் கூறும்பொழுது வெறியாட்டு விரிவாக இடம்பெறும் என நினைப்பது இயற்கையே. ஆனால் முருகனை 'வெறி கொண்டான்' எனக் குன்றம் பூதனார் கூறிய அக் குறிப்புத் தவிர பரிபாடலில் வெறியாட்டம் பற்றிய விரிவான குறிப்பில்லை. முருகனுக்கும் வெறியாட்டத்துக்கு முள்ள நெருங்கிய தொடர்பை 'வெறி கொண்டான்' (பரி. 9:44) எனும் பெயர் காட்டுகின்றது. செவ்வேட் பாடல்களில் பல்வேறு காதல் காட்சிகளின் புனைவு காணப்படினும், வெறியாட்டப் புனைவு காணப்பட்டிலது.

பரிபாடலும் கந்தபுராணமும்

பரிபாடலும் கந்தபுராணமும் முருகனைச் சிவபெருமானின் மகன் எனக் கூறினும், முருகன் பிறந்த கதையை விரிப்பதில் கந்தபுராணம் பரிபாடலுக்கு வேறுபடுகிறது. பிரமனும் தேவர்களும் கைலாயம் சென்று சிவனைக் கண்டு தம்மைச் சூரபதுமனின் கொடுமைகளினின்றும் விடுவிக்க வேண்டுமென வேண்டினர். ஐம்முகமுடைய சிவபெருமான் மேலும் ஒரு முகத்தைப் புதுவதாகப் படைத்துக்கொண்டு தம் ஆறுமுகங்களினின்றும் ஆறு தீப்பொறிகளை உண்டாக்கினார். பின்னர்த் தீக்கடவுளையும் வாயுதேவனையும் நோக்கி இப் பொறிகளைக் கங்கையிற் கொண்டு சேர்க்குமாறு பணித்தார். அவர்கள் அங்ஙனம் சேர்க்கவே, கங்கை அவற்றைச் சரவணப் பொய்கையில் சேர்த்தது. ஆண்டு. அந்த ஆறு தீப்பொறியும் ஆறு குழந்தைகளாக மாறின. திருமாலும் தேவர்களும் வேண்டிக் கொண்டதற்கிணங்கிக் கார்த்திகை மகளிர் அறுவரும் அக் குழந்தைகளைப் புரந்து வந்தனர். உமையம்மை சரவணப் பொய்கை சென்று ஆறு குழந்தைகளையும் அன்பினால் ஒரு சேரத் தழுவியவுடனே அவை ஆறுதலையும் பன்னிரு கையுமுடைய ஒரு குழந்தையாயின. இச் சேர்க்கைதான் முருகனுக்குக் கந்தன் என்னும் பெயரை நல்கிற்று. இதுவே முருகன் பிறப்புப் பற்றிய கந்தபுராணக் கதையாகும்.

'எந்தை சக்திகள் உயிரெலாம் ஒடுங்குறும் எல்லை
முந்து போலஒன் ருகியே கூடிய முறைபோல்
அந்த மில்லதோர் மூவிரு வடிவுமொன் ருகிக்
கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்.'

(சரவணப் படலம், 21)

இப் பாடல் ஆறு உருவங்களின் சேர்க்கையால் செவ்வேள் கந்தனுயினமை உணர்த்தல் காண்க.

பரிபாடலும் சரவணப் பொய்கைதான் முருகனின் பிறப்பிடம் என்று கூறுகிறது. கண்ணுதற் பெருங்கடவுள் தேவர்களிடம் முருகன் அவுணர்களையும் அவர்தம் தலைவனுய சூரபதுமனையும் அழித்தொழிப்பான் என அருளினுர் எனப் புராணம் கூறும். பண்பாடும் நாகரிகமும் மாறும்போது காலத்துக்குக் காலம் பழங்கதைகளும் புதுஉரு எடுக்கும் போலும். கார்த்திகை மகளிர் அறுவரும் கருவை வேள்வித் தீயிலிட்டு அயின்றதாகப் பரிபாடல் கூறியது பிற்காலத்தார்க்கு அருவருப்பை அளித்திருக்கும். ஆகவே, செவ்வேளின் பிறப்புக் கதை கந்தபுராணத்தில் மாற்றம் பெற்றுள்ளது.

நான்முகனைச் சிறைப்படுத்திய குறிப்பு பரிபாடலில் இல்லை. ஆனுல் பிரணவப் பொருளை அறியாததால், முருகன் அயனைச் சிறைவைத்ததாகக் கந்தபுராணம் கூறும். பின் தந்தையாராகிய சிவபெருமானின் வேண்டுகோட்கிணங்கி, முருகன் பிரமனைச் சிறைவீடு செய்தார் என்பது புராணக் கதை.

சூரபதுமனைக் கொன்ற வரலாறு பரிபாடலிலும் முருகாற்றுப்படையிலும் காணுமாறு கந்தபுராணத்தில் காணப்படவில்லை. முருகனது வேல் சூரபதுமனது மார்பை இரு கூருகப் பிளந்ததெனவும், ஒருகூறு மயிலாகவும் பிறிதொன்று சேவலாகவும் மாறின எனவும், அவற்றை முருகன் முறையே ஊர்தியாகவும் கொடியாகவும் கொண்டனன் எனவும் புராணம் புகலுகின்றது. ஆனுல், இந்திரன் தன் மெய்யிற் பிரித்து மயிலைப் பரிசாகவும், அனலன் அங்ஙனமே

பிரித்துச் சேவற்கோழியைப் பரிசாகவும் முருகற்கு அளித்த தாகப் பாடல் நுவலுகின்றது. யமன் யாட்டினை முருக னுக்குப் பரிசளித்ததாகப் பரிபாடல் கூறும். ஆனால், செவ் வேளின் ஊர்தியாகிய ஆடு நாரதர் செய்த வேள்வியினின்றும் வந்தது எனக் கந்தபுராணம் கூறும். கந்தபுராணம் மிகப் பெரிய நூலாகும். அது வீரவாகுவின் வரலாறு, சூரபதுமனின் உடன்பிறந்தானை தாரகாசுரன் பற்றிய கதை, சூரனின் பிறப்பு, அவன் வேள்வியில் மறைந்தது, பின்னர் உடனே தோன்றியது, சுவர்க்கம் சத்தியவுலகம் வைகுந்தம் என்னும் உலகங்கட்குச் சென்றது, முருகனுக்கும் சூரனுக்கும் நிகழ்ந்த பெரும் போர், முருகன் வள்ளி தேவசேனையரை மணந்தது முதலியவற்றைக் கற்பனை தோன்ற விரித்துரைக்கும்.

8. வையை

எல்லா வளத்துக்கும் மழையும் ஆறும் அடிப்படைக் காரணமாயிருத்தலின், அவை பண்டைக் காலத்தே தெய்வமெனப் போற்றப் பெற்றன. திருக்குறளில் கடவுள் வாழ்த்துக்கு அடுத்து வான்சிறப்பு வைத்திருப்பதும் அச்சிறப்பு நோக்கியேயாம். தம் சிலப்பதிகாரத் தொடக்கத்தே இளங்கோவடிகள், வானத்துப் பாடலில் மா மழை போற்றுகின்றார். மதுரைக்கு ஏகும் வழியில் வையையைக் கண்டதும் கோவலனும் கண்ணகியும் அதனைத் தொழுது வணங்கியதை அக் காப்பியத்துட் காண்கின்றோம்.[1] திருமாலையும் செவ்வேளையும் வழிபட்டிறைஞ்சியது போலவே மலர் அணிவித்தும் ஆராதனைப் பொருள்கள் வழங்கியும், வையையை மக்கள் போற்றி வழிபட்டனர் எனப் பரிபாடல் கூறும்.

செழிப்பினையும் வளத்தினையும் மிகுக்கும் ஆறு, தமிழகத்தே ஒவ்வொரு நாட்டிலும் ஓடியது. ஆதலால் அதனை அரச குமரியாக மக்கள் கருதினர்; போற்றினர். சேர நாட்டில் பேரியாறும், பாண்டிய நாட்டில் வையையும், சோழ நாட்டில் காவிரியும் பாய்ந்து வளம் பெருக்கின. தன் நாட்டு ஆற்றின் பெயரொடு தொடர்புபடுத்தி மன்னவனை அழைத்தனர். சோழவேந்தனைக் 'காவிரி கிழவன்'[2] எனப் புறநானூறு புகலும். ஆறு அவனது உடைமைப் பொருளாக வழங்கியதும் உண்டு. வையையைத் 'தென்னவன் வையை'[3] எனக் கலித்தொகை குறிப்பிடும். தமிழகம் அதனை வளப்படுத்தும் ஆற்றொடு சேர்த்தே புலவர்களால் பாராட்டப் பெற்றது. 'பேரியாற்றுச் சீருடை வியன்புலம்'[4] எனச் சேர நாடும், 'வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பு'[5] எனப் பாண்டிய

1. சிலம்பு. 13 : 174-175.
2. புறம். 58: 1; 399 : 12.
3. கலி. 98 : 30-31.
4. பதிற். 28 : 10-11.
5. புறம். 71 : 10

நாடும் 'காவிரி புரக்கும் நாடு'[6] எனச் சோழ நாடும் வழங்கப் பெறுதல் காண்க.

ஆறுகளெல்லாம் உழவுத் தொழிலுக்கு மட்டுமின்றிப் புனலாட்டு விழாவுக்கும் பயன்பட்டன. உவகைக்குரிய நிலைக்களன்கள் நான்கனுள் விளையாட்டினையும் ஒன்றெனத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.

'செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்
றல்லல் நீத்த உவகை நான்கே.' (தொல். 1205)

வேறொரு நூற்பாவில், அவர் தலைவனும் தலைவியும் யாற்றினும் குளத்தினும் பொழிலினும் தம் நாட்டெல்லை கடந்தும் விளையாடுவதற்குரியர் என மொழிந்துள்ளார்.

'யாறுங் குளனும் காவும் ஆடிப்
பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப.' (தொல். 1137)

எனவே ஆறு மன்பதையின் இன்ப விழவுக்கும் பண்டே பயன் பட்டமை வெளிப்படை.

அகத்திணைச் சூழலில் சங்க இலக்கியங்கள் புனலாட்டத்தை விரித்துரைத்துள. இவ்வாட்டம் எல்லாத் திணைக்கும் பொதுவானதே. மலைவாழ்நர் அருவியினும்[7] சுனையினும்[8], நெய்தற்றிணையினர் கடலினும்[9], மருதநிலத் துறைவோர் யாற்றினும்[10] நீராடுவர். சங்க காலத்து மக்கள் யாற்றில் நீராடுவதை நல்வினையாகவும் கருதினர்.

கருவுயிர்த்த காரிகை தூய்நீர்த் தோய்ந்ததற்கும்[11], பெண் மருதமரத்தேறித் தண்ணீரில் குதித்து விளையாடுவதற்கும்[12],

---

6. பொருந. 248.
7. குறிஞ்சி. 54:56; நற்றிணை 68:4-5; பதிற். 48:13, 18; ஐங். 72, 73, 100, 411; குறுந். 222; புற. 63 : 11-15.
8. குறிஞ்சிப். 57; கலி. 108: 40-41.
9. அகம். 20:7-8; புறம். 24:3; 339:7; பட்டினப். 98.
10. கலி. 98:10; புறம். 11:5; பொருந. 238-241.
11. நற். 40.
12. ஐங். 74.

முனிவர்கள் அருவியாடித் தவமியற்றியதற்கும்[13] பண்டை இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. தொடித்தலை விழுத் தண்டினர் என்னும் புலவர் தாம் தம் தோழர்களோடு இளம் பருவத்தே மருதமேறிக் குளத்திற் குதித்து அடிமணல் எடுத்து வந்த செயலை நினைந்து அவ்விளமை நிலையாது போயிற்றே எனக் கழிவிரக்கங் கொள்வர்.[14] இளமகளிர் தைந்நீராடுதல் தவச் செயலாகவும் இன்ப விளையாட்டாகவும் கருதப் பட்டது.[15] பட்டினப்பாலை, தீது நீங்க மக்கள் கடலாடியதாக நுவல்கின்றது.

கரிகாற் பெருவளத்தானின் மருமகன் அத்தியைப் புனல் விளையாட்டிற் சிறந்து நின்றமையின், ஆட்டன் அத்தி என அழைத்தனர். அவன் காவிரியிலுள்ள கழார்த்துறைக்கண் தன் ஆடற்றிறத்தால் அனைவரையும் கவர்ந்தான். கரிகால னும் தம் கருமச் சுற்றம் புடைசூழ, ஆண்டுப் புனலாட்டைக் காணச் சென்றனன். ஒருநாள் ஆட்டனத்தியைத் தன் வெள்ளப் பெருக்கால் காவிரிநங்கை ஈர்த்துச் சென்றனள். அவன் மனைவி ஆதிமந்தி தன் கொழுநனைக் காணாது அலமந்து யாண்டும் தேடினள். பின்னர்த் தன் தோழி மருதியின் துணையால் ஆட்டனத்தி மீட்கப் பெற்றான். இந் நிகழ்ச்சி பண்டைய நாளிற் பரவியிருந்த புனலாட்டு விழாவின் சிறப்பினை நன்கு உணர்த்தும். வரலாற்றுப் புலவர் எனக் கூறத்தகும் பரணர், தம் அகநானூற்றுப் பாக்களில் இந் நிகழ்ச்சியைச் சித்திரித்துள்ளார்.[16] அகத்திணை பற்றிய சங்கப் பாடல்கள் பல புனலாட்டயர்வினைப் புனைந்துள்ளன.[17] நீராடலைப் பற்றிய பத்துப் பாக்கள் ஐங்குறுநூற்றில் புன லாட்டுப்பத்து என்னும் பெயரில் காணப்படுகின்றன. தலைவி,

13. புறம். 251:4-7.
14 புறம். 243.
15 பரி. 11; கலி. 39:1-5; 59:12-13.
16. அகம். 76, 222, 236, 376 396
17. கலி. 30:5-6; 72:15 16; குறுந். 80; ஐங் 15, 53, 64. 75-80; அகம். 186;8, 9; 116:5-10; 246:5-7; 266:1-9.

தலைவனொடு ஊடியதற்குக் காரணங் கற்பிக்க வந்த புலவர்கள் தலைவன் பரத்தையரோடு வையையினும் காவிரியினும் நீராடியதைப் பெருங்காரணமாக வைத்துப் பல பாக்கள் இயற்றியுள்ளனர்.[18] இப் புனலாட்டு ஒருவனும் ஒருத்தியும் கலப்பெய்து காதல் கொள்ளவும் துணை செய்கின்றது.[19] இவ் வகைக் காதலைப் புனல்தரு புணர்ச்சி என அகத்திணை கூறும்.

இருபத்திரண்டு பரிபாடல்களில் எட்டு வையை பற்றியன. இவற்றோடு வையையைப்பற்றி ஒரு முழுப் பாடலும் சில துணுக்குகளும் பரிபாடல் திரட்டில் காணப்படு கின்றன.

புலவர் பெயர்	பாடலின் தொடர் எண்	மொத்த அடிகள்
ஆசிரியன் நல்லந்துவனார்	6	106
மையோடக்கோவனார்	7	86
கரும்பிள்ளைப் பூதனார்	10	131
ஆசிரியன் நல்லந்துவனார்	11	140
நல்வழுதியார்	12	102
நல்லழிசியார்	16	55
ஆசிரியன் நல்லந்துவனார்	20	111
—	22	49
திரட்டு	2	96
,,	3	4
,,	4	2
,,	5	3
,,	6	3
	மொத்த அடிகள்	888

18. கலி. 27:19-20; 30:13-16; 98:10-12; அகம். 36:9-12; 256:9-13; 296:1-7; அகம். 6:6-12; 166:11-15. 226; 8-12.
19. கலி: 39 : 1-5.

வையையைப் பாடிய புலவர்களனைவரும் அதன் வெள்ளக் காட்சியினை மழைப்பொழிவுடன் சேர்த்தே புனைந்துள்ளனர். கார் முகில் கடல் நீரை முகந்து ஊழிக்கண் நிலமறையும் வெள்ளம்போல, யாண்டும் நீர் பெருக மழை பொழிந்தது. அதனால் மலையிலுள்ள மானினம் கலங்கவும், மயிலினம் அகவவும், மலைமாசு கழியவும் அருவிகள் இழிந்தோடின (6:1-5). மலைப்பக்கங்களில் மழைபொழிந்து வழிந்தோடுவது கரையுடை குளமெனத் தோன்றுகிறது (7:3). அல்லும் பகலும் இடையறாது ஒலித்துக்கொண்டு குன்றின் கோடுதொறும் ஓடிவரும் அருவி, பாண்டியன் தானை அணிவகுத்துத் தன் பகைப்புலம் செல்வதொக்கும் (22:8-11). சையமலையில் பெய்யும் மழைமிகுதியே வையையின் வெள்ளப்பெருக்குக் காரணம் என்பர் ஆசிரியர் நல்லந்துவனார் (11:14, 15). இகல் கொண்டு புலியொடு பொருத மால்யானையின் குருதிக் கோட்டினை மலையிற் பெய்த மழை கழுவி வெளியதாக்கிற்று (20:1–5). பாண்டிய வேந்தனின் போர்க்களிற்றின் வரிசை ஒப்ப, வானத்திலே கார் மேகங்கள் நிறைந்தன. அவனது போர்முரசின் முழக்கினை ஒப்ப மேகங்கள் இடி முழக்கஞ் செய்தன. அவன் பகைவர்மீது பாய்ச்சிய அம்புக் கூட்டம் போல, மழைத்துளி சிதறின. அவனது வேல்போல் மின்னல் ஒளிர்ந்தது. புலவர்க்கு வழங்கும் பாண்டியனது கைவண்மை போல் மழை பொழிந்தது.

'ஒளிறுவாள் பொருப்பன் உடல்சமத் திறுத்த
களிறுநிரைத் தவைபோற் கொண்மூ நெரிதர
அரசுபடக் கடந்த ஆனாச் சீற்றத்தவன்
முரசதிர் பவைபோன் முழங்கிடி பயிற்றி
ஒடுங்கார் உடன்றவன் தானை வில்விசை
விடுங்கணை யொப்பிற் கதழுறை சிதறூஉக்
கண்ணொளிர் எஃகிற் கடிய மின்னியவன்
வண்மைபோல் வானம் பொழிநீர் மண்மிசை
ஆனாது வந்து தொகுபீண்டி மற்றவன்
தானையி னூழி....................' (பரி. 22 : 1-10)

இவை போன்ற உவமைகளை அகநானூற்றிலும் பத்துப் பாட்டிலும் காணலாம்.

'காலியல் நெடுந்தேர்க் கைவண் செழியன்
ஆலங் கானத் தமர்கடந் துயர்த்த
வேலினும் பல்லூழ் மின்னி முரசென
மாயிரு விசும்பிற் கடியிடி பயிற்றி
நேர்கதிர் நிரைத்த நேமியஞ் செல்வன்
போரடங் ககலம் பொருந்திய தார்போல்
திருவில் தேஎத்துக் குலைஇ உருகெழு
மண்பயம் பூப்பப் பாஅய்த்
தண்பெயல் எழிலி தாழ்ந்த போழ்தே. (அகம். 176-10-19)

'மறையிரும் பெளவங் குறைபட முகந்துகொண்
டகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
முரசதிர்ந் தன்ன வின்குர லேற்றொடு
நிரைசெல னிவப்பிற் கொண்மூ மயங்கி
யின்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎ
யொன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின்
மின்மயங்கு கருவிய கன்மிசைப் பொழிந்தென
வண்ண னெடுங்கோட் டிழிதரு தெண்ணீர்.'
(குறிஞ்சிப் பாட்டு. 47-54)

திருப்பாவை நான்காம் பாட்டில் ஆண்டாளும் திருவெம் பாவை பதினாறும் பாட்டில் மணிவாசகரும் இத்தகைய உவமையைக் கையாண்டிருத்தல் காணலாம்.

யாற்று நிறம்

வையைப் புதுவெள்ளத்தைச் 'செம்புனல்' எனக் குறித் துள்ளார் ஒரு புலவர் (7:22). புனலாடிய மகளிர்தம் கண் களில் தீட்டப்பெற்ற மை ஒளியால் செம்மைப் புதுப்புனல் இருள் நிறமாக மாறியது. மறவர் வாள்கொண்டு களிற்றொடு பொரும் களம்போல, நாளும் புனலாடுதலால் வையை தெளிவின்றிக் கலங்கியது (10:108-111). தேவர்கள் உறையும் விண்ணின்கண் செல்கின்ற ஊர்தியும் தன்னகத்தே

தெரியுமாறு வையை வேனிற் காலத்திலே பளிங்குபோல் தெளிவாக இருப்பினும், கார் காலத்துக் கலங்கிற்தோன்றும் (11:70–73). மலர் மணம் கமழும் இருகரைகளிடையே ஓடும் வையை மாலைப்பொழுதிலே தெளிந்து அணைகளால் தேங்கி நின்று துறக்கத் தொழிலைத் தன் நீரிற் காட்டும். ஆனால், காலையில் கலங்கிய செங்குருதியைப் போன்றிருக்கும் (12–82-86). சாந்தும் சுண்ணமும் தாரும் கோதையும் கூந்தலி னின்றும் பித்தையினின்றும் உதிர்ந்த மலர்களும் வையையின் நிறம் தோன்றாதவாறு அதனை மறைத்து விட்டன. (திரட்டு 2;84–86). கலங்கிய மணங்கமழ் வையை நீரைக் கண்டு பார்ப்பனர் நீராடாமல் திரும்பினர் (6:41-45). புனலாட வந்த இழிசினர் வையையில் கள்ளினை ஊற்றியதால், அதுதன் நிறமாறி எழிலிழந்தது. இதனைக் கண்டு பிறர் புனலாடா தொழிந்தனர் (6-48–51).

நீரோட்டம்

வையை தாரும் கோதையும், வேரும் தூரும், காயும் கிழங்கும் அடித்துச் சென்றது (6:46-49). கரையிலிருந்த மாமரத்தை அடியோடு பெயர்த்துச் சென்று மடுவிலிட்டு முகடாக்கியது (7: 14, 15). மிளகுக் கொடி, சந்தன மரம், நுரை இவற்றை அலைகள் கரையில் ஒதுக்கின. விளையாட்டு மகளிரின் முத்து மாலை, தலைக் கோல முத்து, சொன்னணி, முச்சம் முதலிய அணிகலன்கள் நீர்த்துறையில் நிரம்பி யிருந்தன (16:2-8). மரங்களினின்று உதிர்ந்த பல மலர்களும் மைந்தர் மார்பில் கிடந்த மாலைகளும் மடவார் கூந்தலிற் சிதறிய பூக்களும் பரந்து விளங்குதலான், வையையாறு மீனுகிய முத்துப் பூத்து விளங்கும் ஆகாச கங்கை போன்றி ருந்தது (16:32–38). புன்னை, சுரபுன்னை, சண்பகம், இல்லம் கூவிளம், வேங்கை, செவ்வலரி, காந்தள், நீலம் முதலிய பூக்களை அடித்துச் சேறலான் 'பூமலி வையை' எனப் பெயர் பெற்றது (20-111). தகரம், ஞாழல், தாரம் முதலிய மரங் களையும் உதிர்ந்த மலர்களையும் அடித்துக் கொண்டு மலையி னின்று கடல் நோக்கிக் காற்றுப்போல் விரைந்து ஓடுகிறது,

(12:6–8). மகளிரின் கைபோல் குவிந்த காந்தள் முகையும், அரவம் வெகுண்டு படம் எடுத்தாற்போன்றனவும், குடை விரிந்தாற் போன்றனவுமாய காந்தள் மலர்களும், புனல் வழிச் செல்கின்றன (26:98-101). புனலாடுவோரின் கண்ணி யைப் பறித்துக் கொண்டு கைவளை, ஆழி, தொய்யகம், புனை துகில், மேகலை, காஞ்சி, வாகுவலயம் ஆகிய ஆடைஅணிகலன் களையெல்லாம் கவர்ந்து செல்லும் வையையாறு, பகைப் புலம்புக்குக் கொள்ளை கொள்ளும் தென்னவனை ஒத்திருந்தது (7:47-50) ஆடலியல் பறியாத அரிவைபோலத் தான் வேண்டுமிடங்களிற் பரந்தும் ஊடலியற்கை அறியாத ஊட லுவகையள் கணவனைக் கடந்து நீங்குமாறுபோலத் தகைந்த அணிகளை முறித்தும் வையை சென்றது (7:17-19).

மணம்

புனலாடப் போந்த ஆடவரும் பெண்டிரும் மணங்கமழ் சாந்தினையும் நறுநெய்யினையும் மலர்ந்த பூக்களையும் வையை யிலிட்டு அதனைக் கமழச் செய்தனர் (6:11-42). அவற்றோடு பலவகை மலர்களையும், தேனையும், அருகேயுள்ள வயல்களி லும் காடுகளிலும் உள்ள மரங்களின் கனிகளையும், வையை ஈர்த்துச் செல்கின்றது. அதனுல் வையைப் புனல் மலர் நாற்றம், கனி நாற்றம், வெங்காரி நாற்றம் ஆகிய மணங் களைப் பெறுகின்றது (20:8-14). பல மணங்களைச் சேர்த்துக் கூட்டிய கலவைச் சாந்து அவற்றைத் தம்முள்ளடக்கித் தான் ஒரு புது மணத்தைத் தோற்றுவிப்பது போலப் பலவகை மணப் பொருள்களை அடித்துச் செல்லும் வையை ஒரு புது மணத்தைத் தோற்றுவித்தது (7:20–22). மல்லிகை, மௌவல், சண்பகம், அல்லி, கழுநீர், தாமரை, ஆம்பல், முல்லை, வகுளம், குருக்கத்தி, பாதிரி, நாகம், நறவு, சுரபுன்னை எல்லாப் பூக் களும் கமழும் இருசார் கரைக்கிடையே வையை நறுமணத் தோடு ஓடியது (12:86-81).

வையைப் பயன்

புதுவெள்ளத்தோடு போகும் வையை, மன்பதைக்குப் பல வழிகளில் உதவுகின்றது. காதலர்களை ஆடை அணி

கலன்களால் ஒப்பனை செய்து கொண்டு புனல் விழா வயரச் செல்லுமாறு அது தூண்டுகிறது (6:11–13). செவ்வேளது ஆற்றலும் கருவேளினது எழிலும் கூடிய மைந்தர் பொற்பமை பூவையரொடு புனலாட்டயர்ந்து இன்பந் துய்க்கின்றனர் (22:26-34) வையைப் புனல் காதலும் கள்ளும் கலந்து பொலிதலான், உணர்ச்சிகி கொள்கலனுக விளங்குகிறது (10:69–70). புதுப் புனல் பெண்டிர்தம் ஊடலை மறந்து கொண்கனெடு கூடலைமேவத் துணைபுரிகிறது (12:73-75). சில சமயங்களில் அது புலவியும் துனியும் கொள்ளவுங் காரணமாகின்றது (20:96-97). புனற் பெருக்குக் காரணமாகப் பாலையும் சோலையாக மாறுகிறது. பாண்டி நாடு செழித்துத் தழைத்தது. உழவர் களி தூங்கவும், முழவும் பணையும் முரலவும், வையை ஓடிற்று; நாட்டில் பசிப்பிணி பறந்தோடிற்று. இங்ஙனம் பலவகையில் வையைப் பெருக்கால் கானலங்காவும் கயமும் யாற்றிடைக் குறையும் செழித்துப் பூத்துப் பொலிய, வண்டுகள் தேனுர்ந்து பண்ணிசைத்தன (16:17-19). மதுரை மக்கள் மகிழ்வும் இன்பமும் மலிந்தனர். வையை விழாச் சிறப்பால் விண்ணகமும் சிறப்புக் குன்றியது. இவ்வுலகம் அகன்ற பரப்பினதாயினும், வையை தன் எல்லையில் புகழைத் தன் எல்லையில் அடக்க இயலாது.

'விசும்பு கடிவிட்டன்று விழவுப்புன லாங்கண்
இன்பமுங் கவினும் அழுங்கல் மூதூர்
நன்பல நன்பல நன்பல வையை
நின்புகழ் கொள்ளாதிம் மலர்தலை உலகே.'

(பரி. 12: 99-102)

வையை பற்றிய உவமைகள்

அகம் புறம் என்னும் இருதிணைப் பொருள்களையும் பாடும் பரிபாடல், அவ்விருவகை உவமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. திருமால், செவ்வேள் பாடல்களில் வரும் உவமைகளினும் வையைப் பாடல்களில் உவமைகள் மிகுதி

யாக வந்துள்ளன. வையைதன் பிறந்தகமாகிய மலையை விடுத்து உறைதற்குரிய கடற்கொழுநனிடத்துத் தனியே செல்லுதல், அன்பொதித்த காதலர் சிறப்புடைய களவொழுக்கத்தை விடுத்துக் கற்பொழுக்கத்தை மேவுதல் ஒக்கும் (11:41-44). பாண்டிய வேந்தனது தானை நாடு முழுதும் நிறைத்து நின்றாற் போல, வையைப் பெருக்கு நிலமெல்லாம் பரவி நின்றது (22:9-11). அவனது பரிமா நிரையும் புனற் பெருக்குக்கு உவமையாக வந்துள்ளது.[20] ஆறு கடலிற் புக விரைகின்றது. அவ் விரைவு தலைவியின் கண்களிலும் அவள் தோழிமார் கண்களிலும் படாது தப்பிக்கப் பெண்கள் குழாத்தினுள் ஒளிந்துகொள்ளப் பரத்தை ஓடுவதை ஒத்துள்ளது (20:36-42).

வையையின் விரைவு காற்றை ஒத்தும் அதன் பரந்த தோற்றம் கடலை ஒத்தும் காணப்படும் (12:7,8). புனலாட்டைக் காண்பவர் தம் காதல் வெள்ளத்தையும் பருகியது போல வையை கரைபுரளப் பெருக்கெடுத்து ஓடியது (12:34, 35). ஊடலைத் தானுணர்த்த உணராத மடந்தையரைக் கூட்டுவித்தற்கு முயலும் கொண்கரது ஆசை வெள்ளம் போல, வையைப் புனல் மிகுந்து விரைந்தது (7:36-39). விருப்பொன்றுபட்டவர் உள்ளம் நிறையை உடைத்தாற்போல, வையை வரையை ஒத்த அணைகளை உடைத்தது (6:21,22). சிலர்பால் விரைவிற் சுருங்கிச் சிலர் பால் விரைவிற் பெருகும் இயல்பினதாய காதற்காமம், ஒரு தன்மையில் நில்லாது சில பருவத்திற் குறைந்து சில பருவத்தில் மிகும் வையை யாற்றுக்கு உவமமாகின்றது (6: 70-74). வளர்மதி நாளும் வளர்ந்து தண்ணிலாவை யாண்டும் பரப்பி உலகிற்குப் பயன்படுவது போல, வையையும் வெள்ளம் பெருகி வயலிடைப் பாய்ந்து பயன் தருகின்றது. வேனிற் பருவத்தில் தேய்மதி போல வையை நீர் குறையினும் உவா மதிபோல அறவே நீர் வற்றுதல் இல்லை (11:31-38). வையைப் புனல் ஓடுகின்ற வழியெல்லாம் புணை செல்லுதல் போலச்

20. பரி. திரட்டு. 4. (இராசம் பதிப்பு)

கவரும் மகளிர் பாலெல்லாம் தன் உள்ளத்தைச் செல்லவிடு கின்றான் தலைவன் (6:79 - 80). மதுரை மக்கள் வையைக்குச் சென்று நீராடி அதன் ஓட்டத்தைத் தடுக்கின்றனர். அஃது உடன்போக்குச் செல்லும் தலைமக்களைச் சுரத்திடைத் தமரா யினார் தடுத்து நிறுத்துவது போன்றுள்ளது. (11:46-49). வையைக்கண் உடைந்த மடையை அடைத்தவிடத்தும் பின்னும் கசியும் பிசிர்போல மடந்தையின் துன்பந்துடைக் கத் தலைவன் அவள்பால் தங்கியபோதும் ஊடிக் கண்ணீர் வடித்து நிற்பள் (6:82-86). அருவிகள் கொணர்ந்த மலர்களை அலைகளால் தள்ளிக் கொண்டு நீண்ட பெரிய சுருங்கையின் நடுவாகிய வழியிலே வரும் புனலை மதுரையிலுள்ள மதில் சொரியும் பொழுது, அப் புனல் களிறுகள் கையைத் தூக்கிப் பீச்சும் நீர் போன்றிருக்கும் (20:105). கண்ணியும் மாலையும் ஆடையும் அணிகலனும் கவர்ந்து செல்லும் வையை பகைப் புலத்துச் சென்று பொருள்களைக் கொள்ளை கொள்ளும் பாண்டியனை ஒக்கும் (7:44-50). பாண்டிய மன்னன் இலம்படு புலவர்க்கு ஏற்ற கைந்நிறையப் பொன் வழங்கியது போல வையை வயல் நிறையப் பொன்னைப் பரப்பிற்று (10:126-128). பாண்டியனது கொடையொப்ப, வையைக் கரையில் மிளகு சந்தனம் முதலிய பொருள்களை அலைகள் சேர்த்தன (16:1-4), புனலாடப் போந்தவர்களுள் சிலர் நெட்டியினாலாகிய வாளைச் சுழற்றுவர். சிலர் ஈட்டியை ஏந்துவர். சிலர் தேரில் ஏறுவர். சிலர் பரியையும் கரியையும் வெள்ளத்துட் போக்கி ஊர்ந்துழக்குவர். மூங்கிற் குழாயினால் நீரினைப் பீச்சுவோ ரைச் சிவந்த நீருடைய வட்டினால் எறிவர் சிலர். மாலையைச் சுழற்றி எறிவார்மேல் கொம்பிலுள்ள நீரை வீசுவர் சிலர். இவ்வாறு காதலர்கள் விளையாடும் காட்சி, போர்க்களக் காட்சியைப் புலவர்க்கு நினைவூட்டுகிறது (11:50-61). மாறன் மதுரை மக்களொடு புனலாட்டயர்ந்தது, ஆயிரங் கண்ணின னை இந்திரன் ஆகாய கங்கையில் தம்மவரொடு நீராடுவதை ஒக்கும் (திரட்டு. 2:91-96).

இவ்வகையில் அகத்திணை, புறத்திணை விளக்கந்தரும் எண்ணிறந்த உவமைக் கருத்துகளை வையை புலவர்கட்கு

வழங்கியுள்ளது. பாண்டிய மன்னர்களின் வீரத்தையும் ஈரத்தையும் புலப்படுத்தும் உவமைகள் பரிபாடற் புலவர்கள் அம்மன்னர்பால் வைத்த நன்றியறிவினைப் புலப்படுத்தும்.

திருமருத முன்றுறை

அகநானூறு காவிரியாற்றின் கழாஅர்த் துறையைப் புனைந்துரைப்பது போலப் பரிபாடல் வையையின் திருமருத முன்றுறையைப் புனைகின்றது. பெரியகுளம் வட்டத்தைச் சார்ந்த வையைக் கரையிலுள்ள குள்ளபுரம் என்பதன் பழைய பெயரே திருமருத முன்றுறை என அவ்வூர்க் கல்வெட்டுச் சாற்றுகின்றது.[21] வையைத் துறைப் பக்கத்துள்ள பொழிலில் மருதமரம் செறிந்திருந்தமையான், திருமருத முன்றுறை எனப் பெயர் பெற்றது.

'வருபுனல் வையை வார்மணல் அகன்துறை
திருமரு தோங்கிய விரிமலர்க் காவில்'

(அகம் 35:9-10)

இவ்வகநானூற்று அடிகள் திருமருத முன்றுறையின் பெயர்க் காரணத்தை விளக்குவனவாம். இப் பெயர் கலித்தொகையிலும் காணப்படும்.

'திசைதிசை தேனார்க்கும் திருமருத முன்றுறை.'

(கலி. 26:13)

மருதமுன்றுறை என்பதே மதுரை என மருவிப் பிற்காலத்தே வழங்கப் பெற்றது என அறிஞர் சிலர் கருதுகின்றனர். வையையாறு மலையிலும் கரைகளிலுமிருந்த பல்வகை மலர்களை அடித்துக் கொண்டுவந்து இத் துறைக்கண் சேர்த்து அழகுபடுத்துகின்றது. இவ்வெழிலார்ந்த காட்சியைக் கண்டுணர்ந்த நல்லந்துவனார், அத் துறையைப் 'பூக்கள் குவிக்கும் மலர் மண்டபம் என்பேனா? வையை மகள் அணிந்த பூவாடை என்பேனா? கட்பருகும் நிலமகள் மிடறு என்பேனா?' என்று வியந்து பாராட்டுவர்.

---

21. கலைக்களஞ்சியம், தொகுதி 6, பக். 768.

'வயவர் அரிமலர்ந்த துறையென்கோ
அரிமலர் மீப்போர்வை யாரந்தாழ் மார்பின்
திரைநுரை மென்பொகுட்டுத் தேமணச் சாந்தின்
அரிவை யதுதானே யென்கோகள் ளுண்ணு உப்
பருகு படிமிட றென்கோ பெரிய
திருமருத நீர்ப்பூந் துறை.' (பரி.11:25-30)

பன்னிறப் பூக்களால் தன்னைக் கவர்ந்தமையினுற் போலும், இப்புலவர் அத் துறையினைத் 'திருமருதநீர்ப் பூந்துறை' என மேலும் சிறப்பித்துள்ளார். ஆடல் பாடல் ஒலியும், யாழ், குழல், முழவு முதலிய பல்லியங்களின் இசையும், அலை ஓசையும் கூடி, திருமருத முன்றுறைக்கண் இடியுடன் முழங்கும் மேகம்போலப் பேரொலி செய்தன (7:77-82). முழவினிசையும், இடி முழக்கும், தும்பி வண்டுகளின் ஆர்ப்பும், குழல் யாழ்களி னேசையும், செவிக்கினிமை பயக்கும். மெல்லிணர்ப் பூங்கொடியாகிய நங்கை, காற்ருகிய நட்டுவன் நடத்த அசைந்தாடினுள் (22:36-44). நம்பியரும் நங்கையரும் யானை மீதிவர்ந்து துறை நண்ணினர். இசைஞர்கள் மருதப் பண் இசைத்தனர். பெண்டிர்கள் யாற்றிடை மூழ்கி நீந்தியாடினர். ஆற்றங்கரையில் காதலர்கள் ஊடியும் பின்னர்க் கூடியும் இன்பம் நுகர்ந்தனர். வையைத் துறை நிறமாறுதற்கும் கலங்குதற்கும் புனல்விழா காரணமாயிற்று. அவற்றைக்கண்ட அந்தணர் நீராடாது அகன்றனர் (திரட்டு 2:60-63).

புனலாட்டில் கலந்துகொண்டோர்

சிறுவர் சிறுமியர், வலியர் மெலியர், இளையர் முதியர், ஒருமை மகளிர், வரைவின் மகளிர், தோழியர், ஏவலர்கள் ஆகியோர் புனலாடப் போந்தனர். பூப்பெய்தா மங்கையர் முகைப்பருவத்தர் என்றும், பூப்பெய்திய மடந்தையர் அலர் வாய் அவிழ்ந்தன்னர் என்றும் பெயர்பெறுவர். முதியர் விரவு நரையோர் வெறுநரையோர் எனப் பகுக்கப்பெற்றனர் (10:09-23). கற்ருரும் கல்லாதவரும் பெற்ருேரும் பதி சொற்

பிழையாத பாவையரும் பாண்டிய வேந்தனும் அவன் குடி மக்களும் கயவரும் கூட வையைத் துறையிற் குழுமினர் (திரட்டு 2:24-27). சென்னியிற் கண்ணியும் மார்பில் மாலையும் அணிந்த ஆடவரும், செம்பூங்கண்ணியும் வெட்சியாற் புனைந்த கோதையும் அணிந்த மகளிரும் வையைக் கேகினர். மறமைந்தரும் எழிலிளைஞரும் வையைசெல்லத் தவறவில்லை. இங்ஙனம் பல திறத்தினரும் ஆற்றங்கரையில் கூடியிருக்கும் கண்கவர் காட்சியினைக் கண்ட புலவர், கவினிய மடவாரும் எழிலார் நம்பியரும் வையைக்கு அழகு செய்தனரா? வையை அவர்கட்கு அழகு செய்ததா? எனத் தேர்தற்கரிதாயுள்ளது என வியப்பர்.

'வேலாற்று மொய்ம்பனின் விரைமலர் அம்பினோன்
போலாற்று முன்பிற் புனைகழல் மைந்தரொடு
தாரணி மைந்தர் தவப்பயன் சான்மெனக்
காரணி கூந்தல் கயற்கட் கவரிதழ்
வாரணி கொம்மை வகையமை மேகலை
ஏரணி இலங்கெயிற் றின்னகை யவர்
சீரணி வையைக் கணிகொல்லோ? வையைதன்
நீரணி நித்தம் இவர்க்கணி கொல்லெனத்
தேருநர் தேருங்காற் றேர்தற் கரிதுகாண்
தீரமும் வையையும் சேர்கின்ற கண்கவின்.'

(பரி. 22:26-35)

ஒப்பனை

வையைப் புனலாட்டத்திற்குப் போனவர்கள், வண்ண மலர்களையும், உயர்ந்த ஆடைகளையும், ஆழி, கைவளை தொடி, மேகலை முதலிய பொலம் பூண்களையும் அணிந்தனர் (7:45-58). பொற்பூக்களும் அவர்தம் தலைகளுக்கு அணி செய்தன. சந்தனச்சாந்தை நீக்கி, அகிற்சாந்து பூசினர். கலை வாரிக்கொண்டு பலவகையான நறுமலர்களாலான கண்ணி சூடினர். புனலாட்டுக்குப் பொருந்திய 'புட்டகம்' உடுத்து,

'ஈரணி' புனைந்தனர் (6:28; 12:17). பொன்னாரம், பூந்தார், நறுந்துகள், நறுநெய் முதலிய அணிந்தனர். அவர்தம் மேனியிலெழுந்த மணம் நெடுந்தொலைவிற் சென்று கமழ்ந்தது. ஆடை அணிகலன்கட்கும் மாலைகட்கும் நறும் புகையூட்டினர். சிலர் மெய்ம்முழுதும் மறையுமாறு மெய் யாப்பு (சட்டை) அணிந்தனர் (திரட்டு 2-19). இங்ஙனம் ஒப்பனை செய்வதை நல்வழுதியார் அழகுறக் காட்டுவர்.

'மின்னவி ரொளியிழை வேயு மோரும்
பொன்னடர்ப் பூம்புனை திருத்து வோரும்
அகில்கெழு சாந்த மாற்றி யாற்றப்
புகைகெழு சாந்தம் பூசுவோரும்
கார்கொள் கூந்தற் கதுப்பமைப் போரும்
வேர்பிணி பன்மலர் வேயு மோரும்
புட்டகம் பொருந்துவ புனைகு வோரும்
கட்டிய கயிலணி காழ்கொள் வோரும்
வாச நறுநெய் யாடி வான்றுகள்
மாசறக் கண்ணடி வயக்கி வண்ணமும்
தேசு மொளியுந் திகழ நோக்கி
வாச மணத்துவர் வாய்க்கொள் வோரும்
இடுபுணர் வளையொடு தொடுதோள் வளையர்
கட்டுவடக் கழலினர் மட்டு மாலையர்
ஒசனை கமழும் வாச மேனியர்.'

(பரி. 12:11-25)

ஊர்திகள்

விரைந்தோடும் குதிரை, யானை, எருத்து, அத்திரி என்னும் விலங்குகள் மீது புனலாடச் செல்வோர் இவர்ந்து சென்றனர். தேர், சிவிகை, வையம் (வண்டி) ஆகியவையும் அவர்கட்கு ஊர்தியாயின.

'புகவரும் பொங்குளைப் புள்ளியன் மாவும்
மிகவரினும் மீதினிய வேழப் பிணவும்
அகவரும் பாண்டியும் அத்திரியு மாய்மாச்
சகடமும் தண்டார் சிவிகையும் பண்ணி'

(பரி. 10:14-18)

'பொங்கு புரவிப்புடை போவோரும் பொங்குசீர்
வையமுந் தேரும் அமைப்போரும்'

(டி திரட்டு. 2:16-17)

ஆட்வர்கள் களிற்றின்மீதும் மகளிர் பிடியின்மீதும் ஏறிச் சென்றனர் (12:26-28). விரைந்து செல்லவேண்டும் என்னும் விழைவால் திண்டேர்ப் புரவியை வங்கத்திற் பூட்டினர்; வங்கப் பாண்டியைத் திண்டேர்ப் பூட்டினர்; குதிரைகட்குரிய அணிகலன்களை யானைக்கிட்டனர்; யானைகளை ஒப்பனை செய்யாது மறந்து வறிதே நடத்தினர் (20:16-19)

புனலாட்டுப் பொருள்கள்

வையைக்குப் புனல் விழாவுக்குச் சென்றோர் நறும்புகை, அழல், பூ மாலை, சந்தனம், நறும்பொடி முதலிய எடுத்துச் சென்றனர் (6:11;22:17-19) பீச்சாங்குழல், கொம்பு, வட்டு துருத்தி முதலிய நீர் விளையாட்டுக் கருவிகளையும் உடன் கொண்டு சென்றனர் (11:54-.7) கழற்றி எறிந்து விளையாட நெட்டியாலாய ஈட்டி வாள் முதலியவற்றையும், ஊர்ந்து செல்லத் தேர் மிதவை முதலியவற்றையும் எடுத்துச் செல்ல மறக்கவில்லை. அவற்றோடு பொன்னாலாய சங்கு, நண்டு, வாளை முதலிய ஆராதனைப் பொருள்களும், புனலாட்டுக் கென வுள்ள புட்டகம் ஈரணி ஆகிய ஆடை அணிகலன் களும் கள்ளும் உடன் சென்றன.

ஆராதனைப் பொருள்கள்

புனல்விழா அயரப் போந்தவர் மாலைகள், நறுஞ்சாந்து, மான்மதம், அணிகலன்கள் முதலியவற்றை வையைக்கணி வித்து அழகுபடுத்தினர். மேலும் அவ்யாற்றுக்குக் கள்ளை

ஊட்டினர் (10: 92–94). நந்து, நண்டு, இருல், வாளை முதலிய வற்றை ஆற்றில் விதைத்து, 'விளைக பொலிக' என வாழ்த்தினர். வையைக்கு நறும்புகை எடுத்து அவியுணவும் நல்கினர் (16:52-53).

புனலாட்டு

ஒரு பெண் அரக்கு நீரை மற்றொருத்தி முகத்தில் வீசினாள். அவள் தன் கையால் கண்ணை மூடிக் கொண்டாள். உடனே அவள் விளையாட்டில் தோற்று விட்டாள் என எண்ணி, அவளை அணுமி, மாலையால் கையை இறுகக் கட்டினாள் இதனைக் கண்டு இரக்கங்கொண்ட வேறொரு பெண் ஆற்றிற் குதித்து அவளிடம் சென்று தளையவிழ்த்து விடுதலை செய்தனள் (7:51-90). சிலர் குதிரைமீதும் பிடி மீதும் ஏறிக்கொண்டு ஆற்றிடைச் செல்வர் (10-29). புனலாடியதனால் பொலந்தொடியார் மேனி ஒளி பெற்றது; முகனும் முலைக்கண்களும் சிவந்தன. அவர் கண்கள் வண்டு மொய்க்கும் மணமார்ந்த மதனது அம்பின் கூர்மை போன்றிருந்தன (10: 95–99). சிலர் மூங்கிற் குழாயினால் சிவந்த நீரை வீசுவர்; அரக்கு நீர் நிறைந்த வட்டிலை எறிவார் சிலர்; சிலர் மாலையைப் பறித்துப் பிறர்மீது சுழற்றி வீசுவர். கொம்பினால் நீர் எக்குவார் சிலர். வாளும் குந்தமுமேந்திப் பொருவார் சிலர்.

இப் புனலாட்டுக் காட்சி, புலவர்க்குப் போர்க்களக் காட்சியை நினைப்பிக்கிறது (11:50-61) சிலர் வாழைத் தண்டினைப் புணையாகக் கொண்டு நீந்துவர் சிலர் தாழைத் தாதினைத் திரையிலும் நுரையிலும் தூவுவர். புனலோடுந் திசையில் புணைபற்றி விரைந்தேகுவர் சிலர். புனலை எதிர்த்து நீந்தி மாறுடி மெய்வியர்த்துக் களைப்பார் சிலர். பாவையர் ஆடும் பந்தையும் கழங்கையும் கவர்ந்தோடிக் காளையர் கரை நின்று பாய்வர். இவ்வகை விளையாட்டுகளால் வையை, களிறு போருற்ற களம்போலத் தெளிவின்றிக் கலங்கியது (10: 100-111). காதலர்கள் களிப்பொடு புல்லிப் புனலாடுகின்றனர். பூரியபால் கைகள் தொடியை அழுத்தின; தோள்

வளைகள் முன்கைக்கண் வந்தலைத்தன; எழுதின தொய்யிற் கொடிகள் ஒன்றோடொன்று கலந்து அழிந்தன; மேகலை வடங்கள் அற்று உதிர்ந்து நூல் தோன்றின. ஆணி முத்து வடங்கள் கலங்கிப் பூசிய சந்தன முதலியவற்றால் நிறம் மழுங்கின. உகிரினும் கொடிற்றினும் (கபோலம்) எழுதிய செம்பஞ்சியும் அழிந்தது; நகிலில் அணிந்த குங்குமச் சேறு வண்டலிட்டது. படலைமாலையும் குலைந்த மயிரும் பூசின சந்தனத்தைக் கலைத்தன. நகிலிடையும் மார்பகத்தும் கிடந்த இருவர்தம் அணிகலன்களும் தம்முள் மயங்கின (61:4-20).

ஆடல் பாடல்கள்

வையைக் கரைக்கண் நிகழும் ஆடல் பாடல்கள் எல்லாம் காதல் உணர்வு தளிர்த்தெழத் துணைபுரிகின்றன மக்கள் மகிழ்வுடன் குழல், முழவு, மத்தரி, தடாரி தண்ணுமை, யாழ் முதலிய இசைக் கருவிகளின் பின்னணி யோடு இனிமையாகப் பாடுகின்றனர். ஆதலால் ஆண்டு நிகழும் உரையாடல்களும் காதில் விழுவதில்லை. திருமருத முன்றுறையில் யாழ்ப் பாணர்கள் எனப்பெயரிய இசைஞர்கள் மருதப்பண் பாடினர் (திரட்டு 2: 72-73).

புனல் விழாவுக்குப் பின்

புனலாடிய பின்றை உடலம் ஈரம் தீர்ந்து வெம்மையுற மடந்தையர் சூர்நறுப் பருகினர். பருகுதற்கு முன் நெய்தற் பூவையொத்த அவர் கண்கள்,பருகியபின் நறவமலரை ஒத்துச் சிவந்தன (7:61-64). அந்தணர் வளர்த்த வேள்வித் தீயில் சிறுமியர் தம் ஈர ஆடையைப் புலர்த்திக் குளிர் காய்கின் றனர் (11:84-87). அகிற் கட்டையைப் புகைத்து நறுமணம் எழுப்புகின்றனர். சிலர் கட்பருகுகின்றனர். கட்பருக உறை யினின்று எடுத்த வள்ளம் முகிலினீங்கிய முழுமதியொக்கும். மகளிர் தம் கையால் வள்ளத்தைப் பற்றியது பாம்பாற் பற்றப்பட்ட திங்களை ஒக்கும். அவர்கள் கள் பருகியது தெய்வமகளிர் திங்களின் கலையைப் பருகிய தொக்கும் (10:74-78). வெண் துகிலைத் தம் குழலிற் சுற்றி முறுக்கித் தலைஈரம் போக்குவர் சிலர். சிலர், நறுஞ் சாந்து கூட்டுவர்,

பொன் நண்டு மீன் முதலியவற்றை ஆற்றிலிட்டு இவை பல்குக என வாழ்த்துவர் சிலர். இல்லது நோக்கி இளிவரவு கூறுமுன் சிலர் வறியோர்க்கு வாரி வழங்குவர். வையையில் சிலர் மணப்பொடியினையும் நறுஞ்சாந்தினையும் இடுவர். பத்துத் துவரையுமூட்டி நீராடுவர் சிலர். மேனியிலிருக்கும் எண்ணெய்ப் பசை நீங்க நுண்துகள் தேய்ப்பர் சிலர் (10:79-91).

பொதுமக்களின் வம்புப் பேச்சு

புனலாடிய பின்னர்ப் பொதுமக்கள் ஆண்டு நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் குறித்துத் தம்முள் உரையாடலாயினர். ஒரு பக்கத்தே வையையின் வெள்ளப் பெருக்கால் குளங்குட்டையிலுள்ள கழுநீர் மலர்கள் மூழ்கின என்று பேசிக் கொண்டனர். மற்றொரு பக்கத்தே மணலாற்செய்த தம் விளையாட்டுப் பாவையைப் புதுப்புனல் கொண்டு சென்றதற்காகச் சிறுதுயர் அழுகின்றனர் என்று மொழிந்தனர். நெற்கழனிகளும் நெல் அரிகளும் வெள்ளத்தில் மிதந்தன என்று பறைசாற்றினர் சிலர். பாணர் தங்கும் பாக்கத்தும் கூத்தர் தங்கும்சேரியிலு வெள்ளம் புகுந்தது. நீர் மட்டம் கரையிலுள்ள தெங்கு கமுகு மரங்களின் கழுத்தளவு உயர்ந்ததால், அவற்றின் பாளைகளை வாளைகள் உண்டன. வையையின் வண்டல் மண்ணால் சில வயல்கள் மோடாயின. இவைபற்றியெல்லாம் ஆண்டுள்ளோர் உரையாடினர் (7:23-35). வையையை நோக்கிச் சிலர், 'நீ இப்பொழுது தெளிந்து வெண்ணிறமாக உள்ளனை' என்றனர் (11:115). இக் காரிகை தாக்கணங்கு; ஆதலால் இவளைக் காண்மின் என்றார் சிலர். இவள் கண் காம பண்டாரமும் படையுமாயிருக்கும்; அவ்வாறுதலைக் காண்மின் என்றார் சிலர். சிலர் யாழிசை ஒப்ப ஊதும் வண்டிசையினையும் சுரும்பிசையினையும் செவிமடுக்கக் கூறினர். தான் விரும்பியமர்ந்துள்ள பூவை நெறித்த பூவையைச் சினத்தோடு முன்தாக்கிப் பின்னும் தாக்கவரும் தும்பியின் கடுஞ்சினத்தியல்பைக் காண்மின் எனச் சுட்டிப் பேசினர் சிலர் (11: 122-132).

நல்வழுதியார் தாம் கேட்ட சில வையை நிகழ்ச்சிகளைப் புலப்படுத்தியுள்ளார். பரத்தையின் தோள் நலமுண்டு தன்னைத் துறந்தான் என்று தலைவனொடு ஊடிய தலைவி பின்னர்ப் பிடிமீது இவர்ந்து வையைக்கு ஏகினள். இக் காட்சியைக் கண்டவர் தலைவி நாணுடையள் அல்லளோ என்றனர். கூட்டத்திடையே நின்ற ஓரிளைஞன் ஒரு நங்கையின் நகிலினை உற்று நோக்கினன். அவனைக் கண்டு 'ஓட்டை மனத்தன்: உரமிலி' என எள்ளினர் சிலர். வழிப் போக்கன் ஒருவன் மீது உள்ளத்தைப் பறிகொடுத்துக் காமத்தாற் கலங்கி நிலையழிந்தாள் ஒருத்தி அவள் நிலையைக் கண்ணுற்ற சிலர் நிறையழிதற்கு அஞ்சியேனும் காமத்தைக் கைவிடலாகாதா? என்று எள்ளி நகையாடினர்.

ஒரு மடந்தையணிந்திருந்த முத்தாரத்தை ஓராடவன் உற்று நோக்கி அது அவள் துணை நகில்களுக்கு நனி பொருத்தமாதலைப் பாராட்டினன். அச் செயலுக்கு அக் காரிகை நாணிற்றிலள் என நவின்றுார் சிலர் (12: 45-56). தன் கொழுநனைப் பிறள் ஒருத்தி காதலால் நோக்க அதுகண்டு பொறுத தலைவி வெகுண்டு தன் கோதையைக் கோலாகப் புடைத்துத் தன் பொன்னுரத்தால் கைகளை இறுக்கிக் கட்டினள். தான் இழைத்த பிழையாதென அறியா மாசிலாத் தலைவன் அவளைத் தொழுது 'யான் செய்த பிழை என்னை?' என வினவினன். இக் காட்சியினைக் காண்க எனக் காட்டுவர் சிலர். இதே நிலையில் வேறொரு தலைவி தன் தலைவன் நடத்தையில் ஐயுறுகின்றுள்; தலைவன் ஆணையிட்டுத் தன் கற்பினை வற்புறுத்தியும், அவள் அவன் வாய்மொழியை நம்பவில்லை. தலைவன் மீண்டும் பலவகையில் முயன்று ஊடல் தவிர்க்கப் பாடுபடுகின்றுன்; பயனில்லை. அவள் சீற்றமுற்று அரக்குநீர் நிறைந்த வட்டிலை அவன் மார்பகத் தெறிந்தனள். மார்பு செந்நிறமாயிற்று. ஊடல் தணிக்கத் தலைவன் அவளடிக்கண் வீழ்ந்தான். வட்டெறிந்ததால் குருதி சோரத் தலைவன் மயங்கி வீழ்ந்தானெனக் கருதி அச்சுற்று அவனை ஆரத் தழுவி எடுத்தனள். இங்ஙனம் வையை ஊடலுக்கும் கூடலுக்கும் காரணமாகிறது (12: 56-75) ஒரு மங்கை பூங்கொடி

போன்று அசைந்து நின்று, அசோகந் தளிரைக் குழையெனக் காதிலணிந்து, தன் கையால் கூந்தல் கண்ணியை ஒப்பனை செய்பவள் போல மார்பைக் காட்டிக் கொண்டு ஒருநம்பியை நோக்கி நடந்தனள். இச் செயலைக் கண்டவர் அந் நம்பி அவள் காதலனே எனப் பேசலாயினர் (12:87-92) இங்ஙனம் ஆற்றங்கரையிலிருந்துகொண்டு பல்வேறு நிகழ்ச்சி குறித்து உரையாடினர்.

காதற் காட்சிகள்

ஊடல் புனலாட்டின்பத்தை மிகுக்கின்றது. காதன்மிகுதியால் ஊடலை மறந்து காரிகையர் காதலரை நாடுகின்றனர்.

'காமக் கணிச்சியாற் கையறவு வட்டித்துச்
சேமத் திரைவீழ்த்துச் சென்றமளி சேர்குவாய்.'
(பரி. 10:33-34)

காமம் உள்ளத்தே கனிந்தெழ அதனைப் பளிங்குபோல் கண்கள் புலப்படுத்தவும், ஊரினர் அலர்க் கஞ்சி அதனை மறைப்பவர் நிலை, கட்குடித்ததை அதன் மயக்கம் வெளிப்படுத்தவும் ஊரார் பழிக்கஞ்சி அதனை மறைப்பவர் நிலையை ஒத்தது (10:63-68). நாகரைப்போல இடையறுது இறுக முயங்கி இன்பந் துய்த்தற்குக் காதலர்கள் பாகுதங்கிய இளமதுவை நுகர்ந்தனர். ஐம்புல இன்பத்திற்கும் வையை இனியஇடமாக அமைந்தது. இதனை நல்லந்துவனார் கீழ்க்கண்ட அடிகளிற் புலப்படுத்துவர்.

'நீரணி வெறிசெறி மலருறு கமழ்தண்
தார்வரை யகலத்தவ் வேரணி நேரிழை
ஒளிதிகழ் தகை வகைசெறி பொறி
புனைவினைப் பொலம் கோதை யவரொடு
பாக ரிறைவழை மதுநுகர்பு களிபரந்து
நாகரினல் வளவினை வயவேற நளிபுணர்மாண்
காரிகைமது ஒருவரினொருவர் கண்ணிற் கவர்புறச்
சீரமை பாடற் பயத்தாற் கிளர்செவிதெவி.' (பரி. 11 :62-69)

புணர்ச்சி மெய்க்கும் கள் வாய்க்கும் காண்டல் கண்ணுக்கும் மணமலர் மூக்குக்கும் இசை செவிக்கும் இன்பம் நல்குதல் காண்க.

வாழைத் தண்டினைப் புணையாகக் கொண்டு நீந்திச் சென்ற இளைஞன் கரையில் கட்டழகியைக் கண்டு தன் நெஞ்சைப் பறிகொடுத்தான். கொடுக்கவே, வலியிழந்து நீந்தவியலாது புனல் ஓடுவழித் தானும் ஓடினன். பின் அவளிருக்குமிடம் செல்ல இயலாமையின் கவன்றனன். இந்நிலையறிந்த அம் மங்கை ஆயத்துடன் நில்லாது அவனிருக்குமிடம் நெருங்கினள். தாய் அதனைக் கண்டு தடுத்து நிறுத்தினாள். அவள் கவலை பெரிதாயிற்று (11:106-114). புனலாடும் பொழுது தோழி ஒருத்தி பரத்தையின் மார்பில் அரக்கு நீர் எறிந்தாள். அதனை அவள் உடனே துடைத்திலள். காதலன் அப் பரத்தையை அண்மியதும் அவள் தோழியரனைவரும் 'பூத்தனள் நங்கை பொருந்தற்க' எனக் கூறி எள்ளி நகையாடினர். மணத்தால் செஞ்சாந்து என அறிந்த தலைவன் அவளைக் கடல் மண்டு புனலின் இல்லிற்கு விரைந்தழைத்துச் சென்று,, களியும் கருதாது மார்பிலுள்ள குருதிபோலும் பூநீர் துடைத்து மருவி மகிழ்ந்தனன். 'பூத்தனள் நங்கை பொலிக' என அவளுடைய தோழிமார்' இல்லத்தார் கேட்ப வாழ்த்தெடுத்தனர். அதனைக் கேட்ட பரத்தை நாண நின்றனள் (15:20-21).

கள், புனல், புலவி இம்மூன்றும் காரணமாகக் காதலர்க்கு கண் சிவந்தன. வையையில் புனலாடிய காலை, தலைவன் தன் காதலியைப் பன்மாணும் புல்லியமையின் தன் மார்பிற் பூசிய மான்மதச்சாந்து அழிந்ததும் அழியாததுமாய்ச் சிதைந்து காணப்பட்டது(16:39-47). காதலர்தம் தோள்கள் புணையாகப் பரத்தையர் புனலாடினர். அப் புனலாட்டத்தை ஆண்டு நீராடும் மனைவியர் அறியாத வண்ணம் மறைத்து, வையை அக் காதலர்கட்கு இன்பம் நல்கிற்று (திரட்டு 2:28-33). ஒரு தலைவன் தன் காதற் பரத்தையுடன் நீராடியபோது தன் மாலையை எடுத்து வையையில் விடுத்தனன். இற்பரத்தை அம்மாலை தன்பால் வந்தெய்தியதும் தலையிற் சூடிக்கொண்

டனள். இதனைக் கண்ட காதற்பரத்தை, அவளிடம் சென்று அம் மாலையைத் தா என வினவ, அதற்கு அவள் வையை பரிசாக அளித்த அம்மாலையை நான் கொடேன் எனச் செப்பினள். 'வையை பலருள்ளும் நினக்கு மட்டும் மாலையளித்தது பெரிதும் வியப்பாகவே உள்ளது' எனக் கூறித் தலைவன் நிவ் நகிலழகில் ஈடுபட்டே புனல் வழி மாலையனுப்பினன் என்பதை குறிப்பிற் கூறி நகையாடினள் காதற் பரத்தை (திரட்டு 2:34-45).

ஊடல்

பரிபாடல் சில ஊடல் நிகழ்ச்சிகளையும் விரிக்கின்றது. 'தலைவன் இற்பரத்தையொடு நீராடினனெனக் கேட்ட காதற் பரத்தை அவனொடு வெகுண்டு ஊடினள். ஊடலைத் தணிக்கத் தலைவன் தளிரைக் கையுறையாக அவட்கு அளித்தனன். தலைவன் புதிய பரத்தைக்காகவே அக்கையுறையைக் கொய்ததாகவும், அவள் மறுத்தபின் அதனைத் தன்பால் கொணர்ந்ததால் தான் வாடியதாகவும் கூறி, அதனை ஏற்க மறுத்தனள். வையையில் வெள்ளம் பெருகியதால் நீந்தவேண்டியிருந்தமையின், அக் காலத்தாழ்ப்பினுல் தளிர்வாடியது எனத் தலைமகன் கூறினன். மேலும் பரங்குன்றத்தின்மீதும் ஆணையிட்டுத் தன் மொழி வாய்மையாதலை வற்புறுத்தினன். ஆயினும், காதற் பரத்தை அவன் சொல்லை நம்பாது, 'இவண் தங்காமல் இற்பரத்தைபால் ஏகுக' என ஏவினள். இந் நிலையில் ஒரு மங்கை நல்லாள் இடைப்புகுந்து காதற் பரத்தையை நோக்கி, 'ஊடல் கொள்வதிலும் ஓரளவுண்டு; அதற்கு மிகின் இன்பங்கெடும்' என அறிவுரை பகர்ந்தனள். பின்னர் அவளும் தன் தவறுணர்ந்து ஊடனீங்கினள் (6:61-66).

தலைவியின் கண்ணழகு தலைவனைக் கவிபாடச் செய்தது. வேறொரு பெண் அப் பாடலைக் கேட்டுத் தனது நலம் பாராட்டியதாக மாறுபடநினைந்து, அவனை அடையக் குறுகினள். இதனைக் கண்ட தலைமகன், தலைவி இந்நிலையறியின் இன்னல் விளையும் என்றஞ்சினன். தலைவியும் அவன் எதிர்பார்த்த

படியே பிறழ உணர்ந்து அவன்மீது சீற்றங் கொண்டாள். முன்னரே நறவமலர் போல் சிவந்திருந்த கண்கள் கட்குடியால் மேலுஞ் சிவந்தன அவள் சின மிகுதியால் தன் மாலையைக் கழற்றி அவன்மீது வீசியெறிந்தாள். அவன் அவள் அடிபணிந்து வணங்கினன்.அவன் தலையை மிதித்ததும் அவள் வெகுளி தீராமல் ஊடினள் (7:61-66).

ஒரு தலைவன் தன் தலைமகளொடு புனலாட வையைக் கேகினன். தலைவியின் வளையல், முத்துமாலை முதலிய அணிகலன்களைத் தலைவனால் பரிசாகப் பெற்ற பரத்தையும் அவ் விழாவுக்கு வந்திருந்தனள். தலைவியும் அவள் தோழிமாரும் பரத்தை அணிந்திருந்த நகைகளை உற்று நோக்கியதும் அவட்குத் தூக்கிவாரிப் போட்டது. உடனே மகளிர் கூட்டத்திற் புக்கு மறையத் தொடங்கினள். அதனைக் கண்ட தலைவனும் அஞ்சினன். தோழியர் பரத்தையை எய்தி, இவ் வணிகலன் வந்த வழியைக் கேட்டனர். அவர்கட்குள்ளே வாய்ப்பூசல் நிகழ்ந்து கொண்டிருந்தபோது, ஒரு முதுமகள் குறுக்கிட்டுப் பரத்தையை நோக்கி, அக் கற்புடைத் தலைவியைத் தொழுமாறு கூறினள். ஒருநிகரினளைத் தொழுதல் இழுக்கெனக் கூறிப் பரத்தை மறுத்துவிட்டாள். பின்னர், பரத்தை தான் அணிந்திருக்கும் நகைகள் களவுப்பொருளல்ல; தானும் கள்வியல்ல; தலைவன் பரிசமாகத் தந்தவை அவை எனத் தலைவிக்குக் கூறினள். அம் முதுமகள் தலைவியை நோக்கிக் 'கற்புடையாட்குக் கணவனைப் பிரிந்து வாழ்தல் இயலாததொன்றாகலின், ஊடலை மறந்து கூடி வாழ்க!' என அறிவுரைத்தனள் (20:30–97). பரத்தை புனலாடியபோது ஆற்றிடையே வந்த மாலையை எடுத்துத் தன் தலையில் பலரு மறியச் சூடினள். சூடியதைக் கண்ட மக்கள் அம்மாலை தலைவனளித்தது என அலர் தூற்றினர். இதனைக் கேட்ட தலைவி தன் கொழுநன்பால் ஊடல் கொண்டனள் (திரட்டு2:51–56).

வையைப் புகழ்ந்துரை

வளத்துக்கும் செழிப்புக்கும் ஆறுகளே அடிப்படையாதலின், அவற்றைப் புலவர் பலரும் போற்றிப் புகழ்வாரா

யினர். சங்க இலக்கியங்கள் காவிரி, பொருநை, வையை என்னும் ஆறுகளைப் புகழ்ந்து கூறும். தகுந்த அடைமொழி கொடுத்துப் பரிபாடற் புலவர் வையைப் பாராட்டி யுள்ளனர். 'நறுநீர் வையை' (11:140). 'அந்தண் புனல் வையை' 12:10); 'தீம்புனல் வையை' (22:15); 'பூமலி வையை' 20:11); பேஎநீர் வையை' (7:84). 'தொய்யா விழுச்சீர் வளங்கெழு வையை' (17:44) என வருதல் காண்க. இவ்வடை மொழிகளெல்லாம் சங்க இலக்கியம் வழங்கும் அடைமொழிகள் போலப் பொதுவாகக் காணப்படலாம்.

ஆனால் வையையைத் 'தமிழ் வையை' எனத் தமிழடை கொடுத்துப் பாராட்டியது சங்க நூல்களுள் பரிபாடல் ஒன்றேயாம் (6:90). பரிபாடல் பாடிய புலவர்களுள்ளும் தமிழ்வையை எனப் பாராட்டியவர் நல்லந்துவனாரே யாவர். சங்க இலக்கியங்கள் வையையைப் 'பூமலி வையை' (கலி. 98:10) 'தென்னவன் வையை (கலி. 98:30,31), 'வருபுனல் வையை' (அகம் 36-9), பெருநீர் வையை' (கல். 296:5), 'மலி புகழ் வையை' (புறம். 71:9-10) எனப் பல்வேறு அடை கொடுத்துப் பாராட்டினும், தமிழொடு தொடர்புறுத்துப் பாராட்டவில்லை. ஆறுகள் பலவற்றுள்ளும் வையை ஒன்று தான் சங்கப் புலவர்களால் பாடல்களிற் பாராட்டப்பெறும் தனிப்பெருஞ் சிறப்பினை எய்தியுள்ளது. பரிபாடலில் வையை பற்றி எட்டுப் பாடல்கள் உள்ளன. மாசறு நூல் களுணர்ந்த புலவர்கள், புகழப்படும் அறிவினையுடைய நாவால் பாடிய நன் கவிதை பொய்க்காதிருக்க, உழவு முதலிய தொழில் பெருக, வையைப் புனல் விரைந்து பரந்தது எனக் கூறுவர் அந்துவனார்.

'மாசில் பனுவற் புலவர் புகழ்புல
நாவிற் புனைந்த நன்கவிதை மாறுமை
மேவிப் பரந்து விரைந்து வினைநந்தத்
தாயிற்றே தண்ணம் புனல்.' (பரி.6:7-10)

மேலும், 'இனிய இயலின் சிறந்த தேர்ச்சி பொருந்திய பரி பாடலையுடைய நறுநீர் வையாய்' எனவும் விளித்துள்ளார்.

'இன்னியன் மாண்டேர்ச்சி இசை பரிபாடல்
முன்முறை செய்தவத் திம்முறை இயைந்தோம்
மறுமுறை யமையத்து மியைக
நறுநீர் வையை!' (பரி. 11:137-140)

இங்ஙனம் பரிபாடலால் புகழ்ந்தேத்தப் பெற்றது வையை ஒன்றேயாம். புலவர் பாடும் புகழ் பெற்றது வையை எனக் கலித்தொகையும் சிலப்பதிகாரமும் அதன் கீர்த்தி பாடும்.

'கார்முற்றி இணரூழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி இருநிலம்
தார்முற்றியது போல தகைபூத்த வையை'
(கலி. 67:1–3)

'புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி.'
(சிலம்பு. 23:168-170)

வையை இன்பமும் எழிலும் மன்பதைக்கு அளவிறந்து நல்கி, மண்தேய்த்த புகழ் வாய்ந்தமையின், அதனைப் புலவர் நல்வழுதியார்,

'இன்பமுங் கவினு மழுங்கன் மூதூர்
நன்பல நன்பல நன்பல வையை
நின்புகழ் கொள்ளாதிம் மலர்தலை யுலகே.'
(பரி. 82:99–102)

என வாய் மணக்க பாடியுள்ளார். பண்டு இடையறுது ஓடும் உயிராறுக இருந்தமையின், வையையினை 'வருநீர் வையை', 'நறுநீர் வையை', 'வையை என்னும் பொய்யாக் குலக்கொடி' என்றெல்லாம் சிறப்பித்துப் பாடினர். உழவுத் தொழிலுக்காக அணைகட்டி நீரைத் தேக்கியமையால், வையை இக்காலத்துப் பல நாட்களிலும் நீரின்றி வறண்டு காணப்படுகிறது.

வேண்டுகோள்

'வையையே! நின்கட் புனலாடுவார் நெஞ்சத்துப் பொருந்திய காமத்தை உண்டாக்குந் தன்மை நினக்கு எஞ்ஞான்றும் குறையா தொழிக' என வேண்டுவர் சிலர் (பரி 6.).

வானம் பொய்யாது மழை பொழிக எனவும், அதனுல் வெள்ளம் மிகுந்து வையையில் வற்ருது நீர் பெருகுக எனவும் வேண்டுவர் சிலர் (பரி. 16). இலம்படு புலவர் ஏற்ற கை நிறையப் பாண்டியன் பொன் வழங்கியாங்கு, வையை வயலிட்டுப் பொன் பரப்பும் செயல் என்றும் நிலவுவதாக எனப் பாடுவர் ஒருபுலவர் (பரி.10). இன்று புனலாடிப் பெரும் பயன் எய்தியாங்கு என்றும் வையையைப் பாராட்டித் துன்பம் நீங்கி இன்பம் எய்துவோமாக என்பார் சிலர் (பரி.7) தைந்நீராடிய இளமகளிர்க்கு மறுபிறப்பினும் தைந்நீராடுந் தவம் வாய்ப்பதாகுக என்றும், வியனிலம் மழைபொழிந்து வெம்மை தவிர்வதாகுக என்றும் இறைஞ்சுகின்றனர்(பரி.11). 'செறுநீர் விளையாச் செறிந்தநங் கேண்மை மறுமுறையானு மியைக!'; வையைக்குள்ள தொடர்பு மறுபிறப்புக்கும் தொடர்க!' என வேண்டுவர் சிலர் (திரட்டு 3).

நல்லந்துவனுர் தம் பாடலில் வையையை நோக்கிப் பலர் பல வரங்கள் வேண்டுவதாகக் குறிப்பிட்டுள்ளார். காதலர்ப் பிரியாது கவவுக்கை நெகிழாது உடனுறைவாழ்க்கை என்றும் அமைக என வேண்டுவர் சிலர். தேனைப் பருகியதும் மலரை விட்டுச் செல்லும் வண்டு போலாது, எம் கணவர் நிலைத்த அன்பினராகுக என வரம் கேட்பர் சிலர். யாமும் எம் கொழுநரும் முதியராகாமல் என்றும் இளமையோடிருக்கச் செல்வமும் செழுங்கிளையும் சூழப்பெறுவோமாக என இரப்பர் சிலர்.

> 'கமுத்தமை கைவாங்காக் காதலர்ப் புல்ல
> விழுத்தகை பெறுகென வேண்டுதும் என்மரும்
> பூவீழ் அரியிற் புலம்பப் போகா
> தியாம்வீழ்வார் ஏமம் எய்துக என்மாரும்
> கிழவர் கிழவியர் என்னுதேழ் காறும்
> மழவீன்று மல்லற்கேண் மன்னுக என்மாரும்...'
>
> (பரி. 11:116-121)

தைந்நீராடல்

தைந்நீராடல் பற்றிய செய்தி ஐங்குறுநூறு, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை முதலிய சங்க இலக்கியங்களில்

காணப்படுகின்றது. பெண்கள் தைத்திங்களில் விடியற் காலத்து நீராடுதல் தவச் செயலாகக் கருதப்பட்டது. ஆடவர் தைந் நீராடியதாக முன்னைய சங்க இலக்கியங்களில் குறிப்பில்லை.

'பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன'
(களவியாக்கம்-50)

என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இளம்பூரணர், 'இன்று இவ்வூராரெல்லாம் தைந்நீராடும் என்பதனைக் காட்டித் தைந்நீராடுதல் என்ற தொழிலால் ஆடவரன்றி மகளிரே கருதப்பட்டனர்' என உரைப்பர். இதுவே முற்காலத்து வழக்கம் என்பது வழக்குவழிப்பட்டன என்பதனுல் விளங்கும்.

'நறுவீ யைம்பால் மகளி ராடும்
தைஇத் திங்கள் தண்கயம் போலப்
பலர் படிந்து'

என ஐங்குறுநூறு (84), மகளிர் பலர் திரளாகச் சென்று கயத்தில் நீராடலை அறிவிக்கும். இந்நீராட்டு விடியலில் நிகழ்ந்தது என்பதனை,

'பெரும்புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து' (நற்.80)

என்னும் நற்றிணையடியால் அறியலாம்.

மேலும், பெண்கள் தம் காதலர் கையுறையாகத் தழையும் தாரும் நல்க, அவற்றை விரும்பி அணிந்து, அவருடன் புனலாடுவர் என நற்றிணை நவிலும்.

'தழையுந் தாரும் தந்தனன் இவனென
இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇத்
தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோட் குறுமகள்.' (நற்.80)

பெண்கள் அணிகலன் பூண்டு தைந் நீராடுதலை தவச் செயலாகக் கலித்தொகை கருதுகிறது.

வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையில்நீ ராடிய தவந்தலைப் படுவாயோ?' (கலி.59)

தைத்திங்களில் நிகழ்ந்த வேருெரு வகைப் புனலாட்டினே அகநானூறு விளக்குகிறது. இளமகளிர் தம் சிற்றிடையில் மாவின் பூங்கொத்தும் தளிரும் அணிந்து கதிரவன் தோன்றும் காலேப் பொழுதில், கொம்பும் சங்கும் முழங்கத் தாம் செய்த வண்டற் பாவையொடு சென்று, அதனே நீரிலிட்ட பின்னர்க் குரவைக் கூத்தயர்வர்.

'தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
பொலங்காசு நிரைத்த கோடேந் தல்குல்
நலங்கேழ் மாக்குரல் தழையொடு துயல்வரப்
பாடுர் பெழுதரும் பகுவாய் மண்டிலத்து
வயிரிடைப் பட்ட தெள்விளி இயம்ப
வண்டற் பாவை உண்டுறைத் தரீஇத்
திருநுதல் மகளிர் குரவை அயரும்
பெருநீர்க் கானல் தழீஇய இருக்கை.' (அகம். 269:14-20)

நல்லந்துவனர் பதிரைாம் பரிபாடலில் இத் தைந் நீராடலே விரித்துக் கூறியுள்ளார். முன்பனிக் காலத்து மார் கழியில், திங்கள் மறுவொடு நிறைந்த திருவாதிரை நாளின் கண், ஆகமங்களேயுணர்ந்த அந்தணர் ஆதிரையான் எனப் படும் சிவபெருமானுக்கு விழாத் தொடங்குவர். புரிநூல் அந்தணர் பொலங்கலம் ஏந்தி ஆராதனே புரிவர். சடங்கறிந்த முதுபார்ப்பனிமார் கன்னியர்க்கு விழாச்சடங்குகளேக் கற் பிப்பர். அம் முறைப்படி தைந்நீராடிய பின்னர், இறைவனே நோக்கி, வளஞ்சுரக்க மழை பொழிந்து நிலங்குளிர்வதாக என வேண்டுவர். ஊதைக்காற்றின் குளிர் தாங்க இயலாது அக் கன்னிமார் வேள்வித்தீ முன்னின்று ஈர ஆடை புலர்த்தித் தீக் காய்ந்தனர். அந்தணர் வேள்வித் தீயிலளித்த அவியெல் லாம் வையையைச் சென்று சேர்ந்தது. மையோலே பிடித்துக் கற்கும் இளஞ்சிருரின் விளேயாட்டிற்கு மாருயெழுந்து காமக் குறிப்பில்லாத விளேயாட்டைச் செய்கின்ற ஆயத்திணேயு டைய அக் கன்னியர், தம் புலன்களே அவித்துப் பன்முறை தவமியற்றியதால்தான் தம் தாய்மார்க்கருகில் நின்று ஆடும் இத் தைந்நீராடலாகிய தவப்பேறு பெற்றனர். இந்நீராட்டு அம்பாவாடல் எனவும் பெயர் பெறும்.

'கனைக்கு மதிர்குரல் கார்வானம் நீங்கப்
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப்
புரிநூல் அந்தணர் பொலங்கல மேற்ப
வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா வாடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடிப் பருமண லருவியின்
ஊதை யூர்தர வுறைசிறை வேதியர்
நெறிநிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பிற்
றையன் மகளிர் ஈரணி புலர்தர
வையை நினக்கு மடைவாய்த் தன்று
மையாடல் ஆடன் மழபுலவர் மாறெழுந்து
பொய்யாட லாடும் புணர்ப்பி னவரவர்
தீயெரிப் பாலும் செறிதவமுன் பற்றியோ
தாயருகா நின்று தவத்தைந்நீர் ஆடுதல்
நீயுரைத்தி வையை நதி.' (பரி. 11:74-92)

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை தைந்நீராடல் பிற்காலத்துச் சமயச் சார்புடைய நீராடலாக மாறிவிட்டது எனக் கூறுவர்.[21] அவர் கருத்துப்படி, பாவை நோன்பு தைந்நீராடலினும் வேறுபட்டதாகும். தைந்நீராடல் திருவாதிரை நாளில் கொண்டாடப் பெறும். பாவை நோன்பு மார்கழி முதல்நாளிலிருந்து கொண்டாடப் பெறும். இதனல் தான் பாவை நோன்பு மார்கழி நீராடல் எனவும் பெயர் பெறுவதாயிற்று. திருப்பாவை திருவெம்பாவைகளில் பாவை நோன்பு விளக்கமாக வந்துள்ளது. தைத்திங்கள் முதல் நாளில் நீராடுவது தவச் செயலாகவும் அது மன்மதனைக் குறித்துச் செய்யப்படுவதாகவும் ஆண்டாள் பாடலொன்று தெரிவிக்கின்றது.

---

21. இலக்கிய விளக்கம், பக். 91.

சங்க இலக்கியத்துக் காணப்பெறும் தைந்நீராடலே இப் பாட்டுக்கு அடிப்படையாகலாம். தைந்நீராடல் என்பது பழைய சங்க காலத்திருந்த ஒரு விழாவாகும். இக் காலத்தில் தைத் திங்கள் முதல் நாள் பொங்கல் விழாவாக-தமிழர் தம் புத்தாண்டு விழாவாகக் கொண்டாடப் பெறுகிறது.

கன்னிப் பெண்கள் தம் தாயர் அருகே நின்று நீராடுதலால் தைந்நீராடல், அம்பாவாடல் எனவும் பெயர் பெறும். ஈண்டு அம்பா எனும் சொல் தாய் எனப் பொருள்படும். ஆனால் மகாவித்துவான் மு. இராகவையங்கார், அம்பா என்பதற்குப் பராசத்தி என்று பொருள் கூறுவர். எனவே, அவர் கருத்துப்படி அம்பாவாடல் என்பது பராசத்தியைக் கருதிச் செய்யும் ஒரு நீராட்டு விழாவாகும். பரிமேலழகர் தம் உரையில் அந் நீராட்டு ஆதிரையானை (சிவனை)க் கருதிச் செய்தது எனக் கூறியுள்ளார். மு. இராகவையங்கார் அவர்கள், பரிமேலழகர் ஆதிரைக்குரிய இறைவனது விழாவாகக் கருதினாரேனும், அச் செய்தி ஒன்றும் மூலத்தாற் புலப்படாமையின் அக் கருத்துப் பொருந்தாதென்பர்.

பரிமேலழகர் கூறுவது போலவே, அம்பாவாடலும், (மார்கழி நீராடல்) தைந்நீராடலும் ஒன்றென்பர் திரு. மு. இராகவையங்கார்.[22] அமாவாசையோடும் பௌர்ணமியோடும் மாதங்கள் முடிவு பெறுதலால், அமாந்தம், பூர்ணிமாந்தம் என்னும் பெயர்கொண்ட இருவகை மாதமுறைகள் வழங்கி வந்தன. அவற்றுள் பூர்ணிமாந்த என்ற முறைப்படி மார்கழியிடையிற் பௌர்ணமிக்குப்பின் வரும் மாதம்—மார்கழியின் பிற்பகுதியும் தையின் முற்பகுதியுமா மென்றும், இதனால் மார்கழி நீராட்டம் தைந்நீராட்டம் என்று இருவகையாகவும் அந்நீராடலைக் கூறுவது கூடும் என்றும் கூறுவர் எனத் திரு. மு. இராகவையங்கார் வரைந்துள்ளார்.[23] 'வெம்பாதாக வியனில வரைப்பு' என்னும் அடியானும், 'வரைவு மலிந்த தோழி கன்னிப் பருவத்துத் தைந்நீராடித் தம் தலைப்

22. பரி. 11:81 பரிமேலழகர் உரை.
23. ஆராய்ச்சித் தொகுதி.

பட்டேம் என வையையை நோக்கித் தலைமகன் கேட்பச் சொல்லியது' என்னும் பதினோராம் பாடல் துறைக் குறிப் பானும், தம் வாழ்வின்பம் கருதித் தக்க கணவன்மார் வேண்டு மெனவும், நாட்டு நலம் கருதி மழை வேண்டுமெனவும், கன்னிப் பெண்கள் தைந்நீராடினர் என அறியலாம். புணர் வின்பம் கருதியும் மழை வேண்டியும் பெண்கள் பாவை நோன்பியற்றி இறைவனை இறைஞ்சுவதாகத் திருப்பாவை, திருவெம்பாவைகள் பாடுகின்றன.

'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்குமுன் றன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்!'
(திருப்பாவை, 29)

'அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய்!'
(திருவெம்பாவை, 9)

'என் கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க'
(திருவெம்பாவை, 19)

'தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்!'
(திருப்பாவை, 4)

'தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்!'
(திருவெம்பாவை, 16)

திருப்பாவையிலுள்ள பாவை எனும் சொல் பராசத்தி யைக் குறிக்கும். திருவெம்பாவையிலும் பராசக்தி வழிபாடு காணப் பெறும். எனவே, இரு பாவை நூல்களிலும் குறிப் பிடப்பெறும் வழிபாடு பராசத்தி பற்றியதே என்பது வெளிப்

படை. கார்த்தியாயினியை நோக்கிப் பெண்கள் நோன் பியற்றுவதாகப் பாகவதம் கூறுவதும் ஈண்டைக் கேற்பக் கருதத்தகும்.[24]

பரிபாடற் காலத்துத் தைர்நீராடல் உலக இன்பத்திற் காகச் சிறு பெண்களால் விழாவாகக் கொண்டாப் பெற்றது. ஆனல் பிற்காலத்து வைணவ சைவ சமயங்களில் ஆண்பெண் இரு பாலராலும் அந் நீராடல் வீடு பேற்றின்பத்திற்காக மேற்கொள்ளப்பட்டது. திருப்பாவை பாவை நோன்பின் சடங்குகளைக் குறிப்பிட்டுள்ளது.

'வையத்து வாழ்வீர்காள் நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணேம் பாலுண்ணேம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய்!'

(திருப்பாவை 2)

மார்கழித் திங்களில் இந் நீராடல் 'திருவாதிரை விழா'வென இளம் பெண்களால் மலையாளத்தில் இப்பொழுதும் கொண் டாடப்படுகின்றது. கயத்தில் நீராடி முடிந்ததும், கரையேறி ஆடையுடுத்து அதன் பின்னே உணவருந்துவர். ஆனல் மலையாளமக்கள்இந்நோன்பினை மன்மதனுக்குச் செய்வதாகக் கருதுகின்றனர். இவ் வம்பாவாடலே திருவெம்பாவையாக மாறிப் பிற்காலத்தே சையாம் வரை பரவிற்று. அந் நாட்டு மக்கள் 'லோரிப் பாவாய்' என்றும் 'லோ ஜின்ஜா' என்றும் அதனை வழங்குகின்றனர்.[22]

24 தசம காந்தம், XXII.
25. கலைக்களஞ்சியம், தொகுதி VI, பக் 767.

9. பண்பாடும் நாகரிகமும்

பண்பாடும் நாகரிகமும் பற்றிய பல்வேறு கூறுகளையும் பத்துப் பாட்டும் புறநானூறும் புலப்படுத்துதல் போலப் பரிபாடலும் புலப்படுத்தும் என நாம் கருதவியலாது. திருமால் செவ்வேள், வையை என்னும் மூன்றையுமே பாடுபொருளாகக் கொண்டிலங்குவது பரிபாடல். அவ்வாறிருப்பினும் சமயம் பற்றியும் பண்பாடு நாகரிகம் என்பவற்றின் ஒரு கூறுன விளையாடல்கள் பற்றியும், ஏனைத் தொகை நூல்களை விடப் பரிபாடலே செவ்வனம் விரித்துரைக்கும். சங்ககால மக்களின் தெய்வ வழிபாட்டு முறையினையும் புனலாடலில் நிகழும் காதற் பாங்கினையும் அறியப் பரிபாடல் பெருந்துணை புரியும். காணுதொழிந்த நான்கு மதுரைப் பரிபாடல்களும் கிடைத்திருப்பின், பாண்டிய வேந்தர்களின் தலைநகராகிய மதுரை வாழ் மக்களின் வாழ்க்கை முறைகளை நாம் தெள்ளிதின் அறிய நல்வாய்ப்புக் கிட்டியிருக்கும்.

கல்வி

தமிழக வேந்தர் பல கலைகளையும் இலக்கியங்களையும் புரந்துவந்தனர். பாண்டிய மன்னர்களுள் ஒருவன் சிறந்த புலவனுகவும் கலைஞனுகவும் விளங்கியமையின், 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்'[1] எனச் சிறப்பிக்கப் பெற்முன். சங்கத் தொகை நூல்களிலே பரிபாடலில் மட்டும்தான் மூவகைத் தமிழ் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. மதுரை நகர மக்கள் 'தண்டமிழ்க் குடிகள்' (திரட்டு

1. பரி. திரட்டு, 4 (இராசம் பதிப்பு)

7-5) எனப் பெயர் பெற்றனர். திருமாலை முத்தமிழொடு தொடர்புபடுத்திக் கூறியிருப்பது தமிழின் சிறப்பையும் அதனை மூவகைப்படுத்து வழங்கிய சீர்மையையும் காட்டுவதாகும்.

'தொல்லியற் புலவ, நல்லியாழ்ப் பாண,
இடவல குடவல' (பரி. 3)

எனத் திருமாலை விளித்துள்ளமை காண்க. ஆடல் வல்லாரையும், பாடல் வல்லாரையும், வல்லுப்போர் வல்லாரையும் வென்றவர்கள் பரங்குன்றின்மேற் கொடியேற்றித் தம் கலை வன்மையைக் காட்டுவர். சூதாடுதலில் வல்லவர்கள் 'வல்லார்' என்று பெயர் பெற்றனர்.

பண்டைக் காலத்தில், மதுரை கல்வியின் உறைவிடமாக மிளிர்ந்தது. அது புலமையிலோ, போரிலோ தோல்வி கண்டதில்லை. ஆதலினாற்றான், 'புலத்தினும் போரினும் போர் தோலாகி கூடல்' என மதுரையை நப்பண்ணனார் ஏத்துவர். தமிழுக்கு ஊறு நேராதவாறு வேலி பயிரைக் காத்தல்போலக் காத்தலின், மதுரை 'தமிழ் வேலி' எனப் புகழ்ப் பெற்றது. மேற் கூறியவாற்றான், மதுரையில் சங்கம் இருந்ததென்றும், திறனாய்வாளர்கள் இருந்தனரென்றும் உய்த்துணரலாம் என்பர் திரு. ரா. இராகவையங்கார் அவர்கள்.[2]

மையோலை பிடித்துக் கல்வி தொடங்கும் இளஞ்சிறார்களை 'மழபுலவர்'[2] என அழைத்தனர் (11-88). நான்மறைகளையும் நன்குணர்ந்த அந்தணர்கள் மதுரையில் வாழ்ந்தனர். அவர்கள் விடியற்காலை எழுந்து வேத மோதுவர். அவ் வேத ஒலி கேட்டு மதுரை மக்கள் துயிலெழுவரே யன்றிச் சேவற்கூவலைக் கேட்டுத் துயிலெழமாட்டார்கள்.

'பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லதை

2. தமிழ் வரலாறு பக். 52, 53.

வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே.' (பரி. திரட்டு 7: 7-11)

மதுரை பலதுறைக் கல்விகளிலும் சிறந்திருந்தமையின் அதன் சீர்த்தி உலகமெங்கும் பரவியிருந்தது.

கட்டடக் கலை

தமிழகம் முழுவதுமே பண்டைக் காலத்தில் கட்டடக் கலைக்குப் பெயர் பெற்றிருந்தது. இப்பொழுது கோயில் நகர் என வழங்கும் சொற்கள் முன்னர் முறையே அரசர்கள் உறையும் இடத்தையும் கடவுளர் உறையும் இடத்தையும் உணர்த்தின. திருப்பரங்குன்றம் திருமாலிருஞ்சோலைமலை, குளவாய், இருந்தையூர் என்னும் இடங்களில் உள்ள கோயில்கள் கட்டடக் கலையின் சிறப்புக்கு நல்ல சான்றாகும். மதுரை நகர் நடுவண் அமைதிருந்த பாண்டிய மன்னனது கோயில், தாமரை மலர் நடுவே இருக்கும் பொகுட்டுப் போன்றது என்றும், கோயிலைச் சுற்றியுள்ள பல தெருக்களும் தாமரையின் இதழ்கள் போன்றவை என்றும், மதுரை நகர் திருமாலின் உந்தியில் மலர்ந்த தாமரை மலர் போன்றது என்றும் புலவர் ஒருவர் புனைந்துள்ளார்.

'மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர் பூவின்
இதழகத் தனைய தெருவம் இதழகத்து
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்.'
(பரி. திரட்டு 7: 1-4)

மதுரையின் தெருக்கள் அமைப்பைப் நோக்குழி, முந்திய காலத்தே நகரமைப்புத் திட்டமெல்லாம் இருந்திருக்கலாம் எனக் கருத இடனுண்டு. பல நிலைகளையுடைய பெருமாளிகைகள் இருந்ததற்குப் பரிபாடல் சான்று பகரும் (10–41).

ஓவியங்கள்

ஓவியத்தைக் குறிக்கும் ஓவு, ஓவம், ஓவியம் என்னும் சொற்களுள் 'ஓவம்' என்பதே பரிபாடலில் வந்துள்ளது.

(21:28). எழுதுதல், எழுத்து என்னுஞ் சொற்கள் முறையே ஓவியந்தீட்டுந் தொழிலையும் ஓவியத்தையும் குறிப்பனவாம்.[3] ஒரு பெரு மாளிகைக்கண் புலிமுகமாடத்துச் செய்துவைத்த புலியை உண்மையான புலி எனக் கருதித் தன்மேற் பாயு மென யானை ஒன்று அஞ்சியது (10:45-48) என்று கூறுதலான், கைபுனைந்தியற்றும் ஓவியக் கலையினை உணரலாம். ஓவிய அழ கார்ந்த திருப்பரங்குன்றக் கோயில் காமவேளின் படைப் பயிற்சிச்சாலையினை ஒத்தது (18:27-29). துருவ சக்கரத்தைப் பொருந்தி வரும் கதிரவன் முதலிய கோள்களின் நிலைமையை விளக்கும் ஓவியமும், இரதி காமன் ஓவியமும், அகலிகை கல்யாண கதை பற்றிய ஓவியமும், அக் கோயிலை அணி செய்தன.

'என்றூழ் உறவரும் இருசுடர் நேமி
ஒன்றிய சுடர்நிலை உள்படு வோரும்
இரதி காமன் அவளிவன் எனுஅ
விரகியர் வினவ வினுவிறுப் போரும்
இந்திரன் பூசை யிவளக லிகையிவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிதென் றுரைசெய் வோரும்
இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்.'

(பரி. 19;46-53)

இசை

பழந்தமிழர் வாழ்வில் இசை பிணைந்திருந்தது. தம் துணையொடு இன்பவாழ்க்கை எய்தவும், நெடுந் தொலைவுப் பயணத்தின் அயர்ச்சி நீங்கவும், தலைவியர் உள்ளங்களில் மீண்டும் இடம்பெறவும், இசை துணைபுரிந்தது. அன்பர்கள் இசைக் கருவிகளின் பின்னணியோடு இறைவனைப் பரவிப் பாடினர். வண்டினொலி, தும்பியின் ஓசை, குயிலின் குரல், அருவியின் முழக்கம் முதலிய இயற்கை இசையைச் செவி மடுத்து மக்கள் மகிழ்ந்தனர். பரிபாடலில் 'கொளை,' 'இயல்'

3. பரி. 21:28, 19: 53.

என்னும் சொற்கள் இசைப் பாடலைக் குறிக்கும்.[4] முழவு, யாழ், குழல், தூம்பு (வங்கியம்), முரசு, கிணை, மத்தரி, தடாரி, தண்ணுமை, மகுளி, ஒத்து, துடி, பறை முதலிய இசைக் கருவிகளைப் பரிபாடல் குறிப்பிடுகின்றது. ஏழு துளை உள்ளதும் ஐந்து துளை உள்ளதுமாய இருவகை வங்கியங்கள் இருந்தன. குழல் வங்கியமெனவும் முரசு மன்றலெனவும் ஒரோவழி அழைக்கப்பெறும் (8-34). தாளம், ஒத்து எனவும் பாண்டில் எனவும் பெயர்பெறும்.[5] யாழினை நரம்பு என்றும் கூரம் என்றும் கூறுவதும் வழக்கம்.[6] எழுவகைப் பாலைப் பண், மருதப் பண், நைவளம், இளிவாய்ப் பாலை, குரல்வாய்ப் பாலை முதலிய பண்கள் பரிபாடலில் பேசப்படுகின்றன.[7]

ஆடல்

ஆடலரங்கு பற்றிய குறிப்பும் பரிபாடலிற் காணப்படாமலில்லை. ஆடல் வல்லாரைப் போட்டியில் வென்றோர் கொடியேற்றித் தம் வாகையைத் தெரிவிப்பர் (9:72–78). ஆடல் தொடங்குமுன் மலர்ச்சிக்காகச் சிலர் நறவு அருந்துவர். குடக்கூத்து, குரவைக் கூத்து, வெறியாட்டு ஆகியவற்றைப் பரிபாடல் விரித்துக் கூறுவிடினும், பெயரளவிற் சுட்டுகின்றது (3:83, 5:15). ஆடுவோர், 'வயிரியர்' என்றும், ஆடல் 'நிருத்தம்' என்றும் ஆட்சிபெறும் (12:43). ஆடல் மகளிரிற் சிறந்தார்க்கு அரசன் பரிசளிப்பது வழக்கம் (7:80).

திருவிழா

நன்னாட்களில் விழாக்கள் நடைபெற்றன. திருவாதிரை நாளில் சிவபெருமானுக்கு விழாவெடுத்தனர். அவ்விழாவினைப் பராசத்திக்குரியதாகச் சிலர் கருதினர். தைந்நீராடல் தவச் செயலாக மதிக்கப்பட்டது. ஆவணி அவிட்டத்தினை

---

4. பரி. 16:12: பரி. 18:51.
5. பரி. 12:42; 15:42
6. பரி. 18:51; 19:44.
7. பரி. 7:77, 11:126, 127; 18:20, 19:42.

யும் விழாக்களுள் ஒன்ருகக் கருதினர் (11:9, 10). ஒருவிய காதலரை மருவுதல் வேண்டுமெனப் பரங்குன்றத்தில் மகளிர் விழாவயர்ந்தனர் (17:42–46).

உழவு

நாட்டின் பொருள் வளர்ச்சிக்கு உழவுத் தொழிலே தலையாயது என்ற எண்ணம் மக்களிடையே மிகுந்திருந்தது. வயல்களில் வேலை செய்வோர் களமர் என்றும் உழவர் என்றும் பெயர் பெற்றனர். வன்புலம் மென்புலம் என நிலத்தைப் பகுக்கும் பாகுபாடு பரிபாடலிற் காணப்பெறும் (திரட்டு 1:26, 27). உழவர்கள் தம் சுற்றத்தோடு நன்செய்புக்கு, உழவுத் தொழில் புரிந்தனர். வையையில் அடிக்கடி வரும் வெள்ளப் பெருக்குக் காரணமாகத் தொழில்கள் செழித்தன. ஓர்பால் உழவர்கள் பொறியின் உதவியால் கரும்பினின்றும் சாறு பிழிந்தனர். கரும்பாட்டும் ஒலி, களமர் பாட்டொலியொடு கலந்து பேரொலி செய்தது. உழவர்கள் கட்பருகிக் களித்து ஆர்ப்பரித்தனர். அவர்தம் மனைவியர் நாற்று நட்டுக்கொண்டே பாடி மகிழ்ந்தனர். கழனிகள் திருமகளையும் கவரும் கவின் பெற்று விளங்கின (69, 10).

பிற தொழில்

தொழிலாளர்களுட் சிலர் வாள், ஈட்டி, மிதவை, தேர், கொம்பு முதலிய புனலாட்டுக் கருவிகளை நெட்டியாற் சமைத்தனர்,[8] கள் முதலிய குடிவகைகளும் ஆக்கினர் என்பதற்குப் பரிபாடலிற் சான்றுண்டு (10:57) சிலர் பொலம்பூ வாடை செய்தனர். தோலைப் பதனிட்டுச் சிலர் மிதியடி அமைத்தனர் (21:3–7). நகைகள் செய்யும் முறையினையும் முந்தையோர் அறியாதவர் அல்லர். சிறந்த வாசனைப் பொடிகளையும் நறுஞ்சாந்துகளையும் படைத்தனர் (10:81-84) பலவகை மலர்களைத் தொகுத்து, அவற்ருல் கண்ணியும் தாரும் தொடுத்தனர் (11-25).

---

8. பரி. 11-50; 6:34, 35.

வாணிகம்

பண்டைக் காலத்தில் கடை, 'அங்காடி' என அழைக்கப் பெற்றது. புனலாட்டுக்குத் தேவையான நெட்டியாற் செய்த வாள், ஈட்டி, தேர் முதலியன விற்கத் தனி அங்காடி இருந்தது (திரட்டு. 2:9)' கரும்பிள்ளைப் பூதனார் மரக் கலத்தைத் தம் பாடலில் இருமுறை உவமையாகத் தந்துள் ளார்.

'தாம் வேண்டும் பட்டின மெய்திச் கரைசேரும்
ஏமுறு நாவாய் வரவெதிற் கொள்வார்போல்.'
(பரி. 10:38, 39)

'இதையும் கயிறும் பிணையும் இரியச்
சிதையும் கலத்தைப் பயினாற் றிருத்தும்
திசையறி நீகானும் போன்ம்.' (பரி. 10:53-55)

இவ்வடிகளால் முற்காலத்துக் கடல் வாணிகமும் பண்ட மாற்றும் இருந்தன என்பது போதரும். தந்நாட்டிலிருந்துப் அயல் நாட்டிலிருந்தும் கொணர்ந்த பொருள்களையும் மலைபடு பொருள்களையும் கடல்படு பொருள்களையும் விலைக்குவழங்கும் வணிகர் தெருக்களும் இருந்தன எனப் பரிபாடல் கூறும் (திரட்டு 1:22-29).

சமூக நிலை

வாழும் நிலத்தின்பெயரால் மக்கள் அழைக்கப்பட்டனர். குன்றில் வாழ்ந்தவனைக் (குன்றவன்) குறவன் என்றனர் (8:69). செய்த தொழிலாலும் சிலர் பெயர் பெற்றனர் என்பதை உழவர், வணிகர் என்னுஞ் சொற்கள் புலப் படுத்தும். அந்தணரையும் முனிவரையும் மன்பதை உயர் வாகக் கருதியது. அந்தணர், வணிகர், வேளாளர்களுக்குத் தனித்தனியே தெருக்கள் இருந்தன (திரட்டு 1:18-27). பாணர்களும் கூத்தர்களும் உறைந்த இடங்கள் சேரிஎன்றும், பாக்கம் என்றுப் பெயர் பெற்றன (7:31, 32). புறச்சேரியில் வாழ்ந்தவர் இழி வகுப்பினராய்க் கருதப்பெற்றனர். ஆதலால், அங்குறைந்த இளைஞர்கள் வையைப் புனலாட்டில்

கலந்து கொள்ள இயலவில்லை (6:38). பார்ப்பனர்களுக்கு மக்கள் மன்றத்தில் பெரு மதிப்பிருந்தது. பரங்குன்றத்தின் மீதும், வையை மணல்மீதும் ஆணையிடுவது போலவே, பார்ப்பனர் மீதும் மக்கள் ஆணையிட்டனர்.

குடிவகைகள்

உடம்பு வலியையும் சோர்வையும் போக்க, மக்கள் குடிக்கும் வழக்கத்தை மேற்கொண்டனர் (8:120-123). புனலாடும்போது பெருமகிழ்வு எய்துதற்காகத் தம் காதலியரொடு தேறல் பருகினர். பலவகைப் பானங்கள் பரிபாடலில் குறிப்பிடப்பட்டுள்ளன. அடுநறா, காமக்களிப்பு, அமிர்த பானம், சூடாநறவு, சூர்நறா, நறவம், தேறல், மதுபானம், என்பன அவற்றைக் குறிப்பிடும் சொற்களாகும்.

அணிவகைகள்

ஆடவர் பெண்டிர் ஆகிய இருபாலரும் மலர்களையும் தளிர்களையும் அணிந்தமை போலவே, பொன்னாலும் முத்தாலும் பிற உயர்ந்த மணிகளாலும் செய்த அணிகலன்களையும் அணிந்துகொண்டனர். சிலர் தம் கைகளில் பவழத்தினையும் குவளைத் தண்டினையும் வளையலாக அணிந்தனர் (11:101, 102). குவளைப் பூவையும் அசோகந் தளிரையும் குழையாகக் காதிற் செருகினர் (11:95-98). அடி முதல் முடிகாறும் விலைமதிக்க முடியாத கலன்களால் தம்மை அணி செய்துகொண்டனர். தொய்யகம் எனப் பெயர் பெறும் தலைக் கோலத்தைப் பெண்கள் சென்னியில் வேய்ந்தனர் (7:46). இவ்வணி முத்தாலானமையின், மத்தக நித்திலம் (தலைக்கோல முத்து) என்ற பெயரும் பெற்றிருந்து (16:5). இவ்வணியன்றித் தலைப்பாளை, முச்சை என்பனவற்றையும் தலையில் அணிந்தனர் என்று அறிகின்றோம். முத்து, பொன், பவழம் என்னும் இவற்றாலாய பல்வேறு மாலைகளைத் தம் மார்பகத்தே எழில்

---

9. பரி. 21:23; 7:62; 6:49; 16:28; 16;39; 10:80; 22:19; 12: 17.

மிகப் புனைந்து கொள்வர் (6:16). காதில் தோடு, மகர குண்டலம்[10] என்பவற்றையும், நெற்றியில் திலகமும் அணிந்தனர். தோளில் தொடியும் வளையும் பூண்டனர் (6;14). இருபாலரும் ஆழியினை (மோதிரத்தை) விரல்களில் செறித்தனர். தோளினை வாகுவலயம் அழகுபடுத்தியது (7:46, 47). மேகலையும் காஞ்சியும்[11] இடைக்கும், முத்துப்பரல் கொண்ட பொற்சிலம்பு காலுக்கும் கவினூட்டின (21:18). அக் காற்கலனை 'நித்திலவரிச் சிலம்பு' என்றும் கூறுவர் (22:49). கால் விரலிலும் ஆழி அணிந்திருந்தனர் (12:24). கண்ணாடி முன் னின்று ஆடை அணிகளைத் திருத்தி ஒப்பனை செய்து கொள்வர் (21:23, 24).

மணப்பொருள்கள்

மணமலர்கள் மட்டுமின்றி நறுமணப் பொருள்களையும் மக்கள் பெரிதும் விழைந்தனர். ஆடவர், பெண்டிர் அனைவரும் கண்ணி, தார், கோதை முதலிய மாலைகளால் தம்மை அணிசெய்து கொண்டனர் (16-50). ஆடவர், மார்பில் அணிந்து கொள்ளும் மாலைக்குத் தார் என்றும், மகளிர் அணிந்துகொள்ளும் மாலைக்குக் கோதை என்றும் பெயர் (20:20, 21). படலை எனப்படும் இலைகளாலாய மாலையையும் அணிந்தனர் (6:19). பல மலர்களுடன் நறுமணங் கமழும் இருவேரியையும் மகளிர் தம் கூந்தலில் வைத்துக் கொண்டனர் (12:16). தலைக்கு நறுநெய் பூசினர். மேனியை நறுமணப்பொடி அழகுசெய்தது. ஆண்களும் பெண்களும் தம் மார்பில் நறுமணங்கமழும் சந்தனம் பூசிக்கொண்டனர். நகங்களிலும் கன்னங்களிலும் செம்பஞ்சுக் குழம்பணிந்தனர். மான்மதமும் மார்புக்கு அணிசெய்தது. பத்துத் துவர் முதலியன ஊறிய நீரும், வாச எண்ணெயும் தயாரிக்கப்பட்டன (10:90). மை திட்டிக் கண்களை அழகுபடுத்திக் கொண்டனர். அகில், சந்தனக் கட்டைகளைப் புகைத்துக் கூந்த

10. பரி. 10:115. திரட்டு. 10:1.
11. பரி. 7:46, 47. பரி. 22:30.

லுக்கும் புகையூட்டினர். தம் முடம்பிலுள்ள எண்ணெய்ப் பசையை நீக்கிக் கொள்ள நறும் பொடிகளைப் பயன்படுத்தினர். நறுமலர், மணங்கமழ்மாலை, சாந்து நறுந்துகள், வாச எண்ணெய் ஆகியவற்றின் பயன் கொண்டமையின், மகிகள் 'யோசனை கமழும் வாச மேனியர்' எனப் பாராட்டுப் பெற்றனர் (12:19-25).

விளையாட்டு

பண்டைத் தமிழரின் சமூக வாழ்வில் விளையாட்டு சிறப்பிடம் பெற்றிருந்தது. ஆண் பெண் இருபாலாரும் தடாகங்களிலும் அருவிகளிலும் ஆறுகளிலும் நீராடிக் களித்தனர். காதலர்கள் தம் மனைவியருடனும், பரத்தையருடனும் ஆறுகளில் புனலாட்டயர்ந்தனர். ஒருவர்க்கொருவர் மூங்கிற் குழாயினால் தண்ணீர் விசியும், அரக்கு நீர் நிறைந்த வட்டில் எறிந்தும் விளையாடினர். புணை துணையாக ஆற்றிடை நீந்தினர். நெட்டியால் தேர் செய்து ஆற்றில் மிதக்க விட்டனர் (6:35). அலையிலும், நுரையிலும் தாழைப் பூந்துகளை வீசி விளையாடினர். ஆற்று நீரில் எதிர்த்து நீந்தினர். புனலாட்டில் வென்றவர் தோற்றவர்தம் கையைக் கட்டிப் புடைத்தனர். சிறுமியர் மணல்வீடு கட்டிச் சோறு சமைத்தனர். ஆற்றங்கரையில் பெண்கள் விளையாடிய போது, அவர்கள் பந்து, கழங்கு முதலிய விளையாட்டுப் பொருள்களை எடுத்துக்கொண்டு சிறுவர்கள் ஆற்றில் குதித்தனர். குகையில் எழுந்த எதிரொலியை உண்மையொலி எனக் கருதிச் சிறுமியர் ஏமாற்றமடைந்தனர். சிரமசாலையில் அம்பு முதலிய படைக்கருவிகளைப் பயன்படுத்து முறையை இளைஞர்கள் கற்றுக் கொண்டனர் (18:29).

ஆட்சிமுறை

அரசியற்றுறை பற்றிய குறிப்புகள் பரிபாடலிற் காணுமாறில்லை. எனினும், போர்முறைபற்றிய சில செய்திகள் காணப்படுகின்றன. கல்விக்கும் போருக்கும் மதுரையில் பயிற்சிக்கூடங்கள் இருந்தன. 'புலத்தினும் போரினும்

போர் தோலாக் கூடல்' என்ற பரிபாட்டடியான் அக்காலத்துப் போர்முறை பயிற்றும் நிலையம் இருந்தது எனக் கருதலாம் என்பர் இராகவையங்கார். பொருது களைத்த இரு பக்கத்துப் படைகளும் இகலின்றி ஒன்றிப்போக ஒருப்படினும், மானங் காரணமாக நெருங்கி உடன்பாடு பேச முற்படாது தயங்கி நின்றன. பாண்டிய நாட்டு வேந்தனுக்குத் தென்னவன், பஞ்சவன், மாறன், வழுதி எனப் பலப்பெயர்கள் உள்ளன.[12] பாசறை அமைப்பு, பறந்தலைக்குப் பொருதற்குப் படை அணிவகுத்து செல்லுமுன் முரசறைதல், ஈட்டி அம்புகளால் பொருதல், பகைவர் நாட்டைக் கவர்ந்து அவர்தம் பொருள்களைக் கொள்ளையிடுதல், தோற்றூர் கையைப் பிணைத்துச் சிறைப்படுத்தல் என்னும் செய்திகளே போர்த்துறைபற்றிப் பரிபாடலிற் காணப்படுவன. அரசர்கள் கலையையும் கலைஞர்களையும் தம் கை வண்மையால் நன்கு புரந்தனர். வறியார்க்கும் பெரும் பொருள் நல்கி அவர்தம் துன்பம் துடைத்தனர்.

வழிபாடு

அன்பர்கள் திருமால், செவ்வேள் போன்ற கடவுளர்களை மட்டுமன்றி, அவர்கள் உறையும் பதிகளையும், அவர்க்குகந்த மரங்களையும் வழிபட்டனர். திருமாலின் ஊர்தியான கருடனும்,செவ்வேளின் ஊர்தியான பிணிமுகமென்னும் யானையும் ஆர்வலர்களின் வழிபடு பொருள்களாயின. தம் எதிர்கால, எண்ணங்கள் நிறைவேறும் என்னும் நம்பிக்கைகொண்டு யானையின் கவழ மிச்சிலையும் மிசைந்தனர். வழிபடும்போது கோயிலில் மணியடிக்கும் வழக்கமும் இருந்தது (8:88). நந்தா விளக்கு முதலிய ஆராதனைப்பொருள்களை வழங்கிஇறைவனை இறைஞ்சுவர். வையையாற்றையும் ஆராதனைப் பொருள் கொண்டு வழிபட்டனர். சங்க இலக்கியங்களில் பரிபாடல் ஒன்றே மக்கள் தம் கிளைஞரோடு தெய்வத்தை வணங்கினர் என்றும், தமக்கும் தமர்க்கும் சேர்த்தே வரம் வேண்டினர்

12. பரி. 7:6; திரட்டு, 2:46; திரட்டு, 2:90. பரி. 10:127.

என்றும் நுவல்கின்றது. முருகன் மீதும், அவன் வாழும் பரங்குன்றின்மீதும், வையை மணலின்மீதும் ஆணையிடும் வழக்கம் இருந்தது. சில காலங்களில் பார்ப்பனர்மீதும் ஆணையிடுவர். ஆணையை நிறைவேற்றத் தவறின், செவ்வேளின் வேல் தம்மை ஒறுக்கும் என்று மக்கள் திண்ணமாக எண்ணினர். மன்னன் தன் தேவியுடனும் கருமச் சுற்றத்துடனும் பரங்குன்றம்சென்று செவ்வேளைப் பரவினன். கோயில் உள்ள திசை நோக்கியும் கடவுட் காதலர்கள் தொழுதேத்தினர் (15:48). பிற

காதலர்கள் குழையைக் கையுறையாகத் தம் காதலியர்க்கு அளிப்பர். கணவன்மார் தம் மனைவியரின் வளை முதலான அணிகளைக் களவாடித் தம் காதற் பரத்தையர்க்குப் பரிசு வழங்குவர். வையையில் வெள்ளம் பெருகும்போது பறையறைந்து அதனை நகரமக்கட்குத் தெரிவிப்பது வழக்கம் (10:7). வேங்கை மலர் சிதறிக் கிடக்கும் பாறையின் புலித் தோற்றத்தைச் சுட்டிக் காட்டித் தாய்மார்கள் கலுழும் மகளிரின் அழுகையை அடக்குவர். கற்புடைமகளிர் பெரிதும் மதிக்கப் பெற்றனர். யானை, குதிரை, எருது, கோவேறு கழுதை முதலியன ஊர்தியாகப் பயன்பட்டன. எருதுகளுக்குப் பெயரிட்டு அவற்றைப் பெயர் கூறி அழைத்தனர் (10:9-18). தமக்களித்த விருந்துக்கு எதிர்விருந்து வைத்தனர் (16:16). கோயிலுக்குச் சென்றோர் குரங்குகட்குப் பண்ணியமும் கன்னலும் அளித்தனர் (19-38). கன்னி மகளிர் தைந்நீர் ஆடினர். அது தவச்செயலாகக் கருதப்பட்டது (11:91).

ஆடல், பாடல், ஓவியம் முதலிய கலைத் துறைகளிலும் உழவு, வாணிகம் முதலிய தொழிற்றுறைகளிலும், புலத்துறையிலும், பண்டைத் தமிழகம் எவ்வாறிருந்தது என்பதைப் பரிபாடல் தெள்ளிதின் உணர்த்துகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழர்தம் சமயநிலையைச் சிறப்பாகக் காட்டுகின்றது. புனலாட்டு முதலிய களியாட்டங்களையும் அழகுறப் படம்பிடித்துக் காட்டுகின்றது. பண்பாட்டிலும் நாகரிகத்திலும் தமிழர் பண்டே உயர்ந்திருந்தனர் என்பதனை நிறுவப் பரிபாடல் ஒரு கருவிநூல் என்பதில் ஐயமில்லை.

10. மொழியியற் கூறுகள்

பாடும் பொருளிலும் பாடும் முறையிலும் மட்டுமன்றி, மொழியியற் கூறுகளிலும் பரிபாடல் தனிச்சிறப்புடைய தாகும். அச்சிறப்புக்கு இசைப்பாடல் என்னும் நோக்கத்தோடு அந்நூல் இயற்றப் பெற்றமையே காரணமாகலாம். பாடல்களிற் சில நாடக முறையில் அமைந்திருத்தலின், வழக்கியற்சொல், சொற்றொடர்கள், மரபுச் சொற்கள் ஆகியவை பரிபாடலில் மிகுந்து காணப்படுகின்றன. சொல்லமைப்பிலும் சொற்றொடர் அமைப்பிலும் காணப்பெறும் சிறப்பியல்பைப் பரிமேலழகர் உரை ஆங்காங்கே எடுத்துக் காட்டியுள்ளது. அஃதின்றேல் பரிபாடலில் உள்ள நுண்ணிய விழுமிய கருத்துக்களை அறிதல் இயலாது.

ஒலி மாற்றம்

பரிபாடற் காலத்தே சில சொற்கள் ஒலிப்பு வேறுபாட்டால் இருவடிவம் பெற்று வழங்கியமை காண்கிறோம். அவற்றுள் ஒன்று வழக்கிழந்தது. மற்றொன்று இப்பொழுதும் வழக்காற்றிலுள்ளது. வழக்கிழந்த சொற்களைப் பரிபாடலால் அறியலாம். துழாய், துளவு என்னும் இருசொற்களுமே பரிபாடலில் வந்துள்ளன.[1] மெய்யொலி மாற்றம் என்னும் மொழிநூல் விதிப்படி 'துழவு' என்னும் சொல்லிடையுள்ள 'ழகரம்' 'ள'கரமாக மாறிப் பிற்காலத்தே துளவெனத் திரிந்தது. துளசி என்றும் மாறி இப்பொழுது வழங்குகிறது. பரிபாடலில் ஆட்சிபெற்றுத் திரிந்த வழக்காறற்ற சொற்கள்

---

1. பரி: 13:29:13:60.

வீழே தரப்பட்டுள. ஒப்பு நோக்கியறிய இப்பொழுதைய திரிந்த சொல் வடிவத்தையும் காணலாம்.

வழக்கற்றது	வழக்குள்ளது
தளி (8:91)	துளி
ஒய்ய (20:41)	உய்ய
நேடினர் (20:43)	தேடினர்
ஞமன் (3:21)	நமன், யமன்
ஞால (12:87)	நால
ஞாறிய (திரட்டு,1:74)	நாறிய
வயம் (6:78)	வசம்
நத்து (10:85)	நந்து
திகை (10:74)	திசை
அம்பா (10:81)	அம்மா
அலர்ந்த (4:14)	மலர்ந்த

மரூஉ

மரூஉவின் வகைக்கும் ஒலிமாற்றங்கட்கும் பரிபாடலில் பல சான்றுகள் உள்ளன.

எலாஅ	(8:56)
எல்லா	(8:83)
ஈதா	(8:60)
உண்டிகை	(6:36)

இருகுறில்கள் இணைந்துவரின் ஒரு நெடிலாக மாறும்.

சிவப்பு............சேப்பு (9:7;7:70)

மூக்கொலியுயிர்

மழுக	மழுங்க (6:16)
குறவர்	குன்றவர் (9:67)

இலக்கண அமைப்பு

முன்னிலை வினைமுற்று 'ஐ' விகுதிக்கும் 'இன்' சாரியைக்கு மிடையில் அகரம் பெற்று வருதல் காணலாம்.

உருவினவை—உரு-வ்-இன்-(அவ்)ஐ. (பரி. 1:59)
வளைவினவை (பரி. 1:57)
எஃகினவை (பரி. 9:79)
அம்பினவை (பரி. 15:60)

சில முன்னிலை வினைமுற்று 'இன்' சாரியை பெறாது விகுதிக்கு முன் அகரம் பெற்று வந்துள்ளன.

நிழலவை—நிழல் அ-(வ்) ஐ. (பரி. 1:55)
கொடியவை (பரி. 15:56)
நாஞ்சிலவை (பரி. 15:57)
அட்டவை (பரி. 21:66)

இவ்வகை வினைமுற்றுகள் பரிபாடலில் மட்டுமே காணப் பெறுகின்றன. மேற்காட்டிய சொற்களில் பகுதிகளெல்லாம் பெரும்பாலும் பெயராகவே அமைந்திருத்தல் நோக்கத் தகும். இவ்வினைய வினைமுற்றுகள் பிற சங்க இலக்கியங்களில் அகரம் பெறாது வேறு வகையில் அமைந்துள்ளன.

அன்பினை—அன்பு-இன்-ஐ. (நற். 156)
கனினை (நற். 256)
தாயை (அகம். 16)
வல்லாளனை (புறம். 40)

இப் பொது அமைப்பு வினைகளையும் பரிபாடலிற் காணலாம்.

மேனியை (பரி. 1:7)
யாக்கையை (பரி. 3:45)

வினையாலணையும் பெயர் 'ஐ' என்னும் சாரியை இடைச்சொல் பெற்றுப் பெருவரவிற்றாய் வருதல் பரிபாடலிற் காணலாம்.

படுத்தனை (பரி. 4:23)
உடைத்தனை (பரி. 6:22)
நவின்றனை (பரி. 8:77)
ஊர்ந்தனை (பரி. 21:71)

வளைந்த புறத்தினள் எனப் பொருள்படும்'கூனி'என்னும் சொல்பெரும்பாலும் பெயர்ச்சொல்லாகவே வழங்கப்பெறும். ஆனால், பரிபாடலில் அது வினையெச்சமாக வந்துள்ளது.

'அனம்' என்னும் புதுவகை விகுதி புணர்ந்து வருவதைப் பரிபாடலில் வரும் 'நன்கனம்' (15:25) எனும் சொல்லிற் காண்க. இவ்வகைச் சொல்வழக்கினைப் பின்வந்த புலவர்கள் கையாண்டனர். சீத்தலைச் சாத்தனார் தம் மணிமேகலைக் காப்பியத்தில் 'அனம்' விகுதி புணர்ந்த நன்கனம்,செவ்வனம் ஆகிய சொற்களை ஆண்டிருத்தல் நோக்கத்தகும்.

'தந்தாரவர்' (15:46) என்பதிலுள்ள 'அவர்' விகுதிமேல் விகுதியாய் வந்துள்ளது. இஃதோர் அரிய வழக்காகும்.

தொல்காப்பிய உவமவியலிற் கூடக் காணப்பெறாத உவம உருபுகள் பரிபாடலிற் காணப்பெறுகின்றன.

கழறும்	(பரி. 2:37)
உருவின	(பரி. 3 :32)
கொள்ளும்	(பரி. 13:5)
பேணிய	(பரி. 7 :63)

மரபுச் சொற்கள்

சங்க காலத்து அருகி வழங்கிய சில மரபுச்சொற்களைப் பரிபாடல் அறிவிக்கின்றது. இந் நூல் மட்டும் அவற்றை அறிவிக்கக் காரணம் அதன் நாடக அமைப்பு முறையே யாகும். 'ஆக்கெட்டு' என்னும் மொழியியல் அறிஞர் அளவிறந்த மரபுச் சொற்கள் எம்மொழியிலும் உள்ளன என்றும், இன்னும் பல அன்றாட வழக்கில் தோன்றுகின்றன என்றும் கூறுவர்.[2]

பரிபாடலில் வரும் மரபுச் சொற்களாவன :

மாலை அணிய விலை தருதல் (20:79)	—	மெய்ம்முயக்கத்துக்குப் பொருள் கொடுத்தல்
எதிர்குதிர் (8:21)	—	மாறுபடுதல்
ஏறுமாறு (18:6)	—	மாறுபடுதல்

2. A Course in Modern Linguistics, P. 173.

இவ்விரண்டும் ஏட்டிக்குப் போட்டி என்றும் தாறுமாறு என்றும் வழங்குகின்றன.

அடிதொடுதல்	(8:67)	} — ஆணையிடுதல்
தலைதொடுதல்	(16:95)	}
குதுகுதுப்பு	(20:12)	— விருப்பம்
இருள்கால் சித்தல்	(10:112)	— இருட்டைப் போக்குதல்
கொடி விடுதல்	(6:103)	— செழித்தல்
விடிவுறல்	(7:85)	— துன்புநீங்கி இன்புறல்
கால் கோத்தல்	(7:33)	— வெள்ளம் நிறைதல்
விளைக பொலிக என்றல்	(10:86)	— செழித்துநலமுறுக என வாழ்த்துதல்
தாங்குதடை	(7:19)	— தடங்கள் செய்தல்

இப்பொழுது தங்குதடை என வழங்கும்.

ஒரு சொல்லே திரும்ப வந்து மிகுதியையும் விரைவையும் குறிப்பதைப் பரிபாடல் காட்டுகின்றது.

சேஎய்சேய்த்து	(17:25)	— நீண்டதொலைவு உடையது.
நணிநணித்து	(17:25)	— மிக அண்மையது
தகாஅத்தகா	(8:75)	— மிகுதியும் தகுதியற்ற
திசைதிசை	(16:18)	— திசைதோறும்
நாளின் நாளின்	(16:52)	— நாள்தோறும்
மாலைக்கு மாலை	(8:49)	— ஒவ்வொரு மாலைப் பொழுதும்
வரைவரை	(7:4)	— மலைக்குவடுதோறும்
வாய்வாய்	(17:31)	— இடந்தோறும்

சொற்றொடரமைப்பு

பெரும்பாலான பரிபாடல்கள் வாழ்த்துகளாக இருத்தலின், கருத்துகள் தெளிவும் எளிமையும் உடையவாய்ச் சிறுசிறு தொடர்களாக அமைந்துள்ளன. மேலும், பல அடிகள் விளித்தொடராகவே உள்ளன.

'தீயினுள் தெறல்நீ பூவினுள் நாற்றநீ
கல்லினுள் மணியுநீ சொல்லினுள் வாய்மைநீ
அறத்தினுள் அன்புநீ மறத்தினுள் மைந்துநீ
வேதத்து மறைநீ பூதத்து முதலுநீ
வெஞ்சுடர் ஒளியுநீ திங்களுள் அளியுநீ
அனைத்துநீ அனைத்தினுட் பொருளுநீ.' (பரி.3: 63-68)

சில சொற்றொடர்கள் முற்றுப் பெறுதுள்ளன. அவற்றை அவாய்நிலையான் சொற்களை வருவித்துப் பரிமேலழகர் முடித்துக்காட்டுவர். காட்டாகப் பரிபாடல் (6:19; 19:80-84) அடிகளின் உரைகளை நோக்குக. இவ்வகையாகச்சொற்றொடர் முடியாது வருவதற்குக் காரணம் பரிபாடலின் நாடக அமைப்பும் பண்வகுப்பு முறையுமேயாம்.

தலைவன் எக்காரணம் கொண்டும் தலைவியைப் பிரியேன் எனத் தோழியிடம் வற்புறுத்திக் கூறுகிறான். அதனை நல்லந்துவனார் உரையாடும் நடையில் மிக எளிமையாக அமைத்துக் காட்டுவர்.

'யார்பிரிய யார்வர யார்வினவ யார் செப்பு' (8:72)

சில இடங்களில் உரையாசிரியர் அரிய சொற்றொடர் அமைப்புகளைச் சுட்டி முடித்துக்காட்டுவர். கீழ்வரும் பகுதியில் தொடர்ச்சியாக வினையெச்சம் அடுக்கிவருதல் காண்க.

'நிலவரை அல்லல் நிழத்த விரிந்த
பலவுறு போர்வைப் பருமணன் மூஉய்
வரியரி யாணு முகிழ்விரி சினைய
மாந்தீந் தளிரொடு வாழையிலை மயக்கி
ஆய்ந்தளவா வோசை யறையூஉப் பறையறையப்
போந்தது வையைப் புனல்.' (பரி. 10:3-8)

கடுவனிளவெயினனார் வினைத்தொகை யடுக்கிப் பாடியுள்ளதைப் பின்வரும் அடிகளிற் காணலாம்.

'அணிநிழல் வயங்கொளி யீரெண் தீங்கதிர்ப்
பிறைவளர் நிறைமதி யுண்டி
அணிமணிப் பைம்பூண் அமரர்க்கு முதல்வன் நீ!'
(பரி.3:51-33)

சொற்ருெகுதி

நாடகப் பாங்கு அமைந்த பரிபாடல்களில் பேச்சுமொழி பெரிதும் இடம்பெறுகின்றது. ஆமாம், ஈதா, ஏச, வாரும், கடுப்பு, ஓட்டை எனும் சொற்களைக் காட்டாகக் கொள்ளலாம்.

கொடும்பாடு, அனலன், மகாஅன், மனவன், பூவனி (அயன்), புன்னம்புலரி, கில்லா (இயலா), கவிதை, சுவைமை, மெய்யாப்பு (சட்டை), வாயடை (உணவு), சுணங்கறை (புணர்ச்சி), இருண்மதி (அமாவாசை), காதலங்காமம் முதலிய புது அமைப்புச் சொற்கள் பரிபாடலில் வந்துள்ளன.

வடசொல்லைத் தமிழ்ப்படுத்தி வழங்கல்

அருச்சிப்போர், ஆராதனை, அரவிந்தம், ஓசனை, சலதாரி, சோபனம், சிரம், தமனியம், கோகுலம், திதி, நயனம், நதி, நாதர், பதுமம் ஆகியவை தமிழ் ஒலி முறைப்படி வழங்குதல் காண்க. பரிபாடல் உரையாசிரியர் சில வடசொற்கள் திரிந்து வந்தமையைத் தம் உரையில் எடுத்துக்காட்டி யுள்ளார்.

'புவ்வம்' (15:49) என்பது பாகதச் சிதைவு.

'படி' (4:18) என்பது பாகதச் சிதைவு.

'அரூபி' என்பது அருவி (6:53) என்றும், கந்தரம் என்பது கந்தம் (4:22) என்றும், பதிவிரதம் என்பது பதிவதம் (10:23) என்றும் நிருத்தம் என்பது நித்தம் (12:45) என்றும் திரிந்து வந்துள்ளன.

வடமொழி இயற்பெயரைத் தமிழ்ப்படுத்திச் சில பாடல்கள் வழங்குகின்றன.

கேசி—'கூந்தலென்னும் பெயரொடு கூந்தல்'
கிரௌஞ்சகிரி—'புள்ளொடு பெயரிய பொருப்பு'
'குருகொடு பெயர் பெற்ற மால்வரை'

வராககற்பம்—'கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி'
வாசுதேவன் —'செங்கட்காரி'
சங்கருடணன்—'கருங்கண் வெள்ளை'
பிரதியும்நன் —'பொன்கட்பச்சை'
அநிருத்தன் —'பைங்கண்மால்'

ஒருபொருட் பன்மொழி

பரிபாடலில் நேமி, ஆழி, பருதி, திகிரி, என்னும் சொற்கள் சக்கரத்தையும், வளை, வலம்புரி, கோடு என்னும் சொற்கள் சங்கையும் உணர்த்துகின்றன.

முதலாகா எழுத்து முதலுதல்

தொல்காப்பியர் காலத்து ச, சை, சௌ என்னும் எழுத்துகளை முதலாகக் கொண்டு சொற்கள் தோன்ற வில்லை. ஆனால் பரிபாடலில் 'சவ்வும்' 'சையும்' முதலா கின்றன. சகடம், சங்கம், சடை, சண்பகம், சமம், சமழ்ப்பு, சலம், சனம், சையம் என்னும் சொல்லாட்சி காண்கிறோம்.

'மன்பதைத் தொடர்புகள், தொழில்கள் பல்வேறு தொழிற்றுறைகள் எல்லாம் பழைய சொற்களை நீக்கிச் சொற் களின் பொருள்களை மாற்றிப் புதுச் சொற்களைப் படைத்துச் சொற்பெருகுதியில் மாற்றங்களை விளைக்கின்றன' என 'வெண் டிரியே' கூறுவர்.[3] பரிபாடலிற் காணப்பெறும் மொழியியற் கூறுகள் அவர்தம் கூற்றை விளக்குகின்றன.

சொல்லும் பொருளும்

விரும்புதல் என இயல்பாகப் பொருள்படும் 'அமர்தல்' என்னும் சொல், 'குந்துதல்'என்னும் பொருளில் வந்துள்ளது. கிழவன் கிழவியர் என்பன வயதுமுதிர்ந்த ஆடவர் பெண் டிரைக் குறிக்கின்றன (11-20) இப் பொருளில் அவை பிற தொகை நூல்களில் ஆட்சி பெறவில்லை. பாடுமகளிரைக்

---

3. Language, P.192.

குறிக்கும் பாட்டியர் என்னும் சொல் பெற்றோரின் தாயைக் குறிக்கின்றது.[4] தந்தார், மைந்தர், ஆறு என்பவை வெளிப் படையான பழைய பொருளைவிட்டுப் பெற்றோர், கணவர், நதி என்னும் பொருளில் வழங்குகின்றன. விடையளித்தல் எனப் பொருள்படும் செப்புதலும், அழைத்தல் எனப் பொருள்படும் அகவுதலும், முறையே சொல்லுதல் பாடுதல் என்னும் பொருளில் வந்துள்ளன.[5]

குஞ்சி-கூந்தல், தார்-கோதை, யமன்-கூற்று, துனி-புலவி, திங்கள்-நிலா, வண்ணம்-தேசு-ஒளி என்பனவற்றை இப்பொழுது ஒரு பொருட்கிளவியாக வழங்குகிறோம். பரி பாடலில் அச் சொற்கள் நுண்ணிய வேறுபாட்டுடன் ஆளப் பெற்றுள்ளன. குஞ்சி ஆடவர் மயிரையும், கூந்தல் பெண்டிர் மயிரையும் உணர்த்தும்.[6] கோதை மகளிர் மாலையினையும், தார் ஆடவர் மாலையினையும் சுட்டும்.[7] யமன் இறப்புக் கடவுளையும், கூற்று யமனின் ஏவலரையும் அறிவிக்கும்.[8] புலவி காதலர் தம்முள் நிகழும் சிறு பூசலையும், துனி அள விறந்த பூசலையும் உணர்த்தும்.[9] திங்களும் நிலவும் முறையே மதியினையும் மதியொளியினையும் காட்டும் (1 : 41, 42). வண்ணம் (12:20) இயற்கை அழகினையும், தேசு (12:21) செயற்கை அழகினையும், ஒளி (12:21) கலவியினால் வந்த நிறத் தினையும் உணர்த்தும். இச்சொற்கள் தம் தனித்த பொருள் களை யிழந்து, இப்பொழுது ஒரு பொருட் பன்மொழிகளாக வழங்கப்படுகின்றன.

பலவகை மக்களும் சேர்ந்து வாழுமிடம் 'சேரி' எனப் படும். பரிபாடலில் அது தாழ்ந்த வகுப்பினர் வாழுமிடத்

---

4. மதுரைக். 749; பரி. 10:36.
5. பரி. 6:67, 15:42.
6. பரி. 17:26; திரட்டு. 2:85.
7. பரி. 6:46,6:55; 9:28; 13:4.
8. பரி. 3:21.
9. பரி. 20:96.

தைச் சுட்டுகிறது.[10] ஒரு குறிப்பிட்ட இனத்தின் வழி வந்த வனையோ, ஒரு குடும்பவழி வந்தவனையோ மருகன் என்றழைத்தல் சங்ககால மரபு. ஆனல் பரிபாடலில் தன் மகளின் கணவன் என்ற பொருளில் 'மருகன்' எனும் சொல் ஆட்சி பெற்றுள்ளது (19-57). பேரூர் என்னும் பொருளில் வழங்கிய 'நகர்' எனும் சொல், அப்பொருளை இழந்து கோயில் எனும் பொருளில் பரிபாடலில் வந்துள்ளது (திரட்டு. 1:59).

இப் பொருள் வேறுபாடுகள் எல்லாம் சமூக மாறுதல் களின் விளைவேயாகும். 'புளூம் பீல்டு' என்னும் மொழியியல் அறிஞர், சொற்பொருள் மாற்றம் நிகழ்வதன் ஏது அறிதல் ஓர் அருஞ்செயல் என்பர்.[11]

இப் பொருள் மாற்றங்கள் பிற சங்க நூற்களிற் காணப் படாமல், அதே காலத்தெழுந்த பரிபாடலில்மட்டும் காணப் படுவதற்கு நாம் காரணம் கூறுதல் அரிதாகின்றது. ஆதலால் அவ்வறிஞர் கூற்றுப் பொருந்துவதேயாம்.

---

10. பரி. 6:38; 7:32.
11. Language.P.411.

11. முடிவுரை

இயல். இசை, நாடகம் எனும் முப்பகுதியும் அடங்கியிருத்தலின் பரிபாடலை ஒரு முத்தமிழ்த் தொகை நூல் என்னலாம். தொல்காப்பியர் பரிபாடல்கள் அகத்திணையே கூறுவன எனக் கூறினரேனும், எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடல் அகம், புறம் என்னும் இருதிணையையும் கூறுகின்றது. தமிழகக் கடவுளர் பற்றியும் சமயம் பற்றியும் விரிவாகக் கூறும் தொன்னூல் பரிபாடல் ஒன்றேயாம். பரிபாடலின் காலத்தை வரையறுப்பது ஓர் அருஞ் செயலாகும். அறிஞர்கள் அதன் காலத்தை அறுதியிடுவதில் கருத்து வேறுபாடு கொள்வர். சங்க காலத்தெழுந்த பிற தொகை நூல்களின் காலமே பரிபாடலின் காலம் என்னும் கொள்கையை நிலைநாட்டப் புதிய பல சான்றுகள் தரப்பட்டுள்ளன.

பெயர்க்காரணம்

பரிபாடல் என்பதற்கு இசைப்பாட்டு என்பது பொருளாம். 'பலவகைப் பாக்களேயும் ஏற்று வருதலின் பரிபாடல் என்னும் பெயர்த்தாயிற்று' என்பர் தொல்காப்பிய உரையாசிரியர்கள். இக் கருத்துப் பொருந்துமாறு இல்லை. பரிபாடலில் வரும் 'இன்னியல் மாண்டேர்ச்சி இசை பரிபாடல்' (11:37) என்னும் அடியே பரிபாடல் என்பது இசைப்பாட்டானது என்பதைத் தெளிவுறுத்துகிறது. இசைபரிபாடல் என்பதே முதல் குறைந்து பரிபாடல் என இப்பொழுது வழக்காற்றிலுள்ளது.

பரிபாடற் புலவர்கள் பாண்டிய நாட்டின் கோயில்களையும், அங்கு ஓடும் வையையாற்றையுமே பாடியுள்ளனர்

என்பது உளங்கொளற்குரியதாம். பரிபாடற் பாக்களே தொன்மைத் தெய்வப் பாசுரங்கள் ஆகும். இவற்றைத் தழுவியே ஆழ்வார்களும் நாயன்மார்களும் பத்திவெள்ளம் பெருகப் பாமாலை புனைந்தனர். புலவர்களும் இசைஞர்களும் குறுகிய நோக்கிலராய்த் தெய்வக் கொள்கைகளைப் பெரிதும் மதித்தனர். திருமாலின் பெயரைத் தம் பெயராகக் கொண்ட கேசவனார், நல்லச்சுதனார் என்னும் புலவர்கள் செவ்வேளைப் பாடியுள்ளனர். சங்க காலத்தில் சைவம் வைணவம் முதலிய சமயப் பாகுபாடின்மையே அதற்குக் காரணமாகும்.[1] இந்நூலின் ஐந்தாம்பகுதி பரிபாடற் புலவர் களின் புலமை நலங்களை ஆய்ந்துரைக்கும். இசையமைப் புடைய இப் பரிபாடல் இலக்கியச் சிறப்புகளிலும், நயங் களிலும் வேறெந்தச் சங்க இலக்கியத்துக்கும் குறைந்த தாகாது. சங்க இலக்கியங்களிலே அணிநயங்கள் இல்லை என்ற தவறான கருத்துப் பொதுவாக அறிஞர்களிடையே நிலவுகின்றது. பரிபாடல் சில அணிகளால் இலங்குவதை இனி காண்போம்.

முரண்தொடை

மலைவரை மாலை அழிபெயல் காலை
'நிலவரை அல்லல் நிழத்த' விரிந்த. (பரி: 10:1, 3)
'செம்மைப் புதுப்புனல் சென்றிருளா யிற்றே.' (7–59)

பின்வருநிலையணி

'மதிமாலை மாலிருள் கால்சீப்பக் கூடல்
வதிமாலை மாறுந் தொழிலாளர் புதுமாலை
நாளணி நீக்கி நகைமாலைப் பூவேய்ந்து.'
(10:112-114.)

அந்தாதி

'விரிமலர் புரையும் மேனியை மேனித்
திருஞெமர்ந் தமர்ந்த மார்பினை மார்பின்
தெரிமணி பிறங்கும் பூணினை!' (1: 7-9)

---

1. சைவ சமய வளர்ச்சி, பக். 21.

'பயந்தோளி டுக்கண் களைந்த புள்ளினை
பயந்தோளி டுக்கண் களைந்த புள்ளின்
நிவந்தோங் குயர்கொடிச் சேவலோய்!' (3:16–18)

இங்ஙனம் சொல்லந்தாதி, அடியந்தாதி எல்லாம் பயின்று வருதலைக் காணலாம்.

எண்ணுப்பெயர்

'அருள் குடையாக அறங்கோ லாக
இரு நிழல் படாமை மூவே முலகமும்
ஒரு நிழ லாக்கிய ஏமத்தை மாதோ?' (3:74-76)

'நடுவுநிலை திறம்பிய நயமில் ஒருகை
இருகை மாஅல்
முக்கை முனிவ நாற்கை யண்ணல்
ஐங்கைம் மைந்த அறுகை நெடுவேள்
எழுகை யாள எண்கை ஏந்தல்
ஒன்பதிற்றுத் தடக்கை மன்பே ராள
பதிற்றுக்கை மதவலி!' (3:34-40)

இப் பகுதியில் கடுவனிளவெயினனார் ஒன்று முதல் பதிது வரை நிரலே எண்ணுப்பெயர்களை வைத்துச் சொன்னயம் தோன்றப் பாடல் இயற்றியுள்ளசர். இம்முறையில் பாக்கள் இயற்றுவது பிற்காலத்துப் பல்கின.

தமிழ்த் தொடர்பு

பரிபாடற் புலவர்கள் திருமால், செவ்வேள், வையை மூன்றோடும் தமிழைத் தொடர்புபடுத்திப் பாடியது நினைந்து இன்புறற்பாலது. 'தொல்லியற் புலவ', 'நல்லியாழ்ப் பாண' எனத் திருமாலையும், 'பாட்டமர்ந்தானை' எனச் செவ்வேளை யும், 'தமிழ் வையை' என வையையும் பாடியமை நோக்குக.

முத்தமிழ் (தமிழ் மும்மை) என வகுத்துக் கூறும் வழக்கும் முதன்முதல் பரிபாடலிலே காணப்படுகின்றது.

உவமச் சிறப்பு

பரிபாடலைப் பாடியவர்கள் விழுமிய உவமைகளை இட னறிந்து தம் பாடல்களில் பயன்படுத்தியிருப்பது நூலின்

நயத்தினை மிகுக்கின்றது. வையையின் தங்குதடையற்ற ஓட்டத்திற்கு ஆடலறியா அரிவையையும் ஊடலறியா உவகையினையும் (7:17–19) உவமிப்பர். வையை நோக்கி விரையவும் மெல்லவும் இடைப்படவும் நடப்போரெல்லாம் கூட்ட நெருக்கடியான் மெல்லச் சேறற்கு, 'அதிர் குரல் வித்தகராக்கிய தாளவிதி கூட்டிய வியமென்னடை'யை (10:24, 25) உவமை கூறியுள்ளனர். மலையின் நீங்கி வையை கடற்புக விரைதல், 'மா மயிலன்னார் மறையிற் புணரும் களவொழுகிகைக் கைவிட்டுக் கற்பொழுகிகம் மேற்கோடல் ஒகிகும்.' இவ்வனைய பல்வகை உவமைகளைப் பரிபாடலிற் காணலாம்.

உரை நயம்

பரிமேலழகர் தம் உரைநுட்பம் ஒரோவழி இந்நூலில் இடம்பெற்றுள்ளது. பரிபாடலைப் பயில்வோர் அவ்வுரையின் இன்றியமையாச் சிறப்பினை நன்கறிவர். அவ் வுரைப்பகுதி மட்டும் தனித்தலைப்பில் ஆராயும் தகுதி வாய்ந்தது. இவ் வுரையாசிரியர் அருஞ்சொற்குப் பொருள் விளக்கமும், சிக்கலான இடத்துப் பொருள் விளக்கமும், சில பகுதிக்கு நயமும் வரைந்துள்ளார். ஒரு சிலவற்றைக் கீழே காண்போம்.

வாயடை (2:69): வாயின்கண் அடுக்கப்படுதலின் 'உணவிற்கு' வாயடை என்று பெயராயிற்று.

வல்லார் (9:74): இச் சொல் வல்லுப்போர் வல்லாய் (18:41) எனப் பிறிதோரிடத்தில் வருதல் கண்டு, வல்லுப் போர் வல்லார் என உரை கண்டமை நுண்மைக்குச் சான்று என்னலாம்.

மூஉய் (10:1ɔ): மூடுதலுடைமையால் பூப்பெட்டியை 'மூஉய்' என்றார்.

அம்பாவாடல் (11:81): அம்பாவாடலென்று தைந் நீராடற்குப் பெயராயிற்று, தாயோடாடப்படுதலின்.

இலக்கண விளக்கம்

பொலம்புரி ஆடை (3:88): பொலம்புரி ஆடை என்னும் ஆகுபெயர் அண்மை விளியேற்று நின்றது.

கம்பலேத்தன்று (8:37): கம்பலேத்தன்று என்பது உரிச் சொல்லடியாகப் பிறந்த வினைத் திரிசொல்.

ஈதா (8:60): ஈதா என்பது எரு மரூஉ முடிபு. அஃது இக்காலத்து இந்தா என்று வழங்கப்படும். சுட்டு நீண்டது

அளப்பரியவை (4 61): அகரம் இசை நிறையும் இடைச் சொல்.

சொன்னயம்

செயிர்தீர் செங்கண் (4:10): கோபத்தாலன்றி இயல் பாகவே சிவந்த கண்.

திரைபாடவிந்த முந்நீர் (4:6): திரை கிளர்ந்தவழி வெண்மையுடைமையின் 'திரைபாடவிந்த' என்றார்.

நின்னிற் சிறந்த நின் தாள் (4:62): வீடளிக்குங்கால் நின்னினும் சிறந்த நின் தாளிணையை உடையை.

பெய்ய உழைக்கும் மழைக்கா (9:34): காவையொத்த லாவது: கா தனக்கு இன்றியமையாத மழையை வரு வித்துக் கொள்ளமாட்டாது; அதுதானே வந்துழிப்பொலிந்து வராத வழியும் ஆமளவு மாற்றி ஆகாத எல்லேக்கண் இறந்துபடுதல்.

இப் பகுதிகளெல்லாம் பரிமேலழகர் தம் புலமைச் சிறப்பைக் காட்டவல்லனவாம்.

மூல பாடம்

கிடைத்திருக்கும் பரிபாடல்களில் ஒரு சில அடியிழந்தும் சொல்லிழந்தும் காணப்படுகின்றன. உரைப் பகுதியால் காணுதுபோன சொற்களே ஒருவாறு உய்த்தறியமுடிகின்றது.

திரு. கி. வா. ஜகந்நாதன் சில மூல பாடங்கள் இவ்வாறிருக்கலாமெனக் காட்டுவார்.[2] 'கொடி சேராத் திருக் கோவை' (6:15) என்று காணப்பெறும் இப்பொழுதுள்ள பாடம் 'கொடி சோரத் திருக்கோவை' என்றிருத்தல்

---

2. தமிழ் வையை, பக். 13.

வேண்டும். 'ஊரூர்பிடந்திரீஇ' (6:37) என்பது 'ஊர்பூரி பிடந்திரீஇ' என்றிருத்தலே பொருத்தம் என்பதை உரை நோக்கி உணர்க. 'வாதாலாட்ட' (6:52) என்பது 'கால் தாலாட்ட' என்றிருக்க வேண்டும். ஆறும் பாடல் எழுபத் தேழாம் அடியின் இறுதியில் காமம் என்ற சொல் விடப்பட் டுள்ளது. 'இன்னிளவேனில் இதுவன்றோ வையை நின்காமம்' என்று அவ்வடி அமைதல் வேண்டும்.

திருமால்

தொல்காப்பியர் காலத்தில் திருமால் செவ்வேளெல்லாம் ஒவ்வொரு நிலப்பகுதிக்குரிய தெய்வமாக விளங்கினர். பிற்காலத்தே திணையெல்லை கடந்து முழுமுதற் கடவுளர் களாக அவர்கள் கருதப்பெற்றனர். சங்க இலக்கியங்களிற் காணப்பெறும் திருமால் பற்றிய கருத்துகள் பரிபாடலொடு ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமை யறிதற்காக இந் நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. கண்ணனின் அண்ணனை பலதேவனை விழுத்தெய்வங்களுள் ஒன்றாகக் கருதிப் பரிபாடற் காலத்தே வழிபட்டிறைஞ்சினர். ஆனால் பிற்காலத்தே பலதேவ வழிபாடு முற்றும் மறைந்து போயிற்று.

நாலாயிரப் பிரபந்தத்திலும் பிற இலக்கியங்களிலும் விரிவாகப் பாராட்டப் பெறும் இராமாவதாரம் பற்றிப் பரிபாடல் யாதொன்றும் குறிப்பிட்டிலது.

செவ்வேள்

நீலக்கடலிடையே தோன்றும் இள ஞாயிற்றின் எழிற் காட்சிதான் செவ்வேள் தன் ஊர்தியான நீல மயில் மீது அமர்ந்திருப்பதைக் கருதும் எண்ணத்தைத் தோற்றுவித்தது. செவ்வேள் பகுதியில் அவர்தம் பிறப்புப்பற்றிப் பரிபாடல் கூறுவதும் பிற்காலக் கந்தபுராணம் அதனின்றும் மாறு படுவதும் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன. திருமாலிடத்தும் செவ்வேளிடத்தும் அன்பர்கள் பொதுவாக வரம் வேண்டி னும், செவ்வேளிடம்தான் இவ்வுலக இன்பம் கருதி வேண்டு கின்றனர். முருகனைப் பற்றிச் சங்க இலக்கியத்துக் காணப்

பெறும் கருத்துக்களுக்கும் பரிபாடலிற் காணப் பெறும் கருத்துக்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் பொது வாகவும், முருகாற்றுப் படைக்கும் பரிபாடலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் சிறப்பாகவும் காட்டப் பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களுள் பரிபாடல் ஒன்றே முருகனைச் 'செவ்வேள்' எனப் பெயரிட்டழைக்கின்றது. வள்ளிக்கும் தேவசேனைக்கும் முருகன்பால் உள்ள ஊடற் காரணமாகப் போர் நிகழ்ந்ததாகவும் பரிபாடலே கூறு கின்றது.

திருமால், செவ்வேள் ஆகிய கடவுள்களை ஆராதனைப் பொருள் கொண்டு மக்கள் வழிபட்டது போலவே, வையை யையும் பரிபாடற்காலத்து வழிபட்டனர் என்பது கருத்தினில் இருத்தற்குரியது. பரிபாடல் போல் வையையைச் சங்க இலக்கியம் எதுவும் புனைந்து கூறவில்லை. வையை நோக்கியும் மக்கள் வரங்கேட்டனர். தைந்நீராடல் இப்பொழுது சமயத் தொடர்புற்று மார்கழி நீராடலாகச் சைவ வைணவ சமயங்களால் கொண்டாடப் பெறுகின்றது. தெய்வங்களைச் சுற்றத்தோடு வழிபடுவதாகவும், தமக்குமட்டுமல்லாது சுற்றத்துக்கும் இம்மை மறுமையின்பங்கள் வேண்டுவதாகவும் பரிபாடல் ஒன்றே பாடுகின்றது.

வையை

வையை சையம் மலையிற்றோன்றிக் கடலிற் கலக்கின்றது எனப் பரிபாடல் கூறும்.[3] ஆனால் திருவாதவூரர் புராண மும் திருவிளையாடற் புராணமும் வையை கடலிற் கலக்க வில்லை எனக் கூறுகின்றன. வையையாறு வருடநாட்டுப் பள்ளத்தாக்கில் தோன்றுவதாகவும், இராமநாத புரத்துக் கருகிலுள்ள இராசமங்கலம் ஏரியில் விழுவதாகவும் அறிகின் றோம். பின் அவ்வேரியிலிருந்து ஒரு கால்வாய் வெட்டப் பட்டது; அதற்கு வெட்டாறு என்று பெயர். அது இப் பொழுது ஆற்றங்கரை எனும் ஊர்க்கருகில் கடலிற் கலக்

3. பரி. 11: 14-15; 20:42.

கிறது. வையையின் வெள்ளப் பெருக்கைப் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுத்தப் பிற்காலத்துச் செயற்கையாக ஓர் ஏரி வெட்டி இருக்கலாம் என உய்த்துணர இடனுண்டு.

முடிப்பு

யாப்பு, பண், மொழியியற் கூறுபாடுகள் பழக்க வழக்கங்கள், சமயம், பண்பாடு, நாகரிகம் என்னும் பல்வேறு பகுதிகளாகப் பிரித்துப் பரிபாடல் ஆராயப் பெற்றுள்ளது. வைணவ வரலாற்றுக்குப் பரிபாடலே அடிப்படையான நூல்' ஆழ்வார் நாயன்மார்களுக்கும் இது வழிகாட்டியாகும். பின்னணி இசையொடு பாடுவதற்கு ஏற்பச் சமய குரவர்கள் தம் தெய்வப் பாடல்களைப் பரிபாடலைப் பின்பற்றியே இயற்றியருளினர் என்னலாம். சங்க இலக்கியங்களையும் பிற்கால இலக்கியங்களையும் புதுநோக்கொடு சமயம் பற்றி ஆராயத் தொடங்குவார்க்கு இந்நூலிற் காட்டிய சில விளக்கம் உறுதுணை புரியும். தமிழகத்து நிலவும் இந்து சமயத்தின் இருபெருங் கிளையான சைவவைணவ சமயங்களின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் அறிய விழையும் சமய ஆய்வாளர்களுக்குப் பரிபாடற் கல்வி இன்றியமையாது வேண்டப்படுவதாகும். இயல் இசை நாடகமென்னும் முத்தமிழின் வளர்ச்சி பற்றிப் பொதுவாகவும் இசைத்துறைபற்றிச் சிறப்பாகவும் அறிந்து கொள்ளப் பரிபாடல் சிறந்த கருவூலமாக விளங்குகின்றது.

பொருட் குறிப்பு

[எண்கள் — பக்க எண்கள்]